ஏப்ரல் 2004

புது எழுத்து

இணைப்பிதழ்

மார்க்வெஸ்

சிறப்பிதழ்



ஆசிரியர்: மனோன்மணி

புது எழுத்து
9

ஆசிரியர்
மனோன்மணி

ஆர்ட் எடிட்டர்
ஜீ.முருகன் ,சி.கேசவன்

ஓவியர்கள்
சிவா, கார்த்திகேயன், ரிவேரா,
ரவீந்திரன்.

அச்சுக் கோர்ப்பு
தே. சங்கர்
அமைதி

ஒளி அச்சு, வடிவமைப்பு
ஜீவா கம்ப்யூட்டர்ஸ்
செங்கம்
செல்: 94434 92461

அச்சு
செந்தில் ஆப்செட்
தருமபுரி, செல்: 94434 64460

அனைத்து தொடர்புகளுக்கும்
மனோன்மணி
ஆசிரியர் - புது எழுத்து
39/20 ஜே கே சி தெரு
காவேரிப்பட்டிணம் 635 112
கிருஷ்ணகிரி மாவட்டம்
தொலைபேசி: 04343 252665,

ஆண்டு சந்தா : ரூ. 200/-
மாணவர் சந்தா : ரூ.150/-
ஆயுள் சந்தா : ரூ. 5000/-
நிறுவன சந்தா : ரூ. 350/-

விளம்பர விகிதம்
2வது அட்டை: ரூ. 3000/-
3வது அட்டை: ரூ. 2500/-
பின் அட்டை: ரூ. 4000/-
முழுபக்கம்: ரூ. 500/-
அரை பக்கம்: ரூ. 300/-
வண்ண விளம்பரம் ரூ.10,000
(விளம்பரம் காரணங்கள் எதுவுமின்றி
நிராகரிக்கப்படலாம்)

சிறப்பு விலை: ரூ.101
முதன்மை இதழுடன்

நன்றி...
விடியல், கோவை.
(அலென்டே பற்றிய மார்க்வெஸ் கட்டுரைக்காக)
துளசிராம் கம்ப்யூட்டர்ஸ், செங்கம்.

கைர்னிகா கவிதை

சமர்ப்பணம்

மிஸ்டர் புஷ்
ஸ்ரீமான் வாஜ்பாய்
மிஸ் ஜெயலலிதா
ஆகியோருக்கு
(ஈராக் மற்றும்
பொடாவுக்காக)

Published with financial Assistance from the Central Institute of Indian languages (Ministry of Human Resource Develapment, Department of Secondary and Higher Education, Govt. of India) Manasagangotri, Mysore - 570 006 vide sancetion Ir.No. F. 53-10(2)/2003-2004/ LM/ TAM/GRANT dated 29th August 2003under the Scheme of Grant-in-Aid L.M

முன் கூறப்பட்ட சாவின் சரித்திரம்
CHRONICLE OF A DEATH FORETOLD

கேப்ரியல்
கார்சியா
மார்க்வெஸ்

நாவல்

தமிழில் **அசதா**

மார்க்வெஸ்
சிறப்பிதழ் | 2

அவர்கள் அவனைக் கொல்ல இருந்த அன்று, பிஷப் வரப்போகும் படகுக்காக காத்திருக்க வேண்டி காலை ஐந்தரை மணிக்கே எழுந்துவிட்டிருந்தான் சாண்ட்டியாகோ நாஸர். மழைதூறிக் கொண்டிருக்க உயர்ந்த மரங்கள் நிறைந்த தோப்பு வழியே நடப்பது போல கனவு கண்டிருந்தான். கனவில் ஒரு கணம் சந்தோஷம் அடைந்தான். ஆனால் கண்விழித்தபோது தன் மேலெங்கும் பறவை எச்சம் தெறித்துக்கிடப்பதுபோல உணர்ந்தான்.

"அவன் எப்போதும் மரங்களைப் பற்றியே கனவு கண்டான்", இருபத்தேழு வருடங்கள் கழித்து அந்த துக்க தினத்தில் நடந்தவை பற்றி நினைவுகூறும்போது அவன் அம்மா பிளாசிடா லினேரோ என்னிடம் சொன்னாள். "அதற்கு ஒருவாரம் முன்பு பொருட்களை சுற்றிவைக்கப் பயன்படும் மெல்லிய அலுமினியத் தகடுகளால் ஆன விமானத்தில் வாதுமை மரங்களினூடாக ஆனால் எதன்மீதும் மோதாமல் பறப்பதாக கனவு கண்டிருந்தான்".

மற்றவர்களது கனவுகளுக்குத் துல்லியமாகப் பலன் சொல்வதில் அவள் பேர்பெற்று விளங்கினாள். ஆனால் சாப்பிடும் முன்பாக அவளிடம் கனவைச் சொல்லிவிட வேண்டும். இந்த இரண்டு கனவுகளிலோ அல்லது அவனது மரணத்துக்கு முந்தைய நாட்களில் அவன் கண்டதாகக் கூறிய பிற கனவுகளிலோ எவ்வித கெட்ட சகுனமும் இருப்பதாக அவளுக்குத் தோன்றவில்லை.

சாண்ட்டியாகோ நாஸரும்கூட அந்த கெட்ட சகுனத்தை உணரவில்லை. உடைமாற்றாமலேயே அவன் படுத்துவிட்டிருந்தான். சிறிது நேரமே தூங்கினான். அதுவும் அரைகுறைத் தூக்கம். அவன் விழித்தபோது தலை வலித்தது. வாயில் அமிலக்கரிப்பு. அன்று நள்ளிரவு தாண்டியும் நடைபெற்ற திருமணக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டதன் விளைவு அது என்பதை உணர்ந்தான். மேலும் ஆறு ஐந்துக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு ஒருமணி நேரத்துக்குப்பின் பன்றியைப் போல் கூறுபோடப்பட்டு கிடப்பதற்கு முன்புவரை அவனை வழியில் பார்த்தவர்களெல்லாம் அவன் சிறிது தூக்கக் கலக்கத்துடன் காணப்பட்டதாகவும் சாதாரணமாகக் கூறுவது போல அன்றைய தினம் ஒரு அழகான நாள் என அவர்களிடம் அவன் குறிப்பிட்டதாகவும் பிற்பாடு கூறினர். அவன் அன்றைய தினத்தின் சீதோஷ்ண நிலையைத்தான் அப்படிச் சொன்னானா என்பதை யாராலும் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. வழக்கமாக பிப்ரவரி மாதத்தில் இருப்பது போன்று அன்றையக் காலைப்பொழுது பிரகாசமாகவும் வாழைத்தோப்புகளினூடாக மெல்லிய கடற்காற்று வீசியபடியும் இருந்ததாகப் பலர் சொன்னார்கள். ஆனால் பெரும்பாலானோர் அன்று மிகவும் மந்தமான, மேகம் சூழ்ந்த வானிலை காணப்பட்டதாகவும், குட்டைகளிலிருந்து நாற்றம் வீசியபடியிருக்க அந்த துரதிருஷ்ட சம்பவம் நடந்தபோது, சாண்ட்டியாகோ நாஸர் தன் கனவுத்தோப்பில் கண்டது

போன்று, மழைதூறிக் கொண்டிருந்ததாகவும் ஒப்புக் கொண்டனர். மரியா அலெஜாண்ட்ரினா செர்வாண்டிஸின் வீட்டில் நடந்த விருந்தினால் உண்டாகியிருந்த உபாதைகளிலிருந்து நான் மெல்ல மீண்டுகொண்டிருந்தேன். அலார மணிகளின் உலுக்கும் ஓசையைக் கேட்டே கண் விழித்தேன். பிஷப்புக்கு மரியாதை தெரிவிக்கும் விதமாக அவற்றை அவர்கள் வழக்கத்தைவிட அதிக ஓசையுடன் ஒலிக்கச் செய்திருக்க வேண்டும்.

முந்தைய நாள் திருமணத்துக்கென அணிந்தது போலவே வெள்ளை நார்த்துணியாலான கஞ்சிபோடாத சட்டையும் முழுநீளக்கால் சட்டையும் அணிந்துகொண்டான் சாண்ட்டியாகோ நாஸர். அது விசேஷ தினங்களுக்கான அவனது உடை. அன்று மட்டும் பிஷப் வரவில்லையென்றால் அவன் வழக்கமாகத் திங்கட்கிழமைகளில், அவன் தந்தை அவனுக்கு விட்டுச் சென்றிருந்த, 'தி டிவைன் ஃபேஸ்' கால்நடைப் பண்ணைக்கு செல்லும்போது அணியும் காக்கி உடையோடும் சவாரிக்கான காலணிகளோடும் இருந்திருப்பான். அவனுக்குப் பண்ணையை நிர்வகிக்கப் போதுமான திறமை இருந்தபோதும் அவ்வளவாக அதிர்ஷ்டம் இருக்கவில்லை. கிராமப்புறத்தில் இருக்கையில் அவன் தன் பெல்ட்டில் மாக்னம் .357 துப்பாக்கியையும் தோட்டாக்கள் அடங்கிய சிறு பெட்டியையும் அணிந்திருப்பான். அந்தத் தோட்டாக்கள் ஒரு குதிரையை இரண்டு துண்டுகளாக கிழித்துப்போடும் என அவன் சொல்வதுண்டு. கௌதாரிகள் தென்படும் காலத்தில் அவன் வல்லூறுகளைக் கொண்டு நடத்தும் வேட்டைக்கான ஆயுதங்களையும் உடன் கொண்டு செல்வான். ஒரு மாலின்க்கர் ஸ்க்னாவர் 30.06 ரைபிள், ஒரு ஹாலந்து மாக்னம் 300 ரைபிள், இருமடங்கு துல்லியம் கொண்ட தொலைநோக்கியுடனான ஒரு ஹார்னட் .22 மற்றும் ஒரு வின்செஸ்டர் ரிவால்வர். அவன் தந்தையைப் போன்றே தலையணை உறைக்குள் துப்பாக்கியை மறைத்து வைத்தபடி அவன் உறங்கினான். ஆனால் வீட்டைவிட்டு வெளியேறும் முன்பு தோட்டாக்களை எடுத்து இரவு மேசையின் இழுப்பறைக்குள் வைத்து மூடிவிடுவான். "ஒருபோதும் அவன் தோட்டாக்கள் நிரப்பி துப்பாக்கியை வைத்துச் சென்றதில்லை", அவன் அம்மா சொன்னாள். அது எனக்கும் தெரியும். அதோடு அவன் துப்பாக்கிகளை ஓரிடத்திலும் தோட்டாக்களை வேறொரு இடத்திலும் வைத்திருப்பான். வீட்டிலுள்ள யாருக்கேனும் துப்பாக்கியில் தோட்டாக்களைப் போட்டுப் பார்க்க வேண்டுமென்கிற ஆசை வந்துவிடக் கூடாதே என்பதற்காகத்தான் அந்த ஏற்பாடு. அவன் தந்தை இருந்தபோதிலிருந்தே கடைபிடிக்கப்பட்டு வரும் இந்த வழக்கத்துக்கு ஆதாரமாக அமைந்த சம்பவம் ஒன்று உண்டு. ஒருநாள் வேலைக்காரச்சிறுமி தலையணை உறையிலிருந்து தலையணையை எடுக்க அதைப் பிடித்துக்கொண்டு குலுக்கியபோது துப்பாக்கி தரையில் விழுந்து, விழுந்த மாத்திரத்தில் வெடித்தது. அதிலிருந்து கிளம்பிய தோட்டா அந்த அறையிலிருந்த அலமாரியைத் தகர்த்து புழங்கும் அறையின் சுவரை ஊடுருவி சாப்பாட்டு அறை வழியாகச் சென்று பக்கத்து வீட்டின் கதவை பெரும் ஓசையுடன் தாக்கி சதுக்கத்தின் அந்தப்புறம் இருந்த தேவாலயத்துள்

பீடத்தின் மீதிருந்த பாரீஸ்சாந்தால் ஆன ஆளுயர புனிதர் சிலையை தூளாக்கிவிட்டுத்தான் ஓய்ந்தது. அப்போது சிறு பையனாக இருந்த சாண்ட்டியாகோ நாஸர் அந்த விபத்திலிருந்து கற்ற பாடத்தை ஒருபோதும் மறப்பதில்லை.

அவன் அம்மாவின் நினைவில் அவனைப் பற்றி கடைசியாக எஞ்சியிருந்தது வேகமாக அவன் படுக்கையறையினுள் சென்ற காட்சிதான். குளியலறையிலிருந்த மருந்துப் பெட்டியில் அவன் ஒரு ஆஸ்ப்பிரினைத் தேடித் தடவிக் கொண்டிருந்தபோது சத்தம் கேட்டு அவள் விழித்துக் கொண்டாள். அவள் விளக்கைப் போட்டபோது கையில் தண்ணீர் தம்ளருடன் கதவருகே நின்று கொண்டிருந்தான். அந்த தோற்றத்திலேயே பின் எப்போதும் அவனை அவள் நினைவுகூர்ந்தாள். தான் கண்டிருந்த கனவைப்பற்றி சாண்ட்டியாகோ நாஸர் அவளிடம் கூறினான். அது குறித்து அவள் அதிக ஆர்வமேதும் காட்டவில்லை.

"பறவைகள் வரும் கனவுகள் என்றால் நல்ல உடல் நலத்துக்கு அறிகுறி", என்றாள்.

உடைந்துபோன ஞாபகக் கண்ணாடியின் பல துண்டுகளையும் திரும்பச் சேர்த்து ஒட்ட, நினைவிலிருந்தும் தேய்ந்துபோன இந்த ஊருக்கு நான் திரும்பி வந்தபோது வயோதிகத்தின் கடைசி ஒளிக்கீற்றுகளில், சோர்ந்து போய் ஏணையில் இருந்த அதே நிலையில் இருந்தபடிதான் கடைசியாக அவள் அவனைப் பார்த்திருக்கிறாள். நல்ல வெளிச்சத்திலும் அவளால் உருவங்களின் நிழல்போன்ற புறத்தோற்றத்தை மட்டுமே காணமுடிந்தது. கடைசியாக படுக்கையறை வழியாகக் கடந்து போன போது அவள் மகன் அவளிடம் விட்டுச்சென்றிருந்த மாறாத அந்தத் தலைவலியைக் குறைக்கவென நெற்றியில் மூலிகை இலைகளை வைத்திருந்தாள். ஒருக்களித்து ஏணையின் தலைப்பகுதியில் இருந்த கயிறுகளைப் பிடித்தபடி எழ முயன்றாள். அங்கே காணப்பட்ட அரைகுறை நிழலில், கொலை நடந்த அன்று காலையில் என்னைக் கலவரப்படுத்திய, தேவாலய ஞானஸ்நானத் தொட்டியில் அடிப்பதான அந்த வாசனை, அப்போதும்அடித்தது. வாசலில் நான் தோன்றியதுமே என்னை சாண்ட்டியாகோ நாஸர் என எண்ணி அவள் குழம்பிப் போனாள். "அதோ அங்கேதான் நின்றிருந்தான்", என்னிடம் அவள் சொன்னாள், "அவன் வெள்ளை நார்த்துணி உடுத்தியிருந்தான். அது சாதாரண தண்ணீரிலேயே சலவை செய்யப்பட்டிருந்தது. ஏனென்றால் அவன் தோல் அத்தனை மிருதுவானது. கஞ்சியின் மொடமொடப்பைக்கூட அது தாங்காது" தன் மகன் திரும்பவும் வந்துவிட்டான் என்ற மாயை அகலும்வரை பெப்பர் கிரஸ் விதைகளை மென்றபடி வெகுநேரம் ஏணையில் அமர்ந்திருந்தாள். பிறகு பெருமூச்சு விட்டாள்: "என் வாழ்வின் எல்லாமுமாக இருந்தவன் அவன்".

அவளது நினைவினூடாக அவனை நான் பார்த்தேன். ஜனவரி மாதத்தின் கடைசி வாரம் அவனுக்கு இருபத்தோரு வயது நிறைவடைந்திருந்தது. அவன் ஒல்லியாக, வெளுத்துக் காணப்பட்டான். அவன் தந்தையின் அராபிய இமைகளையும் சுருண்ட கேசத்தையும் கொண்டிருந்தான். உண்மையான அன்பினால் அல்லாமல் பொருளை அடைவதையே குறிக்கோளாகக்

கொண்டு நடந்த திருமணத்தில் பிறந்த ஒரே குழந்தை அவன். அவன் பெற்றோர்களிடையே ஒரு கணப்பொழுதுகூட சந்தோஷம் நிலவியதில்லை. ஆனால் அவன், மூன்று வருடங்களுக்கு முன்பு அவர் இறக்கும் வரை, தன் தந்தையுடன் மகிழ்வுடனே பழகிவந்தான். அதன்பின் அவன் மரணமடைந்த அந்த திங்கட்கிழமைவரை, தனிமரமாய் நின்றுவிட்ட தன் தாயுடனும் அதுபோலவே பழகிவந்தான். அவனது குணாதியசங்கள் அனைத்தும் அவன் தாயிடமிருந்து வந்தவை. மிகச்சிறிய வயதிலேயே துப்பாக்கிகளைக் கையாளும் திறமை, குதிரைகள் மீது ஆர்வம், உயரப் பறக்கும் பறவைகள் பற்றிய அறிவு இவற்றோடு வீரமும் விவேகமும் தந்தையிடமிருந்து அவன் பெற்றவை. அப்பாவும் பிள்ளையும் எப்போதும் தமக்குள் அராபியமொழியிலேயே பேசிக் கொள்வர். ஆனால் பிளாசிடா லினேரோ இருக்கையில் அந்த மொழியில் பேசிக்கொள்ள மாட்டார்கள். அவளுக்குத் தெரியாத அம்மொழியில் அவர்கள் பேசுவதில்லை. நகரத்தில் இருக்கும்போது ஒருபோதும் அவர்கள் கையில் ஆயுதங்களை வைத்திருக்கமாட்டார்கள். தாங்கள் பழக்கி வைத்திருக்கும் பறவைகளைக்கூட சேவைக்கு நிதி திரட்டும் சந்தையில் நடக்கும் ஃபால்கன் வேட்டைக்கு மட்டுமே கொண்டுவருவார்கள். அவன் தந்தையின் மரணத்தையடுத்து படிப்பை நடுநிலைப்பள்ளி இறுதியிலேயே கைவிட்டு பண்ணையை கவனிக்க வேண்டியதாயிற்று. தன்னளவில் அவன் சந்தோஷமாகவும் அமைதியாகவும் திறந்த மனதுடனும் வாழ்ந்துவந்தான்.

அவர்கள் அவனைக் கொல்ல இருந்த அன்று அவன் வெள்ளை உடை அணிந்திருப்பதைப் பார்த்த அவன் அம்மா அன்று என்ன கிழமை என்பதை அவன் அறியவில்லை என நினைத்தாள். "அவனிடம் அன்று திங்கட்கிழமை என்று நினைவூட்டினேன்", அவள் என்னிடம் சொன்னாள். பிஷப்பின் மோதிரத்தை முத்தமிட சந்தர்ப்பம் கிடைத்தாலும் கிடைக்கலாம் என்றெண்ணி அதற்கேற்ற வகையில் அவன் உடுத்தியிருந்தாகச் சொன்னான். அவள் அதுபற்றி எந்த ஆர்வமும் காட்டவில்லை. "அவர் படகிலிருந்து இறங்கக் கூட மாட்டார்", அவனிடம் சொன்னாள். "வழக்கம் போல பொதுவாக எல்லோருக்குமாக ஆசீர்வாதம் வழங்குவார்; பிறகு வந்த வழியே திரும்பிப் போய்விடுவார். அவருக்கு இந்த நகரத்தைப் பிடிப்பதில்லை".

அது உண்மையென்று சாண்ட்டியாகோ நாஸருக்குத் தெரியும். ஆனால் தேவாலயம் சார்ந்த பகட்டான விஷயங்கள் அவனை அதிகம் ஈர்க்கவே செய்தன. "அது சினிமா மாதிரி". ஒருமுறை என்னிடம் அவன் சொல்லியிருக்கிறான். பிஷப்பின் வருகையையொட்டி அவள் கவலைப்பட்டதெல்லாம் மழையில் அவன் நனைந்து விடக்கூடாதே என்றுதான். உறக்கத்தில் அவனுக்கு மூச்சுத் திணறுவதை அவள் கவனித்திருந்தாள். குடையொன்றை எடுத்துச் செல்லுமாறு அவள் சொன்னாள். ஆனால் அவன் வருகிறேன் எனக் கையசைத்துவிட்டு அறையிலிருந்தும் வெளியேறினான். அதுதான் அவள் கடைசியாக அவனைப் பார்த்தது.

அன்று மழைபெய்யவில்லை, அதோடு அந்த பிப்ரவரி மாதம்

முழுக்கவே மழையில்லை என்று உறுதிபடச் சொன்னாள் சமையற்காரி விக்டோரியா கஸ்மான். அவள் சாவதற்கு சற்று முன்புதான் நான் வந்து அவளைப் பார்த்தேன். அவள் சொன்னாள், "ஆனால் வழக்கத்துக்கு மாறாக ஆகஸ்ட் மாதத்தைக் காட்டிலும் வெகு சீக்கிரமே பொருட்கள் சூடாகிவிடும்" சாண்ட்டியாகோ நாஸர் சமையலறைக்குள் நுழைந்த பொழுது அவள் மதிய உணவுக்கென மூன்று முயல்களை, ஒவ்வொன்றையும் நான்கு துண்டங்களாக, வெட்டிக்கொண்டிருந்தாள். நாக்கைத் தொங்கப் போட்டபடி நாய்கள் அவளைச் சுற்றி நின்றிருந்தன. "அவர் எப்போதுமே சரியாக உறங்காதது போன்ற முகத்தோற்றத்துடனே காலையில் எழுந்திருப்பார்", ஒருவித வெறுப்புடன் நினைவு கூர்ந்தாள் விக்டோரியா கஸ்மான். அப்போதுதான் பருவ வயதை எட்டிக்கொண்டிருந்த அவள் மகள் டிவினா ஃப்ளோர் சாண்ட்டியாகோ நாஸருக்கு சிறிது கரும்புச் சாராயம் சேர்க்கப்பட்ட மலையக காப்பி ஒரு குவளை வழங்கினாள். முந்தைய இரவின் சுமையைத் தாங்கிக்கொள்ளவென அவனுக்கு திங்கட்கிழமைகளில் வழக்கமாகத் தரப்படுவது போன்றே அன்றும் அது தரப்பட்டது. அந்தப் பெரிய சமையலறை நெருப்புத் தணலின் கிசுகிசுப்புக்களோடும் அங்கங்கே தொற்றிக்கொண்டிருந்த கோழிகளோடும் சிரமத்துடன் மூச்சுவிட்டுக் கொண்டிருந்தது. சாண்ட்டியாகோ நாஸர் இன்னுமொரு ஆஸ்ப்பிரினை விழுங்கிவிட்டு அமர்ந்து காப்பியை மெதுவாக உறிஞ்சியபடியே முயல்களின் குடல்களைச் சுத்தம் செய்துகொண்டிருந்த அந்தப் பெண்களின் மீதிருந்து கண்களை அகற்றாமல் மெதுவாக சிந்தனையை ஓடவிட்டான். அந்த வயதிலும் விக்டோரியா கஸ்மான் நல்ல உடற்கட்டுடனேயே இருந்தாள். அவளுடைய மகள், அவளை இன்னும் பழக்கவில்லை, உடல் சுரப்பிகளின் ஓட்டத்தில் பூரித்திருந்தாள்.

காலி குவளையை எடுக்க வந்தபோது அவள் இடையைச் சுற்றி வளைத்தான்.

"உன்னைப் பழக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது." அவளிடம் சொன்னான்.

விக்டோரியா கஸ்மான் ரத்தம் தோய்ந்த கத்தியைக் காட்டினாள்.

"ஓயிட்டி, அவளை விடு" கோபத்துடன் சொன்னாள். "நான் உயிரோடிருக்கும்வரை அந்தத் தண்ணீரில் ஒரு வாய்கூட நீ அருந்த முடியாது"

அவளது பருவ வயதின் பூரிப்பில் விக்டோரியா கஸ்மானை இப்ராஹிம் நாஸர் நன்றாக அனுபவித்திருந்தார். பண்ணையில் குதிரை லாயத்துள் பல வருடங்களாக அவர்கள் காதல் புரிந்து வந்தனர். காதல் சலித்த பிறகு ஒரு வேலைக்காரியாக அவளை அவர் வீட்டுக்குள் கொண்டுவந்தார். அதன்பிறகு சில காலங்களுக்கு முன் பழகிய ஒருவனுக்குப் பிறந்தவள்தான் டிவினா ஃப்ளோர். தான் சாண்ட்டியாகோ நாஸரின் ரகசியப் படுக்கையறைக்கு விதிக்கப்பட்டவள் என்பதை டிவினா ஃப்ளோர் அறிந்திருந்தாள். ஆனாலும் முதிர்ச்சியற்றதொரு பரபரப்புடன் அதை எதிர்கொள்ளவும் அவள் ஆவலாக இருந்தாள். "அவரைப் போல இன்னொருவர் பிறந்துதான் வரவேண்டும்",

உடல்பருத்து அழகு குன்றியிருந்தவள் என்னிடம் சொன்னாள். பிற காதல் உறவுகளில் பிறந்த குழந்தைகள் அவளைச் சுற்றி நின்றிருந்தன. "அவர் தன் அப்பாவைப் போல," தன் மகளிடம் சொன்னாள் விக்டோரியா கஸ்மான். "நாசமாய்ப் போனவன்". ஆனால் அவள் முயலின் கால்களைப் பிடித்தபடி உள்ளுறுப்புக்களை வேகமாகக் களைந்து சூடு பறக்க அவற்றை நாய்களுக்குப் போட்டபோது சாண்ட்டியாகோ நாஸருக்கு ஏற்பட்ட கோபத்தை நினைவுகூர்ந்தபோது அவளுள் தோன்றிய நடுக்கத்தை அவளால் மறைக்க முடியவில்லை.

"ஏன் இத்தனை மூர்க்கம்," அவளிடம் அவன் கேட்டான். "அது ஒரு மனித உடலென்று எண்ணிச் செய்".

ஒன்றுமறியாத விலங்குகளைக் கொல்வதை வாடிக்கையாகக் கொண்டிருந்த ஒருவன் ஏன் திடீரென இப்படிப் பேசினான் என்பதைப் புரிந்துகொள்ள விக்டோரியா கஸ்மானுக்கு இருபது ஆண்டுகள் பிடித்தன.

"கடவுளே" ஆச்சரியத்துடன் அவள் விளக்கினாள். "அது எல்லாமே ஒரு முன் அறிகுறி". அப்படியிருந்தும் குற்றம் நடந்த அந்தக் காலையில் அவன் மீது முன்கூட்டியே அவளுக்கு அனேக மனத்தாங்கல்கள் இருந்தன. தொடர்ந்து அவள் மற்ற முயல்களின் உள்ளுறுப்புகளையும் களைந்து நாய்களுக்குப் போட்டாள். இதனால் சாண்ட்டியாகோ நாஸருக்கு காலை ஆகாரம் செல்லவில்லை. பிஷப் வருகை புரிந்த நீராவிப் படகின் பூமியதிரும் ஓசையில் நகரம் விழித்தபோது அவர்கள் இப்படித்தான் இருந்தார்கள்.

அந்த வீடு அதற்கு முன் ஒரு கிடங்காக இருந்தது. இரண்டு மாடிகள், சொரசொரப்பான சுவர்கள் மற்றும் பருந்துகள் அமர்ந்து படகுத்துறையிலிருந்த குப்பை மேட்டை நோட்டம் விட்டுக் கொண்டிருக்கும் இருபுறமும் சரிந்த, அலுமினியத் தகடு வேய்ந்த கூரை. ஆறு பயன்பாட்டில் இருந்து, கடலுள் செல்லும் பல படகுகளும் சொல்லப்போனால் சில கப்பல்களும் கழிமுகத்தின் சதுப்பு நிலங்கள் வழியாகச் சென்று வந்த காலத்தில் அக்கிடங்கு கட்டப்பட்டது. உள்நாட்டுப் போர்களின் முடிவில் கடைசி அராபியர்களோடு இப்ராஹிம் நாஸர் அங்கு வந்தபோது ஆற்றில் மேடுதட்டிவிட்டிருந்ததால் கப்பல்கள் வருவது நின்று போயிருந்தது. கிடங்கும் பயன்பாடின்றிக் கிடந்தது. தான் தொடங்க நினைத்து ஆனால் ஒருபோதும் தொடங்காத இறக்குமதிப் பொருட்களுக்கான கடை ஒன்றுக்காக அந்தக் கிடங்கை மலிவான விலைக்கு வாங்கினார் இப்ராஹிம் நாஸர். தனது திருமணத்துக்கு முன்புதான் அதை அவர் ஒரு குடியிருப்பதற்கான வீடாக மாற்றினார். வீட்டின் கீழ்த்தளத்தில் பலவகையிலும் பயன்பட்ட ஒரு கடையைத் திறந்தார். பின்புறம் நான்கு பிராணிகளுக்கென ஒரு கொட்டகையும், வேலைக்காரர் குடியிருப்பையும், படகுத் துறையைப் பார்த்து திறந்திருந்த, அவற்றின் வழி தண்ணீரிலிருந்து, பரவும் வியாதிகளனைத்தும் உள்நுழைந்த ஜன்னல்களைக் கொண்ட நாட்டுப்புற சமையலறை ஒன்றையும் அமைத்தார். கடையாக மாற்றியமைத்த இடத்தில் அவர் மாற்றாமல் விட்ட ஒரே விஷயம்

உடைந்த ஒரு கப்பலில் வந்திருந்த சுழல்படிக்கட்டு அமைப்பு மட்டும்தான். முன்பு சுங்க அலுவலகமாக விளங்கிய மேல்தளத்தில் இரண்டு பெரிய படுக்கையறைகளையும் தான் பெறப்போகும் கணக்கில்லாத குழந்தைகளுக்கென ஐந்து சிறு அறைகளையும் கட்டினார். பிந்நாளில் பிளாசிடோ லினேரோ தனிமையில் தன்னைத்தானே தேற்றியபடி அமர்ந்திருக்கப் பயன்பட்ட, சதுக்கத்திலுள்ள வாதுமை மரங்களைப் பார்த்தவாறு அமைக்கப்பட்ட மரத்தாலான மாடி முகப்பையும் கட்டினார். முன்புறத்தில் பிரதான கதவையும் நன்கு இழைக்கப்பட்ட சட்டங்களைக் கொண்ட முழுநீள ஜன்னல்கள் இரண்டையும் அமைத்தார். பின்புறத்திலும் அவர் கதவொன்றை அமைத்தார். ஆனால் ஒரு குதிரை நுழையும் அளவுக்கு சற்று உயரமாக அதை அமைத்தார். அங்கு பழைய மரப்பாலம் ஒன்றையும் அவர் பயன்பாட்டில் வைத்திருந்தார். இந்தப் பின்கதவே எல்லாராலும் அதிகம் பயன்படுத்தப்பட்டது. கார்ரணம் கொட்டகைக்கும் சமையலறைக்கும் செல்ல அதுவே சுலபமான வழி என்பது மட்டுமன்று, அந்தக் கதவு வழியாக சதுக்கத்தைத் தாண்டிச் செல்லாமலேயே தெருவுக்கும் புதிய படகுத்துறைக்கும் சென்றுவிட முடிந்தது. விழாக்காலங்கள் தவிர்த்து முன்கதவு எப்போதும் அடைக்கப்பட்டே இருந்தது. இருந்தும் சாண்ட்டியாகோ நாஸரைக் கொல்ல இருந்தவர்கள் அவனுக்காக இந்த முன்கதவின் அருகில்தான் காத்திருந்தனர், பின்கதவின் அருகே அல்ல. மேலும் படகுத்துறையை அடைய வீட்டைச் சுற்றிக்கொண்டு செல்லவேண்டுமென்று தெரிந்திருந்தும் கூட பிஷப்பை வரவேற்க அவன் முன்கதவு வழியாகவே சென்றான்.

இந்த குரூர வினோதங்களை யாராலும் புரிந்துகொள்ள முடியவில்லை. ரியோஹச்சாவிலிருந்து விசாரணைக்கு வந்திருந்த நீதிபதி இந்த வினோதங்களை உணர்ந்தபோதும் அவற்றை ஏற்றுக் கொள்ளும் தைரியம் அவருக்கு இருந்திருக்கவில்லையென்பது அவர்தன் அறிக்கையில் இவற்றுக்கெல்லாம் அறிவார்த்தமான விளக்கங்களை அளிக்க முற்பட்டதிலிருந்து புரிந்துகொள்ள முடிந்தது. சதுக்கத்தை நோக்கிய அக்கதவு வெகுஜன நாவல் தலைப்பு போல "மரணக் கதவு" எனப் பலமுறை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. யதார்த்தமாகப் பார்க்கையில் பிளாசிடா லினேரோவின் தாய்க்குரிய ஞானத்தோடு அமைந்த விளக்கமே ஏற்புடையதாக இருந்தது. "நன்றாக உடுத்தியிருக்கும்போது எப்போதுமே அவன் பின்பக்கக் கதவு வழியாகச் சென்றதில்லை". இதை அவ்வளவாக முக்கியமில்லாத குறிப்பு என ஓரமாகக் குறித்து வைத்த நீதிபதி பிறகு அதை அறிக்கையில் சேர்க்கவேயில்லை.

அவர்கள் சாண்ட்டியாகோ நாஸரைக் கொல்லக் காத்திருந்ததை தானோ தன் மகளோ அறிந்திருக்கவில்லையென்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டாள் விக்டோரியா கஸ்மான். ஆனால் காலப்போக்கில், அவன் காப்பி அருந்த சமையலறைக்கு வந்த போதே அது பற்றி அவர்கள் அறிந்திருந்ததை ஒப்புக் கொள்ளத் தொடங்கினாள். ஐந்து மணியடித்த சற்று நேரத்துக்கெல்லாம் கொஞ்சம் பால் கேட்டு அங்கு வந்த பெண்ணொருத்தி அந்தச் செய்தியை அவர்களுக்குச் சொன்னாள். மேலும் கொலைக்கான காரணம், கொலை

நடக்கப் போகும் இடம் இவற்றையும் கூட அவள் அவர்களிடம் சொன்னாள். "அது குடிகாரர்களது பேச்சு என்று கருதி சாண்ட்டியாகோ நாஸரை நான் எச்சரிக்கவில்லை", அவள் என்னிடம் சொன்னாள். ஆனால் பின்பொருமுறை நான் வந்தபோது தன் தாய் சாண்ட்டியாகோ நாஸரை எச்சரிக்காததற்கு காரணம் அடிமனதில் அவன் சாக வேண்டுமென அவள் விரும்பியதுதான் என டிவினா ஃப்ளோர் கூறினாள். அப்போது அவள் தாய் உயிரோடு இருக்கவில்லை. தானொரு பயம்நிரம்பிய குழந்தையாக, தன்னளவில் ஒரு முடிவெடுக்க இயலாத நிலையில் இருந்ததால் தன்னாலும் அவனை எச்சரிக்க முடியவில்லை என்றாள். மேலும் அவன் அவள் இடையைப் பற்றியபோது அவனது கரம் உறைந்து கல்போல, இறந்து போன ஒருவரது கரம்போல இருந்ததால் அவளது பயம் அதிகரிக்கவே செய்தது என்றாள்.

பிஷப்பின் படகிலிருந்து கேட்ட ஆரவாரம் பின்தொடர இருள் படிந்த வீட்டினூடாக நீண்ட அடிகள் வைத்து நடந்தான் சாண்ட்டியாகோ நாஸர். கதவைத் திறந்துவிட வேண்டி அவனுக்கும் முன்பாகச் சென்றாள் டிவினா ஃப்ளோர். தன்னை முந்தி அவன் சென்றுவிடாதபடிக்கு சாப்பாட்டு அறையின் பறவைகள் உறங்கிக்கொண்டிருந்த கூண்டுகள், புழங்கும் அறையின் பிரம்புமரச் சாமான்கள் மற்றும் மேலிருந்து தொங்கவிடப்பட்ட பூந்தொட்டிகளில் வளர்ந்த அலங்காரக் கொடிகள் இவற்றைத் தாண்டி அவசரமாக நடந்தாள். ஆனாலும் கதவை மூடிச் சாத்தியிருந்த குறுக்குச் சட்டத்தை எடுத்தபோது மறுபடியும், இறுகிய அந்தக் கரத்தின் பிடியை அவளால் தடுக்க முடியவில்லை. "என் அந்தரங்க இடத்தை முழுதுமாகப் பற்றினார்", டிவினா ஃப்ளோர் என்னிடம் சொன்னாள். "வழக்கமாக வீட்டின் ஏதேனும் ஒரு மூலையில் தனியாக நான் அகப்பட்டுக்கொள்ளும்போது அவர் செய்வதுதான் என்றபோதும் வழக்கமாக எனக்குள் ஏற்படும் கிளர்ச்சிக்குப் பதிலாக விவரிக்கமுடியாத வகையில், அழவேண்டும் போல ஒரு உணர்வு ஏற்பட்டது". அவன்போக வேண்டி அவனிடமிருந்தும் தன்னை விடுவித்துக்கொண்டாள். பாதி திறந்த கதவு வழியே அதிகாலை ஒளியில் மங்கலாகத் தோன்றிய சதுக்கத்து வாதுமை மரங்களைப் பார்த்தாள். வேறு எதையும் பார்க்க அவளுக்குத்துணிவில்லை. "அப்போது படகின் சத்தம் ஓய்ந்தது. சேவல்கள் கூவ ஆரம்பித்தன", அவள் என்னிடம் சொன்னாள். "கூவும் சத்தம் மிக அதிகமாக இருந்தது. நகரத்தில் அத்தனை சேவல்களா என்று வியந்தேன். அவை பிஷப்பின் படகில் வந்திருக்கலாம் என்று நினைத்தேன்". ஒரு போதும் அவளுடையவனாக இல்லாத அந்த மனிதனுக்காக அவள் செய்ய இயன்றதெல்லாம் பிளாசிடா லினேரோவின் உத்தரவுப்படி கதவை அடைக்காமல் விட்டதுதான். அப்போதுதான் ஏதேனும் அவசரம் என்றால் அவன் திரும்பி உள்ளே வர ஏதுவாக இருக்கும். கடைசிவரை யாரென்று அடையாளம் காணப்படாத ஒரு நபர் அவர்கள் அவனைக் கொல்லப் போவதாக கடிதமொன்றை எழுதி கதவடியில் வைத்து உள்ளேதள்ளிவிட்டுப் போயிருந்தான். கொலை நடக்கப் போகும் இடம், அதற்கான காரணம் மற்றும் கொலைச்சதி பற்றிய பிற நுட்பமான விவரங்கள் அனைத்தும் அதில் இருந்தன. சாண்ட்டியாகோ

நாஸர் வீட்டைவிட்டுக் கிளம்பியபோது அந்தக் கடிதம் தரையில்தான் கிடந்தது. ஆனால் அவன் அதைக் கவனிக்கவில்லை. கொலை நடந்து வெகுநேரம் வரை டிவினா ஃப்ளோரோ அல்லது வேறு யாரோ கூட அதைக் கவனிக்கவில்லை. மணி ஆறு அடித்திருந்தது. தெருவில் இன்னும் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. வாதுமை மரங்களின் கிளைகளிலும் சில வீடுகளின் மாடி முகப்புகளிலும் திருமணத்துக்கென கட்டப்பட்ட அலங்காரத் தோரணங்கள் இன்னும் தொங்கிக் கொண்டிருந்தன. பிஷப்பை பெருமைப்படுத்தும் விதமாகவே அத்தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன என ஒருவர் எண்ணவும் இடமிருந்தது. வாத்தியக் குழுவினர் நிற்கும் இடமான தேவாலயத்தின் முன்புறப் படிகள் வரை கல் பாவி பரவியிருந்த சதுக்கமோ ஒரு குப்பை மேடு போலக் காட்சியளித்தது. காலி பாட்டில்கள் மற்றும் பொதுவிழாக் காலங்களில் சேரும் வழக்கமான குப்பைகளால் நிறைந்திருந்தது. சாண்ட்டியாகோ நாஸர் வீட்டை விட்டு வெளியே வந்த போது படகு எழுப்பிய ஓசையினால் பரபரப்பு கூடியவர்களாய் மக்கள் படகுத்துறை நோக்கி விரைந்துகொண்டிருந்தனர்.

அப்போது சதுக்கத்தில் திறந்திருந்த ஒரே இடம் தேவாலயத்தின் ஒருபுறத்தில் அமைந்திருந்த, சாண்ட்டியாகோ நாஸரைக் கொல்வதற்காக இருவர் காத்திருந்த, ஒரு பால் விற்பனை நிலையம் மட்டுமே. அதன் சொந்தக்காரியான க்ளோடில்டி அர்மென்ட்டாதான் அதிகாலை ஒளியில் சாண்ட்டியாகோ நாஸரை முதலில் பார்த்தவள். அவன் அலுமினியத்தில் உடையணிந்திருப்பதுபோல அவளுக்குத் தோன்றியது. "அப்போதே அவனொரு ஆவியைப் போலத் தோன்றினான்", அவள் என்னிடம் சொன்னாள். அவனைக் கொல்லக் காத்திருந்தவர்கள் செய்தித்தாள்களில் சுற்றப்பட்ட கத்திகளை நெஞ்சோடு சேர்த்து இறுகப் பற்றியபடி பெஞ்சுகள் மீது படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் விழித்துவிடக் கூடாதென்று க்ளோடில்டி அர்மென்ட்டா மூச்சுக்கூட விடாமல் அமர்ந்திருந்தாள்.

அவர்கள் இரட்டைப்பிறவிகள்; பெட்ரோ மற்றும் பாப்லோ விகாரியோ. வயது இருபத்து நான்கு. இருவரும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருந்ததால் இருவரையும் பிரித்து அறிவது சிரமம். "பார்ப்பதற்கு கெடுபிடியான தோற்றமுடையவர்கள். இருந்தாலும் ஒருவகையில் நல்லவர்கள்" விசாரணை அறிக்கையில் இப்படித்தான் குறிப்பிடப்பட்டிருந்தது. இலக்கணப் பள்ளியிலிருந்தே அவர்களை அறிந்திருந்த நான் விசாரணை அதிகாரியின் இடத்தில் இருந்திருந்தால் கூட இதையேதான் எழுதியிருப்பேன். அந்த காலைப்பொழுதில் திருமணத்துக்காக தைக்கப்பட்ட அடர் வண்ண உடையை அவர்கள் அணிந்திருந்தனர். கரீபியன்கள் என்ற வகையில் அவர்களுக்கு அது அதிகப்படியானதாகவும் மிகவும் சம்பிரதாயமானதாகவும் தோன்றியது. பலமணி நேரமாக மனஅலைப்புடன் இருந்ததால் அவர்கள் உருக்குலைந்து போனவர்களாகக் காணப்பட்டனர். இருப்பினும் அவர்கள் தங்கள் காலைக்கடனை முடித்து முகச்சவரமும் செய்துகொண்டு வந்திருந்தனர். திருமணத்துக்கு முந்தின நாளிலிருந்து அவர்கள் குடிப்பதை நிறுத்தவில்லை என்ற போதும் அம் மூன்று நாட்களின் இறுதியில் அவர்கள்

சூடிந்திருந்தவர்கள் போல் தோன்றவில்லை. அவர்களைப் பார்த்தால் உறக்கத்தில் நடப்பவர்களைப் போல இருந்தது. க்ளோடில்டி அர்மென்ட்டாவின் கடையில் கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் காத்திருந்த பின் அதிகாலைத் தென்றல் வீசத் தொடங்கிய போது அவர்கள் உறங்கிப் போனார்கள். வெள்ளிக்கிழமை தொடங்கி அப்போதுதான் அவர்கள் முதல் முறையாக உறங்கினர். படகிலிருந்து வந்த இரைச்சல் அவர்களை எழுப்பவில்லை. ஆனால் சாண்ட்டியாகோ நாஸர் வீட்டை விட்டு வெளியே வந்தபோது உள்ளுணர்வு அவர்களை எழுப்பியது. இருவரும் சுருட்டி வைத்திருந்த செய்தித்தாள்களை கையில் எடுத்துக்கொண்டனர். பெட்ரோ விகாரியோ எழுந்து நிற்க முயன்றான்.

"கடவுளே" க்ளோடில்டி அர்மென்ட்டா முணுமுணுத்தாள். "அவனை தாமதமாக அனுப்பும், அருள்மிகு பிஷப்பின் மகிமையின் நிமித்தமாவது"

"அது பரிசுத்த ஆவியின் மூச்சு," அவள் அடிக்கடி சொல்வாள். அதை அவள் மிகச்சரியான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தினாள். ஆனால் அதன் பயன் அதிக நேரம் நீடித்ததில்லை. அவள் இதை சொல்லக் கேட்டு விகாரியோ சகோதரர்கள் சிறிது யோசித்தனர். எழுந்தவன் திரும்பவும் அமர்ந்தான். சாண்ட்டியாகோ நாஸர் சதுக்கத்தைக் கடந்த போது அவனை அவர்கள் கண்களாலேயே பின்தொடர்ந்தனர். "அவனை அவர்கள் அதிகமும் பரிதாபத்துடனே பார்த்தனர்". க்ளோடில்டி அர்மென்ட்டா சொன்னாள். அனாதைக் குழந்தைகள் மடத்து சீருடையில் இருந்த, கன்னியாஸ்திரீகள் பள்ளியைச் சேர்ந்த சிறுமிகள் வரிசை கலைந்து சப்தமெழுப்பியபடி அப்போது சதுக்கத்தைக் கடந்தனர்.

பிளாசிடா லினேரோ சொன்னது சரிதான்: பிஷப் படகிலிருந்து இறங்கவில்லை. அதிகாரிகள், பள்ளிக் குழந்தைகள் இவர்களுடன் சேர்ந்து ஏராளமான பொதுமக்களும் படகுத்துறையில் இருந்தனர். பிஷப்புக்கு அன்பளிப்பாக வழங்கவென கொண்டுவரப்பட்டிருந்த கொழுத்த சேவல்கள் எங்கு பார்த்தாலும் கூண்டுகளில் காணப்பட்டன. ஏனென்றால் சேவல் கொண்டை சூப் பிஷப்புக்கு பிடித்தமானது. சரக்கு ஏற்றும் இடத்தில் ஏராளமான விறகுகள் அடுக்கப்பட்டிருந்தன. அவற்றைப் படகில் ஏற்ற குறைந்தது இரண்டு மணி நேரமாவது ஆகும் எனத் தோன்றியது. ஆனால் பிஷப்பின் படகு அங்கு நீண்டநேரம் நிற்கவில்லை. ஆற்றின் வளைவு அருகே குறட்டை விடும் டிராகனைப் போல அது வந்தது. உடன் வாத்தியக் குழுவினர் பிஷப்புக்கான கீதத்தை இசைத்தனர். சத்தம் கேட்டு கூண்டுகளில் இருந்த சேவல்கள் கூவின. அதைத் தொடர்ந்து நகரெங்கிலும் இருந்த சேவல்களும் கூவத் தொடங்கின.

அப்போது, விறகை எரித்து இயக்கப்பட்ட பிரசித்தி பெற்ற உருளைச் சக்கரப் படகுகள் கிட்டத்தட்ட மறைந்துவிட்டிருந்தன. இருந்த ஒன்றிரண்டு படகுகளிலும் பெரிய பியானாக்களோ மணப்பெண்ணுக்கான தனி அறைகளோ கிடையாது. மேலும் நீரோட்டத்துக்கு எதிராகச் செல்லும் திறனையும் அவை இழந்துவிட்டிருந்தன. ஆனால் பிஷப்பின் படகோ புதியதாக இருந்தது. நீராவி வெளியேற ஒன்றுக்கு பதிலாக இரண்டு

குழாய்கள் இருந்தன. புஜப்பட்டைகள் வடிவில் அவற்றின் மீது கொடி வரையப்பட்டிருந்தது. படகின் பின்புறமிருந்த மரச்சட்டங்களால் ஆன உருளைச்சக்கரம் கடலில் பயணிக்கும் கப்பலின் வேகத்தை படகுக்குத் தந்தது. மேல் தளத்தில் கேப்டனது அறைக்கு அருகே தனது ஸ்பானியப் பணியாளர்களுடன் வெள்ளை அங்கி தரித்தவராய் பிஷப் தோன்றினார்.

"அது கிறிஸ்துமஸ் கால சீதோஷ்ண நிலை" என் சகோதரி மார்கட் குறிப்பிட்டாள். அவளைப் பொருத்தமட்டில் அங்கு நடந்தது இதுதான். படகுத்துறையைத் தாண்டிப் போகையில் படகின் ஊதலில் இருந்து அமுக்கப்பட்ட நீராவி வேகமாக பீய்ச்சியடித்தது. ஓரமாக நின்றிருந்தவர்களை அது நனைத்து விட்டது. எல்லாம் கணப்பொழுதில் மாயமாக நடந்து விட்டது போலிருந்தது. பாலத்தில் நின்றிருந்த மக்களை நோக்கி பிஷப் காற்றில் சிலுவை வரைந்தார். பார்வையிலிருந்து படகு மறையும் வரை விருப்போ வெறுப்போ எதுவுமின்றி இயந்திரத்தனமாக அவர் சிலுவை வரைந்து கொண்டே இருந்தார். பிறகு அந்த இடத்தில் சேவல்களின் கூச்சல் மட்டுமே எஞ்சியிருந்தது.

சாண்ட்டியாகோ நாஸர் ஏமாற்றப்பட்டவனாக உணர்ந்ததற்கு காரணமிருந்தது. பாதிரியார் கார்மென் அமடோரின் பொதுச் சேவை பணிகளுக்காக வேண்டி அவன் ஏராளமான விறகுகளையும் கூடவே இவனே தேர்ந்தெடுத்த விதைநீக்கம் செய்யப்பட்ட கொழுத்த பன்றிகளையும், ருசியான இறைச்சி கொண்ட சேவல்களையும் கொடுத்திருந்தான். பாலத்தில் அவனுடன் நின்றுகொண்டிருந்த என் சகோதரி மார்கட் அவன் மகிழ்ச்சியானதொரு மனநிலையில் இருந்ததையும் ஆஸ்ப்பிரின்கள் உரிய நிவாரணம் தராத போதும் தொடர்ந்து விழாவைக் கொண்டாட அவன் ஆவல் கொண்டிருந்ததையும் தான் அறிந்ததாகக் கூறினாள். "பார்க்க அவன் கோபமாக இருப்பது போல் தோன்றவில்லை, திருமணத்துக்கு எவ்வளவு செலவாகியிருக்குமென்று யோசனை செய்து கொண்டிருப்பதாகவே தோன்றியது", என அவள் என்னிடம் சொன்னாள். அப்போது அவர்களுடன் இருந்த கிறிஸ்டோ பெடோயாவின் கணக்கு விவரங்கள் சாண்டியகோ நாஸரின் வியப்பை அதிகரிக்கவே செய்தன. மணி நான்கு அடிப்பதற்கு சற்று முன்பு வரையிலும் கிறிஸ்டோ பெடோயா என்னுடனும் சாண்டியாகோ நாஸருடனும் விருந்தில்தான் இருந்தான். வீட்டுக்குச் செல்வதாக கிளம்பிய அவன் தன் வீட்டுக்குச் செல்லாமல் தன் பாட்டி வீட்டுக்குச் சென்று அங்கு பேசிக் கொண்டிருந்திருக்கிறான். விருந்துக்கென நாற்பது வான்கோழிகள், பதினோரு பன்றிகள், பொதுச்சதுக்கத்திலிருக்கும் மக்களுக்கு மாமிசம் வறுத்துத்தரவென்று மணமகன் தனியே கேட்ட நான்கு கன்றுக்குட்டிகள் என செலவாகியிருப்பதாகச் சொன்னான் கிறிஸ்டோ பெடோயா. வெளிநாட்டிலிருந்து கடத்தி கொண்டுவரப்பட்ட இருநூற்றைம்பது பெட்டி மதுவும், பொதுமக்களுக்காக கிட்டத்தட்ட இரண்டாயிரம் பாட்டில் கரும்புச் சாராயமும் செலவாகியிருப்பதாகச் சொன்னான். இதுவரை அந்த நகரத்தில் நடந்த விருந்துகளிலேயே மிகவும் தடபுடலான அந்த விருந்தில் ஏழையோ, பணக்காரரோ, கலந்துகொள்ளாதவரென்று யாருமே இல்லை.

சாண்டியாகோ நாஸர் பெரிதாகக் கனவு கண்டுகொண்டிருந்தான்.

"என் திருமணம் எப்படியிருக்கும் தெரியுமா?", அவன் சொன்னான். "அதைப் பற்றிப் பேச மக்களுக்கு ஆயுள் போதாது".

அவ்விடத்தை தேவதூதன் கடந்து போவதை என் சகோதரி உணர்ந்தாள். ஃப்ளேரா மிகுயெலின் அதிர்ஷ்டம் பற்றி அவள் நினைத்துப் பார்த்தாள். ஏற்கனவே பல விஷயங்களில் கொடுத்து வைத்தவளான அவள் வரப்போகும் கிறிஸ்துமஸ் அன்று சாண்டியாகோ நாஸரை கணவனாக அடைவாள்.

"அவனைக் காட்டிலும் அவளுக்கொரு பொருத்தமான துணை கிடைக்க முடியாதெனத் தோன்றியது," அவள் என்னிடம் சொன்னாள். "எண்ணிப் பார்: அழகானவன், சொன்ன சொல் தவறாதவன், இருபத்தோரு வயதிலேயே தனக்கென குறிப்பிடும்படியான அளவுக்கு சொத்து வைத்திருப்பவன்". வீட்டில் அம்மா மரவள்ளிக் குழம்பு செய்யும் போதெல்லாம் என் சகோதரி அவனை சாப்பிட வீட்டுக்கு அழைப்பாள். அன்று காலையும் எங்கள் வீட்டில் மரவள்ளிக் குழம்பு இருந்ததால் அவனை சாப்பிட அழைத்தாள். வருவதாக அவனும் மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டான்.

"உடைமாற்றிக் கொண்டு உன்னோடு வருகிறேன்" என்றவன் தன் கைக்கடிகாரத்தை இரவு மேசையிலேயே வைத்துவிட்டு வந்ததை உணர்ந்தான். "இப்போது மணி என்ன?"

அப்போது மணி ஆறு இருபத்தைந்து. கிறிஸ்டோ பெடோயாவின் புஜத்தைப் பற்றி சதுக்கத்தை நோக்கி அழைத்துச் சென்றான் சாண்டியாகோ நாஸர்.

"இன்னும் பதினைந்து நிமிடத்தில் உன் வீட்டில் இருப்பேன்", அவன் என் சகோதரியிடம் சொன்னான்.

உணவு ஏற்கனவே தயாராகிவிட்டிருந்ததால் அப்படியே நேராக வீட்டுக்குப் போகலாமே என அவள் வற்புறுத்தினாள். "அவள் வற்புறுத்தியது விநோதமாக இருந்தது", கிறிஸ்டோ பெடோயா என்னிடம் சொன்னான். "அவர்கள் சாண்ட்டியாகோ நாஸரைக் கொல்லப் போவதை அவள் அறிந்திருந்து எப்படியாவது அவனை உங்கள் வீட்டில் மறைத்து வைக்கவேண்டித்தான் அப்படிச் சொன்னாளோ என சில நேரம் எனக்குத் தோன்றியதுண்டு."

சில காளைக்கன்றுகளுக்கு விதைநீக்கம் செய்யவேண்டி சீக்கிரமே டிவைன் ஃபேஸ் பண்ணைக்குச் செல்ல வேண்டியிருப்பதால் தான் குதிரை சவாரிக்கான உடையணிய வேண்டுமென்றும் தனக்காகக் காத்திருக்காமல் அவள் வீட்டுக்குக் கிளம்பிச் சென்றால் தான் உடனே உடை மாற்றிக்கொண்டு வருவதாகவும் சொன்னான் சாண்ட்டியாகோ நாஸர். தன் அம்மாவிடம் விடைபெற்றது போலவே அவளிடமும் விடை பெற்றுக்கொண்டு கிறிஸ்டோ பெடோயாவின் புஜத்தைப் பற்றியபடி சதுக்கத்தை நோக்கி நடந்தான்.

பட குத்துறையில் இருந்தவர்களில் அநேகம் பேர் அவர்கள் சாண்ட்டியாகோ நாஸரை கொல்லப் போவதை அறிந்திருந்தனர். அகாடமியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற கர்னலும், நகர மேயருமான டான்லாஸரோ அபோந்தி அங்கிருந்து அவனை நோக்கி விரல்களை விரித்துக் கையசைத்தார். "அவனுக்கு எவ்வித ஆபத்தும் நேராது என்பதில் என்னளவில் நான் உறுதியாக இருந்தேன்," அவர் என்னிடம் சொன்னார். பாதிரியார் கார்மென் அமடோரும் கூட கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. "அவனை அத்தனை பாதுகாப்பாகவும் தைரியத்துடனும் பார்த்தபோது எல்லாமே வதந்தி என நினைத்தேன்," என்னிடம் அவர் சொன்னார். ஆனால் இது குறித்து சாண்ட்டியாகோ நாஸரை யாரேனும் எச்சரித்தார்களா என்பது பற்றி யாரும் யோசிக்கக் கூட இல்லை. ஏனென்றால் அவன் எச்சரிக்கப்படாமல் இருப்பதற்கான சாத்தியமே இல்லையெனத் தோன்றியது.

பார்க்கப்போனால் அவனை அவர்கள் கொல்லப்போகிறார்கள் என்ற தகவல் அறியாத வெகு சிலரில் என் சகோதரி மார்கட்டும் ஒருத்தி. "எனக்கு மட்டும் அது தெரிந்திருந்தால் பன்றியைக் கட்டுவது போலக் கைகால்களைக் கட்டியாகிலும் அவனை வீட்டுக்குக் கொண்டு சென்றிருப்பேன்", விசாரணை அதிகாரியிடம் அவள் தெரிவித்தாள். அவளுக்கு விஷயம் தெரியாது என்பது ஆச்சரியம் என்றால் என் அம்மாவுக்கும் கூட அது தெரியவில்லையென்பது அதைவிட ஆச்சரியம். காரணம், அவள் தெருவில் கால் வைத்து, சொல்லப்போனால் தேவாலய வழிபாட்டுக்கு சென்று கூட, வருடக்கணக்காக ஆகியிருந்தபோதும் வீட்டில் வேறு யாரையும் விட ஊரில் நடக்கும் விஷயங்கள் முதலில் அவளுக்குத்தான் தெரியவரும். பள்ளிக்கூடம் போகவேண்டி காலையில் சீக்கிரம் எழுந்துவிடத் தொடங்கிய காலந்தொட்டே இதை நான் அறிந்து வந்திருக்கிறேன். அப்போது அவள் மெலிந்திருந்தாள். சாம்பல் நிறத்தில் ஒளிரும் அதிகாலைப் பொழுதில் குறுகுறுபார்வையுடன் வீட்டில் செய்த துடைப்பத்தைக்கொண்டு வாசலை பெருக்கிக்கொண்டிருப்பாள். காப்பியை அருந்தியபடியே, நாங்கள் உறங்கிக்கொண்டிருந்தபொழுது உலகில் நடந்தவற்றையெல்லாம் என்னிடம் சொல்லத் தொடங்குவாள். நகரத்தில் இருந்த மக்களோடு, குறிப்பாக அவள் வயதையொத்தவர்களோடு அவள் ரகசியத் தகவல் தொடர்பு வைத்திருந்தாளோ என எண்ணத்தோன்றும். சிலநேரம் அவள் நடக்கப் போவதை முன்கூட்டியே தெரிவித்து எங்களை வியப்புக்குள்ளாக்கும்போது காலத்தை முன்னறியும் அமானுஷ்ய சக்தி அவளுக்கு உள்ளதோ என ஆச்சரியமடைவோம். ஆனால் அன்று அதிகாலை மூன்று மணியிலிருந்தே உருக்கொள்ளத் தொடங்கியிருந்த அந்தத் துயர நிகழ்வு பற்றிய எந்தவொரு குறிப்பையும் அவள் அறிந்திருக்கவில்லை. அன்று காலை என் சகோதரி மார்கட் பிஷப்பை வரவேற்க வீட்டை விட்டுக் கிளம்பும்போது வாசலைப் பெருக்கி முடித்துவிட்டு குழம்புக்காக மரவள்ளியை அரைத்துக் கொண்டிருந்தாள். பிறகு அந்த நாளை நினைவு கூறும் போதெல்லாம் என் அம்மா இவ்வாறு சொல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தாள். "சேவல்கள் பேசுவதை நாம் கேட்க முடியும்". தொலைவே கேட்ட சேவல்களின்

இரைச்சலுக்கு பிஷப்பின் வருகை அல்ல, திருமண விருந்தில் மிச்சமான பதார்த்தங்களே காரணமாக இருக்குமென அவள் நம்பினாள்.

எங்கள் வீடு பிரதான சதுக்கத்திலிருந்து குறிப்பிடும்படியான தொலைவில் ஆற்றங்கரையில் மாந்தோப்பு நடுவே இருந்தது. என் சகோதரி ஆற்றங்கரையோரமாக நடந்தே படகுத்துறைக்குச் சென்றாள். பிஷப் வருகையை ஒட்டிய பரபரப்பில் மூழ்கியிருந்ததால் மக்கள் வேறெந்த விஷயம் குறித்தும் அக்கறை காட்டவில்லை. நோயுற்றவர்களை கடவுளது அற்புத குணம் பெற வேண்டி அலங்கார வழிகளில் அமர்த்தியிருந்தனர். வான்கோழிகள், பால்குடிக்கும் பன்றிக் குட்டிகள் மற்றும் சாப்பிடக்கூடிய பலவகையான பதார்த்தங்களோடு பெண்கள் வீடுகளிலிருந்தும் விரைந்து வந்தனர். பூ நிரம்பிய சிறு படகுகள் எதிர்க்கரையிலிருந்து வந்துகொண்டிருந்தன. ஆனால் பிஷப் நகரத்தில் கால்பதிக்காமலே சென்றுவிட்ட பின் அதுவரை கமுக்கமாக இருந்த அந்த மற்றொரு செய்தி அதிர்ச்சியூட்டும்படியாக விஸ்வரூபமெடுத்தது. என் சகோதரி மிகுந்த வருத்தத்துடன் அச்செய்தியை அறிந்தாள். நேற்று திருமணமான ஏஞ்செலா விகாரியாவை அவள் கணவன் பிறந்த வீட்டுக்குத் திருப்பி அனுப்பிவிட்டான். காரணம் அவள் ஏற்கனவே கன்னிகழிந்திருந்ததை அவன் தெரிந்து கொண்டதுதான். "நான்தான் சாகப் போகிறேன் என அப்போது நினைத்தேன்" மிகுந்த அதிர்ச்சியடைந்தவளாக இருந்த என் சகோதரி சொன்னாள். "எப்படி இந்தக் கதைக்கு கண் காது மூக்கெல்லாம் வைத்தார்களோ தெரியவில்லை. இதில் சாண்ட்டியாகோ நாஸர் எங்கே வந்தான் என்றும் யாரும் எனக்கு விளக்கமாகச் சொல்லவில்லை" அவர்களுக்கு உறுதிபடத் தெரிந்ததெல்லாம் ஏஞ்செலா விகாரியோவின் சகோதரர்கள் அவனைக் கொலை செய்யக் காத்திருக்கிறார்கள் என்பதுதான்.

மனதுக்குள் வேதனையுடன் அழுகையை அடக்கியவளாக என் சாகோதரி வீடு வந்து சேர்ந்தாள். என் அம்மா நீலநிறப் பூக்கள் கொண்ட, ஞாயிற்று கிழமைக்கான சிறப்பு உடையை அணிந்தவளாய் ரகசியக் காதல் குறித்தான "ஃபேடோ" பாடலைப் பாடியபடி சாப்பாட்டு மேசையை ஒழுங்கு செய்துகொண்டிருந்தாள். வழக்கத்துக்கு மாறாக சாப்பாட்டு மேசையில் கூடுதலாக ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருப்பதை என் சகோதரி கண்டாள்.

"அது சாண்ட்டியாகோ நாஸருக்கு," என் அம்மா அவளிடம் சொன்னாள். "நீ அவனைக் காலை உணவுக்கு அழைத்திருப்பதாகச் சொன்னார்கள்."

"அந்த நாற்காலியை தூர எடுங்கள்," என் சகோதரி சொன்னாள்.

பிறகு அவளிடம் விஷயத்தைச் சொன்னாள். "ஆனால் எல்லாமே அவளுக்கு முன்கூட்டியே தெரிந்தது போலிருந்தது," அவள் என்னிடம் சொன்னாள், "எல்லாம் வழக்கம்போலத்தான்: ஏதேனும் ஒரு விஷயத்தைச் சொல்லும்போது பாதியிலிலேயே, அவளுக்கு அந்த விஷயம் தெரிந்துவிட்டிருப்பது நமக்கு தெரிந்துவிடுகிறது". அந்தச் செய்தி என் அம்மாவுக்கு மிகுந்த சஞ்சலத்தை ஏற்படுத்தியது. சாண்ட்டியாகோ நாஸரது ஞானஸ்நானத்தின்போது அவள் அவனுக்கு ஞானத்தாயாக இருந்தவள். அவள் பெயரைத்தான் அவனுக்கு வைத்தார்கள். அதே நேரம் வீட்டுக்குத்

திருப்பி அனுப்பப்பட்ட மணப்பெண்ணின் தாயான ப்யூரா விகாரியோவுக்கும் அவளுக்கும் ரத்த உறவு இருந்தது. இருந்தும் அவள் அந்தச் செய்தியைக் கேட்ட உடனேயே உயர்ந்த குதிகாலுடைய ஷூக்களை அணிந்துகொண்டு, துக்கம் விசாரிக்கப் போகையில் மட்டும் போர்த்திக் கொள்ளும், தேவாலயத்து சால்வையையும் போர்த்திக்கொண்டாள். படுக்கையிலிருந்தபடியே எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த என் அப்பா இரவு உடையோடு எழுந்து சாப்பாட்டு அறைக்கு வந்து ஒருவித அச்சத்தோடு, அவளிடம் எங்கே கிளம்புகிறாய் எனக் கேட்டார்.

"என் அன்புக்குரிய தோழி பிளாசிடாவை எச்சரிக்க", அவள் பதில் சொன்னாள், "அவள் மகனை அவர்கள் கொல்லப் போவதை எல்லாரும் அறிந்திருக்க அவள் மட்டும் அறியாமலிருப்பது சரியல்ல".

"அவளோடு நமக்கு என்ன உறவு இருக்கிறோ அதே உறவுதான் விகாரியோ குடும்பத்தோடும் இருக்கிறது", என் அப்பா சொன்னார்.

"அப்படியானால் இந்த சந்தர்ப்பத்தில் இழவு வீடுதான் முக்கியம்" அவள் சொன்னாள்.

என் இளைய சகோதரர்கள் தங்கள் படுக்கை அறைகளிலிருந்துப் வெளியே வரத் தொடங்கினர். அந்த துயரச் சம்பவம் பற்றி கேள்விப்பட்ட என் கடைக்குட்டி சகோதரன் அழத்தொடங்கினான். என் அம்மா யார் சொல்வதையும் கேட்கத் தயாராக இல்லை. வாழ்வில் முதல் தடவையாக அவள் தன் கணவன் பேச்சை மீறினாள்.

"ஒரு நிமிடம் பொறு, நான் உடைமாற்றிக் கொண்டு வந்துவிடுகிறேன்," அவர் அவளிடம் சொன்னார்.

அவள் அதற்குள்ளாக தெருவில் இறங்கி விட்டிருந்தாள். என் சகோதரன் ஜெய்மி மட்டுமே அப்போது பள்ளிக்கூடம் போவதற்கான உடையணிந்திருந்தான்.

"நீ அவளோடு போ", அப்பா அவனிடம் சொன்னார்.

ஜெய்மி அவள் பின்னாலேயே ஓடினான். என்ன நடக்கிறது, எங்கே போகிறோம், எதுவுமே அவனுக்குப் புரியவில்லை. அவள் கையை அவன் பிடித்துக்கொண்டான். "தனக்குத்தானே பேசியபடி அம்மா போய்க்கொண்டிருந்தாள்" ஜெய்மி என்னிடம் சொன்னான். "என்னவொரு கேவலமான வாழ்க்கை," மூச்சு வாங்கியபடியே சொன்னாள், "அசிங்கம் பிடித்த விலங்குகள். நல்லபடியாக எதுவும் செய்யத் தெரியாத விலங்குகள்". கையில் குழந்தையைப் பிடித்திருக்கிறோம் என்ற பிரக்ஞைகூட அவளுக்கு இல்லை. "எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்றுகூட அவர்கள் நினைத்திருப்பார்கள்," அவள் என்னிடம் சொன்னாள். "திருமண விருந்துதான் மறுபடி தொடங்கிவிட்டதோ என எண்ணும்படிக்கு தொலைவே கேட்ட இரைச்சலும் மக்கள் சதுக்கத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்த காட்சியும் தவிர வேறெதுவும் என் மனதில் பதியவில்லை". ஒருவரின் உயிர் சம்பந்தப்பட்ட விஷயம் என்பதால் அவளால் கூடிய அளவு விரைவாக, வேறெந்த சிந்தனையும் இன்றி நடந்து

கொண்டிருந்தாள். எதிரே வந்துகொண்டிருந்த நபர் ஒருவர் அவளைக் கண்டு பரிதாபப்பட்டார்.

"ரொம்ப சிரமப்படவேண்டாம் லூயிஸா சாண்ட்டியாகா", சத்தம் போட்டுச் சொன்னபடியே அவர் அவளைக் கடந்து போனார். "அவர்கள் அவனைக் கொன்றுவிட்டார்கள்".

2

தன் புதுமனைவியைப் பிறந்த வீட்டுக்குத் திருப்பி அனுப்பியவனான பயார்டோ சான் ரோமான் முந்தின வருடம் ஆகஸ்ட் மாதம்தான் அங்கு வந்திருந்தான்; அதாவது அவனது திருமணத்துக்கு ஆறு மாதம் முன்பாக. வாராவாரம் வரும் படகில் சில முரட்டுத் தோல்பைகளுடன் அவன் வந்திறங்கினான். அவனது பெல்ட்டின் உலோக வளையத்துக்கும் பூட்சுகளில் இருந்த வளையங்களுக்கும் பொருத்தமாக அவன் கொண்டு வந்த பைகளிலும் வெள்ளி வளையங்கள் காணப்பட்டன. அவன் வயது முப்பதை ஒட்டியிருந்தது. ஆனால் பார்வைக்கு அப்படித் தோன்றவில்லை. காரணம் இளம் காளைச்சண்டை வீரனைப் போன்ற அவனது இடையும், பொன்னிறக் கண்களும், பளபளப்பான சருமமும்தான். சுத்தமான கன்றுக்குட்டித் தோலால் ஆன இறுக்கமான பேண்ட்டும் சிறிய மேல்சட்டையும் அணிந்திருந்தான். அதே வண்ணத்தில் இளம் ஆட்டுத்தோலால் ஆன கையுறைகளும் அணிந்திருந்தான். படகில் அவனோடு பயணம் செய்து வந்த மக்தலேனா ஆலிவரால் பயணம் முழுக்க அவன் மீதிருந்து கண்களை எடுக்கவே முடியவில்லை. "அவனொரு தேவதூதுவன் போலிருந்தான்," அவள் என்னிடம் சொன்னாள், "அப்படியே அவன் மேல் வெண்ணெயைத் தடவி சாப்பிட்டு விடலாம் போலிருந்தது". அவனைப் பார்த்து இப்படி நினைத்தது அவள் ஒருத்தி மட்டுமில்லை, அதோடு பார்த்த மாத்திரத்திலேயே ஒருவரால் புரிந்துகொள்ளக் கூடிய ஆள் அல்ல பயார்டோ சான் ரோமான் எனத் தெரிந்து கொண்ட கடைசி ஆளும் அவளல்ல.

ஆகஸ்ட் மாதக் கடைசியில் அம்மா எனக்கெழுதிய கடிதத்தில் சாதாரணமாக ஒரு வரி குறிப்பிட்டிருந்தாள். "மிகவும் வித்தியாசமான ஆள் ஒருவன் இங்கு வந்திருக்கிறான்". அடுத்த கடிதத்தில் அவள் எழுதியிருந்தாள்: "அந்த வித்தியாசமான ஆளுடைய பெயர் பயார்டோ சான் ரோமான். மிக வசீகரமான ஆள் என எல்லாரும் சொல்கிறார்கள். ஆனால் இதுவரை அவனை நான் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை". அவன் எதற்காக அங்கு வந்திருக்கிறான் என்று யாருக்கும் தெரியாது. தனது ஆர்வத்தை அடக்கமுடியாத யாரோ அதைக் கேட்டுவிட அதற்கான பதில், திருமணத்துக்கு சிலநாட்கள் முன்பாகத்தான், கிடைத்தது. "திருமணத்துக்குப் பெண் தேடி ஒவ்வொரு ஊராகச் சென்று கொண்டிருக்கிறேன்". ஒருவேளை அது உண்மையாக இருந்திருக்கலாம். உண்மையெனத் தோன்றும்படி அவனால் வேறெந்த பதிலையும் சொல்லியிருக்க முடியும். அவன் பேசும் தொனி எதையும் வெளிப்படுத்துவதற்குப் பதிலாக எதையோ

மறைப்பதாகவே தோன்றியது.

அவன் நகருக்கு வந்த அன்றிரவு சினிமா தியேட்டரில், தான் ஒரு ரயில்பாதைப் பொறியாளனாக இருந்தவனென்று சொன்னவன் போக்குவரத்துக்கு, நிலையில்லாத இந்த ஆற்றை நம்பியிராமல் உடன் நகரத்தை இணைத்து ஒரு ரயில்பாதை அமைக்க வேண்டியதன் தேவையை அவர்களுக்குப் புரியும்படி விளக்கினான். மறுநாள் தந்தி அலுவலகத்தில் விசைகளை தானே இயக்கி தந்தியொன்றை அனுப்பினான். அதுமட்டுமன்றி தீர்ந்துபோன பேட்டரிகளை தொடர்ந்து எப்படி உபயோகப்படுத்தலாம் எனத் தான் கண்டுபிடித்திருந்த வழிமுறை ஒன்றையும் தந்தி அனுப்புவோனுக்கு சொல்லித் தந்தான். இது போலவே கட்டாய ராணுவ சேவை நிமித்தம் எல்லையில் பணியாற்றியபோது எல்லைப்புற நோய்களால் பாதிக்கப்பட்டு மீண்டிருந்த ராணுவ டாக்டர் ஒருவரிடம் அந்நோய்கள் குறித்து மிக விரிவாக, சரளமாகப் பேசினான். நீண்ட தடபுடலான விழாக்களை அவன் விரும்பினான். அவனொரு நல்ல குடிகாரன். சண்டைகள் ஏற்படுகையில் அவற்றை சுமூகமாகத் தீர்த்து வைத்தான். ஆனால் சீட்டாட்டத்தின் போது ஏமாற்றுபவர்களை அறவே வெறுத்தான். ஒரு ஞாயிற்றுக்கிழமை மிகத்திறமைவாய்ந்த நீச்சல் வீரர்களோடு பந்தயம் கட்டினான். ஆற்றின் மறுகரையைத் தொட்டுத் திரும்பி வரவேண்டிய பந்தயத்தில் அவனே வென்றான். அங்கிருந்தவர்களிலேயே மிகத்திறமையான நீச்சல் வீரனே அவனுக்கு இருபதடி பின்னால்தான் வந்தான். இதுபற்றி அம்மா எனக்கெழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருந்தாள். கடிதத்தின் முடிவில் அவளுக்கே உரியதான ஒரு முத்தாய்ப்பும் வைத்திருந்தாள். "அதோடு அவன் தங்கத்திலும் நீந்துவதாகத் தெரிகிறது". பயார்டோ சான் ரோமான் எதையும் செய்து முடிக்கும் திறமை வாய்ந்தவன் மட்டுமல்ல செய்வதை மிகத் திறமையாகவும் செய்யக்கூடியவன். அதோடு நில்லாமல் அவனுக்கு ஏராளமான சொத்துக்களும் இருந்தன என்று ஊரில் பரவியிருந்த பேச்சே அம்மா அவ்வாறு எழுதுவதற்கு காரணமாக அமைந்தது. அக்டோபர் மாதம் எழுதிய கடிதத்தில் அம்மா அவனைப் பாராட்டி எழுதியிருந்தாள். இதுதான் அவனைப் புகழ்ந்து அவள் எழுதிய கடைசிக் கடிதம். "மக்கள் அவனைப் பெரிதும் விரும்புகின்றனர்", அவள் எழுதியிருந்தாள். "காரணம் அவன் நேர்மையானவன், நல்ல இதயம் படைத்தவன். போன ஞாயிற்றுக்கிழமை தேவாலய வழிபாட்டில் அவன் மண்டியிட்டு நன்மை வாங்கினான், அதோடு லத்தீனில் நடந்த திருவழிபாட்டிலும் பங்கு கொண்டான்". அந்த நாட்களில் நின்றபடி நன்மை வாங்க யாரும் அனுமதிக்கப்பட்டதில்லை, அதோடு தேவாலயத்தில் எல்லா வழிபாடுகளும் லத்தீன் மொழியிலேயே நடைபெற்றன. இருந்தும் முக்கியமான ஒரு விஷயத்தைச் சொல்லும்போது அதற்கு வலுசேர்க்க இதுபோன்ற சாதாரணத் தகவல்களையும் சேர்த்துக் கொள்வது அவள் வழக்கம். ஆனால் அவனைப்பற்றிய உயர்வானதொரு முடிவுக்கு வரும்படியாக அமைந்த இந்த கடிதத்துக்குப் பிறகு அவளெழுதிய இரண்டு கடிதங்களில் பயார்டோ சான் ரோமான் பற்றி எந்தத் தகவலும் இல்லை.

அவன் ஏஞ்செலா விகாரியோவைத் திருமணம் செய்துகொள்ளப்போகும் விஷயம் ஊர்ஜிதமாகியிருந்த போதும் அதுபற்றிக்கூட அம்மா எழுதவில்லை. துரதிருஷ்டவசமான அந்தத்திருமணம் நடந்து வெகுநாட்கள் கழிந்த பிறகே, அந்த அக்டோபர் கடிதத்தை மாற்றியெழுத வகையில்லாமல் அவனைப் பற்றிய உண்மையைத் தான் தாமதமாகவே அறிய நேர்ந்ததாகவும் அவனது பொன்னிற விழிகள் அவளுள் ஒருவித நடுக்கத்தை ஏற்படுத்தியிருந்தன என்றும் என்னிடம் சொன்னாள்.

"என் கண்களுக்கு அவன் சாத்தானைப் போலத் தோன்றினான்", அவள் சொன்னாள் "ஆனால் இது போன்ற விஷயங்களை எழுதக்கூடாதென நீ சொல்லியிருந்தாய்."

அவள் அவனைச் சந்திக்க நேர்ந்த சில நாட்கள் கழித்து கிறிஸ்துமஸ் விடுமுறைக்காக வந்திருந்தபோது நானும் அவனைச் சந்தித்தேன். எல்லோரும் சொன்னது போல அவன் விசித்திரமானவனாகவே இருந்தான். பார்ப்பதற்கு வசீகரம் மிக்கவனாகத் தோன்றினான். ஆனால் மக்தலேனா ஆலிவர் சொன்ன அளவுக்கு அல்ல. அவனது சாகசச் செயல்களைக் கண்ட ஒருவர் முடிவு செய்திருக்கக் கூடியதைக் காட்டிலும் அதிக சிரத்தையுள்ளவனாகவே அவன் தோன்றினான். அவனது வீரதீரச் செயல்களால் மறைத்துவிட முடியாத ஒரு பதற்றமும் அவனுள் குடிகொண்டிருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக அவனொரு சோகம் நிறைந்த மனிதனாகத் தோன்றினான். அப்போது அவன் ஏஞ்செலா விகாரியோவுடனான தன் காதலை முறைப்படி தெரிவித்துவிட்டிருந்தான்.

அவர்களிருவரும் சந்திக்க நேர்ந்தது எப்படியென்று இதுவரையிலும் யாருக்கும் சரியாகத் தெரியாது. ஏஞ்செலா விகாரியோவும் அவள் அம்மாவும் சதுக்கத்தைக் கடந்துபோனபோது பயார்டோ சான் ரோமான் கூடத்தில், ஆடும் நாற்காலியில் அமர்ந்து உறங்கிக் கொண்டிருந்த விதத்தை அவன் தங்கியிருந்த பிரம்மச்சாரிகள் விடுதியின் சொந்தக்காரி சொன்னாள். மந்தமான, ஆளரவமற்ற அந்த மதியம் இரண்டுமணிப் பொழுதில் விரும்பத்தகாத கருப்பு நிறத்தில் உடையணிந்து போகும் அந்த இருவரில் இளையவள் யாரெனக் கேட்டான் அரைத் தூக்கத்திலிருந்த பயார்டோ சான் ரோமான். உடன் செல்லும் அந்தப் பெண் இளைய பெண்ணின் தாயென்றும், அந்தப் பெண்தான் அவளது கடைக்குட்டிப்பெண் ஏஞ்செலா விகாரியோ என்றும் சொன்னாள் விடுதியின் சொந்தக்காரி. அவர்கள் சதுக்கத்தின் மறுபக்கத்தை அடையும் வரைக்கும் அவர்களைத் தன் பார்வையால் பின்தொடர்ந்தான் பயார்டோ சான் ரோமான்.

"நல்ல பெயர்," என்றான்.

பிறகு ஆடும் நாற்காலியின் பின்புறமாகத் தலையைச் சாய்த்து மீண்டும் கண்களை மூடிக் கொண்டான்.

"நான் கண்விழிக்கும்போது", அவன் சொன்னான். "அவளை நான் திருமணம் செய்துகொள்ளப் போகிறேன் என்பதை நினைவுபடுத்துங்கள்."

பயார்டோ சான் ரோமான் தன்னிடம் பழக ஆரம்பிக்கும் முன்பாகவே

விடுதியின் சொந்தக்காரி மூலமாக இதைக் கேள்விப்பட்டதாக ஏஞ்செலா விகாரியோ என்னிடம் சொன்னாள். "எனக்கு ஆச்சரியமாக இருந்தது," அவள் என்னிடம் சொன்னாள். அந்த விடுதியில் இருந்த மூவர் இச்சம்பவம் நடந்தது உண்மைதான் எனத் தெரிவித்தனர். ஆனால் எஞ்சிய நான்குபேர் இதுபற்றி உறுதியாக எதுவும் கூறவில்லை. ஆனால் பலரும் தெரிவித்தது போல அக்டோபர் மாதத்தில் தேசிய விடுமுறை நாளன்று ஏஞ்செலா விகாரியோ பரிசுச் சீட்டுகளைக் கூவி விற்றுக் கொண்டிருந்த, தரும காரியங்களுக்கு நிதி திரட்டவென நடந்த சந்தையில்தான் அவளும் பயார்டோ சான் ரோமானும் முதல் தடவையாக ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். சந்தைக்கு வந்த பயார்டோ சான் ரோமான் நேராக, மிகுந்த வருத்தம் தோய்ந்த முகத்துடன் சோர்ந்துபோய்க் காணப்பட்ட பரிசுச்சீட்டு குலுக்கல் நடத்துபவளிடம் சென்றான். உட்புறம் கிளிஞ்சல்தாது பூசப்பட்ட, திறந்ததும் இனிய ஒலியெழுப்பும் இசைப்பெட்டியின் விலை என்னவென்று அவளை வினவினான். அது விற்பனைக்கல்ல என்றும் பரிசுக் குலுக்கல் நடத்தி அதில் வெல்பவருக்கே அது வழங்கப்படும் என்றும் அவள் சொன்னாள்.

"ரொம்ப நல்லது", என்றான் அவன்.

"விஷயம் சுலபமாகவும் அதிகச் செலவின்றியும் முடிந்துவிடும்." அவளுக்கு அவன்மீது ஈடுபாடு ஏற்படும்விதமாக அவன் நடந்துகொண்டான் என்றும் ஆனால் அந்த ஈடுபாடு நிச்சயமாக காதல் தொடர்பானது அல்ல என்றும் அவள் என்னிடம் சொன்னாள். "தற்பெருமையடித்துக்கொள்ளும் ஆண்களை நான் வெறுத்தேன். மேலும் அவனைப் போன்று கர்வம் மிக்க ஒரு ஆளை நான் அதற்கு முன் பார்த்ததில்லை," அந்த தினத்தைப் பற்றி நினைவுகூர்கையில் அவள் சொன்னாள். "அதோடு அவனொரு போலந்துக்காரன் என நான் நினைத்தேன்." அந்த இசைப்பெட்டிக்கான பரிசுக் குலுக்கலுக்கு சீட்டுகளை அவள் சங்கடத்துடன் கூவி விற்கத் தொடங்கினாள். அவள் பயந்தது போலவே அந்த இசைப்பெட்டி பயார்டோ சான் ரோமானுக்குப் பரிசாக விழுந்தது. அவளைக் கவர வேண்டி பரிசுச் சீட்டுகள் மொத்தத்தையும் அவனே வாங்கியிருந்ததை அவளால் நம்பமுடியவில்லை. அன்றிரவு அவள் வீடுதிரும்பியபோது பரிசுப் பொட்டலமாகக் கட்டி மேலே உயர்ரகப் பருத்திக் துணிகொண்டு முடிச்சிட்டு அந்த இசைப்பெட்டி அங்கே வைக்கப்பட்டிருப்பதைக் கண்டாள் ஏஞ்செலா விகாரியோ. "அன்று எனது பிறந்தநாள் என்பதை எப்படி அறிந்தான் என்று எனக்குத் தெரியவே தெரியாது", அவள் என்னிடம் சொன்னாள். அதுபோன்ற ஒரு பரிசை அதுவும் எல்லாரும் பார்க்கிற வகையில் அனுப்புகிற அளவுக்கு தனக்கும் பயார்டோ சான் ரோமானுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்பதைத் தன் பெற்றோருக்கு புரிய வைப்பதற்குள் அவளுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது. அந்த பரிசை விடுதிக்குக் கொண்டு சென்று அதன் சொந்தக்காரனிடம் ஒப்படைத்துவிடும்படி தன் சகோதரர்களான பெட்ரோ மற்றும் பாப்லோவிடம் சொன்னாள். அவர்கள் அந்த வேலையை எவ்வளவு சுருக்கமாகச் செய்து முடித்தார்களென்றால் அவர்கள் வந்ததையோ பரிசுப்பொருளை வைத்துவிட்டுச் சென்றதையோ ஒருவரும்

பார்த்தார்லலை. ஆனால் மனிதரை வசியப்படுத்தும் பயார்டோ சான் ரோமானது திறமை பற்றி அப்போது அவர்கள் அறிந்திருக்கவில்லை. விடியும்வரை அந்த இரட்டைச் சகோதரர்கள் யார் கண்களுக்கும் தென்படவில்லை. மறுநாள் காலை போதையில் தள்ளாடியபடி உடன் பயார்டோ சான் ரோமான் வர அந்த இசைப் பெட்டியை திரும்பவும் கையில் சுமந்தபடி குடியை வீட்டிலும் தொடர அவர்கள் வருவதை அனைவரும் பார்த்தனர்.

மிகவும் வசதி குறைவான அந்தக் குடும்பத்தில் ஏஞ்செலா விகாரியோ கடைக்குட்டிப் பெண். அவளுடைய அப்பா பான்ஸியோ விகாரியோ ஒரு சாதாரண பொற்கொல்லர். குடும்பத்து கௌரவத்தைக் காப்பாற்ற நுட்பமான வேலைப்பாடுமிக்க தங்க நகைகள் ஏராளமாகச் செய்து அதனால் தன் கண் பார்வையை இழந்தவர். அவளது அம்மா ப்யூரிசிமா டெல் கார்மென் திருமணத்துக்கு முன்புவரை பள்ளி ஆசிரியையாகப் பணியாற்றியவள். பயமும் வேதனையும் கலந்தது போன்ற அவளது முகத்தோற்றம் உள்ளுக்குள்ளான அவளது திடசித்தத்தை வெளியில் தெரியாமல் மறைக்க உதவியது. "அவள் ஒரு கன்னிகாஸ்திரீயைப் போலத் தோன்றினாள்," மெர்ஸிடஸ் நினைவு கூர்கிறாள். தன் கணவனையும் குழந்தைகளையும் காப்பாற்றவேண்டி பெரும் தியாக உணர்வுடன் தன்னையே அவள் அர்ப்பணித்துக் கொண்டாள். அப்படியொருத்தி இருக்கிறாள் என்பதே பலருக்கும் நினைவில்லாமல் இருந்தது.

மூத்த பெண்கள் இருவருக்கும் வெகு தாமதமாகவே திருமணம் நடந்தது. அந்த இரட்டையர்களுக்கு அடுத்து ஒரு பெண் குழந்தை பிறந்தது. காய்ச்சல் கண்டு அவள் இறந்து போனாள். அவள் இறந்து இரண்டு வருடங்கள் ஆகியிருந்தபோதும் அவர்கள் இன்னமும் துக்கம் கடைபிடித்து வந்தனர். வீட்டுக்குள் ஓரளவு சகஜமாக இருந்தபோதும் வெளியில் அவர்கள் கடுமையான வகையில் துக்கம் அனுஷ்டித்தனர். அவளது சகோதரர்கள் இருவரும் உண்மையான ஆண்மக்களாக வளர்க்கப்பட்டிருந்தார்கள். திருமணம் புரிந்துகொள்வதை குறிக்கோளாகக் கொண்ட பெண்பிள்ளைகள் வளர்க்கப்பட்டிருந்தனர். திரைச்சீலைகளில் பூவேலைப்பாடு செய்வது, தையல் இயந்திரத்தில் துணி தைப்பது, பின்னல்வேலை செய்வது, துணி துவைப்பது-தேய்ப்பது, செயற்கைப் பூக்கள் அலங்கார மிட்டாய்கள் செய்வது மற்றும் நிச்சயதார்த்த ஒப்பந்தங்கள் எழுதுவது ஆகியவற்றை அவர்கள் கற்றிருந்தனர். மரணம் தொடர்பான விஷயங்களை வெறுத்த தங்களது சமகாலப் பெண்பிள்ளைகளைப் போலல்லாமல் அவர்கள் நோயுற்றவர்களின் அருகிருந்து கவனிப்பதிலும், மரணத் தருவாயில் இருப்போரைத் தேற்றுவதிலும், இறந்தவர்களை உரிய ஆடைகளால் போர்த்தி வைப்பதிலும் பழையகாலத்துப் பெண்களைப் போல ஈடுபாட்டுடன் செயல்பட்டனர். அவர்களிடத்தில் என் அம்மாவுக்குப் பிடிக்காத ஒரேவிஷயம் படுப்பதற்கு முன்பு அவர்கள் தலைசீவிக் கொள்வதுதான். "பிள்ளைகளா." அவள் அவர்களிடம் சொல்வாள். "இரவில் தலைவாரிக் கொள்ளாதீர்கள். அது கடலுக்குப் போயிருப்பவர்கள் திரும்புவதில் தாமதத்தை ஏற்படுத்தும்". அந்த ஒரு விஷயம் தவிர்த்து

அவர்கள் நன்றாகவே வளர்க்கப்பட்டவர்கள் என அவள் கருதினாள். "அவர்கள் மிகவும் சமர்த்துப்பிள்ளைகள்," அவள் அடிக்கடி சொல்வதுண்டு, "அவர்களைத் திருமணம் செய்து கொள்ளும் எவனும் சந்தோஷமாக இருப்பான். ஏனென்றால், அந்தப் பெண்கள் கஷ்டப்படுவதற்கென்றே வளர்க்கப்பட்டவர்கள்". மூத்த பெண்கள் இருவரையும் திருமணம் செய்து கொண்டவர்களாலும் அவர்கள் மூவரையும் பிரிக்க முடியவில்லை. ஏனென்றால் அவர்கள் மூவரும் எங்கு சென்றாலும் ஒன்றாகவே சென்றார்கள். பெண்களுக்கு மட்டுமான பிரத்யேக நடனங்களுக்கு அவர்கள் ஏற்பாடு செய்தனர். அதோடு ஆண்கள் போடும் திட்டங்களின் உள்ளர்த்தங்களைப் புரிந்து கொள்ளவும் அவர்கள் கற்றிருந்தனர்.

நான்கு பெண்களிலும் ஏஞ்செலா விகாரியாவே மிகுந்த அழகுடன் திகழ்ந்தாள். வரலாற்றில் காணும் பேரரசிகளைப் போல தொப்புள்கொடி கழுத்தை சுற்றியிருக்க அவள் பிறந்தாள் என என் அம்மா சொல்வாள். ஆனால் அனாதரவாக விடப்பட்ட பெண் போலும் அசமந்தம் போலும் இருக்கும் அவள் தோற்றத்தைக் காண்கையில் அவளது எதிர்காலம் நிச்சயமற்ற ஒன்றாகவே இருக்கும் எனக் கருதப்பட்டது. ஒவ்வொரு வருடமும் கிறிஸ்துமஸ் விடுமுறையின்போது ஜன்னலருகே அமர்ந்து துணிப்பூக்கள் செய்தபடி அண்டைப் பெண்களோடு பெண்களுக்கான தனி நடனப் பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கும் அவளை நான் பார்க்கும் போதெல்லாம் முந்தின வருடம் இருந்ததை விட அதிகம் பரிதாபத்துக்குரியவளாகவே அவள் தோன்றுவாள். "உன் அத்தை மகளுக்கு காதலிக்க நேரம் வந்தாயிற்று போல," என்பான் சாண்ட்டியாகோ நாஸர். எதேச்சையாக ஒரு நாள், அவள் சகோதரியின் இறப்புக்கான துக்க அனுஷ்டிப்புக்கு முன்பாக, தெருவில் அவளைக் கடந்து போக நேரிட்டது. அவள் வளர்ந்த பெண்களுக்கான உடையை அணிந்திருந்தாள். கேசம் சுருள் சுருளாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அது அவள்தான் என்று என்னால் நம்பவே முடியவில்லை. ஆனால் அது கணத் தோற்றம்தான். ஆர்வம் குன்றியது போன்ற, சோபையற்ற அவளது தோற்றம் இத்தனை வருடங்களில் இன்னும் கூடியிருக்கவே செய்தது. எனவேதான் பயார்டோ சான் ரோமான் அவளைத் திருமணம் செய்து கொள்ள விருப்பம் தெரிவித்தபோது பலர், புதிதாய் வந்த வெளியூர்க்காரன் கண்ணுக்கு அவள் அழகுடையவளாகத் தோன்றியது வாஸ்தவம்தான் என்றனர்.

பயார்டோ சான் ரோமான் ஏஞ்செலா விகாரியோவைத் திருமணம் செய்து கொள்ள விருப்பம் தெரிவித்ததை அவள் குடும்பத்தினர் மனதாரவும் பெருமகிழ்வுடனும் ஏற்றுக் கொண்டனர். ஆனால் ப்யூரா விகாரியோ மட்டும் ஒரு நிபந்தனை விதித்தாள். அந்த நிபந்தனை பயார்டோ சான் ரோமான் தான் யாரென்பதை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்க வேண்டும் என்பது. அதுவரையிலும் அவன் யாரென்று ஒருவரும் அறிந்திருக்கவில்லை. அவர்கள் அறிந்த அவனுடைய கடந்தகாலம் என்பது ஒரு நடிகனைப் போன்ற உடை அலங்காரத்துடன் படகில் வந்து அவன் இறங்கிய அந்த மாலைப் பொழுதைத் தாண்டாதது. தன்னைப் பற்றிய உண்மைகளைச் சொல்வதில் அவன் காட்டிய தயக்கம் அவனைப் பற்றி

பிறர் அவிழ்த்துவிட்ட மலிவான கட்டுக்கதைகளைக் கூட உண்மையென நம்ப வைத்தது. பல ஊர்களை அழித்து இறுதியில் காஸனரே நகரையும் பிடிக்குள்ளாக்கிய ராணுவப் படைப்பிரிவின் தளபதி அவனென்றும், பேய்த் தீவிலிருந்து தப்பி வந்தவனென்றும், பெர்னம்பூகோவில் இரண்டு கரடிகளை வைத்து வித்தைகாட்டி பிழைப்பு நடத்தி வந்தவனென்றும், ஏராளமான தங்கத்தைக் கொண்டு சென்றபோது வின்ட்வார்ட் கால்வாயில் மூழ்கிப்போன பெரிய ஸ்பானிய கப்பலொன்றில் இருந்தவற்றையெல்லாம் கைப்பற்றியவன் என்றும் அவனைப் பற்றி பலவிதமான ஊகங்கள் நிலவின. இந்த ஊகங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அவனொரு வேலை செய்தான். தன் குடும்பத்தினர் அனைவரையும் அங்கு வரவழைத்தான்.

அவன் குடும்பத்தார் நான்கு பேர்; அப்பா, அம்மா மற்றும் கோபக்காரிகளான இரண்டு சகோதரிகள். வாத்தைப் போல சப்தமெழுப்பிய அதன் ஹார்ன் ஒலி காலை பதினோரு மணிக்கு ஊரையே பரபரப்படைய வைக்க, அதிகாரபூர்வ நம்பர் பிளேட்டுகள் கொண்ட 'T' மாடல் ஃபோர்ட் காரில் அவர்கள் வந்தனர். அவன் தாய் ஆல்பெர்ட்டா சைமன்ஸ் பருமனான ஒரு ஆப்பிரிக்க வெள்ளை கலப்பினப் பெண்மணி. அவள் பாப்பியமென்ட்டோ கலந்த ஸ்பானிஷ் பேசினாள். அவளது இளமைக்காலத்தில் ஆன்ட்டில்லிஸில் இருந்த மிக அழகான இருநூறு பெண்களிலும் மிக அழகானவள் எனப் பேர் பெற்றிருந்தவள். அண்மையில்தான் பருவத்துக்கு வந்திருந்த அவன் சகோதரிகள் இருவரும் இளம் பெண் குதிரைகள் போல பரபரப்புடன் காணப்பட்டனர். ஆனால் அனைவரையும் கவர்ந்தது அவன் அப்பாதான். ஜெனரல் பெட்ரோனியோ சான் ரோமான் கடந்த நூற்றாண்டு சிவில் யுத்தங்களின் போது பிரபலமாக இருந்தவர். டுகுர்னிகா பேரழிவின் போது கர்னல் அவ்ரெலியனோ புண்டியா தப்பியோட உதவி புரிந்தவர். கன்சர்வேடிவ் அரசின் பெருமைக்குரிய புள்ளிகளில் ஒருவர். அவர் யாரென்பதை அறிந்தபின்னும் சென்று அவரை வரவேற்காமல் போன ஒரே ஆள் என் அம்மாதான். "அவர்கள் திருமணம் செய்துகொள்வது சரிதான் என்று எனக்குத் தோன்றியது," அவள் என்னிடம் சொன்னாள் , "ஆனால் அவர்கள் திருமணம் செய்துகொள்வதும் ஜெரினெல்டோ மார்க்வெஸை முதுகில் சுட உத்தரவிட்ட ஒரு ஆளுடன் கைகுலுக்குவதும் முற்றிலும் வேறான விஷயங்கள்." காரின் ஜன்னல் வழியே தன் வெள்ளைத் தொப்பியை ஆட்டியபடி வந்த அவரை அவர்கள் உடன் அடையாளம் கண்டுகொண்டனர். காரணம் அவர் முகம் புகைப்படங்கள் வழி ஏற்கனவே பரிச்சயமாகியிருந்தது. கோதுமை நிறத்தில் சூட், அதிகம் லேஸ் அமைந்த கார்டோவன் ஷூக்கள், சட்டைப் பொத்தானுடன் சங்கிலியால் இணைக்கப்பட்ட தங்க பிரேமிட்ட மூக்குக் கண்ணாடி ஆகியவற்றை அணிந்திருந்தார். சட்டையில் வீரச்செயலுக்கான பதக்கம். குமிழில் தேசியச்சின்னம் பொறிக்கப்பட்ட பிரம்பு ஒன்றைக் கையில் வைத்திருந்தார். காரிலிருந்து முதலில் இறங்கியது அவர்தான். எங்கள் ஊரின் மோசமான சாலைகளிலிருந்து எழுந்த புழுதி அவரை முழுதுமாக மூடியிருந்தது. அவர் செய்யவேண்டியிருந்ததெல்லாம் அவன் விரும்பிய

பெண்ணை பயார்டோ சான் ரோமான் திருமணம் செய்துகொள்ளலாம் என அவர்களுக்கு உணர்த்தும் வகையில் காரின் படியில் வந்து நிற்கவேண்டும், அவ்வளவுதான்.

ஏஞ்செலா விகாரியோவுக்கு பயார்டோ சான் ரோமானைத் திருமணம் செய்துகொள்வதில் விருப்பமில்லை. "அவர் என் தகுதிக்கு மீறின ஆணாகத் தோன்றினார்", அவள் என்னிடம் சொன்னாள். அதோடு பயார்டோ சான் ரோமான் திருமணத்துக்கு முன்பு அவளிடம் பேசி ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவும் முயற்சி செய்யவில்லை. ஆனால் அவள் குடும்பத்தினரை அவன் காந்தம் போல ஈர்த்திருந்தான். அவளுடைய பெற்றோரும், சகோதரிகளும் அவர்களது கணவர்களும் கூடத்தில் ஒன்று கூடி அவள் சரியாகப் பார்த்துக்கூட இராத அவனைத் திருமணம் செய்து கொள்ள வற்புறுத்திய அந்த அச்சமூட்டும் இரவை அவள் ஒருபோதும் மறந்தவள் இல்லை. அவளின் இரட்டைச் சகோதரர்கள் இது எதிலும் பட்டுக்கொள்ளவில்லை. "அது பெண்கள் சமாச்சாரம் என விட்டுவிட்டோம்", பாப்லோ விகாரியோ என்னிடம் சொன்னான். வறுமையிலிருக்கும் குடும்பத்துக்கு கடவுளாகப் பார்த்துக் கொடுக்கும் அதிர்ஷ்டத்தை வேண்டாமெனச் சொல்லலாமா என அவள் பெற்றோர்கள் வாதிட்டனர். தங்களிடையே நிஜமான அன்பு இல்லாததால் நிலவும் ஒருவித அசௌகரியத்தை அவள் சுட்டிக்காட்டியபோது அதற்கு அவள் அம்மா ஒரே வரியில் பதிலளித்தாள்.

"அன்பை கற்றுக்கொள்ளக் கூட முடியும்"

அப்போதெல்லாம் திருமணத்துக்கு முன் பெரியவர்களது மேற்பார்வையின் கீழ் மணமக்கள் ஒருவரையொருவர் புரிந்து பழக நீண்ட அவகாசம் இருக்கும். ஆனால் பயார்டோ சான் ரோமான் அவசரப்பட்டதனால் அந்த அவகாசம் நான்கு மாதகாலமாக குறைந்தது. அவர்கள் குடும்பத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வந்த துக்க காலம் முடியவில்லையென்று சொல்லி அந்த நாட்களை மேலும் குறைத்தாள் ப்யூரா விகாரியோ. பயார்டோ சான் ரோமானது கறாரான நடத்தையால் மீதமிருந்த நாட்களும் எவ்வித மகிழ்ச்சியுமின்றியே கழிந்தன. "ஒரு நாள் இரவு, உனக்கு எதைப் போன்ற வீடு வேண்டும் எனக் கேட்டார்." ஏஞ்செலா விகாரியோ என்னிடம் சொன்னாள். "ஏதோ நினைவில் இந்த நகரத்திலேயே மிகவும் அழகான வீடு, மனைவியை இழந்தவரான க்சியஸின் பண்ணை வீடுதான் என்று சொன்னேன்." அவளது இடத்தில் நான் இருந்திருந்தால் கூட அதையேதான் சொல்லியிருப்பேன். அந்தவீடு எப்போதும் காற்று வீசிக்கொண்டிருக்கும் ஒரு குன்றின் மீது இருந்தது. அவ்வீட்டு மொட்டை மாடியிலிருந்தபடி கருஞ்சிவப்பு மலர்களால் நிறைந்த, எல்லையற்று விரிந்த சதுப்புநில வனத்தைக் காணலாம். தெளிவான கோடை நாட்களில் கரீபிய நிலங்களையும் கார்டஜினா டி இன்டியாஸிலிருந்து வரும் சுற்றுலா கப்பல்களையும் காணலாம். அன்று இரவே சமுதாய மன்றத்துக்குச் சென்ற பயார்டோ சான் ரோமான் டாமினோ விளையாட க்சியஸ் அமர்ந்திருந்த மேசைக்கு வந்து அமர்ந்தான்.

"உங்கள் வீட்டை நான் வாங்கிக் கொள்வதாக இருக்கிறேன்." அவன் சொன்னான்.

"அது விற்பனைக்கில்லை", அவர் சொன்னார்.

"வீட்டிலுள்ள பொருட்கள் அனைத்தையும் சேர்த்தே நான் வாங்கிக்கொள்கிறேன்"

மனைவியை இழந்தவரான க்சியஸ் அந்தக்கால மனிதர்களுக்கே உரிய பொறுமையுடன், அந்த வீட்டிலுள்ள பொருட்கள் ஒவ்வொன்றும் வாழ்நாள் முழுக்க தியாகங்கள் பலசெய்து அவர் மனைவி சேர்த்துவைத்ததென்றும் அவரளவில் அவை அவளது ஒரு பகுதி என்றும் விளக்கினார். "அவர் பேசிய விதம் நெஞ்சை உருக்குவதாக இருந்தது," அப்போது அவர்களோடு விளையாடிக்கொண்டிருந்த டாக்டர் டயானிஸியோ இகுவரான் என்னிடம் சொன்னார், "முப்பது வருடங்களுக்கும் மேலாக மகிழ்வுடன் வசித்துவந்த அந்த வீட்டை விற்க வேண்டிவந்தால் அதற்கும் முன் அவர் இறந்து விடுவார் என்று எனக்கு உறுதியாகத் தெரிந்தது". பயார்டோ சான் ரோமானுக்கும் அவர் சொன்னது புரிந்தது.

"நான் ஒப்புக் கொள்கிறேன்," அவன் சொன்னான். "வீட்டை மாத்திரம் எனக்குக் கொடுங்கள்"

ஆனால் விளையாட்டு முடியும்வரையிலும் க்சியஸ் விட்டுத்தரவில்லை. மூன்று நாட்களுக்குப் பிறகு சரியான முன்தயாரிப்புக்களோடு மறுபடியும் அந்த டாமினோ மேசைக்கு வந்தான் பயார்டோ சான் ரோமான்.

"உங்கள் வீடு என்ன விலை?" என ஆரம்பித்தான்.

"அதற்கு விலையே இல்லை"

"நீங்கள் எதிர்பார்ப்பதை சொல்லுங்கள்"

"மன்னிக்க வேண்டும் பயார்டோ," அவர் சொன்னார், "உங்களைப் போன்ற இளைஞர்களுக்கு மனதின் தவிப்புகள் புரியாது"

பயார்டோ சான் ரோமான் நொடியும் தாமதிக்கவில்லை.

"ஐயாயிரம் பெசோக்கள்"

"சுற்றி வளைக்க வேண்டாம்," என்றார் க்சியஸ். அவன் சொன்னவிதம் அவரது கோபத்தைத் தூண்டியது. "அந்த வீடு ஒன்றும் அத்தனை மலிவானது அல்ல."

"பத்தாயிரம் பெசோக்கள்," என்றான் பயார்டோ சான் ரோமான், "இந்த இடத்திலேயே கட்டுக்கட்டாக"

அவர் கண்கள் கண்ணீரால் நிறைந்திருக்க அவனை உற்றுப்பார்த்தார். "அவர் கோபத்தில் அழுது கொண்டிருந்தார்," டாக்டர் டயானிஸியோ இகுவரான் என்னிடம் சொன்னார். மருத்துவராக மட்டுமன்றி மொழிப் புலமை வாய்ந்தவராகவும் அவர் இருந்தார். "கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். கைக்கெட்டும் தூரத்தில் அவ்வளவு பணம், ஆனாலும் மனதின் பலகீனம் காரணமாக வேண்டாமென்று சொல்லவேண்டியநிலை". க்சியஸுக்கு பேச நா எழவில்லை. ஆனாலும் சிறிதும் தயக்கமின்றி

வேண்டாமென தலையசைத்தார்.

"அப்படியானால் எனக்காக கடைசியாக இந்த ஒரு உதவி மட்டும் செய்யுங்கள்" என்றான் பயார்டோ சான் ரோமான் "ஒரு ஐந்து நிமிடம் எனக்காகக் காத்திருங்கள்". சரியாக ஐந்து நிமிடம் கழித்து வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட தன் தோல்பையுடன் திரும்பி வந்தான். ஸ்டேட் பாங்க்கின் அச்சிடப்பட்ட சுற்றுக் காகிதங்கள் இன்னும் நீக்கப்படாத, ஆயிரம் பெசோ நோட்டுக் கட்டுகள் பத்தை மேசை மீது வைத்தான். அதற்கு இரண்டு மாதங்கள் கழித்து க்சியஸ் இறந்து போனார். "அவர் அதனால்தான் இறந்தார்," டாக்டர் டயானிஸியோ இகுவரான் சொன்னார், "அவர் எங்களையெல்லாம் விடவும் நலமுடன் இருந்தார். ஆனால் ஸ்டெதாஸ்கோப் வைத்துப் பார்க்கும்போது அவர் இதயத்துக்குள் கண்ணீர் பொங்குவதை கேட்க முடிந்தது". வீட்டுடன் சேர்த்து வீட்டுக்குள் இருந்த பொருட்களனைத்தையும் விற்றுவிட்டிருந்தார் க்சியஸ். அவ்வளவு பணத்தை வைத்திருக்க அவரிடம் ஒரு பழைய ட்ரங்குப் பெட்டி கூட இருக்கவில்லை. எனவே வீட்டுக்கான தொகையை மொத்தமாகக் கொடுக்காமல் கொஞ்சம் சொஞ்சமாகக் கொடுக்கும்படி அவனிடம் கேட்டுக்கொண்டார்.

ஏஞ்செலா விகாரியோ தன் கன்னித்தன்மையை இழந்தவள் என்று யாரும் சொன்னதில்லை. அப்படியாரும் நினைத்துப் பார்த்தது கூட இல்லை. இதற்கு முன்பு அவள் யாருக்கும் மணஒப்பந்தம் ஆகியிருக்கவில்லை. அதோடு அவளது மூத்த சகோதரிகள் மற்றும் அம்மா ஆகியோரது இரும்புக் கவசம் போன்ற கண்காணிப்பின் கீழ் அவள் வளர்ந்திருந்தாள். திருமணத்துக்கு இன்னும் இரண்டு மாதங்கள் இருந்தபோது கூட, தன் மகள் தான் வாழப்போகும் வீட்டைப் பார்க்க அவளை பயார்டோ சான் ரோமானுடன் தனியே அனுப்ப ப்யூரா விகாரியோ சம்மதிக்கவில்லை. ஏஞ்செலா விகாரியோவுடன் அவளும் பார்வையிழந்த அவள் கணவனும் கண்காணிப்பாக உடன் செல்லத்தவறவில்லை. "கடவுளிடம் நான் வேண்டிக் கொண்டதெல்லாம் என் உயிரை நானே மாய்த்துக் கொள்ளும் தைரியத்தைத்தான்," ஏஞ்செலா விகாரியோ என்னிடம் சொன்னாள், "ஆனால் கடவுள் அந்த தைரியத்தை எனக்கு அளிக்கவில்லை". அவள் பெரிதும் குழப்பமுற்றிருந்தாள். அந்த வேதனையினின்றும் தன்னை விடுவித்துக்கொள்ளும்பொருட்டு தன் தாயிடம் உண்மையைச் சொல்லிவிடுவதென்று முடிவெடுத்தாள். ஆனால் இதையறிந்த அவளது நம்பிக்கைக்குரிய தோழிகள் இருவர் அவ்வாறு செய்ய வேண்டாம் என தடுத்து விட்டனர். "அவர்கள் சொன்னதை நான் கண்களை மூடிக்கொண்டு ஏற்றுக்கொண்டேன்," அவள் என்னிடம் சொன்னாள், "ஆண்கள் எப்படிப்பட்டவர்களென்று தங்களுக்கு நன்றாகத் தெரியும் என அவர்கள் சொன்னதை நான் நம்பினேன்." கிட்டத்தட்ட எல்லாப் பெண்களுமே சிறுவயதில் நடக்கும் அசம்பாவிதங்களில் தங்கள் கன்னித்தன்மையை இழந்து விடுகின்றனர் என்று அவர்கள் உறுதிபடச் சொன்னார்கள். மிகவும் கெடுபிடியான கணவன்மார்கள் கூட விஷயம் அடுத்தவருக்குத் தெரியாதவரைக்கும் எதுவுமே நடவாததுபோல

அமைதியாக இருந்து விடுவார்கள் என்றும் அவர்கள் சொன்னார்கள். கடைசியாக, பெரும்பாலான ஆண்கள் முதலிரவின்போது மிகவும் பயந்துபோய் காணப்படுவார்கள், மனைவியின் உதவியின்றி அவர்களால் எதையும் செய்யமுடியாது, அந்த நேரத்தில் என்ன செய்கிறோம் ஏது செய்கிறோம் என்பது கூட அவர்களுக்குத் தெரியாது என்றும் சொன்னார்கள். "அவர்கள் நம்புவதெல்லாம் துணியில் அவர்கள் காண்பதைத்தான்," அவர்கள் சொன்னார்கள். தான் கற்பு கெடாதவள் என்று கணவன் நம்பும்படியாக நடிப்பது எப்படி என அவர்கள் சொல்லித் தந்தார்கள். மறுநாள் காலை, புதுமணப் பெண்ணாக அவள் தன் வீட்டு வாசலில் எல்லாரும் அறிய பெருமையின் கறை படிந்த அந்த வெள்ளைத் துணியைக் காட்டலாம் என்றார்கள்.

இந்த நம்பிக்கையிலேயே அவள் திருமணத்துக்கு ஒப்புக் கொண்டாள். தன் அதிகாரம் பணம் இவற்றைக் கொண்டு சந்தோஷத்தை விலைக்கு வாங்கி விடலாம் என்ற நம்பிக்கையில் பயார்டோ சான் ரோமான் இருந்தான். திருமணத்தை தடபுடலாக்க மேன்மேலும் அவன் மனதில் திட்டங்கள் தோன்ற ஒருவித உன்மத்தத்துடன், இன்னும் பெரிதாக அவற்றைச் செயலாக்க வேண்டுமென்ற உத்வேகமும் தோன்றியது. பிஷப் வருகையைக் கேள்விப்பட்டு, அவர் கையால் திருமணம் செய்து கொள்ள வேண்டி திருமணத்தை ஒருநாள் தள்ளிவைக்க அவள் நினைத்தபோது ஏஞ்செலா விகாரியோ அதற்கு சம்மதிக்கவில்லை. "உண்மையைச் சொல்வதென்றால்," அவள் என்னிடம் சொன்னாள், "சூப் வைக்க கொண்டையை மட்டும் வெட்டி எடுத்துக் கொண்டு மீதியுள்ள சேவல் மொத்தத்தையும் குப்பைக் கூடையில் எறிந்துவிடும் ஒரு ஆளிடமிருந்து ஆசீர்வாதம் பெறுவதை நான் விரும்பவில்லை". பிஷப் பங்கேற்காதபோதும் திருமணக் கொண்டாட்டம் பயார்டோ சான் ரோமானின் கட்டுப்பாட்டையும் மீறி தன் போக்கில் மிகுந்த தடபுடலுடன் ஒரு பொது விழாவாகவே மாறிவிட்டது.

ஜெனரல் பெட்ரோனியோ சான் ரோமானும் அவரது குடும்பத்தினரும் தேசிய காங்கிரஸுக்குச் சொந்தமான அலங்கரிக்கப்பட்ட படகு ஒன்றில் வந்து இறங்கினர். திருமண விழா முடியும் வரை அப்படகு படகுத் துறையிலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அவர்களுடன் பல முக்கியப் பிரமுகர்களும் வந்திருந்தனர். புதுமுகங்களின் கூட்டத்தில் அவர்களும் அடையாளம் தெரியாது போயினர். ஏராளமான பரிசுப் பொருள்கள் குவிந்தன. அவற்றுள் முக்கியமானவற்றை பார்வைக்கு வைக்க வசதியாக, பயன்படுத்தி நாளான முதல் மின் உற்பத்தி நிலையத்தை ஒழுங்குபடுத்த வேண்டியிருந்தது. மீதமிருந்த பரிசுப்பொருள்கள், புதுமணத் தம்பதிகளை வரவேற்க ஆயத்தமாக இருந்த க்சியஸின் முன்னாள் வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டன. உற்பத்தி செய்யப்பட்ட நிறுவனத்தின் முத்திரைக்குக் கீழாக கொதிக் எழுத்துக்களில் அவன் பெயர் பொறிக்கப்பட்ட திறந்த கார் ஒன்று மணமகனுக்குப் பரிசளிக்கப்பட்டது. மணமகளுக்கு தங்க வேலைப்பாடுகள் மிக்க அலங்காரப் பெட்டியொன்றும், சுத்தத் தங்கம் சேர்க்கப்பட்ட இருபத்து நான்கு விருந்தினர்கள் அமர்ந்து உண்ணக்கூடிய மேசை அமைப்பும் பரிசாகத் தரப்பட்டன. அவர்கள் ஒரு பாலே நடனக்

குழுவையும் இரண்டு நடன வாத்தியக் குழுக்களையும் அமர்த்தியிருந்தனர். திருமண ஆரவாரத்தினால் உந்தப்பட்டு வாசித்துக்கொண்டிருந்த உள்ளூர் பேண்டு வாத்தியக் குழுக்கள், அக்கார்டியன் வாத்தியக் குழுக்கள் இவற்றோடு சேர்ந்து நடன வாத்தியக் குழுவின் சுருதி பிசகி ஒலித்தது.

விகாரியோ குடும்பத்தினர் செங்கற் சுவரும், ஜனவரி மாதத்தில் ஸ்வாலோ பறவைகள் வந்து இனப்பெருக்கத்தில் ஈடுபடும் இரண்டு பரண்களைக் கொண்ட பனையோலைக் கூரையும் அமைந்த ஒரு சாதாரண வீட்டில் வசித்து வந்தனர். வீட்டின் முன்புறம் சமப்படுத்தப்பட்டிருந்த இடம் முழுவதும் பூந்தொட்டிகளால் நிறைந்திருந்தது. அதனையடுத்து இருந்த பரந்த வெளியில் பழமரங்கள் சில இருந்தன. அங்கே கோழிகள் கட்டற்று திரிந்து கொண்டிருக்கும். வாசலின் பின்பகுதியில் இரட்டைச் சகோதரர்கள் பன்றிக் குடிலை அமைத்திருந்தார்கள். அங்கு பன்றிகளை வைத்து வெட்டும் படப்பைக் கல்லும் வெட்டப்பட்ட பன்றிகளை குடல்நீக்கம் செய்யும் மேசையும் இருந்தன. போன்ஸியோ விகாரியோ கண் பார்வையை இழந்த பிறகு குடும்பத்துக்குத் தேவையான வருவாயை இந்தப் பன்றிக் குடில்தான் ஈட்டித் தந்தது. இந்தத் தொழிலை முதலில் ஆரம்பித்தது பெட்ரோ விகாரியோதான். அவன் ராணுவத்தில் சேர்ந்த பிறகு அவனது சகோதரன் இத்தொழிலைக் கற்றுக்கொண்டு சம்பாத்தியத்தை தொடர்ந்தான்.

வீட்டின் உட்புறம் புழங்குவதற்குப் போதுமான இடம் இல்லை. இதனால், நடக்கவிருந்த திருமணத்தின் பிரம்மாண்டத்தை உணர்ந்த ஏஞ்செலா விகாரியோவின் சகோதரிகள் கூடுதலாக ஒரு வீட்டை வாடகைக்கு எடுக்க முடிவு செய்தனர். "கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்," ஏஞ்செலா விகாரியோ என்னிடம் சொன்னாள். "அவர்கள் பிளாசிடா லினேரோவின் வீட்டை மனதில் வைத்திருந்தி ருக்கிறார்கள். ஆனால் அதிர்ஷ்டவசமாக என் பெற்றோர், திருமணம் நடந்தால் அது இந்தப் பன்றிக்குடிலில்தான் நடக்கவேண்டும் இல்லையென்றால் திருமணமே தேவையில்லை என்று உறுதியாகச் சொல்லி விட்டனர்." எனவே அவர்கள் வீட்டுக்கு அதன் ஆதி வண்ணமான மஞ்சள் வண்ணத்தை அடித்தனர். கதவுகள் பொருத்தினர். தரையைப் பழுதுபார்த்தனர். அப்படிப்பட்டவொரு ஆடம்பரமான திருமணத்துக்கு எந்த அளவு பொருத்தமாக இருக்க முடியுமோ அந்த அளவுக்கு அந்த வீட்டை அவர்கள் பொலிவாக்கினார்கள். இரட்டைச் சகோதரர்கள் பன்றிகளை வேறு இடத்துக்கு மாற்றிவிட்டு பன்றிக்குடிலுக்கு சுண்ணாம்பு அடித்து துப்புரவு செய்தனர். இருந்தும் போதுமான அளவு இடம் ஒதுக்க முடியவில்லை. கடைசியாக பயார்டோசான் ரோமானது உதவியுடன் வாசலைச் சுற்றியிருந்த வேலியை அகற்றினர். நடனத்துக்கென பக்கத்து வீடொன்றை வாடகைக்கு எடுத்தனர். உட்காரவும் உணவருந்தவும் புளியமரங்களினடியில் பலகைகள் கொண்டு தற்காலிக பெஞ்சுகளை அமைத்தனர்.

திருமண நாளன்று காலையில் யாரும் எதிர்பாராதவொரு ஆச்சரியத்தை ஏற்படுத்தினான் மணமகன். குறித்த நேரத்துக்கு இரண்டு மணிநேரம் தாமதமாக அவன் வந்தான். அவனைப் பார்க்கும் வரையில் திருமண

உடைகளை அணியாமலேயே இருந்தாள் ஏஞ்செலா விகாரியோ. "கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்," அவள் என்னிடம் சொன்னாள், அவர் வராமலேயே இருந்திருந்தால் நான் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பேன், ஆனாலும் நான் திருமண உடையணிந்தபின் அம்மாதிரி நடக்கக் கூடாதென்பதில் உறுதியாக இருந்தேன்." அவளது எச்சரிக்கை உணர்வு இயற்கையானதாகவே தோன்றியது. திருமண உடை அணிந்தபின் திருமணம் நடைபெறாமல் போவதென்பது மிகவும் துரதிருஷ்ட வசமானதாகக் கருதப்பட்ட காலம் அது. கன்னிப் பெண்ணாக இல்லாமலேயே ஏஞ்செலா விகாரியோ துணிவுடன் முகத்திரையை அணிந்ததையும், ஆரஞ்சு மலர்களை சூடிக் கொண்டதையும் சுட்டிக்காட்டி பிறகு அவர்கள் தூய்மையின் அடையாளங்களை அவள் கொச்சைப்படுத்திவிட்டதாகக் கூறினர். கடைசிவரையிலும் ஆட்டத்தில் சாமர்த்தியமாக காய் நகர்த்திய அவளது துணிச்சலைப் பாராட்டியது என் அம்மா மட்டுமே. "அந்த நாட்களில்," அவள் என்னிடம் சொன்னாள், "இதுபோன்ற விஷயங்களைக் கடவுளே கூட ஏற்றுக் கொண்டார்." ஆனால் மற்றொரு புறம் பயார்டோ சான் ரோமான் எப்படி காய் நகர்த்திக் கொண்டிருந்தான் என்பதை யாரும் அறியவில்லை. விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட நீண்ட கோட்டும், உயர்ந்த கருப்புத் தொப்பியும் அணிந்தபடி அங்கு வந்து தன்னைப் பெரும் வாதைக்குள்ளாக்கிய அவளை அழைத்துக்கொண்டு நடனமாடும் இடத்திலிருந்தும் வேகமாக வெளியேறிய நிமிடம் வரை, ஒரு மணமகனுக்குரிய மகிழ்வும் கம்பீரமும் சற்றும் குலையாதவனாகவே அவன் காணப்பட்டான்.

சாண்ட்டியாகோ நாஸர் எப்படி காய் நகர்த்திக்கொண்டிருந்தான் என்பதும் யாருக்கும் தெரியவில்லை. தேவாலயத்திலும், திருமணக் கொண்டாட்டங்கள் நடந்த இடங்களிலும், கிறிஸ்டோ பெடோயா மற்றும் என் சகோதரன் லூயி என்ரிக் இவர்களோடு நானும் அவனுடன்தான் இருந்தேன். அவனது நடத்தையில் சிறுமாற்றத்தையும் நாங்கள் காணவில்லை. பிறகு நான் இதைப் பலமுறை திரும்பத் திரும்பச் சொல்லவேண்டியிருந்தது. நாங்கள் நால்வரும் பள்ளியில் ஒன்றாகவே கழித்தோம். எங்களுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்படாத ரகசியம் என்று எதுவுமே இல்லையென்பதை எல்லாரும் அறிவர். அதுவும் இதைப்போன்ற ஒரு விஷயம் எங்களுக்குத் தெரியாமல் போக வாய்ப்பே இல்லை.

சாண்ட்டியாகோ நாஸர் விருந்துகளையும் கொண்டாட்டங்களையும் விரும்புபவன். அவன் மரணத்துக்கு முந்தின நாளின் பெரும்பகுதி நேரம் அந்தத் திருமண வைபவத்துக்கு எவ்வளவு செலவு பிடித்திருக்கும் என கணக்கிடுவதிலேயே ஈடுபட்டிருந்தான். முதல் தரமான இறுதி ஊர்வலங்கள் பதினான்குக்கு செலவாகக்கூடிய தொகையில் அவர்கள் பூக்களைக் கொண்டு தேவாலயத்தை அலங்கரித்திருந்தனர் என அவன் தோராயமாகக் கணக்கிட்டுச் சொன்னான். உண்மையிலேயே அவன் கணக்கு மிகத் துல்லியமாக இருந்தது. பல வருடங்கள் வரை இதை நினைத்து நினைத்து நான் மாய்ந்து போனேன். கட்டடங்களுக்குள் அடைபட்டுக் கிடக்கும்

மலர்களின் வாசம் தனக்கு மரணத்தை நினைவூட்டுவதாக அவன் அடிக்கடி சொல்வான். அன்றும் தேவாலயத்துக்குள் நுழைகையில் அவன் அவ்வாறே குறிப்பிட்டான். "என் இறுதி ஊர்வலத்தில் பூக்கள் இடம் பெறுவதை நான் விரும்பவில்லை," மறுநாளே அந்த விருப்பத்தை நான் நிறைவேற்றவேண்டியிருக்கும் என்பதை உணராதவனாக அவன் என்னிடம் சொன்னான்.

தேவாலயத்திலிருந்து விகாரியோக்கள் வீட்டை அடைவதற்குள்ளாக, தெருக்களை அலங்கரிக்க வைக்கப்பட்டிருந்த பலவண்ண மலர் வளையங்களுக்கான செலவு, வாத்தியக் குழுக்கள் மற்றும் வாணவேடிக்கைகளுக்கு ஆகும் செலவு, வரவேற்கும் விதமாக எங்கள் மீது மழையென அவர்கள் தூவிய அரிசிக்கு ஆகும் செலவு உட்பட அனைத்தையும் அவன் கணக்கிட்டுக் கொண்டே வந்தான். மந்தமான அம்மதிய வேளையில் புதுமணத் தம்பதிகள் வீதியை வலம்வந்துகொண்டிருந்தனர். பயார்டோ சான் ரோமான் எங்களுக்கு நெருக்கமான நண்பனாகிவிட்டிருந்தான். அந்தக் காலத்தில் சொல்வது போல அவன் ஒரு குறைவாகக் குடிக்கும் நண்பன். எங்களது மேசையில் அவன் எவ்வித சங்கோஜமும் இன்றி அமர்ந்திருப்பதாகவே தோன்றியது. ஏஞ்செலா விகாரியோவை முகத்திரையும் கையில் பூங்கொத்தும் இன்றி வியர்வையில் நனைந்த பட்டு உடையில் பார்க்கையில் திடீரென அவள் திருமணமான பெண்ணுக்குரிய தோற்றத்தை அடைந்துவிட்டிருந்தாள். ஆனால் அதை அவள் ஒருவித மரியாதைக் குறைவாகவே கருதினாள் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. "அந்நியர்கள் முன்பு பணம் பற்றி பெருமை பேசக் கூடாதென்று அம்மா கண்டிப்பாகச் சொல்லி வளர்த்திருந்தாள்," அவள் என்னிடம் சொன்னாள். ஆனால் பயார்டோ சான் ரோமானோ அதை சாதாரணமானதாகவும் கௌரவத்துக்குரிய ஒரு செயலாகவும் கருதிச் செய்தான்.

"கிட்டத்தட்ட", அவன் சொன்னான், "இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது. எல்லாம் நடந்து முடியும்போது ஏறக்குறைய இதைப்போல இரண்டு மடங்கு செலவாகியிருக்கும்."

பைசா திருத்தமாக அந்தக் கணக்கு சரிதானா எனப்பார்க்க உறுதி பூண்டான் சாண்ட்டியாகோ நாஸர். அதற்குத் தேவையான ஆயுள் அவனுக்கு இருந்தது. மறுநாள் படகுத் துறையில், அவன் இறப்பதற்கு நாற்பத்தைந்து நிமிடங்கள் முன்பு, கிறிஸ்டோ பெடோயா தந்த கணக்கீடுகள் மூலம் பயார்டோ சான் ரோமான் சொன்ன கணக்கு மிகச் சரியாக இருந்ததை அறிந்தான்.

அடுத்தவர்களது நினைவிலிருந்தும் துண்டு துண்டாக விவரங்களைக் கேட்டும் அந்தத் திருமண விழா பற்றிய முழுமையானதொரு சித்திரத்தைப் பெறுவதற்கு முன்பாக என் நினைவில் இருந்ததெல்லாம் குழப்பமான ஒரு தோற்றம்தான். புதுமணத் தம்பதிகளுக்காகத் தன் பால்ய காலத்து வயலினை எடுத்து என் தந்தை வாசித்ததையும், கன்னிகாஸ்திரீயான என் சகோதரி வாயில் காப்போன் அணிவது போன்ற தன் நீண்ட அங்கியுடன் மெரிங்கு

நா னம் ஆடியதையும், என் அம்மாவின் ஒன்றுவிட்ட சகோதரரான டாக்டர். டயானிஸியோ இகுவரான் மறுநாள் பிஷப் வரும்போது தான் அங்கிருக்கக் கூடாதென்று அதிகாரபூர்வ படகில் அன்றே சென்றுவிட முடிவுசெய்ததையும் பற்றி என் வீட்டில் பலவருடங்களுக்கு கதை கதையாகப் பேசிக்கொண்டிருந்தனர். இந்தப் பதிவுக்காக வேண்டி பலரிடமும் பேசியதிலிருந்து அவ்வளவாக முக்கியமில்லாத பல்வேறு விஷயங்களையும் நான் அறிய நேர்ந்தது. அவற்றுள் பயார்டோ சான்ரோமானது சாகோதரிகள் பற்றிய செய்திகளும் இருந்தன. அவர்கள் தங்களது வெல்வெட் உடையின் முதுகுப் புறத்தில் தங்க ஊசிகள் கொண்டு பெரிய பட்டாம்பூச்சி சிறகுகளைப் பொருத்தியிருந்தனர். அவர்களது தந்தை அணிந்திருந்த இறகுத் தொப்பி மற்றும் மார்பில் வரிசையாகக் குத்தியிருந்த போர்ப் பதக்கங்கள் இவற்றைவிட சகோதரிகளது இந்த உடையலங்காரமே அதிகமும் கவனத்தை கவர்வதாக இருந்திருக்கின்றது. அன்று காணப்பட்ட அந்த களேபரத்தில் மெர்ஸிடஸ் பார்ச்சாவிடம் சென்று அவளது பள்ளிப்படிப்பு முடிந்ததும் அவளைத் திருமணம் செய்துகொள்வதாக நான் சொன்னதையும் பலர் அறிந்திருந்தனர். பதினான்கு வருடங்கள் கழித்து நாங்கள் திருமணம் செய்து கொண்டபோது அவளும் இதை நினைவுபடுத்தி என்னிடம் சொன்னாள். விரும்பத்தகாத அந்த ஞாயிற்றுக்கிழமை சார்ந்து என்மனதில் எப்போதும் ஆழப் பதிந்திருந்தது தன்வீட்டு வாசலின் நடுவே தனியாக ஸ்டூலில் அமர்ந்திருந்த போன்ஸியோ விகாரியோவின் உருவம்தான். அது மரியாதைக்குரிய இடம் என்று கருதி அவர்கள் அவரை அங்கு அமர வைத்திருக்கவேண்டும். வந்த விருந்தினர்கள் அவர் மீது முட்டிமோதியபடி சென்றனர். அவரை யாரோ என நினைத்த அவர்கள் வழியில் தடையாக இருக்காதபடிக்கு நகர்த்தி அமரவைத்தனர். அண்மையில் பார்வையிழந்தவருக்கே உரிய குழப்பத்துடன் பனி போன்று நரைத்த தன் தலையை அவர் அபத்தமாக ஆட்டிக் கொண்டிருந்தார். தன்னை நோக்கி கேட்கப்படாத கேள்விகளுக்கு பதிலளித்தபடியும், யாரும் கை அசைக்காமலேயே யாருக்கோ பதிலுக்கு கையசைத்தபடியும் தன் மறதியின் எல்லைக்குள் அவர் மகிழ்வுடனே இருந்தார். கஞ்சிபோட்ட சட்டை அட்டை போல விரைத்திருக்க கையில் திருமண விழாவில் வைத்திருக்க அவருக்கென்று பிரத்யேகமாக வாங்கி வந்திருந்த லிக்னம் விடே பிரம்புடன் அவர் அமர்ந்திருந்தார்.

மாலை ஆறுமணியளவில், வந்திருந்த சிறப்பு விருந்தினர்கள் கிளம்ப சம்பிரதாயமான கொண்டாட்டங்கள் ஒரு முடிவுக்கு வந்தன. அனைத்து விளக்குகளும் எரிய, தானியங்கி பியானோவிலிருந்தும் ஒலித்த நடன இசையை நீர்ப்பரப்பின் மீது ஒழுகவிட்டவாறு படகு கிளம்பிச் சென்றது. ஒருகணம் இருள்வெளியில் திக்குத்தெரியாமல் குழம்பியவர்களாக செய்வதறியாது நின்றுகொண்டிருந்த நாங்கள் திரும்பவும் கொண்டாட்டத்தில் குதித்தோம். சிறிது நேரத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி சற்று சிரமத்துடனே திறந்த கார் ஒன்றில் புதுமணத் தம்பதிகள் வந்தனர். பயார்டோ சான் ரோமான் வாணங்களை பற்றவைத்துவிட்டான். கூட்டத்தினர் கொடுத்த பாட்டிலில் இருந்து கரும்புச் சாராயம் குடித்தான்.

ஏஞ்செலா விகாரியோவுடன் காரிலிருந்து இறங்கி புரியாத வகையில் நடைபெற்றுக்கொண்டிருந்த கும்பியாம்பா நடனத்தில் கலந்துகொள்ளச் சென்றான். கடைசியாக, உங்கள் வாழ்நாள் உள்ளவரை தொடர்ந்து என் செலவில் நடனமாடுங்கள் என்று எங்களிடம் சொன்னவன் பீதியுடன் காணப்பட்ட தன் மனைவியை அழைத்துக்கொண்டு ஒரு காலத்தில், மனைவியை இழந்த க்சியஸ் மகிழ்வுடன் வாழ்ந்து வந்திருந்த தன் கனவு இல்லத்துக்குக் கிளம்பினான்.

நள்ளிரவை நெருங்கியபோது விழாக் கொண்டாட்டம் ஓய்ந்து அனைவரும் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து கலையத் தொடங்கினர். சதுக்கத்தின் ஒரு பக்கமாக அமைந்திருந்த க்ளோடில்டி அர்மென்ட்டாவின் கடை மாத்திரமே அப்போது திறந்திருந்தது. சாண்ட்டியாகோ நாஸரும் நானும், என் சகோதரன் லூயி என்ரிக் மற்றும் கிறிஸ்டோ பெடோயா இவர்களோடு மரியா அலெஜான்ட்ரினா செர்வாண்டிஸின் அன்பு நிறைந்த இல்லத்துக்குச் சென்றோம். அங்கு வந்து எங்களோடு சேர்ந்து கொண்டபலரில் விகாரியோ சகோதரர்களும் அடக்கம். அவர்களும் எங்களோடு சேர்ந்து குடித்தனர். அவனைக் கொல்வதற்கு ஐந்து மணி நேரத்துக்கு முன்பாக சாண்ட்டியாகோ நாஸருடன் சேர்ந்து அவர்கள் சந்தோஷமாகப் பாடிக்கொண்டிருந்தனர். திருமணக் கொண்டாட்டத்திலிருந்தும் கிளம்பிச் சென்ற சிலர் சிறு குழுக்களாகப் பிரிந்து தங்கள் கொண்டாட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருந்திருக்க வேண்டும், ஏனென்றால் தொலைவே எல்லாத் திசைகளிலிருந்தும் இசையும், ஆட்கள் சண்டைபோட்டுக்கொள்ளும் சத்தமும் ஓசையெழுப்பியபடி பிஷப்பின் படகு வந்து சேருவதற்கு சற்று முன்பு வரையிலும் கூட மேலும் மேலும் சோகத்துடன் எங்களை வந்து அடைந்தபடி இருந்தன.

தன்னுடைய மூத்த மகள்களின் உதவியுடன் திருமணவிருந்து முடிந்து தாறுமாறாய்க் கிடந்தவற்றை ஓரளவு ஒழுங்குபடுத்திவிட்டு பதினோரு மணிக்குத்தான் படுக்கச் சென்றதாகச் சொன்னாள் ப்யூரா விகாரியோ. சதுக்கத்தில் சில குடிகாரர்கள் இன்னும் பாடிக்கொண்டிருக்க, பத்துமணி வாக்கில் வீட்டில் கண்ணாடி பதிந்த அலமாரியில் இருந்த தனது பிரத்யேகப் பொருட்கள் அடங்கிய சிறிய பெட்டியைக் கொண்டு வரச்சொல்லி ஏஞ்செலா விகாரியோ ஒரு ஆளை அனுப்பியிருந்தாள். அதோடு அவள் அன்றாடம் உபயோகப்படுத்தும் துணிகளையும் ஒரு பெட்டியில் வைத்து அனுப்பும்படியும் சொல்லியனுப்பியிருந்தாள். ஆனால் செய்தியைக் கொண்டு வந்த நபர் தனக்கிருந்த அவசரத்தில் இதையெல்லாம் மறந்துவிட்டார். கதவு தட்டப்பட்டபோது ப்யூரா விகாரியோ ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். "மூன்றுமுறை மெதுவாகக் கதவு தட்டும் ஓசை கேட்டது", அவள் என் அம்மாவிடம் சொன்னாள், "ஆனால் அந்தத் தட்டுதலில் ஏதோ ஒரு கெட்ட செய்தி இருப்பதாகத் தோன்றியது". யாரும் விழித்துவிடக் கூடாதென்பதற்காக விளக்கைப் போடாமலே கதவைத் திறந்ததாக அவள் சொன்னாள். பட்டுச் சட்டையின் பொத்தான்கள் கழற்றிய நிலையில் தோளிலிருந்து தொங்கிய இழுவைப் பட்டிகளின் உதவியோடு அணிந்திருந்த விசித்திரமான பேண்ட்டுடன் பயார்டோ சான் ரோமான்

நின்று கொண்டிருப்பதை தெருவிளக்கு வெளிச்சத்தில் அவள் கண்டாள். "அவனிடம் கனவின் பச்சை நிறத்தைக் கண்டேன்", ப்யூரா விகாரியோ என் அம்மாவிடம் சொன்னாள். ஏஞ்செலா விகாரியோ அவனுக்கும் பின்னால் இருளில் நின்றுகொண்டிருந்தாள். அவன் அவள் புஜத்தைப் பற்றி இழுத்து வெளிச்சத்தில் கொண்டு நிறுத்திய பிறகே அவள் அங்கிருந்ததை ப்யூரா விகாரியோ அறிந்தாள். அவளது பட்டுத் துணி கந்தல் கந்தலாக இருந்தது. இடுப்புவரை அவள் துண்டு ஒன்றினால் போர்த்தப்பட்டிருந்தாள். அவர்களது கார் சாலையிலிருந்தும் தவறி உருண்டுவிட்டிருக்க மலைகளுக்கு நடுவே பள்ளத்தாக்கில் அவர்கள் இறந்து கிடப்பது போல ப்யூரா விகாரியோவுக்குள் எண்ணம் ஓடியது.

"கடவுளின் புனித அன்னையே," அவள் பீதியுடன் கூறினாள், "நீங்கள் இன்னும் உயிருடன்தான் இருக்கிறீர்களா?"

பயார்டோ சான் ரோமான் வீட்டுக்குள் வரவில்லை. ஒரு வார்த்தையும் பேசாமல் தன் மனைவியை அவன் மெதுவாக வீட்டுக்குள் தள்ளினான். பிறகு ப்யூரா விகாரியோவின் கன்னத்தில் முத்தமிட்டான். ஆழ்ந்த, சோகம் நிரம்பிய ஆனால் கனிவான குரலில். "நீங்கள் செய்த அனைத்துக்கும் நன்றி அம்மா", என்றான் அவன். "நீங்கள் ஒரு தெய்வம்".

அடுத்த இரண்டு மணி நேரத்தில் ப்யூரா விகாரியோ என்ன செய்தாள் என்று அவளுக்கு மட்டுமே தெரியும். கல்லறைக்குப் போகும் வரை தான் செய்ததைப் பற்றி அவள் யாரிடமும் மூச்சுவிடவில்லை. "ஒரு கையால் என் தலைமுடியைப் பற்றிக்கொண்டு இன்னொரு கையால் ஆத்திரத்துடன் என்னை அடித்துக்கொண்டிருந்தாள் என்பது மட்டும் நினைவிருக்கிறது. அவள் ஆத்திரம் எந்த அளவுக்கு இருந்ததென்றால் அடித்தே அவள் என்னைக் கொல்லப் போகிறாள் என்று நான் நினைத்தேன்" ஏஞ்செலா விகாரியோ என்னிடம் சொன்னாள். அடிப்பதைக் கூட ஒருவருக்கும் தெரியாமல் ரகசியமாகச் செய்தாள் அவள். எவ்வளவு ரகசியமாகச் செய்தாளென்றால் பக்கத்து அறைகளில் உறங்கிக் கொண்டிருந்த அவள் கணவன் மற்றும் மூத்த மகள்கள் காலையில் பிரச்சினை பூதாகரமாக வளர்ந்து விட்டிருந்த பிறகே அதுபற்றி அறிய முடியுமளவுக்கு.

அவர்களுடைய அம்மா அவசரமாகக் கூப்பிட்டு அனுப்பியதற்கு இணங்க இரட்டைச் சகோதரர்கள் இருவரும் மூன்று மணிக்குச் சற்று முன்பாக வீட்டுக்கு வந்தனர். சாப்பாட்டு அறையின் சோபாவில் முகத்தில் காயங்களுடன் ஏஞ்செலா விகாரியோ தலைகுப்புற படுத்திருந்ததைப் பார்த்தனர். "அப்போது எனக்குள் இருந்த பயம் போய்விட்டிருந்தது", அவள் என்னிடம் சொன்னாள், "நினைத்ததற்கு மாறாக என்னுள் இருந்த மரணபயம் அகன்று இந்த களேபரமெல்லாம் எப்போது முடியும், எப்போது போய் அக்கடாவென்று படுத்து உறங்கலாம் என்று எண்ணம் ஓடியது". இருவரில் அதிகம் முரட்டுத்தனம் கொண்டவனான பெட்ரோ விகாரியோ அவள் முடியைக் கொத்தாகப் பற்றி அப்படியே அவளைத் தூக்கி சாப்பாட்டு மேசைமீது உட்கார வைத்தான்.

"எல்லாம் சரிதான்," ஆத்திரத்தில் நடுங்கியவனாக அவன் அவளிடம்

கேட்டான். அவன் யாரென்று சொல்"

அவள் நீண்ட நேரம் எடுத்துக்கொள்ளவில்லை. அந்தப் பெயர் தென்படுகிறதா என இருளினூடாகப் பார்த்தாள். முதல் பார்வையிலேயே பல்வேறு பெயர்களுடன் அந்தப் பெயரும் இருந்தது. இவ்வுலகைச் சேர்ந்ததும் மேல் உலகைச் சேர்ந்ததுமான குழப்பம் ஏற்படுத்தக்கூடிய பல பெயர்கள். எந்த உள்நோக்கமும் இல்லாத ஆனால் அது சொல்லப்போகும் வார்த்தை மிக முக்கியமானதாயிருக்கும் ஒரு பட்டாம்பூச்சியைப் போல, சரியாகக் குறிபார்த்து அம்பெறிந்து அந்தப் பெயரை சுவரோடு அறைந்தாள் அவள் சொன்னாள்.

"சாண்ட்டியாகோ நாஸர்."

3

தனது வாதத்தில் அது ஒரு அப்பட்டமான கொலை என வாதிட்டார் வழக்கறிஞர். நீதிமன்றத் தீர்ப்பிலும் இந்தக் கருத்தே பிரதிபலித்தது. வழக்கு விசாரணையின் முடிவில் இரட்டைச் சகோதரர்களும் அதே காரணத்துக்காக எனும்போது திரும்பவும் ஓராயிரம் தடவை என்றாலும் அந்த கொலையைச் செய்யத் தயார் என்றே தெரிவித்தனர். சம்பவம் நடந்து மூன்று நிமிடங்களுக்குள் தேவாலயத்தில் வந்து சரணடைந்துவிட்ட அவர்களே வழக்கின் போக்கை தீர்மானிக்கும் சக்திகளாக இருந்தனர். ஆத்திரமுற்ற சில அராபியர்கள் துரத்திவர மூச்சுவாங்கியபடியே அவர்களிருவரும் பாதிரியாரின் இல்லத்தில் நுழைந்து கறைசிறிதும் படாத தங்கள் கத்திகளைப் பாதிரியார் அமடோரின் மேசை மீது வைத்தனர். கொல்லுதல் எனும் கடினமும் கொடூரமுமான செயலைச் செய்ததில் அவர்கள் மிகவும் சோர்வடைந்து காணப்பட்டனர். அவர்களது ஆடையும் கைகளும் தெப்பலாக நனைந்திருந்தன. அவர்கள் முகங்களில் வியர்வையுடன் உயிர்த்துடிப்புக் குறையாத புத்தம்புது ரத்தமும் கலந்திருந்தது. எப்படியிருப்பினும் அவர்கள் சரணடைந்தது ஒரு கௌரவமான செயல் என்றே பாதிரியார் குறிப்பிட்டார்.

"எல்லோரும் பார்க்க அவனை நாங்கள் கொன்றோம்," என்றான் பெட்ரோ விகாரியோ, "ஆனால் நாங்கள் குற்றமற்றவர்கள்."

"கடவுள் முன்னிலையில் ஒருவேளை நீங்கள் குற்றமற்றவர்களாக இருக்கலாம்," அமடோர் பாதிரியார் சொன்னார்.

"கடவுள் முன்னிலையிலும் சரி மனிதர் முன்னிலையிலும் சரி நாங்கள் குற்றமற்றவர்கள்தான்" என்றான் பாப்லோ விகாரியோ, "அது எங்கள் கௌரவம் சம்பந்தப்பட்ட விஷயமாக இருந்தது."

அதுமட்டுமல்லாமல் கொலையை ருசுப்படுத்தவேண்டி நடந்த விஷயங்களை மறுபடி ஒருமுறை செய்துகாட்டச் சொன்னபோது கொலை நடந்தபோது கொண்டிருந்த வெறியைக் காட்டிலும் அதிக வெறியுடன் அவர்கள் அதைச் செய்து காட்டினர். அவர்களது வெறி எந்த அளவுக்கு

இருந்ததென்றால் கத்திக் குத்துக்களால் உருக்குலைந்த பிளாசிடா லினேரோ வீட்டு முன்வாசல் கதவை பொதுப் பணத்தைக் கொண்டு சீர்செய்ய வேண்டியதாயிற்று. பெயிலில் வர வசதியில்லாத காரணத்தால் விசாரணைக் கைதிகளாக ரியோஹச்சா மையக்கண்காணிப்பு வட்டச் சிறையில் மூன்று ஆண்டுகளை அவர்கள் கழித்த காலத்தில் அங்கிருந்த கைதிகள், நல்ல குணமுடையவர்களாகவும், பலருடனும் கலந்து பழகும் தன்மை கொண்டவர்களாகவும் இருந்தபோதிலும் ஒருபோதும் தாங்கள் செய்த செயலை நினைத்து அவர்கள் வருந்தியது இல்லை என்பதை நினைவு கூர்ந்தனர். மிகுந்த அவசரத்துடனும் பொதுமக்கள் கண்ணில் படாமலும் சாண்ட்டியாகோ நாஸரைக் கொன்றதில் விகாரியோ சகோதரர்கள் எதையுமே ஒழுங்காகச் செய்யவில்லை, ஆனால் அந்தக் கொலையை யாராவது தடுத்து நிறுத்தத் தூண்டுமளவுக்கு அவர்கள் அநேக விஷயங்களைச் செய்திருந்தனர். அவர்கள் இருவரும் சாண்ட்டியாகோ நாஸரை மரியா அலெஜான்ட்ரினா செர்வாண்டிஸின் வீட்டில் தேடியதாகப் பல வருடங்களுக்குப் பின் என்னிடம் சொன்னார்கள். அதற்கு முன் இரண்டு மணிவரை அவர்கள் அவனோடுதான் அங்கு இருந்தார்கள். பல விவரங்களைப் போலவே இந்த விவரமும் அறிக்கையில் இடம்பெறாமல் போயிருந்தது. உண்மையில் அவர்களிருவரும் சாண்ட்டியாகோ நாஸரைத்தேடி வந்த போது அவன் அங்கிருக்கவில்லை. நாங்கள் செரனேட் எனப்படும் இரவு நேர கேளிக்கைப் பாடல்கள் பாடக் கிளம்பிவிட்டிருந்தோம். தேடிவந்தவர்கள் அங்கேயே இருந்தார்களா இல்லை கிளம்பிச் சென்று விட்டர்களா என்பது சந்தேகமாகவே இருந்தது. "அவர்கள் இங்கிருந்து சென்றிருக்கவே முடியாது," மரியா அலெஜான்ட்ரினா செர்வாண்டிஸ் என்னிடம் சொன்னாள். அவளைப்பற்றி நான் நன்றாக அறிவேன். அவள் சொன்னதில் எனக்கு எந்த ஐயமும் இல்லை. அதே நேரம் அவர்கள் இருவரும் க்ளோடில்டி அர்மென்ட்டாவின் கடையருகே அவனுக்காகக் காத்திருந்தார்கள். சாண்ட்டியாகோ நாஸர் தவிர்த்து ஏனைய அனைவரும் தங்களைத் தடுத்து நிறுத்த வருவார்கள் என கிட்டத்தட்ட அவர்கள் உறுதியாக நம்பினர். "அப்போது க்ளோடில்டி அர்மென்ட்டாவின் கடை மட்டுமே திறந்திருந்தது," விசாரணை அதிகாரியிடம் அவர்கள் தெரிவித்தனர். "விரைவிலோ காலம் தாழ்த்தியோ, எப்படியும் அவன் வந்தாக வேண்டுமென்கிற எண்ணத்தோடு காத்திருந்தோம்," குற்றமற்றவர்கள் எனக்கூறி விடுவிக்கப்பட்டபின் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். பிளாசிடா லினேரோ வீட்டு முன்கதவு பகல்பொழுது உட்பட எப்போதுமே உட்புறமாகத் தாழிடப்பட்டு இருக்கும் என்பதும் எப்போதும் தன்னுடன் பின் கதவின் சாவியை சாண்ட்டியாகோ நாஸர் எடுத்துச் செல்வான் என்பதும் அனைவரும் அறிந்தது. விகாரியோ சகோதரர்கள் ஒருமணி நேரத்துக்கும் மேலாக முன்கதவருகே காத்திருக்க பின்கதவு வழியாகவே அவன் வீட்டுக்குள் வந்தான். அவன் மட்டும் சதுக்கத்தைப் பார்த்தபடி அமைந்த அந்தக் கதவு வழியாகவே பிஷப்பை வரவேற்க சென்றிருந்தால்? யாராலும் கற்பனை செய்துபார்க்கமுடியாத இந்த விஷயத்தை விசாரணை அதிகாரியால் ஒருபோதும் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

இதுபோல அதிகமும் முன்கூட்டியே அறியப்பட்ட மரணம் வேறெதுவுமில்லை. அவர்களது சகோதரி அந்தப் பெயரைச் சொன்னதுமே விகாரியோ சகோதரர்கள் சென்று பன்றிக் குடிலில் பன்றியை அறுக்கும் ஆயுதங்கள் வைத்திருந்த கூடையிலிருந்து இருந்ததிலேயே நல்லதாக இரண்டு கத்திகளை எடுத்தனர். ஒரு கத்தி பன்றியைக் கூறுபோட உதவுவது; பத்து அங்குல நீளமும் இரண்டு அங்குல அகலமும் உடையது. மற்றது கறியைத் துண்டுபோட உதவுவது; ஏழு அங்குல நீளமும் ஒன்றரை அங்குல அகலமும் கொண்டது. கூர்தீட்ட வேண்டி கரித்துணியில் சுற்றி அவற்றை எடுத்துக்கொண்டு அப்போதுதான் சில கடைகள் திறக்க ஆரம்பித்திருந்த இறைச்சி சந்தைக்குச் சென்றனர். அந்த அதிகாலைவேளையில் அங்கே அதிக வாடிக்கையாளர்கள் இல்லை. ஆனால் அவர்கள் கூறிய அனைத்தையும் தாங்கள் கேட்டதாக இருபத்தியிரண்டுபேர் சொன்னார்கள். அவர்கள் அப்படிக் கூறியதன் காரணம் யாராவது அதைப் பற்றி அவர்களிடம் கேட்கவேண்டும் என்ற எதிர்பார்ப்புத்தான் என்பது கேட்ட அனைவரின் ஒருமித்த கருத்தாக இருந்தது. அவர்களது நண்பனும் இறைச்சிக் கடைக்காரனுமான ஃபாஸ்டினோ சாண்ட்டோஸ் சரியாக மூன்று இருபது மணிக்கு குடல் உள்ளிட்ட விலங்குகளின் உள்ளுறுப்புக்களை வைக்கும் மேசையை எடுத்துப்போட்டுக்கொண்டிருந்தபோது அவர்கள் அங்கு வருவதைப் பார்த்தான். போயும் போயும் திங்கட்கிழமை, அதுவும் இவ்வளவு அதிகாலையில் திருமணத்துக்கென அணிந்திருந்த ஆழ்ந்த வண்ணமுள்ள தங்கள் சூட்டுகளைக் கூட கழற்றாமல் அவர்கள் வருவதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. வழக்கமாக அவர்கள் வெள்ளிக்கிழமைகளில் அதுவும் சற்று நேரம் தாழ்ந்தே இறைச்சி அறுக்கவென ஆடையின் மேலாக முன்புறம் மறைப்புத்துணி கட்டியபடி வருவதை அவன் கண்டிருக்கிறான். "அவர்கள் அதிகம் குடித்திருக்க வேண்டுமென நினைத்தேன்." ஃபாஸ்டினோ சாண்ட்டோஸ் என்னிடம் சொன்னான், "போதை தலைக்கேறியதில் அது என்ன நேரம், அன்று என்ன கிழமை என்பதைக் கூட அவர்கள் மறந்துபோயிருக்க வேண்டும்" அவன் அவர்களிடம் அன்று திங்கட்கிழமை என்பதை நினைவூட்டினான்.

"தெரியும், முட்டாளே," பாப்லோ விகாரியோ சிரித்தவாறே சொன்னான், "நாங்கள் கத்திகளைத் தீட்ட வந்துள்ளோம்."

வழக்கமாக அவர்கள் தீட்டுவது போலவே அன்றும் அவர்கள் கத்திகளை சாணைக்கல்லில் தீட்டினர். பெட்ரோ கத்திகளைக் கையில் பிடித்து சாணைக்கல்மீது இப்படியும் அப்படியும் காட்ட பாப்லோ கைப்பிடியைப் பற்றி சாணைக்கல்லை சுழற்றிக் கொண்டிருந்தான். அப்போது அவர்கள் திருமண தடபுடல் பற்றி இறைச்சிக் கடைக்காரர்களிடம் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய நண்பர்களாக இருந்தும் தங்களுக்குத் திருமண கேக் கிடைக்கவில்லையென சில கடைக்காரர்கள் குறைசொல்ல, பிறகு கொடுத்தனுப்புவதாக அவர்கள் வாக்களித்தனர். கடைசியாக கத்திகளை சாணைக்கல்லுடன் நன்கு தேயவிட்டனர். கத்தி சாணைக்கல்லில் பட்டு தீப்பொறிகள் பறப்பது நன்றாகத் தெரியவேண்டி தன் கையிலிருந்த விளக்கை பின்புறமாக மறைத்து இருளை ஏற்படுத்தினான் பாப்லோ.

காரியத்தை செய்து முடிக்கவேண்டுமென்ற உத்வேகத்தை விட யாராவது தங்களை தடுத்து நிறுத்த முன்வருவார்களா என்ற எண்ணமே அவர்களிடம் மேலோங்கியிருந்தது. ஆனால் கர்னல் அபோந்தி மனதில் எந்த உறுத்தலுமின்றி நிம்மதியாக இருந்தார்.

"சந்தேகத்தின் பேரில் யாரும் கைது செய்யப்படுவது வழக்கமில்லை," அவர் சொன்னார், "இப்போது சாண்ட்டியாகோ நாஸரை எச்சரிக்க வேண்டும். அவ்வளவே"

கர்னல் அபோந்தியின் கொழுகொழு உருவம் அவளுள் ஒருவித பரிதாப உணர்வை ஏற்படுத்தியிருந்ததை க்ளோடில்டி அர்மென்ட்டா நினைவு கூர்ந்தாள். தபால் மூலம் கற்ற ஆவிகளோடு பேசும் கலையை நடைமுறையில் செய்து பார்த்துவந்த காரணத்தால் சற்றே கர்வமுடையவராகக் காணப்பட்டாலும் அவரொரு மகிழ்ச்சி நிரம்பிய ஆளாகவே எனக்குத் தோன்றினார். அந்தத் திங்கட்கிழமை அவர் நடந்து கொண்டவிதம் அவரது முட்டாள்தனத்தை உறுதி செய்வதாக அமைந்தது. உண்மை என்னவென்றால் படகுத்துறையில் சாண்ட்டியாகோ நாஸரைப் பார்க்கும் வரை அந்தவிஷயத்தை அவர் சுத்தமாக மறந்தே போயிருந்தார். அவனை அங்கு பார்த்ததும் தான் மேற்கொண்ட முடிவு சரிதான் என தன்னையே மெச்சிக் கொண்டார்.

க்ளோடில்டி அர்மென்ட்டாவின் கடைக்கு பால் வாங்க வந்த ஒரு டஜனுக்கும் அதிகமானவர்களிடம் தாங்கள் சாண்ட்டியாகோ நாஸரைக் கொல்லப் போவது பற்றி சொல்லியிருந்தனர் விகாரியோ சகோதரர்கள். இதனால் ஆறுமணிக்குள்ளாகவே விஷயம் எல்லா இடத்துக்கும் பரவிவிட்டிருந்தது. தெருவுக்கு அந்தப் பக்கம் இருக்கும் பிளாசிடா லினேரோவின் வீட்டுக்கு அந்தச் செய்தி சென்றடையாமல் இருக்க வாய்ப்பேயில்லையென க்ளோடில்டி அர்மென்ட்டா நினைத்தாள். அவன் படுக்கையறையில் விளக்கு எரியாததால் சாண்ட்டியாகோ நாஸர் அங்கு இருப்பானென்று அவளுக்குத் தோன்றவில்லை. தான் கண்டவரிடமெல்லாம் சாண்ட்டியாகோ நாஸரைப் பார்த்தால் எச்சரிக்கும்படி அவள் கேட்டுக்கொண்டாள். கன்னிகாஸ்திரீகளுக்குப் பால் வாங்க வந்த பயிற்சி கன்னிகாஸ்திரீ மூலமாக இதுபற்றி அமடோர் பாதிரியாருக்கும் கூட சொல்லியனுப்பினாள். நான்கு மணிக்குப் பிறகு பிளாசிடா லினேரோவின் வீட்டு சமையலறையில் விளக்குகள் எரிய ஆரம்பித்திருந்ததைக் கண்டதும் தினமும் கொஞ்சம் பால் கேட்டு வரும் பிச்சைக்காரி மூலம் கடைசியாக விக்டோரியா கஸ்மானுக்கு அந்த அவசரச் செய்தியையும் அனுப்பினாள். சப்தமெழுப்பியபடி பிஷப்பின் படகு வந்தபோது எல்லோரும் அவரை வரவேற்க கூடியிருந்தனர். விகாரியோ சகோதரர்கள் சாண்ட்டியாகோ நாஸரைக் கொல்ல இருந்ததை அறியாதவர்கள் வெகுசிலர்தான். கிட்டத்தட்ட அனைவருமே அதை அறிந்திருந்தனர். சிறுவிவரமும் குறையாமல் கொலைக்கான காரணத்தைக் கூட அவர்கள் அறிந்திருந்தனர்.

விகாரியோ சகோரர்கள் செய்தித்தாள்களில் சுற்றி மறுபடியும் இரண்டு கத்திகளைக் கொண்டு வந்தபோது க்ளோடில்டி அர்மென்ட்டா பால்

கிளோடில்டு அர்மென்டா.

அப்போதுதான் தன் கணவனை அனுப்பிவிட்டு அவனுக்குப் பதில் கடையில் அமர்ந்திருந்தாள் கிளோடில்டு அர்மென்டா. அது அவர்கள் வழக்கமாகக் கடைபிடிக்கும் முறை. கடையில் காலையில் பால் விற்பனை. பகல் பொழுது முழுக்க பலசரக்கு வியாபாரம். மாலை ஆறு மணிக்கு மேல் கடை மதுவிடுதியாகச் செயல்படும். கிளோடில்டு அர்மென்டா காலை மூன்றரை மணிக்கு கடையைத் திறப்பாள். மிகவும் நல்ல குணம் படைத்தவரான அவள் கணவர் டான் ரோகெலியோ டி லா ஃப்ளோர் மாலை தொடங்கி நடு இரவு வரை மதுவிடுதியைப் பார்த்துக்கொள்வார். ஆனால் திருமணக் கொண்டாட்டம் காரணமாக அன்று இரவு வாடிக்கையாளர்கள் நீண்ட நேரத்துக்கு மதுவருந்த வந்தபடியிருந்தனர். அதனால் கடையை மூடாமல் மூன்று மணி தாண்டிய பிறகே அவர் படுக்கச் சென்றார். வழக்கமாக கடைக்கு வருபவர்களைவிட கிளோடில்டு அர்மென்டாவும் சற்று முன்னதாகவே வந்துவிட்டிருந்தாள். ஏனென்றால் பிஷப் வருவதற்கு முன்பாக அவள் பால் விற்பனையை முடித்துக்கொள்ள எண்ணியிருந்தாள்.

விகாரியோ சகோதரர்கள் நான்கு மணிக்கு வந்தார்கள். அந்த நேரத்தில் உணவுப் பதார்த்தங்களை மட்டும்தான் விற்பது வழக்கம். ஆனால் கிளோடில்டு அர்மென்டா அவர்களுக்கு ஒரு பாட்டில் கரும்புச் சாராயம் விற்றாள். ஏனென்றால் அவர்களைப் பற்றி அவளுக்கு நல்ல அபிப்ராயம் இருந்தது. அதுமட்டுமின்றி அவளுக்கு அவர்கள் திருமண கேக் அனுப்பி வைத்திருந்ததற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக நடந்து கொள்ளவும் விரும்பினாள். பாட்டிலில் இருந்ததை இரண்டே மடக்கில் காலி செய்தனர். இருந்தும் அவர்கள் நிதானமாகவே இருந்தனர். "அவர்களுக்கே அது ஆச்சரியமாக இருந்தது." கிளோடில்டு அர்மென்டா என்னிடம் சொன்னாள். "விளக்கெரிக்க உதவும் எண்ணையைக் குடித்திருந்தால் கூட அவர்களது ரத்த அழுத்தம் ஏறியிருக்காது." பிறகு அவர்கள் தங்கள் கோட்டுகளைக் கழற்றி கவனமாக நாற்காலிகளின் முதுகுப்பக்கம் தொங்க விட்டனர். இன்னும் ஒரு பாட்டில் கரும்புச் சாராயம் கேட்டனர். வியர்வை காய்ந்து அவர்களது சட்டை அழுக்கடைந்திருந்தது. முகத்தில் தெரிந்த ஒருநாள் தாடி அவர்களுக்கு காட்டுமிராண்டிகளது தோற்றத்தைத் தந்திருந்தது. இம்முறை அவர்கள் மெதுவாக அமர்ந்து எதிரே நடைபாதையில் மேலாக அமைந்திருந்த பிளாசிடா லினேரோவின் வீட்டை உற்றுப் பார்த்தபடி மெதுவாகவே குடித்தனர். அவ்வீட்டின் ஜன்னல்கள் இருண்டிருந்தன. மாடி முகப்பில் தெரிந்த ஜன்னல் சான்டியாகோ நாஸாரின் படுக்கையறை ஜன்னல். அந்த ஜன்னலில் ஏதேனும் வெளிச்சத்தைப் பார்த்தீர்களா என கிளோடில்டு அர்மென்டாவைக் கேட்டான் பெட்ரோ விகாரியோ. அவள் இல்லையென்றாள். அந்தக் கேள்வி அவளுக்கு விசித்திரமானதாகப்பட்டது.

"அவனுக்கு ஏதாவது ஆகி விட்டதா?" அவள் கேட்டாள்.

"இல்லை." பெட்ரோ விகாரியோ சொன்னான். "அவனைக் கொல்வதற்காகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவ்வளவுதான்."

அது இயல்பான தொனியில் அமைந்த ஒரு பதிலாக இருந்ததனால் தன்

காதில் அது சரியாக விழுந்ததா என்ன அவளுக்கு ஞாபகமற்றுப்போனது. ஆனால் விலங்குகளைக் கொல்ல உதவும் இரண்டு கத்திகளை காகிதத்துணியில் சுற்றி அவர்கள் வைத்திருந்ததைப் பார்த்தாள்.

"இத்தனைக் காலையில் நீங்கள் அவனைக் கொல்லப் போவது எதற்காகவென்று அவனுக்குத் தெரியுமா?"

"தெரியும்," பெட்ரோ விகாரியோ சொன்னான்.

அவர்களை ஆராயும் விதமாகப் பார்த்தாள் க்ளோடில்டி அர்மென்டா. அந்த இரட்டையரில் ஒவ்வொருவரையும் தனித்தனியாக அடையாளம் காணும் அளவுக்கு அவர்களை அவள் நன்றாக அறிந்திருந்தாள். அதுவும் பெட்ரோ விகாரியோ ராணுவத்திலிருந்து திரும்பிய பிறகு அவளால் அவர்களை நன்றாகப் பிரித்தறிய முடிந்தது. "அவர்களிருவரும் இரண்டு குழந்தைகளைப் போல் தோன்றினார்கள்," அவள் என்னிடம் சொன்னாள். அது அவளைக் கலவரப்படுத்தியது, ஏனென்றால் குழந்தைகளுக்குத்தான் எதையும் செய்யக் கூடிய துணிவு இருக்கும். கூஜா நிறைய பாலை நிரப்பிவிட்டுத் தன் கணவனை எழுப்பி நடந்தவற்றைச் சொல்ல விரைந்தாள். டான் ரொகலியோ டி லா ஃப்லோர் அரைத்தூக்கத்திலிருந்தபடியே அவள் சொல்வதைக் கேட்டார். "அசட்டுத்தனமாகப் பேசாதே," அவர் அவளிடம் சொன்னார். "அவர்களிருவரும் யாரையும் கொல்ல மாட்டார்கள். அதுவும் ஒரு பணக்காரனை அவர்கள் நிச்சயம் கொல்ல மாட்டார்கள்"

க்ளோடில்டி அர்மென்டா கடைக்குத் திரும்பிய போது இரட்டையர்கள் இருவரும் மேயர் வீட்டுக்குப் பால் வாங்க வந்திருந்த போலீஸ்காரன் லியான்ட்ரோ போர்னாயுடன் பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் பேசிக்கொண்டிருந்தது எதுவும் அவள் காதில் விழவில்லை. ஆனால் அவர்கள் தங்களது செயலைத் திட்டம் பற்றி அவனிடம் சொல்லியிருக்க வேண்டுமென்று தோன்றியது. ஏனென்றால் போகும்போது அந்த போலீஸ்காரன் அவர்களது கத்திகளை ஒரு பார்வையாகப் பார்த்துவிட்டுப் போனான்.

கர்னல் லாஸரோ அபோந்தி நான்கு மணிக்கு சற்று முன்புதான் எழுந்திருந்தார். விகாரியோ சகோதரர்கள் சான்டியாகோ நாஸரைக் கொல்லப்போவது பற்றி போலீஸ்காரன் லியான்ட்ரோ போர்னாய் சொன்னபோது அவர் முகச்சவரம் செய்து முடித்திருந்தார். முந்தின இரவுதான் நண்பர்கள் மத்தியில் ஏற்பட்ட சண்டைகளை அழகாகத் தீர்த்து வைத்திருந்தார். அடுத்ததை ஏற்றுக்கொள்ள அவர் அவசரம் காட்டவில்லை. அமைதியாக உடை உடுத்திக் கொண்டார். மிகச் சரியாக அமையும்வரை தன் கழுத்துத்துணிப் பட்டையை பலமுறை மாற்றி மாற்றிக் கட்டினார். பிஷப்பை வரவேற்கவேண்டி மரியாளின் சேனைக்குரிய துணியை கழுத்தைச் சுற்றி அணிந்துகொண்டார். ஏராளமான வெங்காயம் சேர்த்த ஈரல் கறியை அவர் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது பயார்டோ சான் ரோமான் ஏஞ்செலா விகாரியோவை அவளது பிறந்தவீட்டுக்கு கொண்டுவந்து விட்டுவிட்டதை பரபரப்புடன் சொன்னாள் அவர் மனைவி. ஆனால் அது

குறித்து அவர் வியப்பு ஏதும் கொள்ளவில்லை.

"அடக் கடவுளே," அவர் நையாண்டி செய்தார், "இதுபற்றி பிஷப் என்ன நினைப்பாரோ"

இருப்பினும் காலை ஆகாரத்தை முடிக்கும் முன்பாக, வீட்டுப்பணிகளைச் செய்யும் போலீஸ்காரன் சொன்ன விஷயம் அவர் நினைவுக்கு வந்தது. அதனுடன் அவர் மனைவி சொன்ன விஷயத்தையும் சேர்த்துப் பார்த்தார். இரண்டையும் சேர்த்துப் பார்க்கையில் புதிர் விளையாட்டில் ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போகும் இரண்டு துண்டுகளைப்போல அவையிரண்டும் கச்சிதமாக இணைந்ததைக்கண்டார். பிஷப் வருகையை ஒட்டி களைகட்ட ஆரம்பித்திருந்த வீடுகளைத்தாண்டி, புதிய படகுத்துறைக்குச் செல்லும் தெருவழியாகச் சென்று சதுக்கத்தை அடைந்தார். "நன்றாக நினைவிருக்கிறது. அப்போது மணி ஐந்து இருக்கும், திடீரென மழைபெய்ய ஆரம்பித்தது" கர்னல் லாஸரோ அபோந்தி என்னிடம் சொன்னார். மூன்று பேர் வழியில் அவரை தடுத்து நிறுத்தி விகாரியோ சகோதரர்கள் சண்டியாகோ நாஸரைக் கொலைசெய்யக் காத்திருப்பதை ரகசியமாக அவரிடம் தெரிவித்தார்கள். அவர்களில் ஒருவர் மட்டுமே சம்பவம் நடக்கப் போகும் இடத்தையும் சொன்னார்.

அவர்களை அவர் க்ளோடில்டி அர்மென்ட்டாவின் கடையில் பார்த்தார். "ஏதோ இரண்டு அலட்டல் பேர்வழிகளைப் போலத்தான் அவர்கள் தோன்றினார்கள்," தன் பார்வைக்குப் பட்டவகையில் அவர் சொன்னார், "ஏனென்றால் நான் நினைத்திருந்த அளவுக்கு அவர்கள் குடித்திருக்கவில்லை." அவர்கள் என்ன செய்யவிருக்கிறார்கள் என்பதைப் பற்றி அவர்களிடம் அவர் விசாரிக்கவுமில்லை. அவர்களிடமிருந்த கத்திகளை வாங்கிக்கொண்டு போய்த் தூங்குமாறு அவர்களிடம் சொன்னார். தன் மனைவி பயார்டோ சான் ரோமான் பற்றி சொன்ன விஷயத்தை எப்படிச் சாதாரணமாக எடுத்துக் கொண்டாரோ அதுபோலவே இந்த விஷயத்தையும் எடுத்துக்கொண்டார்.

"கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்," அவர் அவர்களிடம் சொன்னார்." இந்தக் கோலத்தில் உங்களைப் பார்த்தால் பிஷப் என்ன சொல்வாரென்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்."

அவர்கள் அங்கிருந்து சென்றனர். மேயரின் இந்த மெத்தனப் போக்கு க்ளோடில்டி அர்மென்ட்டாவுக்கு ஏமாற்றம் தருவதாக இருந்தது. உண்மையைச் சொல்லும் வரை விசாரணை செய்ய அவர்களை அவர் கைது செய்திருக்க வேண்டுமென்று எண்ணினாள். எதற்கும் பயப்படத் தேவையில்லை என்பது போல கர்னல் அபோந்தி அவளிடம் கத்திகளைக் காட்டினார்.

"இப்போது கொல்வதற்கான ஆயுதம் எதுவும் அவர்களிடம் இல்லை," அவர் சொன்னார், "அதுமட்டுமில்லை," க்ளோடில்டி அர்மென்ட்டா சொன்னாள், "அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் அபாயகரமான ஒரு கடமையிலிருந்து அவர்களை விடுவித்தாக வேண்டும்."

அவள் அதைப் புரிந்து கொண்டுவிட்டாள். தாங்கள் மேற்கொண்ட

காரியத்தை செய்து முடிக்கவேண்டுமென்ற உத்வேகத்தை விட யாராவது தங்களை தடுத்து நிறுத்த முன்வருவார்களா என்ற எண்ணமே அவர்களிடம் மேலோங்கியிருந்தது. ஆனால் கர்னல் அபோந்தி மனதில் எந்த உறுத்தலுமின்றி நிம்மதியாக இருந்தார்.

"சந்தேகத்தின் பேரில் யாரும் கைது செய்யப்படுவது வழக்கமில்லை," அவர் சொன்னார், "இப்போது சாண்ட்டியாகோ நாஸரை எச்சரிக்க வேண்டும். அவ்வளவே"

கர்னல் அபோந்தியின் கொழுகொழு உருவம் அவளுள் ஒருவித பரிதாப உணர்வை ஏற்படுத்தியிருந்ததை க்ளோடில்டி அர்மென்ட்டா நினைவு கூர்ந்தாள். தபால் மூலம் கற்ற ஆவிகளோடு பேசும் கலையை நடைமுறையில் செய்து பார்த்துவந்த காரணத்தால் சற்றே கர்வமுடையவராகக் காணப்பட்டாலும் அவரொரு மகிழ்ச்சி நிரம்பிய ஆளாகவே எனக்குத் தோன்றினார். அந்தத் திங்கட்கிழமை அவர் நடந்து கொண்டவிதம் அவரது முட்டாள்தனத்தை உறுதி செய்வதாக அமைந்தது. உண்மை என்னவென்றால் படகுத்துறையில் சாண்ட்டியாகோ நாஸரைப் பார்க்கும் வரை அந்தவிஷயத்தை அவர் சுத்தமாக மறந்தே போயிருந்தார். அவனை அங்கு பார்த்ததும் தான் மேற்கொண்ட முடிவு சரிதான் என தன்னையே மெச்சிக் கொண்டார்.

க்ளோடில்டி அர்மென்ட்டாவின் கடைக்கு பால் வாங்க வந்த ஒரு டஜனுக்கும் அதிகமானவர்களிடம் தாங்கள் சாண்ட்டியாகோ நாஸரைக் கொல்லப் போவது பற்றி சொல்லியிருந்தனர் விகாரியோ சகோதரர்கள். இதனால் ஆறுமணிக்குள்ளாகவே விஷயம் எல்லா இடத்துக்கும் பரவிவிட்டிருந்தது. தெருவுக்கு அந்தப் பக்கம் இருக்கும் பிளாசிடா லினேரோவின் வீட்டுக்கு அந்தச் செய்தி சென்றடையாமல் இருக்க வாய்ப்பேயில்லையென க்ளோடில்டி அர்மென்ட்டா நினைத்தாள். அவன் படுக்கையறையில் விளக்கு எரியாததால் சாண்ட்டியாகோ நாஸர் அங்கு இருப்பானென்று அவளுக்குத் தோன்றவில்லை. தான் கண்டவரிடமெல்லாம் சாண்ட்டியாகோ நாஸரைப் பார்த்தால் எச்சரிக்கும்படி அவள் கேட்டுக்கொண்டாள். கன்னிகாஸ்திரீகளுக்குப் பால் வாங்க வந்த பயிற்சி கன்னிகாஸ்திரீ மூலமாக இதுபற்றி அமடோர் பாதிரியாருக்கும் கூட சொல்லியனுப்பினாள். நான்கு மணிக்குப் பிறகு பிளாசிடா லினேரோவின் வீட்டு சமையலறையில் விளக்குகள் எரிய ஆரம்பித்திருந்ததைக் கண்டதும் தினமும் கொஞ்சம் பால் கேட்டு வரும் பிச்சைக்காரி மூலம் கடைசியாக விக்டோரியா கஸ்மானுக்கு அந்த அவசரச் செய்தியையும் அனுப்பினாள். சப்தமெழுப்பியபடி பிஷப்பின் படகு வந்தபோது எல்லோரும் அவரை வரவேற்க கூடியிருந்தனர். விகாரியோ சகோதரர்கள் சாண்ட்டியாகோ நாஸரைக் கொல்ல இருந்ததை அறியாதவர்கள் வெகுசிலர்தான். கிட்டத்தட்ட அனைவருமே அதை அறிந்திருந்தனர். சிறுவிவரமும் குறையாமல் கொலைக்கான காரணத்தைக் கூட அவர்கள் அறிந்திருந்தனர்.

விகாரியோ சகோரர்கள் செய்தித்தாள்களில் சுற்றி மறுபடியும் இரண்டு கத்திகளைக் கொண்டு வந்தபோது க்ளோடில்டி அர்மென்ட்டா பால்

விற்பனையாகிய முடிந்திருக்கவில்லை. அந்தக் கத்திகளுள் ஒன்று பன்னிரண்டு அங்குல நீளமும் மூன்றங்குல அகலமும் கொண்ட திடமான ஆனால் துருவேறிய, கூறுபோட உதவும் கத்தி. போர் காரணமாக ஜெர்மன் கத்திகளின் விற்பனை தடைபட்டிருந்தபோது இழைப்பு உளி ஒன்றின் உலோக பாகத்திலிருந்து அதைத் தயார் செய்திருந்தான் பெட்ரோ விகாரியோ. இன்னொரு கத்தி குட்டையானது. ஆனால் அகலம் அதிகமுடையது. வளைவானது. விசாரணை அதிகாரி தனது அறிக்கையில் இந்தக் கத்திகளைப் படமாக வரைந்திருந்தார். அவற்றை வார்த்தைகளைக் கொண்டு விளக்குவதில் அவருக்குச் சிரமம் இருந்திருக்க வேண்டும். பார்க்க சிறிய கொடுவாளைப் போன்று இருக்கிறது என்று மட்டுமே அவர் அந்த இரண்டாவது கத்தியைப் பற்றி எழுதியிருந்தார். இந்தக் கத்திகளைக் கொண்டுதான் குற்றம் நிகழ்த்தப்பட்டது. இரண்டு கத்திகளுமே நீண்டகாலம் பயன்படுத்தப்பட்ட, மழுங்கிப்போன கத்திகள்.

என்ன நடந்தது என்று ஃபாஸ்டினோ சான்ட்டோஸால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. "அவர்கள் மீண்டும் கத்திகளைத் தீட்ட வந்தார்கள்", அவன் என்னிடம் சொன்னான், "அங்கிருந்தவர்கள் காதில் விழும்படியாக சாண்ட்டியாகோ நாஸரின் குடலை உருவப்போவதாக சத்தம் போட்டுச் சொன்னார்கள், அவர்கள் ஏதோ விளையாட்டு பண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என நினைத்தேன். அதோடு அந்தக் கத்திகளும் அவர்கள் முன்பு கொண்டு வந்த கத்திகள்தான் என நினைத்து அவற்றை கவனிக்காமல் விட்டுவிட்டேன்." அவர்கள் திரும்ப வந்தபோது முன்பு காணப்பட்ட உறுதி அவர்களிடம் இல்லாததை உணர்ந்தாள் க்ளோடில்டி அர்மென்ட்டா. இம்முறை அவர்களிடையே முதல் தடவையாக கருத்து வேறுபாடு ஏற்பட்டிருந்தது. வெளியில் காணப்படுவதைக் காட்டிலும் உள்ளுக்குள் அதிக வேறுபாடு உடையவர்களாக இருந்தது மட்டுமல்ல கடினமான அவசர நிலைமைகளில் அவர்கள் செயல்படும் விதமும் வேறுபட்டதாகவே இருந்தது. அவர்களது நண்பர்களான நாங்கள் இலக்கணப் பள்ளியிலிருந்தே இதை கவனித்து வந்திருக்கிறோம். தன் சகோதரனைக் காட்டிலும் ஆறு நிமிடங்கள் மூத்தவனான பாப்லோ விகாரியோ தனது குமரப்பருவம் வரையிலும் இருவரில் அதிகம் புத்திசாலித்தனமும் திடசித்தமும் கொண்டவனாக இருந்தான். என்னைப் பொருத்த அளவில் பெட்ரோ அதிக உணர்ச்சிவசப்படுபவனும் அதனாலேயே ஒழுங்குக்குக் கட்டுப்படுகிறவனுமாக இருந்தான். இருபது வயதானபோது இருவரும் ஒன்றாக ராணுவத்தில் சேர முன்வந்தனர். குடும்பத்தை கவனித்துக்கொள்ளவென்று பாப்லோ விகாரியோவை ராணுவத்தில் சேரவிடாமல் வீட்டிலேயே இருக்கச்செய்து விட்டனர். பெட்ரோ விகாரியோ பதினோரு மாதங்கள் போலீஸ் ரோந்துப் படையில் பணியாற்றினான். மரணம் குறித்த அச்ச உணர்வினால் பீடிக்கப்பட்ட அவனது ராணுவப் பழக்கத்தின் காரணமாக அடுத்தவரைத் தன் கட்டளைக்குப் பணிய வைப்பது அவன் இயல்பாயிருந்தது. அதன் காரணமாகவே அவன் தன் அண்ணனுக்கும் சேர்த்து தானே முடிவெடுத்தான். அவன் ராணுவத்திலிருந்து திரும்பியபோது கூடவே

ரணுவை விரைவுக்கு வரும் நோய் நிலையும் கொண்டிருந்தான். மிகக் கடுமையான ரணுவே மருந்துகளாலேயே குணமாகாத அது டாக்டர் டயானிஸியோ இகுவரானது ஆர்செனிக் ஊசிகளுக்கும் பெர்மாங்கனேட் மெல்லிக்களுக்குக்கூட அசைந்து கொடுக்கவில்லை. கடைசியில் சிறுநீரால்தான் அதனை குணப்படுத்த முடிந்தது. ரணுவத்துக்கே உரிய இறுக்க மனதுடனும் யாராவது அதைப் பார்க்க விரும்பினால் உடன் தன் சட்டையைத் தூக்கி வயிற்றின் இடதுபுறத்திலுள்ள, சிறு நூல்சுழி ஒன்று வெளித்தெரிய காணப்படும் துப்பாக்கி குண்டு துளைத்த காயத்தைக் காட்டும் தம்பியாகவும் பெட்ரோ விகாரியோ திரும்பி வந்த பிறகு திடீரென பாப்லோ விகாரியோ எதிலும் அவன் பேச்சைக் கேட்டே நடப்பதை அவன் நண்பர்களான நாங்கள் உணர்ந்துகொண்டோம். நெருக்கமாய் அணிந்து கொண்ட போர்ப்பதக்கம் போல தன் தம்பி கருதிய அந்த மேகநோய் குறித்தும் பாப்லோ விகாரியோ பெருமைப்பட ஆரம்பித்தான்.

அவனே ஒத்துக்கொண்டபடி சாண்டியாகோ நாஸரைக் கொல்ல வேண்டுமென முடிவெடுத்தது பெட்ரோ விகாரியோதான். ஆரம்பத்தில் பாப்லோ விகாரியோவும் அவன் முடிவுக்குக் கட்டுப்பட்டான். ஆனால் மேயர் வந்து அவர்களிடமிருந்த கத்திகளை எடுத்துக்கொண்டபோது தனது கடமை முடிந்தது என நிம்மதியடைந்தவனும் அவன்தான். அடுத்து செய்யவேண்டியது பற்றி முடிவெடுக்கும் பொறுப்பையும் அவனே ஏற்றுக் கொண்டான். விசாரணை அதிகாரியிடம் தனித்தனியே அளித்த வாக்குமூலங்களில் தங்களுக்குள் ஏற்பட்ட அந்த கருத்து வேறுபாட்டைப் பற்றி இருவருமே குறிப்பிடவில்லை. ஆனால் ஒரு இறுதி முடிவெடுத்து அவனது தன் சகோதரனை கொலைசெய்வது பற்றி சொன்னதும் அத்தனை சுலபமாக இருக்கவில்லையென்று பலமுறை என்னிடம் கூறியிருக்கிறான் பாப்லோ விகாரியோ. அது வெறும் பிரமையாகக் கூட இருந்திருக்கலாம். வெளியே புளியமரங்களினடியில் தன் சகோதரன் வேதனையோடு சொட்டு சொட்டாக சிறுநீர்கழிக்க முயன்று கொண்டிருந்தபோது வேறு இரண்டு கத்திகளைக் கொண்டுவர பன்றிக் குடிலுக்குள் தனியாகச் சென்றான் பாப்லோ விகாரியோ. "அந்த வேதனை எப்படிப்பட்டதென என் சகோதரனுக்கு தெரியவில்லை," அவனுடனான எனது ஒரே சந்திப்பின்போது சொன்னான் பெட்ரோ விகாரியோ. "பொடித்த கண்ணாடியை சிறுநீராகக் கழிப்பது போலிருந்தது." பாப்லோ விகாரியோ கத்திகளோடு திரும்பி வந்தபோது பெட்ரோ விகாரியோ மரத்தைக் கட்டிப்பிடித்தபடி நின்றிருந்தான். "வலியினால் அவன் உடலெங்கும் வியர்த்துக் குளிர்ந்திருந்தது," அவன் என்னிடம் சொன்னான், "அவன் யாரையும் கொல்லும் நிலைமையில் இல்லாததால் என்னைத் தனியே சென்று வேலையை முடிக்குமாறு கேட்டுக் கொண்டான்." திருமண விருந்து பரிமாறுமென்று மரங்களின் கீழ் தற்காலிகமாக அமைக்கப்பட்ட மேஜை ஒன்றின்மீது அமர்ந்து தன் பேண்ட்டை முட்டிவரை இறக்கிவிட்டுக் கொண்டான். "தன் குறியைச் சுற்றியிருந்த மெல்லிய துணியை தொடர்ந்து மாற்றியபடியே அரைமணி நேரத்துக்கு அமர்ந்திருந்தான்," பாப்லோ விகாரியோ என்னிடம் சொன்னான். உண்மையில் பார்க்கப் போனால் அவன் பத்து நிமிடங்கள் கூட எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால்

தன் சகோதரனது செய்கை புரிந்து கொள்ள முடியாததாகவும் விசித்திரமானதாகவும் பாப்லோ விகாரியோவுக்குத் தோன்றியது. விடியற்காலை வரைக்கும் எப்படியாவது நேரத்தைக் கடத்த வேண்டுமென்று தன் சகோதரன் மேற்கொண்டிருக்கும் தந்திரம் அது என்று நினைத்தான். எனவே வலுக்கட்டாயமாக அவன் கையில் கத்தியைத் திணித்து தங்கள் சகோதரி இழந்த மானத்தைத் தேடி அவனை இழுத்துக்கொண்டு புறப்பட்டான்.

"வேறு வழியே இல்லை," அவன் தன் சகோதரனிடம் சொன்னான், "கிட்டத்தட்ட நாம் திட்டமிட்டது நடந்து முடிந்துவிட்டது போலத்தான்."

வாசலிலிருந்த நாய்களின் குறைப்புச் சத்தம் பின்தொடர இம்முறை எதைக்கொண்டும் கத்திகளைச் சுற்றாமல் வெளிப்படையாக கையில் பிடித்தபடி பன்றிக் குடிலின் கதவு வழியே வெளியேறினர். அப்போது லேசாக விடிய ஆரம்பித்திருந்தது.

"அப்போது மழை ஏதும் பெய்யவில்லை," பாப்லோ விகாரியோ நினைவு கூர்ந்தான். "மழைக்கு நேர் எதிரான காலநிலைதான் நிலவியது," பெட்ரோ விகாரியோ சொன்னான், "கடல்காற்று வீசிக்கொண்டிருந்தது. நட்சத்திரங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம் போலிருந்தது." அதற்குள் செய்தி எல்லாருக்கும் பரவிவிட்டிருந்தது. சரியாக அவர்கள் தன்வீட்டைக் கடந்து போகும்போது கதவைத் திறந்த ஹார்டென்சியா பாடெ அவர்களைப் பார்த்தாள். சாண்ட்டியாகோ நாஸருக்காக முதன் முதலில் அழுதவள் அவள்தான். "அவனை அவர்கள் கொன்று விட்டதாகவே நினைத்தேன்," அவள் என்னிடம் சொன்னாள், "ஏனென்றால் தெருவிளக்கு வெளிச்சத்தில் அவர்களிடமிருந்த கத்திகளைப் பார்த்தேன். அவற்றிலிருந்து ரத்தம் சொட்டிக் கொண்டிருப்பதைப் போல் தோன்றியது." கலைத்துப்போட்டது போன்று காணப்பட்ட அத்தெருவில் திறந்திருந்த சில வீடுகளில் பாப்லோ விகாரியோ மணந்துகொள்ளவிருந்த புருடென்ஸியா கோடிஸின் வீடும் ஒன்று. அத்தெரு வழியாகப் போகும் போதெல்லாம் அதுவும் குறிப்பாக வெள்ளிக்கிழமைகளில் கடைவீதிக்குப் போகும்போது அவ்வீட்டினுள் சென்று அன்றைய தினத்தின் முதல் கோப்பை காப்பியை அவர்கள் அருந்துவது வழக்கம். நாய்கள் சூழுமியிருந்த வாசற்கதவை தள்ளித் திறந்தனர். விடியற்காலையின் மங்கிய வெளிச்சத்தில் நாய்கள் அவர்களை அடையாளம் கண்டு கொண்டன. அவர்கள் சமையலறையிலிருந்த புருடென்ஸியா கோடிஸின் அம்மாவை நோக்கிக் குரல் கொடுத்தனர். காப்பி இன்னும் தயாராகியிருக்கவில்லை.

"நாங்கள் பிறகு வருகிறோம்" பாப்லோ விகாரியோ சொன்னான், "இப்போது நாங்கள் அவசரமாகப் போயாக வேண்டும்."

"எனக்குப் புரிகிறது பிள்ளைகளா," அவள் சொன்னாள், "பிஷப்பின் ஆசீர்வாதம் யாருக்காகவும் காத்திருப்பதில்லைதான்."

ஆனால் எப்படியோ அவர்கள் காப்பிக்காக காத்திருந்தார்கள். இப்போது பாப்லோ விகாரியோ வேண்டுமென்றே நேரத்தைக் கடத்துவதாக பெட்ரோ விகாரியோ நினைத்தான். அவர்கள் காப்பி அருந்திக் கொண்டிருந்தபோது

பருவப் பூர்ப்பில் இருந்த புருடென்ஸியா கோடிஸ் அடுப்பு அனலைத் தூண்ட கையில் செய்தித் தாள்களுடன் வந்தாள். "அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பது எனக்குத் தெரிந்திருந்தது," அவள் என்னிடம் சொன்னாள், "அவர்கள் செய்ய இருந்தது சரிதான். ஒரு உண்மையான ஆண் மகன் செய்யவேண்டியதான அந்த காரியத்தை அவர் செய்யத் தவறியிருந்தால் அவரை நான் திருமணம் செய்துகொண்டிருக்கவே மாட்டேன்." சமையலறையிலிருந்து வெளியேறும் முன் அவளிடமிருந்த செய்தித்தாளிலிருந்து இரண்டு தாள்களை எடுத்துக்கொண்ட பாப்லோ விகாரியோ கத்திகளை வைத்துச் சுற்றிக்கொள்ளவென ஒன்றைத் தன் சகோதரனிடம் கொடுத்தான். மற்றதை தான் வைத்துக் கொண்டான். சமையலறையில் இருந்தபடியே வாசற்கதவு வழியாக அவர்கள் வெளியேறும் வரை பார்த்துக் கொண்டிருந்தாள் புருடென்ஸியா கோடிஸ். பாப்லோ விகாரியோ சிறையிலிருந்து திரும்பி வந்து அவளைத் திருமணம் செய்துகொள்ளும் வரை மூன்று ஆண்டுக் காலம் அவள் மனம் தளராமல் காத்திருந்தாள்.

"உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்," அவள் அவர்களிடம் சொன்னாள்.

அவர்கள் திரும்பவும் வந்ததைப் பார்த்தபோது முன்பிருந்த உத்வேகம் அவர்களிடம் இல்லையென்று க்ளோடில்டி அர்மென்ட்டா நினைத்தது ஓரளவு சரிதான். அவர்களுக்கு அவள் அதிக போதை தரும் ராட்கட் ரம் ஒரு பாட்டில் வழங்கினாள். போதை தலைக்கேறி அவர்கள் நினைவிழந்து கிடப்பார்கள் என அவள் நினைத்தாள். "அன்று," அவள் என்னிடம் சொன்னாள், "இந்த உலகில் பெண்கள்தான் எத்தனைத் தனியர்களாய் இருக்கிறோம் என்பதை உணர்ந்தேன்." பெட்ரோ விகாரியோ அவளிடம் அவள் கணவனது முகச்சவர உபகரணங்களைத் தருமாறு கேட்டான். பிரஷ், சவரச் சோப்பு, சிறு கண்ணாடி இவற்றுடன் புதிய பிளேடுகளுடன் கூடிய ஸேப்டி ரேஸரையும் கொண்டு வந்து தந்தாள். ஆனால் பெட்ரோ விகாரியோ தன்னிடமிருந்த இறைச்சி வெட்டும் கத்தியைக் கொண்டே சவரம் செய்து கொண்டான். ஆண் என்ற கர்வத்தின் உச்சபட்ச வெளிப்பாடு அது என்று நினைத்தாள் க்ளோடில்டி அர்மென்ட்டா. "அவன், சினிமாவில் வரும் கொலைகாரனைப் போன்று தோன்றினான்," அவள் என்னிடம் சொன்னாள். ஆனால் அவன் ராணுவத்தில் வெறும் பிளேடை கையினால் கொண்டு சவரம் செய்து பழக்கப்பட்டிருந்ததனால் வேறெந்த வகையிலும் தன்னால் சவரம் செய்து கொள்ள முடியாமல் இருந்ததைப் பிறகு என்னிடம் தெரிவித்தான். ஆனால் பாப்லோ விகாரியோவோ டான் ரோகிலியோ டி லா ஃப்ளோரின் ஸேப்டி ரேஸரைக் கொண்டு அமைதியாகச் சவரம் செய்து முடித்தான். வழக்கத்துக்கு முன்பாகவே எழுந்துவிட்டவர்களது போன்ற தூக்கம் மாறாத முகத்தோற்றம் கொண்டவர்களாய், தெருவுக்கு எதிர்ப்புறமிருந்த வீட்டின் இருண்ட ஜன்னலைப் பார்த்தபடியே மெதுவாகவும் அமைதியாகவும் ராட்கட் ரம்மை அருந்தினர். கடைக்கு வரும் சாக்கில் அவர்கள் சாண்ட்டியாகோ நாஸரைக் கொல்லப் போவது உண்மைதானா என்பதை உறுதி செய்துகொள்ள வந்தவர்கள் கடையில் இல்லாத பொருட்களைக் கேட்டபடி அவர்கள் இருவரையும் நோட்டம்

விட்டுக்கொண்டிருந்தனர். விகாரியோ சகோதரர்கள் பார்த்துக்கொண்டிருந்த வரை ஜன்னலில் விளக்கு எரியவில்லை. மணிநான்கு இருபதுக்கு வீட்டுக்கு வந்த சாண்ட்டியாகோ நாஸர் விளக்கு எதையும் போடவில்லை, காரணம் அவன் படுக்கையறைக்குச் செல்லும் படிக்கட்டு வழியில் இரவு முழுவதும் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. உடைகளைக் களையாமலே இருட்டில் கட்டிலைத் தேடிப்போய் அதில் தொப்பென விழுந்தான். உறங்கி எழ அவனுக்கு ஒரு மணி நேரம்தான் இருந்தது. பிஷப்பை வரவேற்க அவன் செல்வதற்காக அவனை எழுப்பவந்த விக்டோரியா கஸ்மான் அவன் உடை மாற்றாமல் படுத்திருப்பதைக் கண்டாள். மூன்று மணிவரை நாங்கள் மரியா அலெஜான்ட்ரினா செர்வான்டிஸின் வீட்டில் ஒன்றாகத்தான் இருந்தோம். மரியா அலெஜான்ட்ரினா வாத்தியக்காரர்களை அனுப்பிவிட்டு, அங்கிருந்த அழகான, கருப்பு வெள்ளை கலப்பின முலாட்டோ நடனப் பெண்கள் சென்று உறங்க வேண்டி நடனமாடுமிடத்தின் விளக்குகளையும் அணைத்தாள். அப்பெண்களுக்கு மூன்று நாட்களாக ஓயாத வேலை. முதலில் திருமணத்துக்கு வந்திருந்த முக்கியஸ்தர்களது ரகசியத் தேவைகளைப் பூர்த்தி செய்தனர். பிறகு திருமணக் கொண்டாட்டத்தினாலும் முழுமையான மகிழ்ச்சியை அடையாத எங்களுக்காக கதவுகளை அகலத் திறந்தனர். அவள் உறங்கச் செல்வதென்பது அவளது மரணத்தின்போதுதான் நடக்கும் என நாங்கள் குறிப்பிடும் மரியா அலெஜான்ட்ரினா நான் சந்தித்த பெண்களிலேயே மிகவும் அழகானவள். படுக்கையில் தேவையறிந்து நடந்துகொள்வதில் அவளுக்கு ஈடாக யாரும் இருக்க முடியாது. அதே நேரம் அவள் மிகுந்த கண்டிப்பும் கொண்டவள். அவள் பிறந்ததும் வளர்ந்ததும் இங்குதான். திறந்த கதவுகளையும், நிறைய அறைகளையும், பாரமரிபோவின் கடைத்தெருக்களில் வாங்கிவந்த சீன லாந்தர் விளக்குகளில் அலங்கரிக்கப்பட்ட நடனமாடுவதற்கான மிகப்பெரிய முற்றத்தையும் கொண்ட வீட்டில் அவள் வசித்து வந்தாள். என் தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் கன்னி கழித்து வைத்தவள் அவள். நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டியதைக் காட்டிலும் எங்களுக்கு அவள் அதிகம் கற்பித்தாள். எல்லாவற்றுக்கும் மேலாக வாழ்வில், தனிமையான ஒரு படுக்கையைக் காட்டிலும் வருத்தம் தரக்கூடிய விஷயம் வேறெதுவும் இருக்கமுடியாது என்பதையும் புரியவைத்தவள் அவள்தான். அவளை முதல் தடவை பார்த்தபோது சாண்ட்டியாகோ நாஸருக்கு ஐம்புலனும் ஒடுங்கிப்போனது. நான் அவனை எச்சரித்தேன். "சண்டையில் நாட்டமுள்ள கொக்கைத் துரத்தும் ஃபால்கன் பறவை வாழ்நாளெல்லாம் துக்கப்பட வேண்டியிருக்கும்." அவன் என் பேச்சைக் கேட்கவில்லை. அவளிடம் அவன் மயங்கிப்போனான். கையில் சவுக்குடன் வந்து அவளோடு படுக்கையில் கிடந்த அவனை விரட்டிக்கொண்டு போய் டிவைன் ஃபேஸ் பண்ணையில் ஒரு வருடத்துக்கும் மேலாக அவன் தந்தை இப்ராஹிம் நாஸர் அடைத்துவைக்கும் வரை அந்தப் பதினைந்து வயதிலேயே அவள் மீது பைத்தியமாகி அவளே கதியென்று கிடந்தான். அதன்பிறகும் அவர்களிடையே ஒருவிதமான உறவு நீடித்தது. ஆனால் அது காதல் இல்லை. அவன் மீது அவள் மிகுந்த மதிப்பு வைத்திருந்தாள்.

அவனெதிரில் அவள் யாருடனும் படுக்கைக்குச் செல்லமாட்டாள். என் பள்ளி வாழ்வின் கடைசி கோடை விடுமுறைக் காலங்களின்போது தனக்கு சோர்வாக இருக்கிறதென்று சொல்லி சீக்கிரம் எங்களை அனுப்பிவிடுவாள் மரியா அலெஜான்ட்ரினா. ஆனால் நான் மட்டும் ரகசியமாக வருவதற்கென்று கூடத்தில் விளக்கெரிய கதவைத் தாழிடாமலே வைத்திருப்பாள்.

மாறுவேடங்கள் போட்டுவிடுவதில் சாண்ட்டியாகோ நாஸருக்கு அபாரத் திறமை இருந்தது. அவனுக்குப் பிடித்தமான விளையாட்டு எதுவென்றால் முலாட்டோ பெண்களுக்கு மாறுவேடம் போட்டு விடுவதுதான். ஒருவருக்கு மாறுவேடம் போட்டுவிட அடுத்தவரது ஆடை ஆபரணங்களை தெரியாமல் எடுத்து வந்து விடுவான். அவர்களுக்குத் தங்களையே அடையாளம் தெரியாமல்போய் தாங்கள் வேறுயாரோ என்ற எண்ணம் ஏற்படுமளவுக்கு அவனது மாறுவேடத்திறமை இருக்கும். ஒருமுறை தன்னைப் போலவே அச்சு அசலாக இருந்த வேறொருத்தியைக் கண்டு திகைத்துப் போனாள் ஒரு முலாட்டோ பெண். "கண்ணாடியிலிருந்து என் பிம்பம் உயிர்பெற்று வந்தது போலிருந்தது," என்றாள் அவள். ஆனால் அன்று இரவு அலெஜான்ட்ரினா செர்வாண்டிஸ் சாண்ட்டியாகோ நாஸர், கடைசிதடவையாக, மாறுவேடம் போட்டுவிடும் விளையாட்டை விளையாட அனுமதிக்கவில்லை. அதற்கு அவள் சொன்ன காரணங்கள் அவ்வளவு நம்பும்படியாக இல்லை. அவளது பொய்ப் பேச்சினால் அவன் மனம் கசந்தான். அந்தக் கசப்பு அவன் விதியையே மாற்றிவிட்டது. மாறுவேட விளையாட்டு இல்லாததால் நாங்கள் வாத்தியக் கோஷ்டியை அழைத்துக்கொண்டு ஒரு சுற்று "செரனேட்" பாடல்கள் பாடிவிட்டுவரக் கிளம்பினோம். விகாரியோ சகோதரர்கள் சாண்ட்டியாகோ நாஸரைக் கொல்லக் காத்திருந்தபோது நாங்கள் எங்கள் பாட்டுக்கு திருமணக் கொண்டாட்டத்தை தொடர்ந்து கொண்டிருந்தோம். சுமார் நான்கு மணி அளவில் மனைவியை இழந்தவரான க்சியஸின் குன்று மீதிருந்த வீட்டுக்குச் சென்று அங்கிருந்த புதுமணத் தம்பதிகளுக்காகப் பாடலாம் என்ற எண்ணத்தை சாண்ட்டியாகோ நாஸர்தான் வெளியிட்டான்.

ஜன்னல்களின் அருகே சென்று பாடியதோடு இல்லாமல் தோட்டத்துக்குச் சென்று வாணங்கள் விட்டு பட்டாசுகளும் வெடித்தோம். இருந்தும் அந்தப் பண்ணைவீட்டுக்குள் மனித சஞ்சாரம் இருப்பதற்கான அறிகுறி ஏதும்தென்படவில்லை. திருமண வைபவத்திற்கென அதன் மீது தொங்கவிடப்பட்டிருந்த பட்டு ரிப்பன்களும் ஆரஞ்சு பூங்கொத்துகளும் அப்படியே இருக்க மேற்புற துணிக்கூரை மடித்து வைக்கப்பட்ட நிலையில் கதவருகே கார்நின்று கொண்டிருந்ததனால் வீட்டுக்குள் அவர்கள் இருக்கிறார்கள் என்றே நினைத்தோம். தொழில்முறை கலைஞனைப் போல கிதார் வாசிக்கக் கற்றிருந்த என்தம்பி லூயி என்ரிக் திருமணம் தொடர்பான, இரட்டை அர்த்தம் தொனிக்கும்படி இட்டுக்கட்டியிருந்த பாட்டொன்றை புதுமணத் தம்பதிகளுக்காகப்பாடினான். அப்போதுகூட மழைபெய்யவில்லை. மழைக்கான அறிகுறிகூட இல்லை. வானம் தெளிவாகக் காணப்பட்டது. நிலவு உச்சியிலிருந்தது. காற்று

சரப்பதமற்றிருந்தது. குன்றினடியில் இருந்த கல்லறைத் தோட்டத்தில் மினுங்கலாசத் தெரிந்த புனித எல்மோவின் தீபத்தைக்கூட காணமுடிந்தது. அதோடு நிலவொளியில் நீல வண்ணமாகத் தோன்றிய வாழைமரங்களடர்ந்த தோப்பு, சோகத்தில் அமிழ்ந்திருந்த சதுப்புநிலங்கள், தொடுவானத்தின் இருளில் மங்கலாக ஒளிர்ந்த கரீபிய வானம் இவற்றையும்கூடக் காண முடிந்தது. கடலில் அணைந்து அணைந்து எரிந்த ஒரு வெளிச்சத்தைக் காட்டி கார்டஜெனா டி இன்டியாஸின் முக்கியத் துறைமுகம் வழியாக செனகலைச் சேர்ந்த கருப்பின அடிமைகளை ஏற்றிக்கொண்டு வந்து நடுக்கடலில் மூழ்கிப்போன அடிமைக்கப்பல் ஒன்றின் அலைகழிந்துகொண்டிருக்கும் ஆவி அது என்று சொன்னான் சாண்ட்டியாகோ நாஸர். சொற்ப நேரமே நீடித்த ஏஞ்செலா விகாரியோவின் திருமண வாழ்வு இரண்டுமணி நேரத்துக்கு முன்பாக முடிந்துபோனதை அவன் அறிந்திருக்கவில்லையென்றபோதும் அவன் மனசாட்சி அவனை உறுத்திக்கொண்டிருந்ததா என்பதை அறிய இயலவில்லை. காரில் சென்றால் அதன் சத்தம் தனது துரதிருஷ்டத்தை முன்கூட்டியே காட்டிக்கொடுத்துவிடும் என்றெண்ணி ஏஞ்செலா விகாரியோவை அவள் தாய்வீட்டுக்கு நடத்தியே கூட்டிவந்தான் பயார்டோ சான் ரோமான். மனைவியை இழந்த க்சியஸ் மகிழ்வுடன் வாழ்ந்து வந்த அந்தப் பண்ணைவீட்டில் விளக்குகள் அணைந்திருக்க தனியனாக அவன் திரும்பி வந்தான்.

நாங்கள் குன்றைவிட்டு இறங்கிக் கீழே வந்தபோது கடைவீதியிலிருந்த உணவுவிடுதி ஒன்றில் காலை உணவாக பொறித்த மீன்கள் கொஞ்சம் சாப்பிடலாம் என்றான் என் தம்பி. ஆனால் சாண்ட்டியாகோ நாஸருக்கு அதில் விருப்பமில்லை. பிஷப் வருவதற்கு முன் ஒருமணி நேரமாவது அவன் தூங்கவிரும்பினான். பழைய துறைமுகம் அருகே இருந்த, அப்போதுதான் திறக்க ஆரம்பித்திருந்த ஏழைமக்கள் உணவருந்துமிடங்களைக் கடந்து ஆற்றோரமாக கிறிஸ்டோ பெடோவுடன் அவன் சென்றான். தெருமுனையில் திரும்பும்போது எங்களை நோக்கி போய் வருகிறேன் எனக் கையசைத்தான். அதுதான் நாங்கள் அவனைக் கடைசியாகப் பார்த்தது.

படகுத்துறையில் பிறகு அவனை சந்திப்பதாக வாக்களித்த கிறிஸ்டோ பெடோயா தன் வீட்டுப் பின்கதவை அடைந்ததும் அவனிடமிருந்தும் விடைபெற்றுக் கொண்டான். சாண்ட்டியாகோ நாஸர் வருவதையறிந்த நாய்கள் வழக்கம்போலக் குரைத்தன. அரையிருட்டில் தன் கையிலிருந்த சாவிகளை குலுக்கி ஓசையெழுப்பி அவற்றைப் அமைதிப்படுத்தினான். சமையலறை வழியாக அவன் வீட்டுக்குள் சென்றபோது அடுப்பிலிருந்த காப்பியை கவனித்துக் கொண்டிருந்தாள் விக்டோரியா கஸ்மான்.

"ஒயிட்டி," அவள் அவனை அழைத்தாள். "காப்பி சீக்கிரமே தயாராகிவிடும்."

பிறகு காபி அருந்துவதாகச் சொன்ன சாண்ட்டியாகோ நாஸர் டிவினா ஃப்ளோரிடம் சொல்லி தன்னை ஐந்தரை மணிக்கு எழுப்புமாறும் மாற்றிக்கொள்ள அப்போது அணிந்திருந்தது போன்ற உடையை கையோடு

கொண்டுவரச் சொல்லுமாறும் அவளிடம் சொன்னான். அவன் படுக்கச் சென்ற சற்று நேரத்துக்கெல்லாம் பால்கேட்டு வந்த பிச்சைக்காரர் மூலமாக, க்ளோடில்டி அர்மென்ட்டா சொல்லியனுப்பிய தகவல் விக்டோரியா கஸ்மானுக்கு வந்து சேர்ந்தது. ஐந்தரை மணிக்கு அவன் சொன்னவாறே அவனை எழுப்பினாள். ஆனால் அவன் சொன்னதுபோல டிவினா ஃப்ளோரை அனுப்பாமல் தானே, நன்றாகச் சலவை செய்த ஆடைகளை எடுத்துக் கொண்டு அவனை எழுப்ப மேலே படுக்கையறைக்குச் சென்றாள். எஜமானனின் கழுகுப் பிடியிலிருந்து தன் மகளைக் காப்பாற்றக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை அவள் நழுவவிடுவதில்லை.

மரியா அலெஜான்ட்ரினா செர்வாண்டிஸ் கதவைத் தாழிடாமல் வெறுமனே சாத்தியிருந்தாள். என் தம்பியிடம் சொல்லிக் கொண்டு, மூலாட்டோ பெண்களது பூனைகள் டுலிப் மலர்கள்மீது சுருண்டு படுத்து உறங்கிக் கொண்டிருந்த தாழ்வாரத்தைத் கடந்து தட்டாமலேயே படுக்கையறைக் கதவைத் திறந்தேன். விளக்கு அணைக்கப்பட்டிருந்தது. உள்ளே நுழைந்தபோது வெதுவெதுப்பான பெண்வாசனையை உணர்ந்தேன். உறக்கமே வராத ஒரு சிறுத்தைப்புலியின் கண்களை இருளில் கண்டேன். அதன்பின் மணிகள் ஒலித்த சத்தம் கேட்கும் வரை என்ன நிகழ்ந்ததென்று அறியாதவனாகக் கிடந்தேன்.

வீட்டுக்குப் போகும் வழியில் என் தம்பி சிகரெட் வாங்க க்ளோடில்டி அர்மென்ட்டாவின் கடைக்குச் சென்றான். அதிகம் குடித்திருந்ததால் அங்கு நிகழ்ந்த சந்திப்பு பற்றிய அவன் நினைவுகள் தெளிவற்றவையாகவே இருந்தன. ஆனாலும் பெட்ரோ விகாரியோ குடிக்கக் கொடுத்த அந்த மோசமான மதுவை அவன் ஒருபோதும் மறக்கவில்லை. "அது திராவகம் போல இருந்தது," அவன் என்னிடம் சொன்னான். ஆழ்ந்த உறக்கத்திலிருந்த பாப்லோ விகாரியோ என் தம்பி வந்த அரவம் கேட்டு எழுந்தான். தன்னிடமிருந்த கத்திகளை என்தம்பியிடம் காட்டினான்.

"நாங்கள் சாண்ட்டியாகோ நாஸரைக் கொல்லப் போகிறோம்," அவனிடம் அவன் சொன்னான்.

என் தம்பிக்கு அவன் சொன்னது நினைவில் பதியவில்லை. "அப்படியே பதிந்திருந்தாலும் அதை நான் நம்பியிருக்க மாட்டேன்," என்னிடம் அவன் பலமுறை சொல்லியிருக்கிறான், "அந்த இரட்டையர்கள் யாரையோ கொல்லப் போகிறார்கள். அதுவும் பன்றியை அறுக்க உதவும் கத்திகளைக் கொண்டு என்பதை எந்த முட்டாள்தான் நம்பியிருப்பான்!." பிறகு சாண்ட்டியாகோ நாஸர் எங்கே என அவர்கள் அவனிடம் விசாரித்தார்கள். ஏனென்றால் என்தம்பியும் சாண்ட்டியாகோ நாஸரும் ஒன்றாக இருந்ததை அவர்கள் பார்த்திருந்தனர். அவர்களது கேள்விக்கு என்ன பதில் சொன்னான் என்பதும் என் தம்பிக்கு நினைவில்லை. ஆனால் அவன் சொன்ன பதிலைக் கேட்டு க்ளோடில்டி அர்மென்ட்டாவும் விகாரியோ சகோதரர்களும் திகைத்துப் போயினர். இந்தத் தகவல் விசாரணை அறிக்கையில் அவர்களது தனித்தனி சாட்சியங்கள் வழி உறுதிசெய்யப்பட்டுள்ளது. என் தம்பி சொன்னதாக அவர்கள் குறிப்பிட்டது இதுதான், "சாண்ட்டியாகோ நாஸர்

இறந்துவிட்டான்." பிறகு பிஷப் செய்வது போல சிலுவை வரைந்து ஆசிர்வாதம் வழங்கியபடி கடை வாசலில் கால் தடுக்கி தடுமாறியவன் தள்ளாடியபடியே வெளியேறினான். அவன் சதுக்கத்தின் நடுவே வந்துகொண்டிருந்தபோது அமடோர் பாதிரியார் அவனுக்கு எதிர்திசையில் கடந்து போனார். பூசை உதவிப்பையனொருவன் மணியை ஒலித்த படி பின்னால்வர பூசைக்கு அணியவேண்டிய சிறப்பு உடையணிந்து படகுத்துறை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். பிஷப் திறந்தவெளியில் நிகழ்த்தவிருந்த பூசைக்கான பீடத்தை சுமந்தபடி பலர் அவருடன் சென்றுகொண்டிருந்தனர். அவர்கள் கடந்து போவதைப் பார்த்த விகாரியோ சகோதரர்கள் பக்தியுடன் நெஞ்சில் சிலுவை அடையாளமிட்டுக் கொண்டனர்.

பாதிரியார் தன் கடையைத் தாண்டிச் சென்ற பிறகு விகாரியோ சகோதரர்கள் தங்களது கடைசி நம்பிக்கையையும் இழந்துவிட்டிருந்தனர் என என்னிடம் சொன்னாள் க்ளோடில்டி அர்மென்ட்டா.

"நான் சொல்லியனுப்பிய தகவல் அவரைச் சென்று சேரவில்லை என நினைத்தேன்," அவள் சொன்னாள். பல வருடங்கள் கழித்து உலகின் பரபரப்பினின்றும் விலகி தனிமை சூழ்ந்த காலஃபெல் ஓய்வு இல்லத்தில் அவரைச் சந்தித்தபோது, படகுத்துறைக்குக் கிளம்ப ஆயத்தமாகிக் கொண்டிருக்கையில் க்ளோடில்டி அர்மென்ட்டா மற்றும் பலரும் சொல்லியனுப்பியிருந்த அந்தத் தகவல் அவருக்கு தெரிவிக்கப்பட்டிருந்ததை அமடோர் பாதிரியார் ஒப்புக் கொண்டார். "உண்மை என்னவென்றால், அப்போது என்ன செய்வதென்று எனக்கு விளங்கவில்லை," அவர் என்னிடம் சொன்னார், "முதலில், அதில் எனக்கு என்ன சம்பந்தம் இருக்கிறது. அரசாங்க அதிகாரிகள்தானே அதுபற்றி நடவடிக்கை எடுக்கவேண்டும் என நினைத்தேன். பிறகு மனதை மாற்றிக் கொண்டேன். பிளாசிடா லினேரோவின் வீட்டைக் கடந்து போகையில் அதுபற்றி அவளிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்றிருந்தேன்." ஆனால் சதுக்கத்தைக் தாண்டியபோது இதுகுறித்து அவர் முற்றிலுமாக மறந்துவிட்டிருந்தார். "நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும்," அவர் என்னிடம் சொன்னார், "அந்த துரதிருஷ்ட தினத்தில் பிஷப் வேறு வருவதாக இருந்தது." குற்றம் நிகழ்ந்ததை அறிந்து அவர் மிகவும் மனமுடைந்து போனார். தன்மீதே அவருக்கு வெறுப்பு தோன்றியது. அந்த வெறுப்பில் அவருக்கு செய்யத் தோன்றியதெல்லாம் தீ விபத்துக்கான அபாயமணியை ஒலிக்கச் செய்வதுதான்.

அப்பாவுக்குத் தெரியாமல் நாங்கள் உள்ளே வருவதற்காக அம்மா திறந்து வைத்திருந்த சமையலறைக் கதவு வழியாக வீட்டுக்குள் நுழைந்தான் என் தம்பி லூயி என்ரிக். படுக்கப் போகும்முன் கழிவறைக்குச் சென்றான். கழிப்பறையில் அமர்ந்தபடியே உறங்கிவிட்டிருந்தான். பள்ளிக்கூடம் போகவென காலையில் சீக்கிரமே எழுந்துவிட்டிருந்த என் தம்பி ஜெய்மி, உறக்கத்தில் ஏதோ ஒரு பாடலைப் பிதற்றியபடி தலைகுப்புற ஓடுபாவிய கழிவறைத் தரையில் அவன் விழுந்து கிடப்பதைப் பார்த்தான். எண்பது சதம் ஆல்கஹால் கொண்ட மதுவினால் ஏற்பட்ட குடிமயக்கத்தின் காரணமாக பிஷப்பை வரவேற்கப் போவது தாமதிக்கக் கூடாது என

திளைத்த கன்னிகாஸ்திரியான என் சகோதரி அவனை எழுப்ப முயன்றாள். அவன் எழவில்லை. "நான் குளியலறைக்குச் சென்றபோது மணி ஐந்து அடித்தது. அவள் என்னிடம் சொன்னாள். படகுத்துறைக்குக் கிளம்பும் முன் மறுபடி கழிவறைக்குச் சென்ற என் சகோதரி மார்கட் சிரமத்துடன் அவனை இழுத்து வந்து அவனது படுக்கையறையில் போட்டாள். பிஷப் வந்த படகு எழுப்பிய சத்தத்தை கண்விழிக்காமலேயே தன் உறக்கத்தின் ஒரு பகுதியாகக் கொண்டு கேட்டான். குடி கும்மாளத்தினால் களைப்புற்றிருந்த காரணத்தால் உடனே ஆழ்ந்து உறங்கிப் போனான். கன்னிகாஸ்திரீக்கான அங்கியை அணிந்தவாறே அவன் படுக்கையறைக்குள் ஓடிவந்த என் சகோதரி காட்டுக் கத்தலாய் கத்தி எழுப்பும்வரை அவன் எழுந்திருக்கவில்லை. அவள் கத்தினாள்:

அவர்கள் சாண்ட்டியாகோ நாஸரைக் கொன்றுவிட்டார்கள்.

4

டாக்டர் டயானிஸியோ இகுவரான் இல்லாத காரணத்தால் வேறு வழியின்றி அமடோர் பாதிரியார் செய்ய வேண்டிவந்த துக்ககரமான அந்தப் பிரேதப் பரிசோதனைக்கு, கத்திகளால் ஏற்கனவே ஏற்பட்டிருந்த சேதம் ஒரு துவக்கமாக அமைந்தது. "அவன் இறந்தபிறகு மறுபடியும் ஒருமுறை அவனைக் கொன்றது போல் இருந்தது," ஓய்வுபெற்று காலாஃபெல்லில் இருந்த அந்த வயதான பாதிரி என்னிடம் சொன்னார், "அது மேயர் போட்ட உத்தரவு. அந்தக் காட்டுமிராண்டி போட்ட உத்தரவுகளுக்கு- எல்லாம் முட்டாள்தனமான உத்தரவுகள் - தான்கட்டுப்பட்டாக வேண்டிய நிலை". அது அத்தனை ஒழுங்காக நடைபெறவில்லை. அபத்தமான அந்தத் திங்கட்கிழமைக் குழப்பத்தில் கர்னல் அபோந்தி அவசரமாக மாகாண ஆளுநருடன் தந்திவழியாகக் கலந்து பேசினார். தான் விசாரணைக்கென ஒரு மாஜிஸ்திரேட்டை அனுப்புவதாகவும் அதற்குள் ஆரம்ப கட்ட வேலைகளை முடிக்க அவருக்கு அதிகாரம் வழங்குவதாகவும் தெரிவித்தார் ஆளுநர். படைப்பிரிவு ஒன்றின் தலைமை அதிகாரியாக இருந்தவரான மேயர் அவ்வளவாக சட்டநுணுக்கம் அறியாதவர். எதிலிருந்து துவங்குவது என அவருக்குத் தெரியவில்லை. அதுபற்றி யாரிடமும் கேட்க அவரது கர்வம் இடம்தரவில்லை. பிரேதப் பரிசோதனைதான் அவருக்கு சிக்கலை உண்டாக்கிய முதல் விஷயம். அப்போது மருத்துவம் பயிலும் மாணவனாக இருந்த கிறிஸ்டோ பெடோயா, தான் சாண்ட்டியாகோ நாஸருக்கு நெருங்கிய நண்பன் என்று சொல்லி பிரேதப் பரிசோதனை செய்வதனின்றும் விலகிக்கொண்டான். டாக்டர் டயானிஸியோ இகுவரான் வரும்வரை பிரேதத்தை குளிர்பதனத்தில் வைத்திருப்பதென முடிவு செய்தார் மேயர். ஆனால் ஒரு மனித உடலை வைக்குமளவுக்கு குளிர்சாதனப்பெட்டி கிடைக்கவில்லை. அந்த அளவில் சந்தையில் இருந்த ஒரே குளிர்சாதனப்பெட்டியும் பழுதடைந்திருந்தது. புழுங்கும் அறையில்

குறுகலான இரும்புக்கட்டிலில் கிடத்தப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கென பிரேதம் வைக்கப்பட்டிருந்தது. விலை உயர்ந்த சவப்பெட்டி தயாராகிக்கொண்டிருந்தது. படுக்கையறைகளில் இருந்தும் பக்கத்து வீடுகளில் இருந்தும் மின்விசிறிகளைக் கொண்டுவந்திருந்தனர். ஆர்வமிகுதியால் ஏராளமான மக்கள் பிரேதத்தைப் பார்க்க வந்ததால் மரச்சாமான்களையும் பறவைக் கூண்டுகளையும் அலங்காரப் பூந்தொட்டிகளையும் ஓரமாக ஒதுக்கி வைக்க வேண்டியிருந்தது. வெப்பம் கடுமையாக இருந்தது. மரணத்தின் வாசனையால் உந்தப்பட்ட நாய்கள் மூர்க்கமடைந்தன. சாண்ட்டியாகோ நாஸர் மரண வேதனையுடன் சமையலறையில் கிடக்கையில் நான் வீட்டுக்குள் நுழைந்ததிலிருந்து அவை ஊளையிட்டபடி குரைத்துக் கொண்டிருந்தன. கையில் தடியுடன், சத்தம் போட்டுத் தேம்பி அழுதபடியே, அவற்றை விரட்டிக்கொண்டிருந்தாள் டிவினா ஃப்ளோர்.

"கொஞ்சம் உதவி செய்யுங்கள்," அவள் என்னை நோக்கிக் கத்தினாள், "அவரின் குடலைத் தின்னத்தான் இவை இப்படி பரபரக்கின்றன."

நாங்கள் அவற்றை குதிரைலாயத்துள் தள்ளிப் பூட்டினோம். இறுதி ஊர்வலம் முடியும்வரை அவற்றை எங்காவது தொலைவே கொண்டுபோய் வைத்திருக்கும்படி சொன்னாள் பிளாசிடா லினேரோ. ஆனால் பொழுது மதியத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது அவை வீட்டுக்குள் பாய்ந்து வந்தன. எப்படி அவை தப்பித்து வந்தன என யாருக்கும் தெரியவில்லை. அந்த ஒரு தருணத்தில் மட்டும் பிளாசிடா லினேரோ தன் பொறுமையை இழந்தாள்.

"கேடுகெட்ட நாய்கள்," அவள் கத்தினாள், "அவற்றைக் கொன்று போடுங்கள்".

அவள் உத்தரவு உடனே நிறைவேற்றப்பட்டது. வீட்டினுள் மீண்டும் அமைதி திரும்பியது. அதுவரை யாரும் பிரேதத்தின் நிலைமை குறித்து கவலைகொள்ளவில்லை. முகம் சற்றும் குலையவில்லை. அவன் பாடிக்கொண்டிருந்தபோது இந்த முகத்தோற்றம் அப்படியே இருந்தது. கிறிஸ்டோ பெடோயா வெளித்தள்ளியிருந்த குடலை உள்ளே தள்ளி முழு உடலையும் வெள்ளைத் துணியொன்றினால் சுற்றினான். இருந்தும் மதியமானபோது உடலின் காயங்களில் இருந்து வெல்லப்பாகு நிறத்தில் ஒருவித திரவம் வடியத் தொடங்கியது. அதனை நோக்கி ஈக்கள் குழுமின. மேலுதட்டின் மீது ஒரு ஊதா நிறத்திட்டு தோன்றியது. பிறகு அது தண்ணீரின் மீது நகரும் மேகத்தின் நிழல்போல மெதுவாக முகம் முழுவதும் பரவியது. எப்போதும் களையுடன் காணப்படும் அவன் முகம் விகாரமடையத் தொடங்கியது. அவன் அம்மா கைக்குட்டை ஒன்றினால் அந்த முகத்தை மூடினாள். நீண்டநேரம் தாமதிக்க முடியாது என்பதை உணர்ந்த கர்னல் அபோந்தி பிரேதப் பரிசோதனையை மேற்கொள்ளும்படி அமடோர் பாதிரியாருக்கு உத்தரவிட்டார். "ஒரு வாரம் கழித்து பிணத்தைத் தோண்டுவது அவ்வளவு நன்றாக இருக்காது," என்றார் அவர். அமடோர் பாதிரியார் சாலமன்காவில் மருத்துவமும் அறுவையும் படித்திருந்தார்,

ஆனால் பட்டம் வாங்கும் முன் துறவற சபையில் சேர்ந்துவிட்டிருந்தார். அவர் செய்யும் பிரேதப் பரிசோதனை சட்டபூர்வமாக செல்லாது என்பது யாருக்கும் தெரியும். இருந்தும் தான் பிறப்பித்த உத்தரவை அவர் திரும்பப் பெறவில்லை.

மருந்தாளுநர் ஒருவர் குறிப்பெடுக்க, கோடைவிடுமுறையில் வந்திருந்த முதலாமாண்டு மருத்துவம் படிக்கும் மாணவனொருவன் உதவிசெய்ய அரசாங்கப் பள்ளிக்கூடத்தில் நடந்த அந்த பிரேதப்பரிசோதனை ஒரு படுகொலை. சிறு அளவிலான அறுவை சிகிச்சைக்குப் பயன்படும் உபகரணங்கள் மட்டுமே அங்கு இருந்தன. பிரேதப் பரிசோதனையில் பயன்படுத்தப்பட்ட பிற உபகரணங்கள் கைவினைக் கலைஞர்களது தொழில்முறைக் கருவிகள். பிரேதம் மிகவும் மோசமான நிலையில் இருந்தபோதும் அமடோர் பாதிரியாரின் பிரேதப் பரிசோதனை அறிக்கை பாராட்டும்படியாக அமைந்தது. விசாரணை அதிகாரியும் இந்த அறிக்கை மிகவும் உபயோகமான சான்றாக இருந்தது என தன் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

உடலில் ஏற்பட்டிருந்த ஏராளமான காயங்களில் ஏழு காயங்கள் அபாயகரமானவையாக இருந்தன. கல்லீரலின் முன்பக்கம் காணப்பட்ட இரண்டு ஆழமான கத்திக்குத்துகள் அந்த உறுப்பை கிட்டத்தட்ட கூறுபோட்டிருந்தன. வயிற்றில் நான்கு குத்துகள். அவற்றில் ஒரு குத்து கணையத்தில் ஆழமாக ஊடுருவி அதை சிதைத்துவிட்டிருந்தது. கிடைமட்டமாக அமைந்த பெருங்குடல் பகுதியின் அடிப்பகுதியில் ஆறு லேசான கத்திக்குத்துக் காயங்களும் சிறுகுடலின் பல இடங்களில் காயங்களும் காணப்பட்டன. அவனது முதுகுப்புறத்தில் ஒரேயொரு கத்திக்குத்துதான் காணப்பட்டது. முதுகின் கீழ்ப்பகுதியில் காணப்பட்ட அக்கத்திக்குத்து நேராக சிறுநீரகத்தை ஊடுருவியிருந்தது. அடிவயிற்றுக் குழிவு முழுதும் உறைந்த ரத்தத்தால் நிரம்பியிருந்தது. இரைப்பையில் நொதித்துக் கிடந்த பொருட்களினூடே சாண்டியாகோ நாஸர் நான்கு வயதில் விழுங்கிவிட்டிருந்த கார்மல் கன்னிமாதாவின் சிறு திருவுருவம் பதித்த பதக்கம் ஒன்றும் இருந்தது. நெஞ்சுக் குழியில் இரண்டு கத்திக் குத்துகள். முதல்குத்து வலப்புற இரண்டாவது விலா எலும்பு இடைவெளியில் நுழைந்து நுரையீரலைத் தாக்கியிருந்தது. மற்றது இடது கக்ஷத்துக்கு வெகு அருகாமையில் ஊடுருவியிருந்தது. புஜத்திலும் கைகளிலும் ஆறு சிறு காயங்கள் காணப்பட்டன. உடலின் மேலாக கிடைமட்டமான இரண்டு வெட்டுக்காயங்கள். ஒரு வெட்டு வலது தொடைமீதும் மற்றொரு வெட்டு அடிவயிற்றுத் தசைகள் மீதும் காணப்பட்டன. வலது உள்ளங்கையிலும் ஒரு ஆழமான கத்திக்குத்து காணப்பட்டது. "சிலுவையில் அறையப்பட்ட ஏசுவின் கையிலிருந்த காயம்போல இருந்தது," என அக்காயம் பற்றி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. மூளையின் எடை ஒரு சராசரி ஆங்கிலேயனது மூளை எடையைக் காட்டிலும் அறுபது கிராம் கூடுதலாக இருந்தது. அதனால சாண்டியாகோ நாஸர் அதிக புத்திக்கூர்மையும் பிரகாசமான எதிர்காலமும் கொண்டிருந்தான் என அமடோர் பாதிரியார் பிரேதப் பரிசோதனை

அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். அறிக்கையின் இறுதியில் சரியாக குணமாகாத மஞ்சள்காமாலைநோயின் காரணமாக ஏற்பட்டிருந்த கல்லீரல் வீக்கம் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். "சொல்லப் போனால்," அவர் என்னிடம் சொன்னார், "எப்படிப்பார்த்தாலும் சில வருடங்களே அவன் உயிர்வாழ்ந்திருக்கக்கூடும்." பன்னிரண்டு வயதில் அவனுக்கு ஏற்பட்ட மஞ்சள்காமாலைக்கு சிகிச்சையளித்தவரான டாக்டர் டயானிஸியோ இகுவரான் அந்தப் பிரேதப் பரிசோதனை அறிக்கை பற்றிப் பேசுகையில் கோபமடைந்தார். "ஒரு பாதிரியாரால்தான் இவ்வளவு முட்டாள்தனமாக நடந்துகொள்ளமுடியும்," அவர் என்னிடம் சொன்னார், "வெப்ப மண்டலப் பகுதியில் வாழூம் நமக்கு கத்துக்குட்டி ஸ்பானியர்களைக் காட்டிலும் கல்லீரல் பெரிதாக இருக்கும் என்பதை அவருக்குப் புரியவைக்க வழியே இல்லை." உடலில் காணப்பட்ட ஏழு பெரிய காயங்களில் ஏதோவொன்றினால் ஏற்பட்டிருந்த பெரும் ரத்தப் போக்கே மரணத்துக்குக் காரணம் என அறிக்கை முடித்திருந்தது.

எங்களிடம் அவர்கள் முற்றிலும் வேறான ஒரு உடலை திருப்பித்தந்தார்கள். மூளையை எடுக்கவென்று போட்டிருந்த ஓட்டையில் பாதி மண்டையோடு உருக்குலைந்து போயிருந்தது. இறந்த பின்பும் வசீகரம் குன்றாமலிருந்த, பெண்களைச் சுண்டியிழுக்கும் அந்தமுகம் அடையாளம் தெரியாமல் மாறிவிட்டிருந்தது. துண்டுபட்டுக் கிடந்த சிறுகுடல் மற்றும் பெருங்குடலைப் பாதிரியார் வேரோடு உருவினார். அவற்றை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று தெரியாததால் கோபமாக அவற்றின் மீது சிலுவையிட்டு ஆசீர்வதித்து குப்பைக் கூடையில் எறிந்துவிட்டிருந்தார். பிரேதப் பரிசோதனை நடந்து கொண்டிருந்த பள்ளிக்கூட ஜன்னலோரம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்களில் கடைசியாக மிஞ்சியிருந்தவர்களுக்கும் சுவாரஸ்யம் அற்றுப்போனது. பிரேதப் பரிசோதனையின்போது உடனிருந்த உதவியாளன் மயங்கிவிழுந்தான். போர்களின் போது பல படுகொலைகளைப் பார்த்தவரும் பல படுகொலைகளுக்குக் காரணமாக இருந்தவருமான கர்னல் லாஸரோ அபோந்தி அன்றிலிருந்து சைவத்துக்கு மாறியதோடு அல்லாமல் ஆன்மீகத்திலும் ஈடுபட ஆரம்பித்தார். கந்தைத் துணிகளும் கிளிஞ்சல் சுண்ணாம்பும் உள்ளே வைத்து, அழுக்கான இரட்டைமடி நூலும் கோணி ஊசியும் கொண்டு தைக்கப்பட்ட அந்த வெற்றுக் கூட்டை உட்புறம், மிருதுவான பட்டுப் பொதிகளால் மறைக்கப்பட்ட புது சவப்பெட்டியில் நாங்கள் வைத்தபோது அது இற்று விழுந்து விடும்போல் இருந்தது. "அது நீண்ட நேரத்துக்குக் கெடாமல் இருக்கும்," அமடோர் பாதிரியார் என்னிடம் சொன்னார். ஆனால் நடந்தது அவர் சொன்னதற்கு மாறாக இருந்தது. பிரேதம் மோசமடைந்து கொண்டு வந்தது. வீட்டுக்குள் இருக்கவே முடியவில்லை. எனவே அவசரம் அவசரமாக அதிகாலையில் பிரேதத்தை நாங்கள் அடக்கம் செய்ய வேண்டியதாயிற்று.

மேகம் சூழ்ந்த ஒரு செவ்வாய்க்கிழமை உதயமாகியிருந்தது. குரூரமாகக் கழிந்த முந்தின தினத்தின் முடிவில் உறங்கச் செல்வதற்கு எனக்கு தைரியம் இருக்கவில்லை. கதவைத் தாழ்போடாமல் வைத்திருப்பாள் என்ற

நம்பிக்கையில் மரியா அலெஜான்ட்ரினா வீட்டுக்கதவைத் தள்ளினேன். மரத்தில் தொங்கவிடப்பட்டிருந்த அலங்கார விளக்குகள் அங்கேயே எரிந்துகொண்டிருந்தன. வாசலில் விறகு அடுப்பும் ஆவி பறந்துகொண்டிருந்த பானைகளும் காணப்பட்டன. முலாட்டோ பெண்கள் கொண்டாட்டத்துக்கென அணிந்திருந்த ஆடைகள் மீது துக்க வண்ணத்தைப் பூசிக்கொண்டிருந்தனர். வழக்கமாக அவள் அதிகாலை வேளைகளில் இருப்பது போல அப்போதும் விழித்துக்கொண்டிருந்தாள். வழக்கமாக அந்நியர்கள் யாருமில்லாதபோது இருப்பதுபோல அப்போதும் முழு நிர்வாணமாக இருந்தாள். தேவலோகத்தில் இருப்பதாகக் கருதப்படும் அழகுமிக்க துருக்கிய இளம் பெண்ணான ஹௌரியைப் போல முழங்கால்களைக் கட்டியபடி-ஒரு அரசியினுடையதைப் போன்ற தன் படுக்கையில் அமர்ந்திருந்தாள். ஒரு ஓரமாக பாபிலோனிய மரத்தட்டு ஒன்றில் உணவு வகைகள் வைக்கப்பட்டிருந்தன. பெரிய துண்டங்களாகப் பொரித்த கன்றுக்குட்டி இறைச்சி, வேகவைத்த கோழி இறைச்சி, பன்றியின் நடு வயிற்றுப் பகுதி இறைச்சி இவற்றுடன் உணவை அலங்கரிக்கும் விதமாக வைக்கப்பட்டிருந்த வாழைப்பழ மற்றும் காய்கறித் துண்டங்கள் எல்லாம் சேர்த்து ஐந்து பேர் சாப்பிடக் கூடிய அளவுக்கு இருந்தன. அளவுக்கு அதிகமாக உண்ணும் வகையிலேயே அவள் எப்போதும் தன் துக்கத்தை வெளிப்படுத்துவாள். அவள் இத்தனை துக்கத்திலிருந்து நான் இதற்குமுன் பார்த்ததில்லை. ஆடைகளைக் களையாமலேயே அவள் அருகில் படுத்தேன். பொதுவாக சில வார்த்தைகள் பேசினேன். என் வழியில் நானும் துக்கத்தை கடைபிடித்துக் கொண்டிருந்தேன். சாண்ட்டியாகோ நாஸரது குரூர விதியைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். அவனது மரணத்தின் வழியாக மட்டுமல்லாது அந்த குரூர விதி, அவன் உடலைக் கூறுபோட்டும் உருக்குலைத் தும் சுவடின்றி அழித்தும் அவனது இருபது வருட வாழ்வின் சந்தோஷங்கள் அனைத்தையும் பறித்துக்கொண்டு விட்டிருந்தது. என் கனவில் ஒரு பெண் கையில் பெண் குழந்தையொன்றை ஏந்தியபடி வந்தாள். அந்தக் குழந்தை மூச்சுவிடவும் அவகாசமின்றி ஓயாது மென்றுகொண்டேயிருந்தது. பாதிமென்ற மக்காச் சோளங்கள் அந்தப் பெண்ணின் மார்க்கச்சின்மீது விழுந்துகொண்டிருந்தன. அந்தப் பெண் என்னிடம் சொன்னாள், "இவள் தறிகெட்டு இயங்கும் கொட்டை உடைக்கும் எந்திரத்தைப் போல மென்று கொண்டிருக்கிறாள், ஒழுங்கின்றியும் பெரும் ஓசையுடனும் மென்று கொண்டிருக்கிறாள்." பரபரப்புகூடிய விரல்கள் என் சட்டையின் பொத்தான்களை விடுவிப்பதை உணர்ந்தேன். என் முதுகருகே படுத்திருந்த மூர்க்கமான ஒரு காதல் விலங்கின் அச்சமூட்டும் வாசனையை நுகர்ந்தேன். அவளது மென்மையின் புதைகுழியில் மெல்ல ஆழ்ந்து கொண்டிருந்தேன். திடீரென அவள் நிறுத்தினாள். தூர இருந்து தொண்டையைச் செருமினாள், என் உயிரிலிருந்தும் நழுவி விலகி நின்றாள்.

"என்னால் முடியாது." அவள் சொன்னாள், "உன்னிடத்தில் அவன் வாசனை."

நான் மட்டுமல்ல அன்றைய தினம் எல்லாமே சாண்ட்டியாகோ நாஸரின்

வாசனையைக் கொண்டிருந்தன. அடுத்து என்ன செய்வதென்று தீர்மானிக்கும் வரை மேயர் அவர்களை அடைத்து வைத்த ஜெயில் அறையில்கூட விகாரியோ சகோதரர்கள் அவன் வாசனையை உணர்ந்தனர். "எவ்வளவு சோப்பு போட்டு தேய்த்தும் துணியால் துடைத்தும் கூட அந்த வாசனை அகலவில்லை," பெட்ரோ விகாரியோ என்னிடம் சொன்னான். மூன்று இரவுகளாக அவர்கள் உறங்கவில்லை. ஏனென்றால் அவர்கள் உறங்க ஆரம்பித்தால் திரும்பவும் ஆரம்பத்திலிருந்து அந்த கொலையைச் செய்யவேண்டி வரும். தற்போது கிட்டத்தட்ட வயோதிகனாகிவிட்ட நிலையில் முடிவற்ற அந்தநாளில் அவனிருந்த நிலைபற்றி விளக்கிக் கூற முற்படுகையில் எந்தப் பிரயத்தனமும் இன்றி இயல்பாக என்னிடம் சொன்னான் பாப்லோ விகாரியோ: "அது இரண்டு மடங்கு அதிகம் விழித்திருப்பதைப் போன்றது" அவன் சொன்ன இந்த வாக்கியத்தை வைத்துப் பார்க்கையில் சிறையிலிருந்த காலத்தில் அவர்களாலேயே தாங்க முடியாத விஷயம் என்று ஒன்று இருந்திருக்க வேண்டுமென்றால் அது அவர்களது வெளிப்படையான பேச்சாகத்தான் இருந்திருக்க வேண்டுமென்று தோன்றியது.

அந்த ஜெயில் அறை பத்து சதுரஅடி பரப்பில் இருந்தது. இரும்புச் சட்டங்களால் அமைக்கப்பட்ட வெளிச்சம் வருவதற்கான திறப்பு வெகு உயரத்தில் இருந்தது. தள்ளிச் செல்லக்கூடிய அமைப்பில் ஒரு கழிவறை. கழுவும் தொட்டியும் பெரிய மண் கூஜாவும் கூடிய கையலம்புமிடம். வைக்கோல் திருத்திய மெத்தைகளுடன் கூடிய இரண்டு தற்காலிக படுக்கைகள். அந்த அறையைக் காட்டிலும் சௌகரியமாக ஒரு ஹோட்டல் அறை கூட இருக்க முடியாது என்றார் அதைக்கட்ட உத்தரவிட்டவரான கர்னல் அபோந்தி. அதை என் தம்பி லூயி என்ரிக்கும் ஆமோதித்தான்.

ஒருமுறை வாத்தியக் குழுவினரிடம் ஏற்பட்ட தகராறை அடுத்து ஓர் இரவு முழுவதும் அவனை அந்த அறையில் போட்டு பூட்டி வைத்திருந்தனர். ஆனால் பெரிய மனதுடன், முலாட்டோ பெண் ஒருத்தியையும் அவனுடன் தங்க அனுமதித்திருந்தார் மேயர். காலை எட்டுமணிவாக்கில் விகாரியோ சகோதரர்களும் மேயரின் கூற்று உண்மைதான் என்பதை உணர்ந்திருக்கக் கூடும். அப்போது அவர்கள் அராபியர்களிடமிருந்து மிகவும் பாதுகாப்பாக உணர்ந்தனர். தங்கள் கடமையை முடித்த பெருமையினால் உண்டான திருப்தியும் அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. அவர்களுக்கு கவலையுண்டாக்கிய ஒரேவிஷயம் மாறாத அந்த வாசனைதான். நிறையத் தண்ணீரும் சலவை சோப்பும் கேட்டுப் பெற்றனர். தங்கள் கைகளிலும் முகங்களிலும் இருந்த ரத்தத்தைக் கழுவித் துடைத்தனர்; சட்டைகளைத் துவைத்தனர். இருந்தும் அவர்களுக்கு நிம்மதியில்லை. பெட்ரோ விகாரியோ மலமிளக்கிகளும், சிறுநீர் பிரிய உதவும் மாத்திரைகளும் தன் குறியைச் சுற்றியிருந்த துணியை மாற்றவேண்டி ஒரு சுற்று கட்டுத்துணியும் கேட்டுப் பெற்றுக்கொண்டான். காலையில் இரண்டு முறை கொஞ்சமாக அவனுக்கு சிறுநீர் பிரிந்தது. பொழுது போகப்போக அங்கிருப்பது அவனுக்கு நரகவேதனையாக இருந்தது. இப்போது அந்த வாசனை அவ்வளவாக இடர் உண்டாக்கவில்லை. மதியம் மணி இரண்டானபோது கடுமையான வெயில்

அவர்களைக் களைத்துப்போகச் செய்திருக்கவேண்டும். பெட்ரோ விகாரியோவால் தொடர்ந்து படுத்திருக்க முடியவில்லை. களைத்துப்போயிருந்த காரணத்தால் எழுந்துநிற்கவும் முடியவில்லை. அடிவயிற்றின் கீழாக தொடையிடுக்கில் உண்டான வலி அவனது தொண்டையை எட்டியது. சிறுநீர் சுத்தமாக அடைபட்டுவிட்டது. இனி தன் வாழ்நாளில் எப்போதுமே தான் உறங்கமுடியாது என்கிற அச்சமூட்டும் உண்மையை உணர்ந்து அவன் வேதனைப்பட்டான். "நான் பதினொரு மாதங்கள் தொடர்ந்து விழித்திருந்தேன்," அவன் என்னிடம் சொன்னான். அவனைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அவன் சொன்னது உண்மையாகத்தான் இருக்க வேண்டும். அவனால் மதியம் சாப்பிடமுடியவில்லை. பாப்லோ விகாரியோ தன் பங்குக்கு கொஞ்சம் கொறித்தான். பதினைந்து நிமிடம் கழித்து அவனுக்கு மோசமான வயிற்றுப்போக்கு ஆரம்பித்தது. மாலை ஆறுமணியளவில், சான்டியாகோ நாஸரின் உடல் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டுக்கொண்டிருந்தபோது, மேயர் அவசரம் அவசரமாக சிறைச்சாலைக்கு வரவழைக்கப்பட்டார். தன் சகோதரனுக்கு உணவில் விஷம் வைக்கப்பட்டிருக்கவேண்டும் என்று நிச்சயமாகச் சொன்னான் பெட்ரோ விகாரியோ. "என் கண் முன்னாலேயே அவன் கரைந்து கொண்டிருந்தான்," பெட்ரோ விகாரியோ என்னிடம் சொன்னான் "அது அந்த துருக்கியர்கள் செய்த சதியாகத்தான் இருக்கமுடியும் என நினைப்பதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை." அதற்குள்ளாகவே நகர்த்திச் செல்லக்கூடிய வகையில் அமைந்த அந்த கழிப்பறையை பாப்லோ விகாரியோ இரண்டுமுறை நிரப்பிவிட்டிருந்தான். காவலுக்கு இருந்த போலீஸ்காரனுடன் ஆறுமுறை நகர மன்ற கழிப்பறைக்குச் சென்று வந்திருந்தான். கர்னல் அபோந்தி குறுகிய இடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கதவற்ற கழிப்பறைக்குள் தண்ணீர் தண்ணீராய் மலம் போனபடி அவன் அமர்ந்திருப்பதைப் பார்த்தார். உணவில் விஷம் வைக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதை நம்ப இடமிருப்பதை உணர்ந்தார். ஆனால் அவர்கள் ப்யூரா விகாரியோ கொடுத்தனுப்பிய உணவையும் தண்ணீரையுமே அருந்தினார்கள் என்பது உறுதியானபோது அந்த சந்தேகத்திற்கே இடமில்லாமல் போனது. இருப்பினும் விசாரணை நீதிபதி வந்து ரியோஹச்சாவிலிருக்கும் மையக்கண்காணிப்பு வட்டச் சிறைக்கு அனுப்பும் வரை விசேஷ காவலின் கீழ் அவர்களைத் தன் வீட்டிலேயே வைத்திருக்க மேயர் முடிவுசெய்தார்.

தெருக்களில் காணப்பட்ட நிலையே அவர்களை அவ்வாறு அச்சம்கொள்ளவைத்தது. அராபியர்கள் வஞ்சம் தீர்க்க முயலுவார்கள் என்பதை மறுக்க முடியாதுதான் ஆனால் அது உணவில் விஷம்வைக்கக் கூடிய அளவுக்கு இருக்கும் என்று விகாரியோ சகோதரர்களைத்தவிர வேறுயாருக்கும் தோன்றவில்லை. இரவுவரை காத்திருந்து இருட்டில் வந்து பெட்ரோலை ஊற்றி கைதிகளது அறையை அவர்கள் எரித்துவிடக்கூடும் என்றே பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. அதுகூட வெறும் யூகம்தான். இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் மிக வறியதும் உள்ளடங்கியதுமான கரீபிய நகரங்களில் குடியேறிய அராபியர்கள் அமைதி விரும்பிகள். அவர்கள்

வண்ணத்துணிகளையும், மலிவுவிலை ஆபரணங்களையும் வியாபாரம் செய்து வந்தனர். தங்களுக்குள்ளேயே அவர்கள் திருமணம் செய்து கொண்டனர். தாங்கள் விளைவித்த கோதுமையை ஏற்றுமதி செய்தனர். வீட்டு வாசல்களில் ஆடுகளை வளர்த்தனர். ஓரிகானோ கத்தரிச்செடிகளைப் பயிரிட்டனர். சீட்டு விளையாடுவதே அவர்களது ஒரே பெருவிருப்பமாக இருந்தது. முதியவர்கள் தாய்நாட்டிலிருந்து தங்களோடு அவர்கள் கொண்டு வந்ததான பழைய அராபிய மொழியிலேயே பேசினர். அம்மொழியை அடுத்த தலைமுறை வரை குலையாமல் கொண்டு சேர்த்தனர். ஆனால் சாண்ட்டியாகோ நாஸர் தவிர்த்து, மூன்றாம் தலைமுறையைச் சார்ந்த இளையவர்கள் அராபியமொழியில் தங்கள் பெற்றோர் பேசுவதைப் புரிந்துகொண்டு ஸ்பானிய மொழியில் பதிலளித்தனர். நாங்கள் எல்லாருமே காரணமாக அமைந்த ஒரு கொலைக்கு வஞ்சம் தீர்க்கவென, அவர்கள் தங்களது பாரம்பரிய அமைதிக் குணத்தைக் கைவிட்டு, கிளம்பி வருவார்கள் என்பது நம்பமுடியாததாக இருந்தது. பிளாசிடா லினேரோவின் குடும்பத்தினர் பழிவாங்கலில் ஈடுபடக்கூடும் என்பது நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்தது. தங்கள் சொத்தெல்லாம் அழிந்து தீரும்வரையிலும் விடாப்பிடியாகப் போராடக்கூடிய குணம் கொண்ட குடும்பம் அது. அது மட்டுமல்லாமல் அவர்களது உப்பைத்தின்று வளர்ந்த, நன்றி விசுவாசமுள்ள இரண்டுக்கும் மேற்பட்ட கொலைக்கூலிகள் அவர்களிடம் இருந்தனர்.

இத்தகு வதந்திகளால் கலவரமடைந்த கர்னல் அபோந்தி ஒவ்வொரு அராபிய குடும்பமாகச் சென்று பேசினார். இந்தமுறை அவர் கணிப்பு சரியாக இருந்தது. பீதியும் வருத்தமும் கொண்டவர்களாய் அவர்கள் தங்கள் பலிபீடங்களில் துக்கம் அனுஷ்டிக்கும் அடையாளங்களை அமைத்திருந்தனர். சிலர் தரையில் அமர்ந்து அழுது புலம்பிக்கொண்டிருந்தனர். யாரிடமும் பழிதீர்க்கும் எண்ணம் இருப்பதாகத் தோன்றவில்லை. அன்று காலையில் நடந்ததெல்லாம் கொலைச்செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் உண்டான கோபத்தால் ஏற்பட்ட தற்காலிக விளைவுதான் என்றும் எப்படிப்பார்த்தாலும் நிலைமை கட்டுமீறிப்போக வாய்ப்பில்லையென அச்சமூகத்தின் தலைவர்களே தெரிவித்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களில் வயதான மூதாட்டியான சூசன்னா அப்தலா சொன்னபடி பிரகாசமான வண்ணங்களையுடைய கொடிப்பூக்களான பேஷன் பூக்களின் சாறெடுத்து பாப்லோ விகாரியோவுக்கு குடிக்க நிறையக் கொடுத்தபிறகே அவனது வயிற்றுப்போக்கு நின்றது. அவள் சொன்ன சாராயமும் மூலிகைகளது சாறும் கலந்த பிரசித்திபெற்ற பச்சைநிற அப்ஸிந்த் கஷாயம் தந்தபிறகே அவன் சகோதரன் பெட்ரோ விகாரியோவின் நீர்ச்சுருக்கு நீங்கி செந்நிற திரவம் பாய்ந்து வெளிவந்தது. பிறகு பெட்ரோ விகாரியோ உறக்கமற்ற ஒருவித மயக்க நிலையில் ஆழ்ந்தான். வயிற்றுப் போக்கு குணமடைந்த அவன் சகோதரனோ முதன் முறையாக எவ்வித மனச்சங்கடமும் இன்றி நன்றாக உறங்கத் தொடங்கினான். அவர்களிடம் சொல்லிக்கொண்டு கிளம்ப வேண்டி செவ்வாய்க்கிழமை காலை மூன்று மணிக்கு மேயர் அவளை அழைத்து வந்தபோது மேற்சொன்ன நிலையிலேயே ப்யூரிஸ்மா விகாரியோவுப்

அவர்களைக் கண்டாள்.

கர்னல் அபோந்தி சொன்னதன் பேரில், மூத்த சகோதரர்கள் மற்றும் அவர்களின் கணவர்கள் உட்பட, முழுக்குடும்பமுமே ஊரைவிட்டுக் கிளம்பியது. பொது மக்களிடையே பரபரப்பு அடங்கியிருந்ததைப் பயன்படுத்திக் கொண்டு யாருக்கும் தெரியாமல் அவர்கள் கிளம்பியபோது, எவ்விதத்திலும் சீர்செய்ய இயலாத அந்நாளின் சம்பவங்களைத் தாங்கிக்கொண்டு விழித்திருந்த நாங்கள் சிலபேர் மட்டும் சாண்ட்டியாகோ நாஸரை அடக்கம் செய்துகொண்டிருந்தோம். நிலைமை சரியாகும்வரை அவர்கள் ஊரைவிட்டு வெளியேறி இருக்குமாறு மேயர் சொன்னதன் பேரில் அவர்கள் புறப்பட்டனர். ஆனால் கடைசிவரை அவர்கள் ஊர் திரும்பவில்லை. முகத்திலிருந்த கீறல்களை யாரும் பார்க்காதபடிக்கு கணவனால் ஒதுக்கப்பட்ட தன் மகளின் முகத்தை துணியால் மூடி அழைத்துச் சென்றாள் ப்யூரா விகார்யோ. தன் ரகசியக் காதலனுக்காக துக்கம் ஏதும் அனுஷ்டிக்கிறாளோ என அடுத்தவர்கள் சந்தேகிக்கா வண்ணம் அவளுக்கு பளிச்சென்ற சிவப்பு நிற ஆடையை உடுத்தியிருந்தாள். கிளம்பும் முன் அவள் அமடோர் பாதிரியாரிடம் சென்று தன் மகன்களுக்குப் பாவமன்னிப்பு அருளும்படி கேட்டுக்கொண்டாள். ஆனால் மன்னிப்பு பெறும் அளவுக்கு தாங்கள் எந்தப் பாவமும் செய்யவில்லை என்று சொல்லி அதற்கு பெட்ரோ விகார்யோ மறுத்துவிட்டான். குடும்பத்தில் அவர்கள் இருவர் மட்டுமே தனித்துவிடப்பட்டனர். அவர்களை ரியோஹச்சா சிறைக்கு மாற்ற இருந்த அன்று நன்றாக உடம்புதேறியிருந்தனர். தங்கள் குடும்பத்தினர் சென்றதுபோல தாங்கள் இரவில் செல்ல விரும்பவில்லையென்றும் தாங்கள் செய்தது சரி என்பதால் பட்டப்பகலில் அனைவரும் தங்கள் முகத்தைக் காண வெளிப்படையாக தாங்கள் அழைத்துச் செல்லப்படவேண்டும் என்பதிலும் அவர்கள் உறுதியாக இருந்தனர். அவர்களது தந்தை பான்ஸியா விகார்யோ சிறிது காலத்திலேயே காலமானார். "அவருடைய தார்மீக வேதனை அவரது வாழ்வை முடித்துவிட்டது," ஏஞ்செலா விகார்யோ என்னிடம் சொன்னாள். குற்றமற்றவர்கள் என்று விடுதலை செய்யப்பட்டபோது அந்த இரட்டையர்கள் இருவரும் ரியோஹச்சாவிலேயே தங்கிவிட்டனர். அங்கிருந்து அவர்கள் குடும்பத்தினர் வசித்துவந்த மனோயூருக்கு ஒருநாள் பயணத் தொலைவுதான். புருடென்ஸியா கோடிஸ் அங்கேயே சென்று பாப்லோ விகார்யோவைத் திருமணம் செய்துகொண்டாள். தன் தந்தையின் கடையிலிருந்தபோது விலைமிக்க உலோகங்களில் ஆபரணங்கள் செய்வதைக் கற்றுக்கொண்டிருந்த அவன் பின்னாளில் அற்புதமான ஒரு பொற்கொல்லன் என்று பெயரெடுத்தான். காதலியோ வேலையோ இல்லாத பெட்ரோ விகார்யோ திரும்பவும் ராணுவத்தில் சேர்ந்து சார்ஜெண்ட் ஆவதற்கான முதல் நிலைக்கு பதவி உயர்வு பெற்றான். ஒரு அழகான காலைப் பொழுதில் ஆபாசப் பாட்டுக்களைப் பாடியவாறே கொரில்லாக்களது பிரதேசத்துக்குள் அவனது படைப்பிரிவு நுழைந்தது. அதன்பிறகு அதைப்பற்றி எந்தத் தகவலுமில்லை.

பெரும்பான்மை மக்களது கணிப்புப்படி நடந்த சம்பவங்களால்

பாதிக்கப்பட்ட ஒரே ஆள் பயார்டோ சான் ரோமான்தான். அத்துயர சம்பவத்தில் சம்பந்தப்பட்ட மற்ற யாவருமே விதிப்படி தங்களது பங்குக்கு உண்டான கடமையை கெளரவத்துடனும் அதே நேரம் ஒருவித பெருமையுடனும் செய்து முடித்ததைத் தவிர வேறெதையும் செய்துவிடவில்லை என்றே அவர்கள் கருதினர். சாண்ட்டியாகோ நாஸர் தான் செய்த தவறுக்கு உண்டான தண்டனையைப் பெற்றுக்கொண்டான். விகாரியோ சகோதரர்கள் தாங்கள் உண்மையான ஆண்கள் என்பதை நிரூபித்தனர். ஏமாற்றப்பட்ட பெண்ணோ தான் இழந்த மானத்தை மீண்டும் பெற்றவளானாள். கடைசியில் எல்லாவற்றையுமே இழந்து நின்றவன் பயார்டோ சான் ரோமான்தான். "பாவம் பயார்டோ," பல வருடங்களுக்கு மக்கள் அவனைப் பற்றிப் பேசுகையில் இப்படித்தான் குறிப்பிட்டனர். இருந்தும் அத்துயரச் சம்பவம் நிகழ்ந்த தினத்தையடுத்து வந்த சந்திர கிரகணம் நிகழ்ந்த, அந்த சனிக்கிழமை வரை யாரும் அதைப்பற்றி நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அன்றைய தினம் தனது பழைய வீட்டின் மீதாக ஒளிர்ந்தபடி பறவையொன்று பறந்ததைப் பார்த்ததாகவும் அதுதான் மனைவியின் ஆத்மா என்றும் தனக்கு சொந்தமானதைக் கேட்டு அந்த ஆத்மா வந்ததாகவும் மனைவியை இழந்தவரான க்சியஸ் மேயரிடம் சொன்னார். இதைக்கேட்ட மேயர் தன் தலையில் அடித்துக் கொண்டார். அதற்குக் காரணம் முதியவரான க்சியஸின் பார்வை குறித்து அவருக்கு எழுந்த சந்தேகம் அல்ல.

"அடச்சே!," அவர் கத்தினார், "அந்த பாவப்பட்ட மனிதனை சுத்தமாக மறந்து போனேனே."

தன்னுடன் காவலர்கள் சிலரை அழைத்துக் கொண்டு குன்றின் மீது ஏறிச்சென்றார். அந்தப் பண்ணைவீட்டின் முன்னால் மேற்புறத் துணிக்கூரை மடித்துவைக்கப்பட்ட நிலையில் அப்படியே நின்றுகொண்டிருந்தது கார். படுக்கையறையில் மட்டும் ஒரேயொரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவர் கதவைத் தட்டியபோது உள்ளிருந்து எந்தப் பதிலுமில்லை. எனவே பக்கக் கதவு ஒன்றை உடைத்து உள்ளே நுழைந்து அறைகளில் தேடினர். உள்ளொடுங்கி வெளிப்பட்ட கிரகணத்தின் ஒளியில் அந்த அறைகள் ஒளியூட்டப்பட்டிருந்தன. "பொருட்களனைத்தும் நீருக்கடியில் இருப்பது போலத் தோன்றின," மேயர் என்னிடம் சொன்னார். ப்யூரா விகாரியோ செவ்வாய்க்கிழமை காலை அவனைப் பார்த்த கோலத்திலேயே, பேண்ட் மற்றும் பட்டுச் சட்டையுடன் ஆனால் ஷூக்களை களைந்துவிட்டு, படுக்கையில் சுயநினைவின்றிக் கிடந்தான் பயார்டோ சான் ரோமான். தரையில் நிறைய காலிமதுப்புட்டிகளும் படுக்கையில் அதைவிட அதிக எண்ணிக்கையில் திறக்கப்படாத மதுப் புட்டிகளும் காணப்பட்டன. உணவு உண்டதற்கான அறிகுறி எதுவுமில்லை. "மதுவில் அடங்கியிருக்கும் எத்தில் விஷப் பொருளால் முழுமையாக பீடிக்கப்படுவதன் விளிம்பில் இருந்தான்," அவனுக்கு அவசர சிகிச்சையளித்த டாக்டர் டயனாஸியோ இகுவரான் என்னிடம் சொன்னார். சில மணி நேரங்களிலேயே அவன் சாதாரண நிலைக்குத் திரும்பிவிட்டான். சுய நினைவை அடைந்ததுமே தன்னால் இயன்ற அளவு நாசூக்காகப் பேசி அவர்கள் அனைவரையும் வீட்டிலிருந்து

வெளியேற்றினான்.

"யாரும் என்னுடன் உறவு கொள்வதில்லை," அவன் சொன்னான், "பெரும் போர்வீரனுக்கான பட்டங்களைக் கொண்ட என் தந்தைகூட."

அவசரம் அவசரமாக ஜெனரல் பெட்ரோனியா சான் ரோமானுக்கு, நடந்தது ஒன்றுவிடாமல் அவர் மகன் பேசியதில் ஒரு வார்த்தை குறையாமல் தந்தி மூலம் தெரிவித்தார் மேயர். ஆனால் அவர் வரவில்லை. காரணம் தன் மகனது ஏக்கத்தை அவர் ஒரு எழுத்துவிடாமல் படித்திருக்க வேண்டும். தன் மனைவியையும் மகள்களையும் கூடவே அவரது சகோதரிகள் போலத் தோன்றிய வயதான பெண்கள் இருவரையும் அனுப்பிவைத்தார். சரக்குகளை ஏற்றி வரும் படகில் அவர்கள் வந்தார்கள். பயார்டோ சான் ரோமானுக்கு நடந்த துரதிருஷ்டம் பற்றி அறிந்து அவர்களது கழுத்து வரை துக்கம் நிரம்பியிருந்தது. துக்கத்தில் அவர்கள் தலைமயிரை விரித்துப் போட்டிருந்தனர். படகை விட்டிறங்கித் தரையை அடைந்ததுமே தங்கள் காலணிகளைக் கழற்றிவிட்டு மதியப்பொழுதின் வெப்பத்தில் கொதித்துக் கிடந்த புழுதித் தரையில் வெறுங்கால்களுடன் நடந்தே குன்றின் உச்சியை அடைந்தனர். தலையிலிருந்து சிறு கொத்துகளாக மயிரை வேருடன் பிடுங்கியெறிந்தபடியும் அவர்கள் சந்தோஷத்தில் இருக்கிறார்களோ என ஒருவர் எண்ணும்படிக்கு உச்சஸ்தாயியில் கிறீச்சிட்டு அழுது புலம்பியபடியும் சென்றனர். மக்தலேனா ஆலிவர் வீட்டுப் பால்கனியில் இருந்தபடி அவர்கள் போவதை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். இதுபோன்ற துக்கங்கள் அத்துக்கங்களைக் காட்டிலுமான பெருத்த அவமானங்களை மறைக்கவே பயன்படுகின்றன என்று அப்போது என் மனதில் தோன்றிய எண்ணம் இப்போதும் நினைவுக்கு வருகிறது.

கர்னல் லாஸரோ அபோந்தியும் அவர்களோடு குன்றின் உச்சிக்குச் சென்றார். அவசர காலத்தில் பயன்படுத்தவென்று வைத்திருந்த கோவேறு கழுதை மீதேறி டாக்டர் டயானிஸியோ இகுவரானும் உடன் சென்றார். வெயில் தாழத் தொடங்கியபோது நகராட்சி ஊழியர்கள் இருவர் ஒரு நீண்ட தடியில் கட்டப்பட்ட ஏணையில் வைத்து பயார்டோ சான் ரோமானை தூக்கிக் கொண்டுவர பின்னாலேயே பெண்கள் கூட்டமாக அழுதுகொண்டு வந்தனர். அவன் கழுத்துவரை போர்வையால் மூடப்பட்டிருந்தது. மக்தலேனா ஆலிவர் அவன் இறந்துவிட்டதாகவே நினைத்தாள்.

"எப்பேர்ப்பட்ட விரயம்!" அவள் உரக்கச் சொன்னாள்.

மதுவினால் மீண்டும் அவன் சுயநினைவை இழந்திருந்தான். ஆனால் அவர்கள் ஒரு உயிருள்ள மனிதனைத்தான் சுமந்து செல்கிறார்கள் என நம்புவது கடினமாக இருந்தது. காரணம் அவனது வலதுகை ஏணையிலிருந்து வெளியே தொங்கியபடி தரையைத் தேய்த்துக் கொண்டு வந்தது. அவன் அம்மா அந்தக் கையை எடுத்து ஏணைக்குள் வைப்பாள். மறுபடியும் அது வெளியே வந்து தொங்கும். இதனால் குன்றின் சரிவு முகட்டிலிருந்து படகுத்துறை வரை அவர்கள் சென்ற வழியெங்கும் அவன் கை தரையிலொரு நீண்ட தடத்தை ஏற்படுத்தியிருந்தது. தன்னை நினைவூட்டும் வகையில் அவன் விட்டுச் சென்ற ஒரே விஷயம் அதுதான்:

அநியாயமாக பாதிக்கப்பட்ட ஒருவனின் நினைவு.

பண்ணை வீட்டில் உள்ளது உள்ளபடியே அவர்கள் விட்டுச் சென்றிருந்தனர். கோடை விடுமுறைக்கு வீட்டில் வந்திருக்கும் போது நன்றாகக் குடித்துக் கும்மாளமிடும் இரவுகளில் நானும் என் தம்பியும் குன்றின் மீதேறிச் சென்று அவ்வீட்டுக்குள் என்ன இருக்கிறதென்று ஆராய்ந்து பார்ப்போம். ஒவ்வொரு முறையும் கைவிடப்பட்ட அவ்வீட்டின் அறைகளில் இருக்கும் மதிப்பு மிக்க பொருட்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருவதைக் கண்டிருக்கிறோம். ஒருமுறை, திருமண இரவன்று எஞ்செலா விகாரியோ, தன் அம்மாவைக் கொடுத்தனுப்பச் சொல்லிக் கேட்டிருந்த, அந்தத் துணிகளை வைக்க உதவும் தோலாலான சிறு பையினைக் கண்டெடுத்தோம். அது பற்றி நாங்கள் விசேஷ அக்கறை எதும் கொள்ளவில்லை. அதனுள்ளே, சாதாரணமாக ஒரு பெண் தன்னைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்கப் பயன்பட்ட பொருட்களே இருப்பதாகத் தோன்றியது. அந்தப் பொருட்களைக் கொண்டுதான் தன் குட்டு வெளிப்படாமல் கணவனை எப்படி ஏமாற்றுவதென்ற தந்திரத்தை அவளுக்கு அறிவுரை கூறிய அந்தக் கைதேர்ந்த பெண்கள் கற்றுத் தந்திருந்தனர் என்பதைப் பல வருடங்கள் கழித்து எஞ்செலா விகாரியோ என்னிடம் சொன்னபிறகே, அவற்றின் உண்மையான பயன் என்னவென்று எனக்குத் தெரியவந்தது. திருமணமாகி ஐந்து மணி நேரத்துக்குத் தன் புகுந்த வீடாயிருந்த அந்த வீட்டில் அவள் விட்டு வந்த ஒரே தடயம் அதுதான்.

இந்தப் பதிவுக்கு உதவக்கூடிய ஏதேனும் அங்கு கிடைக்குமா எனத்தேடி மீண்டும் அவ்வீட்டுக்கு வந்த போது அங்கு யோலண்டா க்சியஸ் கொண்டிருந்த சந்தோஷத்தின் எச்சங்களைக்கூடக் காணமுடியவில்லை. கர்னல் லாஸரோ அபோந்தியின் கடுமையான காவலையும் மீறி பொருட்கள் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டிருந்தன. கதவு வழியே உள்ளே கொண்டு வர முடியாது என்பதால் மோம்பாக்ஸைச் சேர்ந்த புகழ்பெற்ற தச்சுக் கலைஞனை அழைத்து வந்து வீட்டுக்குள்ளேயே கட்டமைக்கப்பட்ட, ஆறு கண்ணாடிகள் பதித்த பெரிய அலமாரியையும் கூட காணவில்லை. தன் மனைவிதான் ஆவியாக வந்து தனக்கு சொந்தமானவற்றையெல்லாம் எடுத்துச்செல்வதாக துவக்கத்தில் ஆவேசப்பட்டார் க்சியஸ். கர்னல் லாஸரோ அபோந்தியோ அவரைக் கேலி செய்தார். பிறகு பொருட்கள் காணாமல் போகும் மர்மத்தை அறியமுடியாமல் போகவே ஆவிகளோடு பேசும் சடங்கை நடத்துவதென முடிவு செய்தார். அப்போது வரவழைக்கப்பட்ட யோலண்டா க்சியஸின் ஆவி தான் மரணமடைந்த வீட்டிலிருந்து ஒருகாலத்தில் தன் மகிழ்ச்சிக்குக் காரணமாக இருந்த பொருள்களை எடுத்துச்செல்வது தான்தான் என தனது கைப்பட எழுதிக்காட்டியது. வீடு இற்றுவிழத் தொடங்கியது. கதவருகே நின்றுகொண்டிருந்த நிலையிலேயே அந்தக் காரும் சிதிலமுற்றது. மழையிலும், வெயிலிலும், பனியிலும் அடிபட்டு உருக்குலைந்த அதன் உட்கூட்டைத் தவிர்த்து எதுவும் மிஞ்சியிருக்கவில்லை. பல வருடங்களுக்கு வீட்டின் சொந்தக்காரனைப் பற்றி எந்தத் தகவலுமில்லை. விசாரணை அறிக்கையில் அவன் அளித்திருந்த உறுதிமொழி பதிவாகியிருந்தது. அது

வழக்கப்போல அமைந்த சிறு அளவிலான உறுதிமொழி. தவிர்க்க இயலாத காரணங்களுக்காக கடைசி நேரத்தில் அதுவும் அறிக்கையில் சேர்க்கப்பட்டது. இருபத்து மூன்று வருடங்கள் கழித்து அவனுடன் நான் பேசமுயன்ற அந்த ஒரே சந்தர்ப்பத்தில் ஒரு இறுக்கத்துடன் என்னை அவன் எதிர்கொண்டான். நடந்த சம்பவங்களில் அவன் பங்கைப் புரிந்துகொள்ள உதவும் ஒரு சிறு தகவலைக்கூட தெரிவிக்க அவன் விரும்பவில்லை. சொல்லப்போனால் அவனது குடும்பத்தினர் கூட அவனைப் பற்றி நாங்கள் அறிந்திருந்ததைக் காட்டிலும் கூடுதலாக எதையும் அறிந்திருக்கவில்லை. திருமணம் செய்துகொள்ள ஒரு பெண்ணை, அதுவும் தான் முன்பின் அறியாத ஒரு பெண்ணை, தேடிவந்தான் என்ற வெளிப்படையான காரணம் தவிர்த்து, சற்றும் பொருத்தமில்லாத வகையில் அமைந்த ஒரு நகரத்துக்கு அவன் வந்ததற்கான காரணங்கள் வேறென்னவாக இருக்கமுடியும் என்பதைக் கூட அவனது குடும்பத்தினர் அறிந்திருக்கவில்லை.

ஆனால் ஏஞ்செலா விகாரியோ பற்றி அவ்வப்போது தொடர்ச்சியாக எனக்குத் தகவல்கள் வந்துகொண்டிருந்தன. அச்செய்திகள் வழி என்னுள் அவளைப்பற்றி மதிப்புமிகுந்த சித்திரம் ஒன்று உருவாகியிருந்தது. அங்கே இன்னும் எஞ்சியிருந்த சிலை வழிபாட்டினரை மதம் மாற்றுவதற்காக கன்னிகாஸ்திரீயான என் சகோதரி மேல் காஜிரா பக்கம் சென்று வந்துகொண்டிருந்தாள். அவள் அம்மா அவளை உயிருடன் புதைத்துவிட முயன்ற, கரிய உப்பினால் வெந்து கிடந்த மண் நிரம்பிய அக்கிராமத்தில் ஏஞ்செலா விகாரியோவைப் பார்த்துப் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருந்தாள் என் சகோதரி. "உன் அத்தை மகள் உன்னைப் பற்றி விசாரித்தாள்," ஒவ்வொரு முறையும் என் சகோதரி சொல்வாள். அங்கு அவர்கள் குடியேறிய ஆரம்ப வருடங்களில் அங்கு சென்றுவந்த என் சகோதரி மார்கட், அவள் பெரிய வாசலும், உள்ளே நல்ல காற்றோட்டமும் கொண்ட உறுதியான வீடொன்றை வாங்கியிருந்ததாகக் கூறினாள். அந்த வீட்டில் ஒரேயொரு பிரச்சினைதான். அலைகள் உயர்ந்து இரவுகளில் கழிப்பறைகள் நீரால் நிரம்பிவிடும். காலையில் படுக்கையறையில் மீன்கள் துள்ளிக் கொண்டிருக்கும். அந்த நேரத்தில் அவளைப் பார்த்தவர்கள் அவள்தான் கவனம் முழுமையையும் பூவேலைப்பாடு செய்வதில் செலுத்தியிருந்ததையும் அவ்வேலையில் மிகுந்த திறமை பெற்று விளங்கியதையும் ஒப்புக் கொண்டனர். அவள் அந்த வேலையில் ஈடுபடுவதன் வாயிலாகவே நடந்தவற்றையெல்லாம் மறக்க முயற்சித்துக் கொண்டிருந்தாள்.

வெகுநாட்களுக்குப்பின் · காஜிராவின் நகரங்களில் கலைக்களஞ்சியங்களையும், மருத்துவப் புத்தகங்களையும் விற்பதன் வழி என்னையே நான் புரிந்துகொள்ள முயன்றுகொண்டிருந்த, எந்தத் திட்டமான குறிக்கோளுமற்ற அந்த காலகட்டத்தில் தற்செயலாக, இந்தியப் பழங்குடிகளது மரண கிராமம் எனப்படும் அந்த கிராமம் வரை செல்லும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. கடலைப் பார்த்தபடி அமைந்த ஒருவீட்டின் ஜன்னலோரமாக, அந்நாளின் உச்சபட்ச வெப்பம் நிலவிய அப்பொழுதில் மஞ்சள் கலந்த வெள்ளைநிற கேசத்துடன், எஃகு பிரேமிட்ட கண்ணாடி

அணிந்து பாதி தூக்கத்தில் இருந்தபடி ஒரு பெண். இயந்திரத்தின் உதவியுடன் பூவேலைப்பாடு செய்து கொண்டிருந்தாள். அவள் தலைக்கு மேலே தொங்கிய கூண்டிலிருந்த மஞ்சள் நிற கேனரி பறவை ஓயாது பாடிக்கொண்டிருந்தது. ஜன்னல் சட்டங்களுக்குள் ஒரு கவிதை போன்று அழகாகத் தோன்றிய அக்காட்சியைப் பார்த்தபோது அங்கிருந்த அந்தப்பெண் நான் எண்ணியிருந்த பெண்தான் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் வாழ்வு, இறுதியில் மோசமான இலக்கியங்களில் எழுதப்படுவது போல ஆகிவிடுகிறது என்பதை நம்புவதற்கு எனக்கு சிரமமாக இருந்தது. ஆனால் அது அவள்தான். எல்லாம் நடந்து இருபத்து மூன்று வருடங்கள் கழித்து நான் பார்க்கும் ஏஞ்செலா விகாரியோ. அவள் எப்போதும் என்னிடம் நடந்து கொள்வது போலவே, ஒரு தூரத்து உறவினனிடம் நடந்து கொள்வது போல, நடந்து கொண்டாள். என் கேள்விகளுக்கு சரியாகவும் நகைச்சுவை உணர்வுடனும் பதிலளித்தாள். அவளது அறிவையும், முதிர்ச்சியையும் பார்த்தபோது அவள் அதே பழைய ஏஞ்செலா விகாரியோதான் என நம்புவது கடினமாக இருந்தது. எனக்கு மிகவும் ஆச்சரியமளித்த விஷயம் என்னவென்றால் அவள் தன் வாழ்வை புரிந்துவைத்துக்கொண்ட விதம்தான். சில நிமிடங்களில், முதலில் அவளைப் பார்த்தபோது இருந்த வயதான தோற்றம் நீங்கி என் நினைவில் இருந்தது போன்ற இளமையுடன் அவள் இருப்பதாகத் தோன்றியது. இருபது வயதில் பாஸ்பா அன்பு இன்றி அவளைத் திருமணம் செய்துகொள்ளவந்த அந்த நபருக்கும் அவளுக்கும் இடையே பொதுவானதாக எந்த குணாம்சமும் இருக்கவில்லை. சதா புலம்பிக்கொண்டிருக்கும் முதிய வயதை எட்டியிருந்த அவள் அம்மாவோ நான் ஏதோ பிசாசு என்பதுபோல என்னைப் பார்த்தாள். கடந்த காலம் பற்றி எதையும் பேச அவள் மறுத்துவிட்டாள். இந்தப் பதிவுக்கு பயன்படுத்திக்கொள்ள என் அம்மாவுடன் அவள் பேசியபோது வெளிப்பட்ட சில தொடர்பற்ற சொற்றொடர்களையும், என் நினைவிலிருந்து தோண்டியெடுத்த சிலவற்றையும் கொண்டே திருப்தியுற வேண்டியதாயிற்று. ஏஞ்செலா விகாரியோவை சாகடிக்க என்னவெல்லாம் செய்யமுடியுமோ அதையெல்லாம் செய்தும் அவள் நினைத்தது நடக்கவில்லை. அவளது முயற்சிகள் தோற்றுப்போகக் காரணம் தன் வாழ்வில் நடந்த அந்த துரதிருஷ்ட சம்பவத்தை நினைத்து அவள் மகள் மருகாததுதான். அதற்கு மாறாக அவள், யாராவது அச்சம்பவம் பற்றிக் கேட்டால் எந்தத் தயக்கமும் இன்றி விலாவாரியாக விளக்கிக் கூறுவாள். ஆனால் அவள் கற்பிழந்ததற்கு உண்மையான காரணம் யார், எப்படி, ஏன் அந்தச் சம்பவம் நடந்தது என்ற விஷயத்தை மட்டும் அவள் ஒருபோதும் சொன்னதில்லை. அதற்கு சாண்ட்டியாகோ நாஸர்தான் காரணம் என அவள் சொல்லியிருந்ததை ஒருவரும் நம்பத் தயாராக இல்லை. அவனும் அவளும் இருவேறுபட்ட உலகங்களைச் சேர்ந்தவர்கள். யாருமே அவர்கள் இருவரும் ஒன்றாக தனித்திருப்பதை பார்த்தது இல்லை. ஏன், அவர்கள் ஒன்றாக இருந்தே பார்த்ததில்லை. அவளை கவனம் கொடுத்துப் பார்க்கிற அளவுக்கு சாண்ட்டியாகோ நாஸர் அவ்வளவு ரசனை குன்றியவனும் இல்லை.

என்னிடம் அவனைப்பற்றிக் குறிப்பிடும்போது, "தன் அசட்டு அத்தைமகள்" என்றே குறிப்பிடுவான். அதோடு அவனை நாங்கள் அந்தக் காலத்தில் சொல்வது போல "கோழிக்குஞ்சை அமுக்கும் பருந்து" என்றுதான் குறிப்பிடுவோம். அவன் அப்பாவைப் போல அவனும் தனியாகத்தான் நாட்டுப்புறத்துக்குப் போவான். எங்காவது கன்னி கழியாத சின்னப்பெண்கள் தனியே தென்பட்டால் அந்த மொட்டுகளை தன் ஆசைக்குப் பயன்படுத்திக் கொள்வான். ஆனால் நகரத்தில், பதினான்கு மாதங்கள் அவனைப் பைத்தியமாக அலையவிட்ட மரியா அலெஜான்ட்ரினாவுடனான மூர்க்கமான உறவையும், பிறகு தான் மணம்புரியவிருந்த ஃப்ளோரா மிகுயெலுவுடனான நாகரீகமான உறவையும் தவிர்த்து அவனுக்கு வேறெந்தக் காதலுறவும் கிடையாது. தற்போது எல்லாரும் சொல்லும், ஆனால் அவ்வளவாக ஏற்றுக் கொள்ளவியலாத, காரணம் என்னவென்றால் ஏஞ்செலா விகாரியோ உண்மையிலேயே தான் காதலித்து வந்த ஒரு நபரை காப்பாற்றவேண்டியே சாண்ட்டியாகோ நாஸரின் பெயரைச் சொன்னாள்; அதுமட்டுமன்றி சாண்ட்டியாகோ நாஸர் என்று தெரிந்தால் அவள் சகோதரர்கள் அவனை எதுவும் செய்யத் துணியமாட்டார்கள் என்ற நம்பிக்கையிலேயே அவன் பெயரைச் சொன்னாள் என்பதுமாகும். இரண்டாவது முறை அவளைச் சென்று பார்த்தபோது எப்படியும் அவளிடமிருந்து உண்மையை வரவழைத்துவிட உறுதி கொண்டவனாய் வரிசையாக என் வாதத்தை அடுக்கினேன். ஆனால் பூவேலைப்பாடு செய்வதனின்றும் மெதுவாகக் கண்களை உயர்த்தியவள் என் வாதங்கள் அனைத்தும் பொடிப்பொடியாகும்படி மெதுவாகச் சொன்னாள். "நான் சொன்னதைப் பொய் என்று மட்டும் ஆக்கிவிட நினைக்காதே," அவள் என்னிடம் சொன்னாள், "அதற்கு காரணம் அவன்தான்."

மற்ற விஷயங்களை, அவளது முதலிரவில் நடந்த துயரத்தைப் பற்றிப் பேசுகையில் கூட அவள் எந்த ஒளிவு மறைவுமின்றியே பேசினாள். அவளுக்கு உபாயம் சொல்லியனுப்பிய தோழிகள் முதலில் அவள் கணவன் சுய நினைவை இழக்கும்வரை அவனை குடிக்கச் செய்யும்படி சொல்லியிருந்தார்கள். பிறகு மிகவும் கூச்சமாக இருப்பதாக நடித்து விளக்கை அணைக்கச் சொல்லிவிட்டு இருளில், அவள் கன்னித்தன்மை இழக்காதவள் எனக்காட்ட மிக ஆபத்தான வெள்ளைப் படிகாரம் கரைத்த நீரை, அவளது பிறப்புறுப்புக்குள் செலுத்திக்கொள்ளச் சொன்னார்கள். கன்னித் தன்மையை அறிய அவர்கள் கொடுக்கும் துணியில் மெர்குரோகுரோம் சாயத்தைப் பூசிவிட்டால் மறுநாள் காலை தன்வீட்டு வாசலில் எல்லாரும் பார்க்க அதை அவள் வைக்கலாம் எனவும் சொல்லியனுப்பி யிருந்தார்கள். அவளுக்கு உபாயம் சொல்லித் தந்த அந்த வேசைப் பெண்கள் இரண்டு விஷயங்களை மறந்துவிட்டிருந்தனர். ஒன்று எவ்வளவு குடித்தாலும் பயார்டோ சான் ரோமான் சுயநினைவை இழப்பதில்லை என்பது. இரண்டாவது, எந்த உணர்ச்சியையும் வெளிக்காட்டாமலிருக்கும்படிக்கு அவள் அம்மா அவளை வளர்த்திருந்த போதிலும் ஏஞ்செலா விகாரியோ உள்ளுக்குள் மனசாட்சிப்படி செயல்படும் குணம் கொண்டவள் என்பது. "அவர்கள் சொன்ன எதையும் நான் செய்யவில்லை," அவள் சொன்னாள், "அதைப் பற்றி நினைக்க நினைக்க

அதுபோன்று தந்திரங்கள் செய்து யாரையும், குறிப்பாகத் தன்னை மணந்துகொள்ள போகிற அந்த துரதிருஷ்டசாலியை ஏமாற்றக் கூடாது என்று எல்லாம் மேலோங்கியது." எனவே படுக்கையறையின் விளக்கை அணைக்காமல் வெளிச்சத்திலேயே அவளது ஆடைகளைக் களைந்த கணவனுக்கு அவள் மறுப்பேதும் தெரிவிக்கவில்லை. அவள் வாழ்வைக் குலைத்துப்போட்ட அச்சங்கள் எல்லாவற்றிலிருந்தும் அவள் விலகி வந்துவிட்டிருந்தாள். "அது மிகவும் சுலபமாக இருந்தது." அவள் சொன்னாள். "ஏனென்றால் நான் சாகவும் தயாராக இருந்தேன்."

உண்மை என்னவென்றால், தன் மனதுக்குள்ளாக கனன்று கொண்டிருந்த நிஜமான அந்த துரதிருஷ்டத்தை மறைக்கவில்லை. வெளிப்படையாக அறியப்பட்ட அந்த துரதிருஷ்டம் பற்றி எந்தக் கூச்சமும் இன்றி அவள் பேசினாள். தன்னைத் தாய் வீட்டில் கொண்டு விட்ட அந்த நிமிடத்திலிருந்து என்றென்றைக்குமாக பயார்டோ சான் ரோமான் தன் வாழ்வில் நிறைந்திருப்பதாக அவள் சொன்ன அந்த கணத்திற்கு முன்பு வரைகூட இம்மாதிரியான ஒரு விஷயத்தை யாரும் கற்பனைகூட செய்து பார்த்திருக்க முடியாது. அது ஒரு மோன அடி. "அம்மா என்னை அடிக்க ஆரம்பித்தபோது திடீரென எனக்கு அவன் நினைவுகள் வரத் தொடங்கியது" அவள் என்னிடம் சொன்னாள். அவனுக்காகவே அந்த அடிகளை வாங்கிக் கொள்வதாக அவள் நினைத்துக்கொண்ட போது அந்த அடிகள் அவ்வளவாக வலிக்கவில்லை. தேம்பியழுதபடி உணவு அறையின் சோபாவில் படுத்திருந்தபோது அவளே ஆச்சரியமடையும் வகையில் அவனைப் பற்றி அவள் நினைத்துக் கொண்டிருந்தாள். "வாங்கிய அடிகளுக்காகவோ நடந்த சம்பவங்களை நினைத்தோ நான் அழுது கொண்டிருக்கவில்லை." அவள் என்னிடம் சொன்னாள். "அவனை நினைத்தே நான் அழுது கொண்டிருந்தேன்." வீக்கங்களைக் குறைக்க அவள் அம்மா அவளது முகத்தில் ஆர்னிகா பட்டைகளை வைக்கும்போதும் அவள் அவனைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள். தெருவில் கூச்சல்களும், மணிக்கூண்டிலிருந்து தீ விபத்துக்கு அடிக்கப்படும் அபாய எச்சரிக்கை மணி ஓசையும் கேட்டபோதும்கூட அவள் அவனைப் பற்றி இன்னும் அதிகமாக நினைத்துக்கொண்டிருந்தாள். அப்போது அங்கு வந்த அவள் அம்மா அவளிடம் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது என்றும் இனி அவள் நிம்மதியாக உறங்கலாம் என்றும் சொன்னாள்.

ரியோஹாச்சாவிலிருந்த மருத்துவமனையில் தன் அம்மாவின் கண்களைப் பரிசோதனை செய்துகொள்ள அவளுடன் சென்றபோதும் எவ்வித மனமயக்கமும் இன்றி அவனைப்பற்றி நீண்ட நேரம் நினைத்துக்கொண்டிருந்தாள். வழியில் அவர்கள் டெல் புவெர்ட்டோ ஹோட்டலுக்குச் சென்றனர். அதன் சொந்தக்காரன் அவர்களுக்குத் தெரிந்தவன். ப்யூரா விகாரியோ உள்ளே சென்று ஒரு தம்ளர் தண்ணீர் கேட்டாள். தன் மகளுக்கு முதுகு காட்டியபடி அவள் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தபோது அந்த அறையைச் சுற்றிலுமிருந்த கண்ணாடிகளில் தன் நினைவு பிரதிபலிப்பதைக் கண்டாள் அஞ்செலா விகாரியோ. மூச்சுவிடவும் மறந்தவளாய் தன் தலையைத் திருப்பினாள்

அவனை கவனிக்காமலேயே அவனைக் கடந்து ஹோட்டலை விட்டு அவன் வெளியேறிச் செல்வதைப் பார்த்தாள். இதயம் நொறுங்கியவளாகத் தன் அம்மாவைப் பார்த்தாள். ப்யூரா விகாரியோ தண்ணீரைக் குடித்து முடித்து சட்டையின் கைப்பகுதியினால் வாயைத் துடைத்துக்கொண்டாள். புதிதாகக் கண்ணாடி அணிந்திருந்தவள் கவுண்டரின் அருகிலிருந்து தன் மகளை நோக்கிப் புன்னகைத்தாள். பிறந்ததிலிருந்து அப்போதுதான் முதல் முறையாக, அந்தச் சிரிப்பிலிருந்து அவளது சுயரூபத்தை அறிந்தாள் ஏஞ்செலா விகாரியோ தன் தவறுகளுக்காகத் தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட பரிதாபத்துக்குரிய பெண் "அம்மா" அவள் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள். மிகவும் மனமுடைந்து போயிருந்ததால் திரும்ப வரும்போது சத்தம்போட்டு பாடிக்கொண்டே வந்தாள் வீடு வந்ததும் ஓடிச்சென்று படுக்கையில் விழுந்தவள் மூன்று நாட்களுக்கு தொடர்ந்து அழுதுகொண்டே இருந்தாள்.

அவள் புதிதாய்ப் பிறந்திருந்தாள். "அவர்மீது நான் பைத்தியமாகிவிட்டிருந்தேன்" அவள் என்னிடம் சொன்னாள், "எல்லையையும் அறியாமலேயே". அவனைப் பார்க்கவேண்டுமென்றால் அவள்தன் கண்களை மூடிக்கொண்டால் போதும். கடலின் ஓசையில் அவள் அவனது சுவாசத்தை உணர்ந்தாள். படுக்கையில் அவன் உடலின் வெம்மையை உணர்ந்து நள்ளிரவில் திடுக்கிட்டு எழுவாள். அந்த வார இறுதியில் இனி வினாடி நேரமும் தன்னால் பொறுத்திருக்க இயலாது என்பதை உணர்ந்தவளாய் அவனுக்கான தன் முதல் கடிதத்தை எழுதினாள். அது சாதாரண முறையில் அமைந்த ஒரு கடிதம். ஹோட்டலில் இருந்து வெளியே வந்தபோது அவனை அவள் பார்த்ததாகவும் அவன் அவளைப் பார்த்திருந்தால் அவள் சந்தோசப்பட்டிருப்பாள் என்றும் அதில் எழுதினாள். அவன் பதில் எழுதுவான் என்ற அவளது எதிர்ப்பார்ப்பு வீணாகியது. கிட்டத்தட்ட இரண்டு மாதம் காத்திருந்தும் பதில் வராததால் தான் முதலில் எழுதியவாறே பட்டும்படாமல் இன்னொரு கடிதம் எழுதினாள். இக்கடிதத்தின் நோக்கம் அவளின் முதல் கடிதத்துக்குப் பதிலெழுதும் நாகரிகம் கூட இல்லையே என அவனைக் கடிந்து கொள்வதாக இருந்தது. ஆறுமாதங்கள் கடந்திருந்தபோது அவள் ஆறு கடிதங்கள் எழுதியிருந்தாள். ஒன்றுக்கும் பதில் இல்லை. அவை அவனிடம் போய்ச் சேர்ந்ததே போதும் என்று தன்னைத் தேற்றிக்கொண்டாள்.

வாழ்வில் முதல் முறையாக தன் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் பொறுப்பை தன்கையிலேயே எடுத்துக் கொண்ட ஏஞ்செலா விகாரியோ காதலும் வெறுப்பும் பரஸ்பரம் பகிர்ந்துகொள்ளப்படக்கூடிய விஷயங்கள்தான் என்பதைப் புரிந்து கொண்டாள். கடிதம் எழுத எழுத அவளுள் இருந்த பரபரப்பும் எதிர்ப்பார்ப்பும் குறையத் தொடங்கின. ஆனால் அவள் அம்மாவின் மீதான குரோதமிக்க கலந்ததான ஒரு கசப்புணர்வு அதிகரிக்கத் தொடங்கியது. "அவளைப் பார்த்தாலே எனக்குப் பற்றிக்கொண்டு வந்தது," அவள் என்னிடம் சொன்னாள், "ஆனால் அவளைப் பார்க்கும்போதெல்லாம் தவறாமல் எனக்கு அவர் நினைவும் வந்துவிடும்." ஒரு வயதுமுதிர்ந்த பெண்ணுடைய வாழ்க்கைபோல,

ஒதுக்கப்பட்ட மனைவி என்ற அவப்பெயருடன் அவள் வாழ்க்கை தொடர்ந்தது. முன்பு துணியில் டூலிப் மலர்களையும், காகிதப் பறவைகளையும் செய்துகொண்டிருந்தது போல இப்போது தன் தோழிகளுடன் சேர்ந்து இயந்திரத்தின் உதவியுடன் பூத்தையல் வேலை செய்துகொண்டிருந்தாள். ஆனால் அவள் அம்மா படுக்கச் சென்றபின் விடியும்வரை உட்கார்ந்து, எதிர்காலம் நிச்சயமற்றதான கடிதங்களை எழுதிக்கொண்டிருப்பாள். அவள் மிகவும் தெளிவுடன் இருந்தாள். அடுத்தவருக்கு அஞ்சி தன் விருப்பத்தை மூடிமறைக்க அவள் தயாராயில்லை. தனக்குத் தானே எஜமானியாக தனக்கான முடிவுகளை தானேமேற்கொண்டாள். அவனுக்காகவே மறுபடியும் அவளொரு கன்னிப் பெண்ணானாள். தன்னைத் தவிர தன்மீது அதிகாரம் செலுத்த யாருக்கும் உரிமையில்லையென்றும் தன் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதைத் தவிர்த்து தனக்கு வேறுபணிகள் கிடையாது என்பதையும் அவள் உணர்ந்தவளானாள்.

அவள் தன் வாழ்நாளில் பாதிக்கும் மேலான காலத்தில், தவறாமல் வாரம் ஒரு கடிதம் எழுதி வந்தாள். "சிலநேரம் எனக்கு என்ன எழுதுவதென்றே தெரியாது," அந்தக் கடிதங்கள் அவரைப் போய்ச் சேருகின்றன என்பதே எனக்குப் போதுமானதாக இருந்தது." முதலில் அக்கடிதங்கள் ஒரு பெண் தான் மணந்துகொள்ளப் போகிறவருக்கு எழுதும் குறிப்புகளாக இருந்தன. பிறகு அவை ஒரு ரகசியக் காதலியிடமிருந்து வரும் செய்திகளாக, யாரும் அறியாமல் ஒருவனது மனதைக் கவர்ந்துவிட்ட ஒருத்தி அவனுக்கு அனுப்பிய வாசனையூட்டப்பட்ட வாழ்த்து அட்டைகளாக, வியாபார சம்பந்தமான விவரங்களாக, காதல் ஆவணங்களாக, கடைசியாக அவன் திரும்பி வர வேண்டி தனக்கு மோசமான நோய் பீடித்திருப்பதாக பொய்யாகக் குறிப்பிட்ட கைவிடப்பட்ட ஒரு மனைவியின் தார்மீகக் கோபம் கொண்ட கடிதங்களாக அவை இருந்தன. ஒருநாள் இரவு அவள் எழுதி வைத்திருந்த கடிதத்தின் மீது மைகொட்டிவிட்டது. அதை அவள் கிழித்துப்போடவில்லை. மாறாக அதில் ஒரு அடிக்குறிப்பைச் சேர்த்து அனுப்பினாள்: "என் காதலுக்கு சாட்சியாக என் கண்ணீரை அனுப்பி வைக்கிறேன்." அழுது அழுது சோர்ந்த சமயங்களில் தன் பைத்தியக்காரத்தனத்தை எண்ணித் தானே சிரித்துக்கொள்வாள். தபால் கொண்டுவரும் பெண்கள் ஆறுமுறை மாற்றப்பட்டனர். அவர்கள் ஆறுபேருமே அவளுக்கு இந்தப் பணியில் ஒத்துழைப்பு அளித்தனர். இவ்வளவு நடந்தும் அவள் மனதில் முயற்சியைக் கைவிட்டுவிடலாம் என்ற எண்ணம் மட்டும் ஏற்படவில்லை. இருந்தும் அவன் அவளது உன்மத்தத்தை அறியாதவனாகவே இருந்தான். அவள் எழுதிய கடிதங்கள் எல்லாம் உண்மையில் இல்லாத ஒரு நபருக்கு எழுதப்பட்டவை போலாயின.

சம்பவம் நடந்து பத்து வருடங்கள் கழித்து நன்றாகக் காற்று வீசிக்கொண்டிருந்த ஒரு காலைப் பொழுதில் அவளருகில் அவன் அம்மணமாகப் படுத்திருப்பதாக உணர்ந்து விதிர்த்து எழுந்தாள். நடுக்கம் மாறாதவளாக உடன் இருபதுபக்க அளவில் அவனுக்கொரு கடிதம்

எழுதினாள். சிறிதும் கூச்சமின்றி துரதிருஷ்டம் நிரம்பிய அந்த முதலிரவிலிருந்து தனக்குள் கிடந்து புழுங்கிக்கொண்டிருக்கும் கசப்பான உண்மைகளை விவரித்து எழுதினாள். அவளுடம்பில் அவன்விட்டுச் சென்ற என்றென்றைக்கும் மறையாத நகக்கீறல்களைப் பற்றி, அவனது நாவின் காரிப்புச்சுவை பற்றி, அவனது ஆப்பிரிக்க ஆணுறுப்பின் நடுக்குற வைக்கும் தோல் சுருக்கம் பற்றி எழுதினாள். வெள்ளிக்கிழமை மதியம் அவளுடன் சேர்ந்து பூத்தையல் வேலை செய்யவும் கடிதங்களைப் பெற்றுக் கொண்டுபோகவும் வந்த தபால்காரப் பெண்ணிடம் அக்கடிதத்தைக் கொடுத்தாள். தன் மனவலியைக் குறைக்கும் வகையில் அமைந்த அக்கடிதம் தன் வேதனையை முடிவுக்குக் கொண்டு வரும் என நம்பினாள். ஆனால் அக்கடிதத்திற்கும் பதிலில்லை. அதன் பிறகு அவள் என்ன எழுதுகிறோம் யாருக்கு எழுதுகிறோம் என்ற பிரக்ஞையின்றி கடிதங்கள் எழுதினாள். பதினேழு வருடங்களாக இடைவெளியின்றி தொடர்ந்து எழுதிக்கொண்டிருந்தாள்.

ஆகஸ்ட் மாதத்தில் ஒருநாள் நண்பகல் வேளையில் தன் தோழிகளுடன் அமர்ந்து அவள் பூத்தையல் வேலை செய்துகொண்டிருந்தபோது யாரோ வருவது போலிருந்தது. வருவது யாரென்று அறிய அவள் தலையை உயர்த்திப் பார்க்க வேண்டிய தேவையிருக்கவில்லை. "அவர் உடல் பருத்திருந்தது, தலைமுடிகள் கொட்டத் துவங்கியிருந்தன. அருகேயுள்ள பொருட்களைப் பார்க்க அவருக்குக் கண்ணாடி தேவையாயிருந்தது," அவள் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தது போலவே அவனும் அவளை மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்ததை அறிந்து அவள் லேசாக அச்சமுற்றாள். அவன் மீது அவள் கொண்டிருந்த காதலைப் போலவே அவனும் உள்ளுக்குள் அவள்மீது காதல் கொண்டிருந்தான் என்பதையும் அவனால் தாங்கிக்கொள்ள முடியாத அக்காதல், அப்பார்வையில் மறைந்திருந்ததையும் அவள் அறியவில்லை. முதன் முதலாக அவனை அவள் சந்தையில் பார்த்தபோது இருந்தது போலவே அவன் சட்டை அப்போதும் வியர்வையில் நனைந்திருந்தது. அவன் அணிந்திருந்த பெல்ட்டும் அப்போது அணிந்திருந்த பெல்ட்தான். அன்று வைத்திருந்த, வெள்ளிப் பொத்தான்களா ல் அலங்கரிக்கப்பட்ட அதே தைக்கப்படாத முரட்டுத் தோல்பையையே வைத்திருந்தான். அதிர்ச்சியுற்றவர்களாய் நின்று கொண்டிருந்த பூத்தையல்வேலை செய்யும் ஏனைய பெண்களை சட்டை செய்யாமல் ஓரடி முன்னே வந்து தன் பையை தையல் எந்திரத்தின் மீது வைத்தான் பயார்டோ சான் ரோமான்.

"இதோ நான் வந்து விட்டேன்," அவன் சொன்னான்.

அங்கேயே தங்குப் எண்ணத்தோடு ஒரு சூட்கேஸ் நிறைய துணிகளைக் கொண்டு வந்திருந்தான். அதே போன்ற இன்னொரு சூட்கேஸ் நிறைய அவள் அவனுக்கு எழுதிய, கிட்டத்தட்ட இரண்டாயிரம் கடிதங்கள். அவை தேதி வாரியாக அடுக்கப்பட்டு கட்டுக் கட்டாக வண்ண ரிப்பன்களைக் கொண்டு கட்டப்பட்டிருந்தன. அவற்றில் ஒரு கடிதம் கூட பிரிக்கப்பட்டிருக்கவில்லை.

5

பல வருடங்களுக்கு எங்களால் வேறு எதைப்பற்றியும் பேசமுடியவில்லை. தொடர் முறையில் அமைந்த பல மாறாத பழக்கங்களை உள்ளடக்கிய எங்களது தினப்படி அலுவல்கள் திடீரென பொதுவான ஒரு விஷயத்தை சுற்றிச் சுற்றி வந்தன. தொடர்ச்சியான பல விசித்திர நிகழ்வுகளை நாங்கள் ஒழுங்குபடுத்த முயல்வதை அதிகாலைச் சேவல்கள் பார்த்திருக்கும். அந்த விசித்திர நிகழ்வுகள் அபத்தமானதையும் சாத்தியமாக்குபவை. நாங்கள் அச்செயலைச் செய்ததன் காரணம் மர்மங்களை விடுவிக்க வேண்டுமென்ற உந்துதல் அல்ல. மாறாக விதி எங்களுக்குக் கட்டளையிட்டிருந்த அந்த இடம், அந்தப் பணி இவை பற்றிய மிகச் சரியான விவரங்களை அறியாமல் எங்களில் யாராலும் தொடர்ந்து வாழ முடியாதென்ற நிலையில் நாங்கள் இருந்தோம்.

பலருக்கு அது தெரியவே தெரியாது. பின்னாளில் புகழ்பெற்ற ஒரு அறுவை சிகிச்சை நிபுணனாகப் பெயரெடுத்த கிறிஸ்டோ பெடோயாவால் கூட அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. பிஷப் வருவதற்கு இரண்டு மணி நேரம் முன்பு ஓய்வெடுக்க வேண்டி, அதிகாலை முதல் அவனை எச்சரிக்க வீட்டில் அவன் பெற்றோர்கள் காத்திருக்க அங்கு செல்லவேண்டுமென்று தோன்றாமல் வழக்கத்தை மீறி தன் பாட்டி வீட்டுக்குப் போக வேண்டுமென்று தனக்கு எண்ணமேற்பட்டது எதனால் என்பதை அவனாலேயே விளங்கிக் கொள்ள முடியவில்லை. அந்தக் கொலையைத் தடுக்க தங்களால் ஏதேனும் செய்திருக்கமுடியும் என்றபோதிலும் அவ்வாறு செய்யாமல் போனவர்களில் பலர், மானம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் புனிதம்மிக்க சொந்த விஷயங்கள் தொடர்புடையவர்கள் மட்டுமே அதில் சம்பந்தப்பட வேண்டும் என்ற நொண்டிச் சாக்குச் சொல்லி தாங்கள் செய்தது சரிதான் என்று திருப்திப்பட்டுக் கொண்டனர். "மானமே காதல்," என் அம்மா சொல்லக் கேட்டேன். அவள் பார்த்தபோது ரத்தம் பட்டிராத ரத்தக்கறை படிந்த இரண்டு கத்திகளைக் கண்களால் கண்டதனாலேயே ஹார்டென்ஸியா பாடெ தான் ஏதோ குற்றம் புரிந்து விட்டோம் என்றெண்ணி திக்பிரமை பிடித்தவளாகிவிட்டாள். மன உளைச்சல் தாங்க முடியாமல் ஒருநாள் அவள் நிர்வாணமாக தெருவில் ஓடும்படி ஆகிவிட்டது. சாண்ட்டியாகோ நாஸர் மணக்கவிருந்த ஃப்ளோரா மிகுயெல் புத்திமாறாட்டம் வந்தவள்போல் எல்லைப் படையில் லெப்டினென்ட்டாக இருந்த ஒருவனுடன் ஓடிப்போனாள். அவன் அவளை விச்சாதாவில் ரப்பர் தொழிலாளர்களுக்கிடையே விபச்சாரம் செய்யும்படி தள்ளிவிட்டான். மூன்று தலைமுறையினரை இவ்வுலகுக்குக் கொண்டு வருவதில் பெரும்பங்காற்றிய மருத்துவச்சியான அவுரா விலீரோஸ் அந்தக் கொலைச் செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் தன் மூத்திரப் பையை ஏதோ கவ்வுவது போன்ற வலியை உணர்ந்தாள். பிறகு அவள் சாகும்வரை தனியே பொருத்தப்பட்ட குழாய் வழியேதான் சிறுநீர் கழித்தாள். எண்பத்தாறு வயதிலும் அதிசயிக்கும்படியான உடல் வலுவுடன் இருந்த க்ளோடில்டி அர்மென்ட்டாவின் நல்ல கணவரான டான் ரோகிலியோ டி லா

ஃப்ளோர், கடைசியாக எழுந்தது அவன் வீட்டின் பூட்டிய கதவின் மீதே வைத்து சாண்ட்டியாகோ நாஸரை எப்படி அவர்கள் கூறுபோட்டார்கள் என்பதைப் பார்க்கத்தான். அந்த அதிர்ச்சியிலிருந்து அவர் உயிரோடு மீண்டு எழவில்லை. பிளாசிடா லினேரோதான் கடைசி நிமிடத்தில் அந்தக் கதவை சாத்தித் தாழிட்டாள். ஆனால் காலப் போக்கில் தான் செய்த அந்தத் தவறினின்றும் தன்னை அவள் விடுவித்துக் கொண்டாள். "என் மகன் உள்ளே வந்துவிட்டானென்று டிவினா ஃப்ளோர் நிச்சயமாகச் சொன்னதால்தான் நான் கதவைச் சாத்தினேன்," அவள் என்னிடம் சொன்னாள், "ஆனால் அவள் சொன்னது உண்மையில்லை." அதோடு சாண்ட்டியாகோ நாஸரின் கனவில் நல்ல சகுனத்தை உணர்த்திய மரங்களை மட்டுமே கவனம் கொண்டாள் அவள். கனவில் அவன் கண்ட பறவைகள் உணர்த்திய கெட்ட சகுனத்தை உணராமல் போனதற்காக தன்னை மன்னிக்கத் தயாராயில்லாத அவள் அந்தக் காலத்தில் மிக மோசமான கெட்ட பழக்கமாக கருதப்பட்ட பெப்பர் கிரஸ் விதைகளை மெல்லும் பழக்கத்திற்கு அடிமையானாள்.

சம்பவம் நடந்து பன்னிரண்டு நாட்களுக்குப்பிறகு வந்த விசாரணை நீதிபதி கட்டுப்போடப்படாத காயம் போலிருந்த அந்த நகரத்தைப் புரிந்து கொள்ளத் துவங்கினார். மரத்தாலான அழுக்கு நகர்மன்ற அலுவலகத்தில் வெம்மையினால் ஏற்பட்ட கானல் நீருக்கு முன்பாக பீங்கான் கூஜாவில் கொண்டுவரப்பட்ட கரும்புச் சாராயம் சேர்த்த காப்பியை அருந்திக் கொண்டிருந்தார். ஆர்வ மிகுதியினால், நடந்த சம்பவத்தில் தாங்கள் வகித்த முக்கிய பங்கு பற்றி சாட்சியம் சொல்ல யாரும் அழைக்காமலேயே அங்கு குவியத் தொடங்கிய ஆட்களைக் கட்டுப்படுத்த சிறப்புக் காவல் படையை அவர் வரவழைக்க வேண்டியதாயிற்று. அவர் அப்போதுதான் புதிதாகப் பட்டம் பெற்றிருந்தார். சட்டக் கல்லூரியில் அணியும் கருப்புக் கோட்டையே இன்னமும் அணிந்திருந்தார். அவர் வாங்கிய பட்டத்தினைக் குறிக்கும் இலச்சினை கொண்ட தங்க மோதிரத்தையும் அணிந்திருந்தார். சமீபத்தில்தான் ஒரு குழந்தைக்கு தந்தையாகியிருந்த அடையாளங்களையும் அதையொட்டிய சந்தோஷங்களையும் அவரிடம் காண முடிந்தது. இருபது வருடங்கள் கழித்து பலரது உதவியின் மூலம் ரியோஹச்சா நீதிமன்றத்தில் நான் பார்க்க முடிந்த விசாரணை அறிக்கையிலிருந்தே அவரைப் பற்றிய குணாதிசயங்கள் தெரிய வந்தன. இரண்டு நாட்களுக்கு சர் பிரான்சிஸ் டிரேக்கின் தலைமை அலுவலகமாக இருந்த, அப்போது சிதிலமடைந்து கொண்டிருந்த அந்தக் காலனிய கட்டிடத்தின் தரையில் ஒரு நூற்றாண்டு கால வழக்குகளும் பலவித கோப்புகளும் எவ்வித வகைபிரிப்பும் இன்றி அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அலைகள் உயர்ந்து வரும்போது அக்கட்டிடத்தின் கீழ்த்தளம் முழுவதிலும் நீர் புகுந்து விடும். கட்டுறுதி செய்யப்படாத கோப்புகள் கைவிடப்பட்ட அலுவலகங்களைச் சுற்றி மிதந்து கொண்டிருக்கும். பலமுறை அந்த 'தொலைந்து போன நியாயங்களின் ஏரி' யின் கணுக்கால் அளவு தண்ணீரில் இருந்தபடி தேடியிருக்கிறேன். ஐந்து வருடங்கள் தேடிய பிறகுதான் ஐநூறு பக்கங்களுக்கு மேல் கொண்டிருந்ததாக நம்பப்பட்ட அந்த விசாரணை அறிக்கையிலிருந்து

உருவப்பட்ட முன்னூற்று முப்பத்தியிரண்டு பக்கங்களை என்னால் மீட்க முடிந்தது.

நான் கண்டெடுத்த அறிக்கையின் பக்கங்கள் எதிலும் விசாரணை நீதிபதியின் பெயர் காணப்படவில்லை. ஆனால் அவர் இலக்கியத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தவர் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. அவர் ஸ்பானிய செவ்விலக்கியங்கள் அனைத்தையும் சில லத்தீன் செவ்விலக்கியங்களையும் படித்திருந்தார் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி விளங்கியது. அந்தக் காலத்தில் நீதிபதிகளிடையே மிகவும் பிரபலமாகியிருந்த நீட்சேவையும் அவர் நன்றாகக் கற்றிருந்தார். பக்கங்களின் ஓரங்களில் அவர் எழுதியிருந்த குறிப்புகள் ரத்தத்தால் எழுதப்பட்டது போலத் தோன்றியதற்கு எழுதப்பட்டமையின் நிறம் மட்டும் காரணமல்ல. தற்செயலாக அவருக்கு உண்டான இரண்டும் கெட்டான் மனநிலையிலிருந்து எழுந்த குழப்பத்தினால் பலநேரம் தனது அறிக்கைக்கு ஒவ்வாத வகையிலும் ஒரு விசாரணை அதிகாரிக்குரிய கடுமைக்கு மாறாகவும் கவித்துவமானதொரு நடையைப் பயன்படுத்தியிருந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக, துல்லியமாக முன்னறிவிக்கப்பட்ட ஒரு மரணம் எந்த இடையூறுமின்றி நடந்தேறவேண்டுமென்பதற்காக பல்வேறு ஆச்சரிய நிகழ்வுகளும் விலக்கப்பட்டதான இலக்கியத்தை விதி பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பது சட்டபூர்வமானதுதான் என்பதை ஒருபோதும் அவர் நினைத்துப் பார்க்கவில்லை.

இருந்தும் அவர் மிக சிரமப்பட்டு மேற்கொண்ட விசாரணையின் முடிவில் அந்தத் தவறை இழைத்தவன் சாண்ட்டியாகோ நாஸர்தான் என்பதற்கான ஒரு ஆதாரம் கூட, சொல்லப்போனால் ஒருதலைப்பட்சமான ஒரு ஆதாரம் கூட கிடைக்கவில்லை. அந்த ஏமாற்று வேலையில் ஏஞ்செலா விகாரியோவுக்கு உதவி புரிந்த அவள் தோழிகள், திருமணத்துக்கு முன்பே தங்களிடம் அந்த ரகசியத்தை அவள் தெரிவித்திருந்தாள் என்று நெடுநாட்களாகக் கூறிவந்தனர். ஆனால் அவள் அந்த ஆள் யாரென்று சொல்லவில்லை எனவும் தெரிவித்திருந்தனர். அறிக்கையில் இப்படி இருந்தது: "அவள் அற்புதத்தைப் பற்றி மட்டுமே சொன்னாள். அதை நிகழ்த்தியவரைப் பற்றி எதுவும் சொல்லவில்லை." தன் பங்குக்கு ஏஞ்செலா விகாரியோவும் அசைந்து கொடுக்கவில்லை. உண்மையிலேயே சாண்ட்டியாகோ நாஸருக்கும் அவளுக்கும் என்ன தொடர்பு என பலவிதத்திலும் நைச்சியமாகப் பேசி விசாரணை நீதிபதி கேட்டதற்கு எவ்வித உணர்ச்சியையும் வெளிக்காட்டாமல் பதில் சொன்னாள்.

"என்னை நாசமாக்கியவன் அவன்."

விசாரணை அறிக்கையில் அவள் இவ்வாறு கூறித்தான் சத்தியப் பிரமாணம் செய்திருந்தாள். ஆனால் அது நடந்தது எப்படி என்றோ, எங்கே என்றோ அவள் குறிப்பிட்டிருக்கவில்லை. மூன்று நாட்களே நீடித்த நீதிமன்ற விவாதங்களின் போது தன் திறமையையெல்லம் பயன்படுத்தி பாதிக்கப்பட்டவர் சாட்டிய குற்றத்தின் பலகீனத் தன்மையையே முக்கிய

ஆதாரமாக வைத்து வாதாடினார் அரசுத் தரப்பு வழக்கறிஞர். சாண்டியாகோ நாஸர்மீது குற்றம் சுமத்தப் போதுமான ஆதாரமில்லாததை உணர்ந்ததனால் விசாரணை நீதிபதிக்கு ஏற்பட்ட ஏமாற்றம் எந்த அளவுக்கு இருந்ததென்றால் அவரது அறிக்கை சிலநேரம் அவநம்பிக்கையினால் குலைந்தது போலக் காணப்பட்டது. நானூற்றுப் பதினாறாவது பக்கத்தில் ஓரமாக மருந்துக் கடைக்காரனின் சிவப்பு மை கொண்டு அவரே தன் கைப்பட எழுதினார்: "ஒருபக்கச் சார்பானஆதாரம் ஒன்றையாவது காட்டுங்கள், நான் இந்த உலகைப் புரட்டிக் காட்டுகிறேன்." அவநம்பிக்கை தொனிக்கும் இந்த வாக்கியத்தின் கீழ் உற்சாகமூட்டும் வகையில் அதே ரத்த நிற மையில் அம்பு துளைத்த ஒரு இதயத்தின் படத்தை வரைந்திருந்தார். சாண்ட்டியாகோ நாஸர் சாகப்போவதற்கு சிலமணி நேரங்கள் முன்பு அவர்கள் கண்ட அவனது நடத்தையே அவன் குற்றமற்றவன் என்பதற்கான அசைக்கமுடியாத ஆதாரம் என அவனுக்கு நெருக்கமான நண்பர்கள் கருதியது போலவே அவரும் கருதினார். தன்மேல் சுமத்தப்பட்டப் பழிக்கு என்னவிலை கொடுக்கப் போகிறோம் என்பதை அறிந்திருந்த போதும், தான் சாகவிருந்த அன்று காலை சாண்ட்டியாகோ நாஸருக்கு சம்சயம் எதுவும் இருக்கவில்லை. மிகவும் உத்தமசீலர்களாய் காட்டிக்கொள்ளும் இந்த உலகினரின் குணாதிசயத்தைப் பற்றியும் அவன் நன்கு அறிந்திருந்தான். அதோடு அந்த இரட்டைச் சகோதரர்கள் எந்த அவமானத்தையும் பொறுத்துக் கொள்ளக் கூடியவர்கள் அல்ல என்பதையும் அவன் அறிந்தவனாகவே இருந்தான். பயார்டோ சான் ரோமான் பற்றி முழுவதுமாக அறிந்தவர்கள் யாருமில்லை. ஆனால் அவனது கண்ணியமான வெளித்தோற்றத்தினடியில் எல்லாரையும் போலவே அவனுக்கேயுண்டான ஒருதலைப்பட்சமான எண்ணங்களை அவன் கொண்டிருந்ததை அறியுமளவுக்கு சாண்ட்டியாகோ நாஸர் அவனைப் பற்றி புரிந்து வைத்திருந்தான். எனவே இது விஷயத்தில் அவன் கவனக்குறைவாக இருப்பது மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்துமென்றும் உணர்ந்திருந்தான். அதுமட்டுமல்ல, விகாரியோ சகோதரர்கள் அவனைக் கொல்லக் காத்திருப்பதை கடைசி நேரத்தில் அறிந்தபோது எல்லாரும் சொல்வது போல அவன் பீதியடையவில்லை. மாறாக அதை அறிந்தபோது தன்மீது குற்றம் சுமத்தப்படுகையில் குற்றமற்ற ஒருவனுக்கு ஏற்படும் அச்சமே அவனுக்குப் ஏற்பட்டது.

என்னுடைய சொந்தக் கருத்து என்னவென்றால் அவன் தன் மரணத்தைப் புரிந்து கொள்ளாமலேயே மரணமடைந்தான் என்பதுதான். என் சகோதரி மார்கட்டிடம் காலை உணவுக்கு எங்கள் வீட்டுக்கு வருவதாக வாக்களித்தபின் புஜத்தைப் பற்றியபடி படகுத்துறை வழியாக கிறிஸ்டோ பெடோயா அவனை அழைத்துச் சென்றான். தவறான அபிப்ராயங்கள் தோன்றத் தாங்கள் காரணமாக இருந்ததைப் பற்றி இருவருமே உணரவில்லை. "இருவரும் நிம்மதியாகப் போய்க்கொண்டிருந்தனர்." மெமி லோய்ஸா என்னிடம் சொன்னாள், "பிரச்சனை முடிந்துவிட்டதென எண்ணி கடவுளுக்கு நான் நன்றி சொன்னேன்." சொல்லப்போனால் எல்லோருமே அளவுக்கு அதிகமாக சாண்ட்டியாகோ நாஸரை நேசித்தவர்கள் இல்லை. அவனது

அமைதியான குணம் தன்னடக்கமல்ல, சர்வத்தின் அடையாளம் என நினைத்தார் மின் உற்பத்தி நிலையம் வைத்திருந்த போலோ காரிலோ. "தன்னிடமிருந்த பணம் யாரும் தொடமுடியாத ஒரு உயரத்தில் தன்னை வைத்திருப்பதாக அவன் நினைத்திருந்தான்" அவர் என்னிடம் சொன்னார். "எல்லாத் துருக்கியரும் நினைப்பது போல," அவர் மனைவி ஃபாஸ்டா லோபஸ் சொன்னாள். இன்டாலிஸியோ பார்டோ அப்போதுதான் க்ளோடில்டி அர்மென்ட்டாவின் கடையைக் கடந்து வந்திருந்தார். பிஷப் புறப்பட்ட உடனேயே தாங்கள் சாண்ட்டியாகோ நாஸரைக் கொல்லத் திட்டமிட்டிருப்பதாக இரட்டைச் சகோதரர்கள் அவரிடம் தெரிவித்திருந்தனர். மற்றவர்கள் நினைத்தது போலவே தூக்கக் கலக்கத்தில் அவர்கள் உளருவதாக அவரும் நினைத்தார். க்ளோடில்டி அர்மென்ட்டாதான் அது உண்மையென அவருக்குப் புரியவைத்தாள். அதோடு சாண்ட்டியாகோ நாஸரிடம் சென்று அவனை எச்சரிக்கும்படியும் கேட்டுக்கொண்டாள். "ரொம்பவும் பிரயாசைப்பட வேண்டாம்," பெட்ரோ விகாரியோ அவரிடம் சொன்னான், "என்ன நடந்தாலும் சரி அவன் இப்போதே செத்துப்போன கணக்குத்தான்."

அது மிகவும் வெளிப்படையான ஒரு சவாலாக இருந்தது. இன்டாலிஸியோ பார்டோவுக்கும் சாண்ட்டியாகோ நாஸருக்கும் இடையிலான பிணைப்பு பற்றி அவர்கள் அறிந்திருந்தனர். சொன்னதை நிறைவேற்ற முடியாத அவமானத்துக்கு ஆளாகவும் கூடாது; அதே நேரம் கொலைநடக்காமல் தடுக்கவும் வேண்டுமென்றால் அதற்கு சரியான ஆள் அவர்தான் என அவர்கள் நினைத்தனர். படகுத்துறையிலிருந்து கிளம்பிக்கொண்டிருந்த கூட்டத்தினரிடையே கிறிஸ்டோ பெடோயா சாண்ட்டியாகோ நாஸரை புஜத்தைப் பற்றி அழைத்துச் செல்வதைப் பார்த்தார் இன்டாலிஸியோ பார்டோ. அவர் அவனை எச்சரிக்கத் துணியவில்லை. "என் தைரியம் ஒடுங்கிவிட்டது," அவர் என்னிடம் சொன்னார். அவர்கள் இருவரது முதுகிலும் தட்டி, வழியே அவர்களைப் போகவிட்டார். திருமணத்துக்கு ஆன செலவுகள் பற்றிய கணக்கில் மூழ்கியிருந்ததால் அவர் முதுகில் தட்டியதைக் கூட அவர்கள் உணரவில்லை.

அவர்கள் சென்ற வாக்கிலேயே கூட்டம் கலைந்து மக்களும் சதுக்கம் நோக்கி சென்று கொண்டிருந்தனர். கூட்டம் மிகுதியாயிருந்தது. இருப்பினும் கூட்டத்தின் நடுவே அவர்கள் சிரமம் ஏதுமின்றி நடந்துகொண்டிருக்க அவர்களைத் தொடாமல் சுற்றிலும் வளையம் அமைத்தது போல் மக்கள் சென்றுகொண்டிருந்ததை தான் கவனித்ததாகச் சொன்னாள் எஸ்கோலாஸ்டிகா சிஸ்னெரோஸ். காரணம் என்னவென்றால் சாண்ட்டியாகோ நாஸர் சாகப்போவதை அவர்கள் அறிந்திருந்தனர். அவனைத் தொட அவர்களுக்குத் துணிவில்லை. தங்களை மக்கள் ஒருமாதிரியாகப் பார்த்ததை கிறிஸ்டோ பெடோயாவும் நினைவு கூர்ந்தான். "முகத்தில் நாங்கள் ஏதோ வண்ணம் பூசிக்கொண்டிருப்பதைப் போல அவர்கள் எங்களைப் பார்த்துக்கொண்டிருந்தனர்" அவன் என்னிடம் சொன்னான். அவர்கள் கடந்து சென்று கொண்டிருந்தபோது தன் ஷூ கடையைத் திறந்து கொண்டிருந்த சாரா நொரீகாவும் வெளுத்துப்போய்க்

காணப்பட்ட சாண்ட்டியாகோ நாஸரைப் பார்த்து அச்சமடைந்தாள். சாண்ட்டியாகோ நாஸர் அவளை சாந்தப்படுத்தினான்.

"உங்களுக்கே தெரியும், சாரா," நிற்காமல் நடந்து சென்றபடியே அவன் சொன்னான் "இந்த களேபரத்தில் எல்லாம் இப்படித்தான் இருக்கும்."

பிஷப்பை வரவேற்கச் செல்பவர்களை நையாண்டி செய்தபடி தன்வீட்டுக் கதவருகே இரவு உடையில் அமர்ந்திருந்தார் செலஸ்டி டான்கோன்ட். காபி அருந்திச் செல்லும்படி அவர் சாண்ட்டியாகோ நாஸரை அழைத்தார். "யோசிக்கச் சற்று அவகாசம் கிடைக்கும் என்ற வகையிலேயே அவனை அழைத்தேன்," என்னிடம் அவர் சொன்னார். ஆனால் என் சகோதரியோடு காலை உணவருந்த வேண்டியிருப்பதால் உடைமாற்றவென வேகமாகச் செல்வதாகச் சொன்னான் சாண்ட்டியாகோ நாஸர். "எனக்கு ஒன்றுமே புரியவில்லை," செலஸ்டி டான்கோன்ட் என்னிடம் சொன்னார், "தான் செய்யப்போவது இன்னதென திட்டமாக அவன் அறிந்திருந்ததால் அவர்கள் அவனைக் கொல்ல முடியாது என்று திடீரென எனக்குள் ஒரு எண்ணம் உண்டானது" யாமில் ஷயூம் மட்டுமே தான் சொன்னதைச் செய்தார். செய்தியைக் கேட்ட மாத்திரத்திலேயே சாண்ட்டியாகோ நாஸரை எச்சரிக்க வேண்டி தமது தானியக்கிடங்கின் கதவருகே சென்று காத்திருந்தார். இப்ராஹிம் நாஸருடன் வந்து அங்கு குடியேறிய அராபியர்களுள் கடைசியாக எஞ்சியிருந்தவர்களில் அவரும் ஒருவர். இப்ராஹிம் நாஸர் இறக்கும்வரை சீட்டாட்டத்தில் அவரது சகாவாக விளங்கியவர் யாமில் ஷயூம். அப்போதும் சரி இப்போதும் சரி சாண்ட்டியாகோ நாஸரது குடும்பத்துக்கு ஆலோசனைகள் வழங்கியும் வந்தார். அவரைப்போல கண்டிப்புடனும் அதிகாரத்தோடும் சாண்ட்டியாகோ நாஸருடன் பேசுபவர்கள் யாருமில்லை. இருந்தும் தான் கேட்ட செய்தி ஆதாரமற்ற வெறும் வதந்தியாக இருக்கும்பட்சத்தில் தேவையில்லாமல் அவனைக் கலவரப்படுத்தியதாகிவிடுமே என்றும் எண்ணினார். அதுபற்றி கிறிஸ்டோ பெடோயா விவரமாகத் தெரிந்துவைத்திருக்கும் பட்சத்தில் அவனிடமே பேசுவதென முடிவு செய்தார். அவரைக் கடந்து போகையில் அவனை அவர் அழைத்தார். சதுக்கத்தின் மூலையை அடைந்துவிட்டிருந்த சாண்ட்டியாகோ நாஸரின் முதுகில் தட்டிய கிறிஸ்டோ பெடோயா யாமில் ஷயூமை நோக்கி வருகிறேன் என்றான். சாண்ட்டியாகோ நாஸரிடம் "சனிக்கிழமை பார்ப்போம்," என்றான்.

சாண்ட்டியாகோ நாஸர் பதிலேதும் சொல்லவில்லை. ஆனால் யாமில் ஷயூமிடம் அரபியில் ஏதோ சொன்னான். அதற்கு உரக்கச் சிரித்தபடியே அவரும் ஏதோ பதில் சொன்னார். "வழக்கமாக நகைச்சுவையாக நாங்கள் விளையாடும் வார்த்தை விளையாட்டு அது," என்னிடம் சொன்னார் யாமில் ஷயூம். நொடியும் தாமதிக்காமல் இருவரையும் நோக்கி கை அசைத்துவிட்டு சதுக்கத்தின் மூலையில் திரும்பி நடந்தான் சாண்ட்டியாகோ நாஸர். அதுதான் அவனை அவர்கள் கடைசியாகப் பார்த்தது.

யாமில் ஷயூம் சொன்ன செய்தியைக் கேட்டதுதான் தாமதம். சாண்ட்டியாகோ நாஸரைத் தேடி கிடங்கிலிருந்து ஓடிவந்தான் கிறிஸ்டோ

பெடோயா. மூலையில் அவன் திரும்பியதைப் பார்த்திருந்தான். ஆனால் சதுக்கத்திலிருந்து கலைந்து சென்று கொண்டிருந்த கூட்டத்தில் அவனைக் காணவில்லை. பலரிடமும் அவன் விசாரித்தபோது அவர்கள் எல்லாரும் ஒரே பதிலையே சொன்னார்கள்.

"இப்போதுதானே அவனை உன்னுடன் பார்த்தேன்."

இந்த இடைப்பட்ட நேரத்தில் நிச்சயம் அவன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்திருக்க முடியாது. இருந்தும் அவன் வந்தானா என விசாரிக்க அவன் வீட்டுக்குச் சென்றபோது முன்கதவு சாத்தப்படாமல் லேசாகத் திறந்திருப்பதைக் கண்டான். தரையில் கிடந்த கடிதத்தைப் பார்க்காமலே அவன் உள்ளே சென்றான். எந்த சத்தமும் எழுப்பக்கூடாது என்ற எண்ணத்துடன், அரையிருட்டில் கிடந்த புழங்கும் அறை வழியாகச் சென்றான். ஏனென்றால் அது வீட்டினுள் வெளியாட்கள் பிரவேசிக்கும் நேரம் இல்லை. ஆனால் வீட்டின் பின்புறமிருந்த நாய்கள் விழித்துவிட்டிருந்தன. அவை அவனை நோக்கி வந்தன. அவற்றின் எஜமானனிடமிருந்து கற்றுக்கொண்டபடி கையிலிருந்த சாவிகளைக் கொண்டு ஓசையெழுப்பி அவற்றை அமைதிப்படுத்தினான். ஒரு வாளியில் தண்ணீரும் கந்தைத் துணிகளுமாக புழங்கும் அறையை சுத்தம் செய்ய வந்துகொண்டிருந்த டிவினா ஃப்ளோரை தாழ்வாரத்தில்கண்டான். சாண்ட்டியாகோ நாஸர் இன்னும் வரவில்லையென அவள் உறுதிபடச் சொன்னாள். அவன் சமையலறைக்குள் நுழைந்த வேளை அப்போதுதான் முயல்கறியை அடுப்பில் வைத்திருந்தாள் விக்டோரியா கஸ்மான். அவள் உடனே புரிந்து கொண்டாள். "அவர் மிகவும் பயந்துபோயிருந்தார்," அவள் என்னிடம் சொன்னாள். சாண்ட்டியாகோ நாஸர் வந்துவிட்டானா என அவன் கேட்டான். ஒன்றுமறியாதவள் போல் முகத்தை வைத்துக்கொண்டு அவன் இன்னும் உறங்கவரவில்லையென்பதை தெரிவித்தாள்.

"நிலைமை மிகவும் ஆபத்தானது," கிறிஸ்டோ பெடோயா அவளிடம் சொன்னான், "அவர்கள் அவனைக் கொல்ல தேடிக் கொண்டிருக்கின்றனர்." விக்டோரியா கஸ்மான் தன்னையுமறியாமல் தனது ஒன்றுமறியாத்தன்மையை கைவிட்டாள்.

"பாவம் அவர்கள். யாரையும் அவர்கள் கொல்லமாட்டார்கள்."

"சனிக்கிழமையிலிருந்தே அவர்கள் குடித்துக்கொண்டிருக்கிறார்கள்," கிறிஸ்டோ பெடோயா சொன்னான்.

"அதனால்தான் சொல்கிறேன்," அவள் சொன்னாள், "இந்த உலகில் எந்தக் குடிகாரனும் தன் மலத்தை தானே தின்பதில்லை."

கிறிஸ்டோ பெடோயா திரும்பவும் புழங்கும் அறைக்குச் சென்றான். அந்த அறையின் ஜன்னல்களை அப்போதுதான் திறந்திருந்தாள் டிவினா ஃப்ளோர். "சொல்லப் போனால் அப்போது மழை ஏதும் பெய்துகொண்டிருக்கவில்லை," கிறிஸ்டோ பெடோயா என்னிடம் சொன்னான். "அப்போது மணி ஏழை நெருங்கிக் கொண்டிருந்தது. பொன்னிறச் சூரியன் ஜன்னல் வழியாக உள்நுழைய ஆரம்பித்துவிட்டிருந்தது". புழங்கும் அறை வழியாக சாண்ட்டியாகோ நாஸர்

வரவில்லையென நிச்சயமாகத் தெரியுமா என மறுபடியும் அவன் டிவினா ஃப்ளோரை வினவினான். முதல் தடவை சொன்னதுபோல இப்போது அவள் உறுதியான ஒரு பதிலைச் சொல்லவில்லை. அடுத்து அவன் பிளாசிடா லினேரோவைப் பற்றி வினவினான். சற்று முன்புதான் அவளது இரவு மேசையில் தான் காப்பியை வைத்துவிட்டு வந்ததாகவும் அவள் இன்னும் எழுந்திருக்கவில்லையென்றும் சொன்னாள். அது வழக்கமாக நடப்பதுதான். ஏழு மணிக்கு எழுந்து அவள் காப்பியை அருந்துவாள். பிறகு கீழே வந்து மதியத்துக்கு என்ன சமைக்க வேண்டுமென்று சொல்வாள். கிறிஸ்டோ பெடோயா சுவரிலிருந்த கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஐந்து ஐம்பத்து ஆறு. சாண்ட்டியாகோ நாஸர் வரவில்லை என்பதை உறுதி செய்துகொள்ள அவன் இரண்டாவது தளத்துக்குச் சென்றான்.

சாண்ட்டியாகோ நாஸரின் படுக்கையறை உட்புறமாகத் தாழிடப்பட்டிருந்தது. காரணம் அவன் தன் அம்மாவின் படுக்கையறைவழியாக தன் படுக்கையறைக்கு வந்திருந்தான். தன் சொந்த வீட்டைப்போல அவ்வீட்டை நன்கு அறிந்ததோடு மட்டுமன்றி அதைத் தன் சொந்த வீடாக பாவிக்கவும் செய்தான் கிறிஸ்டோ பெடோயா. பிளாசிடா லினேரோவின் படுக்கையறைக் கதவைத் தள்ளித் திறந்தவன் அதனூடாகச் சென்று அதனையொட்டியிருந்த இன்னொரு அறைக்குள் நுழைந்தான். கூரையிலிருந்த சிறு திறப்பு வழியாக தூசு நிறைந்த ஒளிக்கற்றை உள்நுழைந்து கொண்டிருந்தது. அழகான பெண்ணொருத்தி ஏணையில் ஒருக்களித்துப் படுத்திருந்தாள். அவள் கன்னத்தின் மீதிருந்த மணப்பெண்ணுடையது போன்ற அவள் கரம் பார்க்க விசித்திரமானதாகத் தோன்றியது. "அது ஒரு மாயக்கனவு போலிருந்தது" கிறிஸ்டோ பெடோயா என்னிடம் சொன்னான். அந்த அழகினால் கவரப்பட்டு ஒரு கணம் அவளைப் பார்த்தபடியே நின்றவன் பிறகு அமைதியாக அறையைக் கடந்து நடந்தான். குளியலறையைத் தாண்டி சாண்ட்டியாகோ நாஸரின் படுக்கையறைக்குள் நுழைந்தான். படுக்கை இன்னும் ஒழுங்குபடுத்தப்படாமல் இருந்தது. நாற்காலி மீது நன்கு தேய்க்கப்பட்ட சவாரிக்கான உடைகள் இருந்தன. உடைகளின் மேல் குதிரைச் சவாரியின் போது அணியும் தொப்பி இருந்தது. தரையில் குதிரையை விரட்டப் பயன்படும் வளையங்களுடன் அவனது பூட்சுகள் காணப்பட்டன. இரவு மேசையிலிருந்த சாண்ட்டியாகோ நாஸரின் கைக்கடிகாரம் மணி ஆறு ஐம்பத்தெட்டு எனக் காட்டியது. "சட்டென்று, ஆயுதம் எதையேனும் எடுத்துச் செல்வதற்காக அவன் திரும்ப வந்திருக்கலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது," கிறிஸ்டோ பெடோயா என்னிடம் சொன்னான். ஆனால் அவனது மாக்னம் துப்பாக்கி இரவு மேசையின் இழுப்பறையிலேயே இருப்பதைப் பார்த்தான். "ஒருபோதும் நான் துப்பாக்கி சுட்டுப் பழகியதே இல்லை," கிறிஸ்டோ பெடோயா என்னிடம் சொன்னான், "இருப்பினும் துப்பாக்கியைக் கொண்டுபோய் சாண்ட்டியாகோ நாஸரிடம் கொடுப்பது எனத் தீர்மானித்தேன்." பெல்ட்டின் அடியில் சட்டைக்குள்ளாக அதை செருகிக் கொண்டவன் கொலைநடந்த பிறகே அதில் குண்டுகள் இல்லை என்பதை அறிய நேர்ந்தது. மேசை இழுப்பறையை அவன் சாத்திக்

கொண்டிருந்தபோது கையில் காப்பிக் குவளையுடன் பிளாசிடா லினேரோ கதவருகே வந்தாள்.

"கடவுளே" அவள் சொன்னாள், "நான் பயந்தே போய்விட்டேன்."

கிறிஸ்டோ பெடோயாவும்கூட பயந்துதான் போனான். தங்க நிறத்தில் வானம்பாடிகள் வரைந்திருந்த உடைமாற்றும் கவுனை அவள் அணிந்திருந்தருந்தாள். தலைமுடி கலைந்துகிடக்க இயல்பான வசீகரம் குன்றியவளாக முழுவெளிச்சத்தில் அவளைக் கண்டான். சற்றே குழம்பியவனாக தான் சாண்ட்டியாகோ நாஸரைத் தேடிக் கொண்டிருப்பதாகச் சொன்னான்.

"அவன் பிஷப்பை வரவேற்க சென்று விட்டான்," பிளாசிடா லினேரோ சொன்னாள்.

"அவன் அப்படியே நேராகச் சென்று விட்டானா?" அவன் கேட்டான்.

"அப்படித்தான் நினைக்கிறேன்," அவள் சொன்னாள், "மிகமோசமான தாய் வளர்த்த பிள்ளை அவன்."

அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் கிறிஸ்டோ பெடோயா திகைத்து நின்றதைப் பார்த்தவள் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. "கடவுள் என்னை மன்னிப்பாரென்று நம்புகிறேன்," பிளாசிடா லினேரோ என்னிடம் சொன்னாள், "அவன் அத்தனைக் குழப்பத்தில் இருப்பதைப் பார்த்தபோது எதையோ திருடிப்போகத்தான் அவன் வந்திருக்க வேண்டுமென நினைத்தேன்." என்ன பிரச்சினை என அவள் அவனைக் கேட்டாள். தன்னை அவள் சந்தேகப்படுகிறாள் என்பதை கிறிஸ்டோ பெடோயா உணர்ந்துகொண்டான். ஆனாலும் உண்மையைச் சொல்ல அவனுக்குத் துணிவில்லை, "ஒரு நிமிடம்கூட நான் உறங்கியெழவில்லை" அவளிடம் அவன் சொன்னான். மேற்கொண்டு எதுவும் பேசாமல் அவன் அங்கிருந்துச் சென்றான். "எப்படிப் பார்த்தாலும்," அவன் என்னிடம் சொன்னான், "நான் எதையோ திருடிச் செல்வதாகத்தான் அவள் நினைத்திருப்பாள்". சதுக்கத்தில் அமடோர் பாதிரியார் அவன் எதிரேவந்தார். திருப்பலிக்கென அணிந்த சிறப்பு உடையுடன், திருப்பலி நடக்காததால் ஏற்பட்ட கடுகடுப்புடன் திரும்பி வந்துகொண்டிருந்தார். அவன் ஆன்மாவைக் காப்பாற்றுவதைத் தவிர வேறெதையும் அவர் சாண்ட்டியாகோ நாஸருக்காகச் செய்ய முடியாது என அவனுக்குத் தோன்றியது. க்ளோடில்டி அர்மென்ட்டாவின் கடையிலிருந்து அவனை அவர்கள் அழைத்தபோது அவன் படகுத்துறை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். பெட்ரோ விகாரியோ கதவருகே நின்றுகொண்டிருந்தான். சோர்ந்து போய், வருத்தமுற்றதுபோல் காணப்பட்டான். சட்டையை முழங்கை வரைக்கும் சுருட்டி விட்டிருந்தான். வெளிப்படையாக, பலரும் பார்க்கும் வகையில் கையில் கத்தியை வைத்திருந்தான். அவனது தோற்றத்தில் காணப்பட்ட மூர்க்கத்தனம் இயற்கையானதாக இல்லை. வலிந்து ஏற்படுத்திக் கொண்டதுபோல் காணப்பட்டது. கிறிஸ்டோ பெடோயாவிடம் மட்டுமல்லாமல் அந்தக் கடைசி நிமிடங்களில், பலரிடமும் எப்படியேனும் கொலைநடைபெறாமல் தடுக்க வேண்டி

தாங்கள் செய்யப்போவதை முன்கூட்டியே தெரிவித்தனர்.

"கிறிஸ்டோபல்," அவன் கத்தினான், "சாண்ட்டியாகோ நாஸரிடம் அவனைக் கொல்ல நாங்கள் இங்கே காத்திருப்பதாகச் சொல்."

அந்தக் கொலையை தடுக்க கிறிஸ்டோ பெடோயா அவர்களுக்கு உதவியிருக்கமுடியும். "எனக்குத் துப்பாக்கி சுடுவது எப்படி என்பது மட்டும் தெரிந்திருந்தால் இன்றைக்கு சாண்ட்டியாகோ நாஸர் உயிரோடு இருந்திருப்பான்," அவன் என்னிடம் சொன்னான். கடின உலோகத்தாலான ஒரு துப்பாக்கிக் குண்டின் சக்தியைப் பற்றி பிறர் சொல்லக்கேட்டு அறிந்த பின்னர் அவனது இந்த எண்ணத்தை அவனே மெச்சிக்கொண்டான்.

"உன்னை எச்சரிக்கிறேன். ஒரு ரயில் எஞ்சினைக் கூட துளைத்துச் செல்லும் அளவுக்கு சக்தி வாய்ந்த மாக்னம் துப்பாக்கி அவனிடம் இருக்கிறது," அவன் பதிலுக்குக் கத்தினான்.

அது நிஜமில்லையென்று பெட்ரோ விகாரியோவுக்குத் தெரியும். "சவாரிக்கான உடை அணிந்திருக்கும்போது தவிர்த்து அவன் எப்போதும் துப்பாக்கியுடன் சென்றதில்லை," அவன் என்னிடம் சொன்னான். எப்படிப் பார்த்தாலும் தன் சகோதரிக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்க அவன் முடிவெடுத்துவிட்ட பிறகு சாண்ட்டியாகோ நாஸர் துப்பாக்கியுடன் வரப்போவதில்லை என்பதில் அவன் உறுதியாக இருந்தான்.

"செத்துப் போனவனால், துப்பாக்கியால் சுட முடியாது," அவன் திரும்பக் கத்தினான்.

அப்போது பாப்லோ விகாரியோ கடையின் கதவருகே தோன்றினான். தன் சகோதரனைப் போலவே அவனும் சோர்ந்து காணப்பட்டான். திருமணத்துக்கென தைத்திருந்த கோட்டை அணிந்திருந்தான். கத்தியை செய்தித்தாளில் சுற்றிக் கையில் பிடித்திருந்தான். "இந்த வித்தியாசம் மட்டும் இல்லையென்றால்," கிறிஸ்டோ பெடோயா என்னிடம் சொன்னான். "என்னால் அவர்கள் இருவரையும் வேறுபடுத்தி அடையாளம் கண்டிருக்க முடியாது." பாப்லோ விகாரியோவின் பின்னால் இருந்த க்ளோடில்டி அர்மென்ட்டா கிறிஸ்டோ பெடோயாவை நோக்கி சீக்கிரம் போ என்று உரக்கக் கூவி அவசரப்படுத்தினாள். ஏனென்றால் ஆண்களை ஆண்களே புணரும் அந்த நகரில் அவனைப்போன்ற ஒரு ஆண்மகனால்தான் நடக்கவிருக்கும் துயரசம்பவத்தை தடுத்து நிறுத்த முடியும் என அவள் நினைத்தாள்.

அதன் பிறகு நடந்தவை அனைத்தும் பொதுமக்களது பார்வையிலேயே நடந்தன. படகுத் துறையிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தவர்கள் பெட்ரோ விகாரியோ, கிறிஸ்டோ பெடோயா மற்றும் க்ளோடில்டி அர்மென்ட்டா ஆகியோர் உரக்கப் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு சுதாரித்துக் கொண்டவர்களாய் நடக்கப்போவதை நன்றாகப் பார்க்கும் வகையில் சதுக்கத்தில் தோதான இடமாகப் பார்த்து நின்றுகொண்டனர். சாண்ட்டியாகோ நாஸரைப் பார்த்தீர்களா எனப் பலரிடமும் வினவினான் கிறிஸ்டோ பெடோயா. யாருமே அவனைப் பார்த்திருக்கவில்லை. சமுதாய மன்றத்தின் கதவருகே சென்றபோது எதிரே கர்னல் லாஸரோ அபோந்தி

வருவதைப் பார்த்தான். க்ளோடில்டி அர்மென்ட்டாவின் கடை முன் நடந்ததை அவரிடம் சொன்னான்.

"இருக்க முடியாதே," கர்னல் அபோந்தி சொன்னார், "நான் அவர்களை வீட்டுக்குப்போய் தூங்கச் சொன்னேனே"

"கையில் பன்றியைக் கொல்லும் கத்திகளுடன் அவர்களை நான் பார்த்தேன்" என்றான் கிறிஸ்டோ பெடோயா.

"இருக்க முடியாது. அவர்களைத் தூங்கச் சொல்லி அனுப்பும் முன் அவர்களிடமிருந்த கத்திகளை நான் எடுத்துக்கொண்டுதானே அனுப்பினேன்" என்றார் மேயர், "இது நடப்பதற்கு முன்னால் அவர்களை நீ பார்த்திருக்கிறாய் என நினைக்கிறேன்."

"இரண்டு நிமிடங்களுக்கு முன்புதான் அவர்களைப் பார்த்தேன். கையில் அவர்கள் பன்றியைக் கொல்லும் கத்திகளை வைத்திருந்தார்கள்," என்றான் கிறிஸ்டோ பெடோயா.

"அடச் சே" என்றார் மேயர், "வேறு இரண்டு கத்திகளை எடுத்துக்கொண்டு அவர்கள் திரும்பவும் வந்திருக்க வேண்டும்."

உடனே அதுபற்றி கவனிப்பதாகச் சொன்ன மேயர் அன்றிரவு நடக்கவிருந்த டாமினோ விளையாட்டுக்கான நேரம் என்னவென்று அறிய சமுதாய மன்றத்துக்குள் சென்றார். அவர் வெளியே வந்தபோது கொலை நடந்துவிட்டிருந்தது. அப்போதுதான் கிறிஸ்டோ பெடோயா அந்த மிகப்பெரிய தவறைச் செய்தான். அவன் செய்த ஒரே தவறு அதுதான். சாண்ட்டியாகோ நாஸர் கடைசி நிமிடத்தில் மனதை மாற்றிக்கொண்டு உடைமாற்றும் முன்பாக காலை உணவருந்த எங்கள் வீட்டுக்கு சென்றிருக்கக் கூடும் என நினைத்து அவனைத்தேடி எங்கள் வீட்டுக்குச் சென்றான். வழியில் பார்த்தவர்களிடமெல்லாம் அவனைப் பார்த்தீர்களா எனக்கேட்டபடி ஆற்றங்கரையோரமாக வேகமாகச் சென்றான். யாருமே அவனைப் பார்த்ததாகச் சொல்லவில்லை. ஆனால் அதனால் அவன் கலவரமேதும் அடையவில்லை. ஏனென்றால் எங்கள் வீட்டுக்குப் போக வேறு வழிகளும் இருந்தன. மேட்டுநிலப்பகுதியைச் சேர்ந்தவளான ப்ராஸ்பரா அராங்கோ தன் வீட்டு வெளித் திண்ணையில் மரணப் படுக்கையில் வேதனைப் பட்டுக் கொண்டிருந்த தன் தந்தையைக் கொஞ்சம் பார்த்துவிட்டுப் போகும்படி கேட்டுகொண்டாள். பிஷப்பின் சொற்பகண ஆசீர்வாதம் அவரது வேதனையை எந்தவிதத்திலும் குறைத்திருக்கவில்லை. "அவர் வீட்டைக் கடந்து போகையில் அவரைப் பார்த்தேன்," என் சகோதரி மார்கட் என்னிடம் சொன்னாள், "அவர் முகத்தில் அப்போதே சவக்களை படிந்துவிட்டிருந்தது". நோயுற்ற அந்த முதியவரின் உடல் நலத்தைப் பரிசோதித்ததில் கிறிஸ்டோ பெடோயாவுக்கு நான்கு நிமிடங்கள் தாமதமானது. பிறகு வந்து அவசர சிகிச்சை அளிப்பதாகச் சொன்னான். ஆனால் நோயுற்றவரை படுக்கையறைக்கு கொண்டுசெல்ல ப்ராஸ்பரா அராங்கோவுக்கு உதவியதில் மேலும் மூன்று நிமிடங்கள் தாமதமாயின. வெளியே வந்தபோது தொலைவே கூச்சல்கள் கேட்டன. சதுக்கத்தை நோக்கி வாணங்கள் விடப்படுகின்றன என அவன் நினைத்தான். ஓட அவன்

முயற்சி செய்தான். ஆனால் இடுப்பில் இருந்த துப்பாக்கி ஓடுவதற்கு இடைஞ்சலாக இருந்தது. கடைசித் தெருவின் முனையில் சென்று திரும்பியபோது தன் இளையமகனை கையில் பிடித்தபடி வேகமாக வந்துகொண்டிருந்த என் அம்மாவை அவன் அடையாளம் கண்டுகொண்டான்.

"லூயிஸா சாண்ட்டியா கா," அவளை நோக்கிக் கத்தினான், "எங்கே உங்கள் ஞானப்பிள்ளை?"

என் அம்மா திரும்பி அவனைப் பார்க்கக் கூட இல்லை. அவள் முகம் கண்ணீரால் நனைந்திருந்தது.

"ஓ மகனே" அவள் சொன்னாள், "அவன் கொல்லப்பட்டுவிட்டதாக எல்லாரும் சொல்கிறார்கள்"

அது நடந்தது இப்படித்தான். கிறிஸ்டோ பெடோயா அவனை தேடிக்கொண்டிருந்தபோது சாண்ட்டியாகோ நாஸர் தான் மணந்துகொள்ளவிருந்த ஃப்ளோரா மிகுயெலின் வீட்டுக்குச் சென்றுவிட்டிருந்தான். கடைசியாக அவனைப் பார்த்த அந்தத் தெருமூலையிருந்து சுற்றிக்கொண்டு அப்படியே அவன் மிகுயெலின் வீட்டுக்குச் சென்றுவிட்டிருந்தான். "அவன் அங்கு போயிருப்பான் என்று எனக்குத் தோன்றவில்லை," அவன் என்னிடம் சொன்னான், "ஏனென்றால் அந்த வீட்டிலிருப்பவர்கள் மதியப் பொழுதுக்கு முன்பு எழுந்திருக்க மாட்டார்கள்." அந்த வீட்டின் தலைவரான நாஹிர் மிகுயெலின் கட்டளைப்படி அக்குடும்பத்தினர் அனைவரும் மதியம் பன்னிரண்டு மணிவரை உறங்கினர் என்று மக்களிடையே ஒரு பேச்சு இருந்தது. "அதனாலேயே இனியும் சின்னப் பெண் என்று சொல்ல இயலாதபடிக்கு வளர்ந்துவிட்டிருந்த ஃப்ளோரா மிகுயெலை ஒரு ரோஜாவைப் போல பாதுகாப்பாக வைத்திருந்தார்கள்," மெர்ஸிடஸ் சொல்கிறாள். உண்மை என்னவென்றால் விடிந்த பிறகும் நீண்டநேரத்துக்கு அவர்கள் வீட்டைப் பூட்டியே வைத்திருந்தார்கள். மற்றபடி பலரையும் போலவே அவர்கள் அதிகாலையில் எழுந்திருக்கக் கூடியவர்கள். கடின உழைப்பாளிகள். சாண்ட்டியாகோ நாஸரின் பெற்றோரும் ஃப்ளோரா மிகுயெலின் பெற்றோரும் சேர்ந்து அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைப்பதென்று முடிவு செய்திருந்தனர். தனது வாலைப் பருவத்திலேயே அந்தத் திருமணத்துக்கு சம்மதம் தெரிவித்திருந்தான் சாண்ட்டியாகோ நாஸர். ஒருவேளை அவன் தந்தையைப் போலவே, திருமணம் மூலமாக கிடைக்கும் லாபத்தை மனதில் கொண்டு அவன் இந்தத் திருமணத்துக்குச் சம்மதித்திருக்கலாம். தன் பங்குக்கு ஃப்ளோரா மிகுயெலும் ஒரு பூப்போன்ற வாழ்வையே வாழ்ந்து வந்தாள். ஆனால் அவளுக்கு புத்தி சற்று மந்தம். நல்லது எது கெட்டது எது என்று தெரியாது. தன் தலைமுறைப் பெண்கள் எல்லாருக்கும் பெண்தோழியாக இருந்தவளுக்கு இந்தத்திருமண ஒப்பந்தம் கடவுளே பார்த்துச் செய்த அனுக்கிரகமாக அமைந்தது. அவர்களது நிச்சயதார்த்தக் காலம் சாதாரணமாக இருந்தது. வழக்கமான, சென்று பார்க்கும் சடங்குகளோ, மனம் தாங்கமுடியாத ஏக்கங்களோ

கிடையாது. பலமுறை தள்ளிப்போடப்பட்ட அவர்கள் திருமணம் எதிர்வந்த கிறிஸ்மஸ் தினத்தன்று நடக்கவிருந்தது.

அந்தத் திங்கட்கிழமை பிஷப்பின் படகு எழுப்பிய முதல் சத்தத்திலேயே ஃப்ளோரா மிகுயெல் எழுந்துவிட்டிருந்தாள். சிறிது நேரத்திலேயே விகாரியோ சகோதரர்கள் சாண்ட்டியாகோ நாஸரைக் கொலை செய்யக் காத்திருப்பதைப் பற்றி அறிந்தாள். அவள், கன்னிகாஸ்திரீயான என் சகோதரியிடம்-அந்தத் துயரச் சம்பவத்திற்குப் பிறகு அவள் பேசிய ஒரே ஆள் என் சகோதரிதான்-அதைச்சொன்ன ஆள் யாரென்பது தனக்கு நினைவில்லையென்று சொல்லியிருக்கிறாள். "எல்லாருக்குமே அந்த விஷயம் தெரியுமென்பது காலை ஆறு மணிக்குத்தான் எனக்குத் தெரியும்," அவள் என் சகோதரியிடம் சொன்னாள். அவர்கள் சாண்ட்டியாகோ நாஸரைக் கொல்லப் போகிறார்கள் என்பதை அவளால் நம்ப முடியவில்லை. மாறாக ஏஞ்செலா விகாரியோ தான் இழந்த மானத்தை திரும்பப் பெறும் வகையில் அவளை சாண்ட்டியாகோ நாஸரே திருமணம் செய்து கொள்ளும்படி அவர்கள் வற்புறுத்துவார்கள் என்று எதிர் பார்த்தாள். அவள் குன்றிப் போனவளாக உணர்ந்தாள். கிட்டத்தட்ட நகரத்தாரில் பாதிப்பேர் பிஷப்புக்காகக் காத்திருந்தபோது தன் படுக்கையறையில் ஆத்திரம் பொங்க அழுதபடியே ஒரு சிறு பெட்டி நிறைய இருந்த, சாண்ட்டியாகோ நாஸர் பள்ளிக்கூடத்திலிருந்து அவளுக்கு எழுதிய கடிதங்களை அடுக்கிக் கொண்டிருந்தாள்.

ஃப்ளோரா மிகுயெலின் வீட்டைத் தாண்டிச் செல்லும்போதெல்லாம், வீட்டில் யாருமே இல்லையென்றால் கூட தன் கையிலுள்ள சாவியால் ஜன்னல் திரையை உரசி ஓசையெழுப்புவான் சாண்ட்டியாகோ நாஸர். அந்தத் திங்கட்கிழமை காலை, கடிதங்கள் அடங்கிய பெட்டியைத் தன் மடிமீது வைத்தபடி அவள் அமர்ந்திருந்தாள். தெருவிலிருந்து சாண்ட்டியாகோ நாஸரால் அவளைப் பார்க்கமுடியவில்லை. ஆனால் ஜன்னல் திரையில் சாவியை உரசும் முன்பாகவே அவன் ஜன்னலை நோக்கி வருவதை அவள் பார்த்துவிட்டாள். "உள்ளே வாருங்கள்," அவள் அவனிடம் சொன்னாள்.

யாருமே, ஒரு டாக்டர் கூட, காலை ஆறு நாற்பத்தைந்துக்கு அந்தவீட்டினுள் நுழைந்ததில்லை. சாண்ட்டியாகோ நாஸர் அப்போதுதான் கிறிஸ்டோ பெடோயாவை யாமில் ஷ யூமின் கிடங்கில் விட்டுவிட்டு வந்திருந்தான். அவனது நடவடிக்கைகளை பலர் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தனர். அவன் தான் மணந்து கொள்ளவிருக்கும் பெண்ணின் வீட்டுக்குள் நுழைந்ததை யாருமே கவனிக்கவில்லை என்பதை நம்புவது கடினமாக இருந்தது. அவன் அந்த வீட்டினுள் நுழைந்ததைப் பார்த்த ஒருவராவது இருக்கமாட்டார்களா என, நான் இப்போது தேடிப்பார்த்த அதே விடாமுயற்சியுடன், தேடிப்பார்த்திருக்கிறார் விசாரணை நீதிபதி. ஆனால் அப்படி ஒருவரும் இல்லை. அறிக்கையின் 382வது பக்கத்தில் ஓரமாக அவர் மற்றுமொரு பிரசித்தி பெற்ற வாக்கியத்தை சிவப்பு மை கொண்டு எழுதியிருந்தார். விதி நம் கண்களை மறைத்து விடுகிறது. உண்மையில் பார்க்கப்போனால் யாரும் தன்னைப் பார்க்கக் கூடாதென்று ஒளிந்து மறைந்தபடி செல்லாமல் எல்லார் பார்வையிலும் படும்படியாக பிரதான

கதவு வழியாகவே உள்ளே சென்றிருக்கிறான். ஃப்ளோரா மிகுயெல் கூடத்தில் அவனுக்காகக் காத்திருந்தாள். கோபத்தில் முகம் சிவந்து காணப்பட்டாள். முக்கிய விசேஷங்களின் போது அவள் அணியும், பொருத்தமற்ற மடிப்புகள் கொண்டு தைக்கப்பட்ட ஆடைகளில் ஒன்றை அணிந்திருந்தாள். கடிதங்கள் அடங்கிய பெட்டியை அவன் கையில் திணித்தாள்.

"எடுத்துக் கொள்ளுங்கள்," அவள் அவனிடம் சொன்னாள், "அவை உங்களைக் கொன்று போடும்."

சாண்ட்டியாகோ நாஸருக்கு ஒன்றும் புரியவில்லை. குழப்பத்தில் பெட்டியை அவன் தவறவிட்டான். காதலற்ற அவன் கடிதங்கள் தரையில் சிதறின. படுக்கையறை நோக்கி விரைந்த ஃப்ளோரா மிகுயெலைப் பின்தொடர்ந்து செல்லமுயன்றான். அவள் வேகமாகச் சென்று கதவைச் சாத்தி தாழிட்டுக் கொண்டாள். பலமுறை அவன் கதவைத்தட்டிப் பார்த்தான். அந்தக் காலை நேரத்தில் அழைக்கக்கூடாத அளவுக்கு, உரத்தகுரலில் அவளை அழைத்தான். அவன் குரல் கேட்டு கலவரமடைந்தவர்களாய் வீட்டிலிருந்த அனைவரும் எழுந்து வந்தனர். ரத்த சம்பந்தப்பட்ட உறவு, திருமணம் சம்பந்தப்பட்ட உறவு, பெரியவர்கள், சிறியவர்கள் என அங்கே பதினான்கு பேருக்கும் அதிகமாக இருந்தனர். கடைசியாக வந்தது ஃப்ளோரா மிகுயெலின் அப்பா நாஹிர் மிகுயெல். சிவப்பு தாடியுனுடனும் தன் தாய் நாட்டிலிருந்து வந்தபோது தன்னுடன் கொண்டு வந்ததும், எப்போதும் வீட்டிலிருக்கையில் அணிவதுமான அராபிய நாடோடிகள் அணியும் இடைக்கச்சையுள்ள நீண்ட உள்சட்டையினை அணிந்தும் அவர் காணப்பட்டார். அவரை நான் பலமுறை பார்த்திருக்கிறேன். அவர் நெடுநெடுவென்று உயரமாக, ஒல்லியாக இருப்பார். ஆனால் அவரிடம் என்னைக் கவர்ந்த விஷயம் அந்த அதிகாரத் தோரணைதான்.

"ஃப்ளோரா," அவர் தன்னுடைய மொழியில் அழைத்தார், "கதவைத் திற."

அவர் தன் மகளின் படுக்கையறைக்குள் சென்றார். மற்றவர்கள் சாண்ட்டியாகோ நாஸரையே முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தனர். அவன் கூடத்தில் மண்டியிட்டு அமர்ந்து கடிதங்களை எடுத்துப் பெட்டியில் அடுக்கிக் கொண்டிருந்தான். "அதை ஒரு தவம் போல செய்துகொண்டிருந்தான்." அவர்கள் என்னிடம் சொன்னார்கள். சில நிமிடங்கள் கழித்து படுக்கையறையிலிருந்து வெளியே வந்தார் நாஹிர் மிகுயெல். கையை அசைத்து சைகை செய்ததும் மற்றவர்கள் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

தொடர்ந்து அவர் அராபிய மொழியிலேயே சாண்ட்டியாகோ நாஸரிடம் பேசினார். "எடுத்த எடுப்பிலேயே, வெளியே என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை அவன் அறிந்திருக்கவில்லை என்பதைப் புரிந்துகொண்டேன்," அவர் என்னிடம் சொன்னார். பிறகு நேரடியாகவே விகாரியோ சகோதரர்கள் அவனைக் கொலை செய்யக் காத்திருப்பதுபற்றி அவனுக்குத்தெரியுமா எனக் கேட்டார். "அவன் முகம் வெளுத்துப்போய் சமநிலை குலைந்ததைப்

பார்த்தபோது அவன் ஒன்றுமறியாதது போல நடித்தான் என்ற பேச்சுக்கே இடமில்லை," அவர் என்னிடம் சொன்னார்.

"அவர்கள் சொல்வது உண்மையா இல்லையா என்பது உனக்குத்தான் தெரியும்," அவர் அவனிடம் சொன்னார், "ஆனால், எப்படிப் பார்த்தாலும் உனக்கு முன் இரண்டே வழிகள்தான் உள்ளன. இந்த வீட்டில், உனக்குச் சொந்தமான இந்த வீட்டில் நீ மறைந்துகொள். அல்லது வெளியே செல்வதானால் என் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு போ"

"எனக்கு ஒரு இழவும் புரியவில்லை," என்றான் சாண்ட்டியாகோ நாஸர். அவனால் இதைமட்டுமே சொல்ல முடிந்தது. இதையும் அவன் ஸ்பானிய மொழியிலேயே சொன்னான். "நனைந்த சிறு குருவியொன்றைப் போலத் தோன்றினான்," நாஹிர் மிகுயெல் என்னிடம் சொன்னார். கதவைத் திறக்க முயன்றவனுக்கு கையிலிருந்த பெட்டியை எங்கே வைப்பதென்று தெரியவில்லை. அவன் கையிலிருந்து அவரே அந்தப் பெட்டியை வாங்கிக் கொண்டார்.

"ஒருவனுக்கு எதிராக இரண்டு பேர்" அவர் அவனிடம் சொன்னார்.

சாண்ட்டியாகோ நாஸர் வீட்டைவிட்டு வெளியேறினான். அணிவகுப்பு நடக்கும் நாளில் இருப்பதைப் போன்று மக்கள் சதுக்கத்தில் நல்ல இடமாகப் பார்த்து, நடக்கப் போவதை நன்றாகப் பார்க்கும் வகையில் நின்றிருந்தனர். . ஃப்ளோரா மிகுயெலின் வீட்டிலிருந்து அவன் வெளியே வருவதை அங்கிருந்த அனைவருமே பார்த்தனர். அவர்கள் தன்னைக் கொல்லப் போவது பற்றி இப்போது அவன் தெரிந்து கொண்டான் என்பதை அவர்கள் புரிந்துகொண்டனர். மிகுந்த குழப்பத்தில் இருந்ததால் வீட்டுக்குப் போகும் வழி எதுவென்று அவனுக்கு விளங்கவில்லை. பால்கனியிலிருந்த யாரோ ஒருவர், "அந்த வழியில்லை துருக்கியனே, பழைய படகுத்துறை வழியாக," என்று அவனை நோக்கிக் கத்தியதாகவும் அவர்கள் சொன்னார்கள். சாண்ட்டியாகோ நாஸர் கத்தியது யாரென்று பார்த்தான். தன்னுடைய கிடங்கில் வந்து இருக்குமாறு அவனை நோக்கிக் கத்திய யாமில் ஷயூப் தனது வேட்டைத் துப்பாக்கியைக் கொண்டுவரச் சென்றார். ஆனால் தோட்டாக்களை எங்கே வைத்தோம் என்று அவருக்கு நினைவில்லை. எல்லா பக்கங்களிலிருந்தும் அவர்கள் அவனை நோக்கிக் கத்த ஆரம்பித்தனர். ஒரே நேரத்தில் பல குரல்களைக் கேட்டதால் சாண்ட்டியாகோ நாஸர் குழப்பமடைந்து பலமுறை முன்னும் பின்னுமாகச் சென்று வந்தான். சமையலறை வழியாக வீட்டுக்குள் போக எண்ணி அவன் சென்று கொண்டிருந்தான் என்பது வெளிப்படை. ஆனால் முன்வாசல் கதவு திறந்திருப்பது திடீரென அவன் நினைவுக்கு வந்தது.

"அதோ அவன் வருகிறான்," பெட்ரோ விகாரியோ சொன்னான்.

அவர்கள் இருவரும் ஒரே நேரத்தில் அவனைப் பார்த்தனர். பாப்லோ விகாரியோ தன் கோட்டைக் கழற்றி பெஞ்ச்சின்மீது வைத்தான். கத்தியைச் சுற்றியிருந்த தாளை நீக்கி ஒரு கொடுவாளை பிடிப்பது போல அதைக் கையில் பிடித்துக் கொண்டான். கடையைவிட்டுக் கிளம்பும் முன்பாக தற்செயலாக இருவரும் ஒரே நேரத்தில் சிலுவையிட்டுக் கொண்டனர்.

அப்போது பெட்ரோ விகாரியோவின் சட்டையைப் பிடித்துக் கொண்ட க்ளோடில்டி அர்மென்ட்டா சாண்ட்டியாகோ நாஸரை நோக்கி அவர்கள் அவனைக் கொல்லப் போவதால் வேகமாக ஓடிச்சென்றுவிடும்படி கத்தினாள். மிகுந்த பதற்றத்துடன் கத்தியதால் அவள் குரல் ஏனைய குரல்களை மங்கச் செய்து உரத்து ஒலித்தது. "முதலில் அவன் குழப்பமுற்றான்," க்ளோடில்டி அர்மென்ட்டா என்னிடம் சொன்னாள், "யார் கத்துகிறார்கள் எங்கேயிருந்து கத்துகிறார்கள் என்று அவனுக்குப் புரியவில்லை." அவளை அவன் பார்த்தபோது பெட்ரோ விகாரியோவையும் பார்த்தான். க்ளோடில்டி அர்மென்ட்டாவைக் கீழே தள்ளிவிட்டு தன் சகோதரனோடு வந்து அவன் சேர்ந்து கொண்டான். சாண்ட்டியாகோ நாஸருக்கும் அவன் வீட்டுக்கும் இடையே ஐம்பது கஜ தூரம்தான் இருந்தது. முன்வாசல் கதவை நோக்கி அவன் ஓடினான்.

அதற்கு ஐந்து நிமிடங்கள் முன்பாக சமையலறையில், எல்லாரும் அறிந்திருந்த அந்தச் செய்தியை விக்டோரியா கஸ்மான் பிளாசிடா லினேரோவிடம் சொன்னாள். பிளாசிடா லினேரோ திடமான உள்ளம் படைத்தவள். எந்தவிதமான அச்சத்தையும் அவள் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. இதுபற்றி தன் மகனிடம் சொன்னாளா என அவள் விக்டோரியா கஸ்மானைக் கேட்டாள். காப்பி அருந்த அவன் வந்தபோது அதுபற்றி தனக்கேதும் தெரியாது என்று நேர்மையாகப் பொய்சொன்னாள் விக்டோரியா கஸ்மான். அதே நேரம் புழங்கும் அறையின் தரையைத் துடைத்துக் கொண்டிருந்த டிவினா ஃப்ளோர் சதுக்கத்தை நோக்கியிருந்த கதவு வழியாக உள்ளே நுழைந்து சாண்ட்டியாகோ நாஸர் படுக்கையறைகளுக்குச் செல்லும் திறந்த படிக்கட்டுகள் வழியாக மேலே செல்வதைப் பார்த்தாள். "மிகத் தெளிவாக அதை நான் பார்த்தேன்," டிவினா ஃப்ளோர் என்னிடம் சொன்னாள், "அவர் வெள்ளை கோட்டு அணிந்திருந்தார். கையில் எதையோ எடுத்துச் சென்றார். என்னவென்று சரியாகத் தெரியவில்லை ஆனால் அது ஒரு ரோஜாப்பூங்கொத்து போல இருந்தது". எனவே பிளாசிடா லினேரோ அவனைப் பற்றிக் கேட்டபோது டிவினா ஃப்ளோர் அவளை அமைதிப் படுத்தினாள்.

"ஒரு நிமிடம் முன்புதான் அவர் தன் அறைக்குச் சென்றார்," அவளிடம் அவள் சொன்னாள்.

பிளாசிடா லினேரோ தரையில் கிடந்த கடிதத்தைப் பார்த்தாள். ஆனால் அதை எடுத்துப் பார்க்க வேண்டுமென அவளுக்குத் தோன்றவில்லை. சம்பவம் நடந்தபிறகு ஏற்பட்ட களேபரத்திடையே யாரோ அதைக் காட்டிய போதுதான் அதில் எழுதியிருந்தது என்னவென்று அவள் அறிந்தாள். விகாரியோ சகோதரர்கள் கையில் கத்திகளுடன் தன் வீட்டை நோக்கி ஓடி வருவதை கதவு வழியாக அவள் பார்த்தாள். அவள் நின்றிருந்த இடத்திலிருந்து அவளால் அவர்களை மட்டுமே பார்க்க முடிந்தது. வேறொரு கோணத்தில் கதவை நோக்கி ஓடிவந்து கொண்டிருந்த தன் மகனை அவளால் பார்க்க முடியவில்லை. "அவனை வீட்டுக்குள் வைத்துக் கொலை செய்ய அவர்கள் வருகிறார்கள் என நினைத்தேன்," அவள் என்னிடம் சொன்னாள். கதவை நோக்கி ஓடிச் சென்ற அவள் அறைந்து

அதை சாத்தினாள். கதவின் குறுக்குச் சட்டத்தை வைத்து அடைக்கும்போது சாண்ட்டியாகோ நாஸர் கூக்குரலெழுப்புவதைக் கேட்டாள். அதோடு கதவின் மீதாக எதுவோ வலுவாக இடிக்கும் கடூர சத்தத்தையும் கேட்டாள். ஆனால் சாண்ட்டியாகோ நாஸர் மாடியிலிருப்பதாக அவள் நம்பினாள். மேலே பால்கனியிலிருந்தபடி அவர்களை அவன் வசைகூறிக் கொண்டிருப்பதாக நினைத்தாள். அவனுக்கு உதவ எண்ணி மேலே சென்றாள்.

சில வினாடிகள் முன்னால் வந்திருந்தால் சாண்ட்டியாகோ நாஸர் வீட்டுக்குள் வந்துவிட்டிருக்கமுடியும். முஷ்டியை இறுக்கிக் கொண்டு பலமாக அவன் கதவைத் தட்டினான். அதே நேரம் திரும்பி நிராயுதபாணியாக தன் எதிரிகளைச் சந்திக்கவும் தயாரானான். "எங்களை அவன் எதிர்கொண்ட விதத்தைப் பார்த்துப் பயந்து போனேன்," பாப்லோ விகாரியோ என்னிடம் சொன்னான், "ஏனென்றால் வழக்கமாக இருப்பதைப் போல இரண்டு மடங்கு பருமனுடன் இருப்பது போல அவன் தோன்றினான்." நேராக கத்தியைக் கொண்டே அவனது வலப்புறமாகத் தாக்கிய பெட்ரோ விகாரியோவின் முதல் குத்தைத் தடுக்க கையை உயர்த்தினான் சாண்ட்டியாகோ நாஸர்.

"வேசை மகன்களே" அவன் கத்தினான். கத்தி அவனது வலது உள்ளங்கையில் நுழைந்தது. பிறகு அவனது விலாப்புறத்தில் கைப்பிடி விளிம்புவரை ஆழப்புதைந்து வெளிவந்தது. வேதனையில் அவன் அலறியது எல்லாருக்கும் கேட்டது.

"ஐயோ, அம்மா" மிருகங்களைக் கொல்லும் இரும்பு மணிகட்டினை க் கொண்டவனான பெட்ரோ விகாரியோ தன் கத்தியை எடுத்து கிட்டத்தட்ட அதே இடத்தில் மறுபடியும் குத்தினான். "அதில் ஆச்சரியம் என்னவென்றால் வெளியே எடுக்கும்போது கத்தி சுத்தமாக இருந்தது," விசாரணை நீதிபதியிடம் தெரிவித்தான் பெட்ரோ விகாரியோ "அதை அவன்மீது மூன்று முறை பயன்படுத்தினேன் இருந்தும் கத்தியில் ஒரு சொட்டு ரத்தம்கூட இல்லை." மூன்றாவது குத்துக்குப்பின் கைகளைக் குறுக்காக வைத்தபடி சுருண்டான் சாண்ட்டியாகோ நாஸர். ஒரு கன்றுக்குட்டி வேதனையில் முனகுவதுபோல ஒலியெழுப்பினான். அவர்களுக்கு முதுகு காட்டியபடி திரும்ப முயன்றான். அவனுக்கு இடதுபுறமாக இருந்த பாப்லோ விகாரியோ பிறகு அவன் முதுகில் காணப்பட்டதான அந்த ஒரே குத்தைக் குத்தினான். முதுகிலிருந்து உயர் அழுத்தத்தில் ரத்தம் பீறிட்டு அவன் சட்டையை நனைத்தது. "அந்த ரத்தம் அவனைப் போலவே வாசமடித்தது," அவன் என்னிடம் சொன்னான். மூன்று மோசமான காயங்களைப் பெற்றபிறகு சாண்ட்டியாகோ நாஸர் மீண்டும் முன்பக்கமாகத் திரும்பினான். தன் அம்மாவின் கதவின் மீது முதுகைச் சாய்த்தான். சிறு எதிர்ப்பையும் அவன் காட்டவில்லை. அவர்கள் இருவரும் சம பங்கெடுத்து அவனைக் கொன்று முடிக்க அவனே அவர்களுக்கு உதவ விரும்புவதுபோலத் தோன்றியது. "அதன் பிறகு அவன் கத்தவேயில்லை," விசாரணை நீதிபதியிடம் சொன்னான் பெட்ரோ விகாரியோ, "அதற்கு மாறாக அவன் சிரிப்பது போலத் தோன்றியது." பிறகு கதவின் மீது வைத்து மாறி மாறி இருவரும் அவனை அதிக சிரமமின்றி குத்தினர். அச்சத்தின்

மறுபக்கத்தில் அவர்கள் கண்ட அலைப்பற்ற கழிமுகத்தில் சிறு சலனமும் இன்றி மிதந்துகொண்டிருந்தனர். தன் குற்றத்தினால் தானே கலவரமுற்ற நகரத்தின் கூச்சல்கள் அவர்கள் காதில் விழவில்லை. "குதிரையின் மீது வேகமாக சவாரி செய்யும் போது உணர்வதுபோல உணர்தேன்," பாப்லோ விகாரியோ சொன்னான். ஆனால் இருவருமே திடீரென யதார்த்த உலகுக்கு மீண்டனர். காரணம் அவர்கள் சோர்ந்து போனதுதான். அதோடு சாண்ட்டியாகோ நாஸர் சீக்கிரம் செத்து விழுவதுபோலவும் தெரியவில்லை. "அடத்தூ தம்பி," என்னிடம் பாப்லோ விகாரியோ சொன்னான், "ஒரு மனிதனைக் கொல்வது எத்தனைக் கடினமான செயல் என்று உனக்குத் தெரியாது." ஒரேயடியாக வேலையை முடிக்க எண்ணி அவன் இதயம் எங்கே இருக்கிறதெனப் பார்த்தான், பெட்ரோ விகாரியோ. அதை அவன் கிட்டத்தட்ட கஷ்கத்துக்கு அருகே தேடினான். ஏனென்றால் பன்றிகளுக்கு இதயம் அந்த இடத்தில்தான் இருக்கும். உண்மையில் சாண்ட்டியாகோ நாஸர் விழாததற்கு காரணம் கதவோடு சேர்த்து அவனைப் பிடித்தபடி அவர்கள் கத்தியால் குத்திக் கொண்டிருந்ததுதான். வெறுத்துப்போன பாப்லோ விகாரியோ அவன் வயிற்றில் கிடைமட்டமாக ஒரு ஒரு கீறு கிறினான். குடல் பிதுங்கி வெளியே வந்தது. பெட்ரோ விகாரியோவும் அது போலவே செய்ய நினைத்தான். ஆனால் அந்த கோரத்தைக் கண்டு அவன் மணிக்கட்டு தானாகவே முறுக்கிக்கொள்ள சாண்ட்டியாகோ நாஸரின் தொடையில் ஆழமாக ஒரு வெட்டு வெட்டினான். சிறிது தெம்புடன் கதவில் சாய்ந்திருந்த சாண்ட்டியாகோ நாஸர் தன் உடலின் உள்ளுறுப்புக்களை சூரியனின் ஒளியில் முழுதாகவும் தெளிவாகவும் தன் கண்ணாலேயே கண்டபின் கீழே சரிந்து மண்டியிட்டான்.

பிளாசிடா லினேரோ படுக்கையறையில் அவனைத் தேடிப்பார்த்தாள். சத்தம் போட்டு அழைத்துப் பார்த்தாள். எங்கிருந்து வருகிறது எனத் தெரியாத தன்னுடையதல்லாத வேறு சில கூக்குரல்களையும் கேட்டாள். பிறகு சதுக்கத்தைப் பார்த்து அமைந்திருந்த ஜன்னலருகே சென்றவள் விகாரியோ சகோதரர்கள் தேவாலயத்தை நோக்கி ஓடுவதைப் பார்த்தாள். அவர்களுக்குப் பின்னால் துரத்தியபடியே தன் ஜாகுவார் துப்பாக்கியுடன் யாமில் ஷயூமும் இன்னும் சில ஆயுதமற்ற அராபியர்களும் ஓடினர். ஆபத்து நீங்கிவிட்டதென நினைத்தாள் பிளாசிடா லினேரோ. பிறகு படுக்கையறை பால்கனிக்குச் சென்றவள் கீழே முன்வாசல் கதவருகே முகம் புழுதியில் குப்புறக் கவிழ்ந்திருக்க சாண்ட்டியாகோ நாஸர் தன் ரத்தத்திலிருந்து தானே எழ முயன்று கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவன் ஒரு பக்கம் சாய்ந்தவாறே எழுந்து நின்றான். வெளியே தொங்கிய குடலைக் கையிலேந்தியபடி பிரமை பிடித்தவன் போல நடக்க ஆரம்பித்தான்.

வீட்டை முழுவதுமாகச் சுற்றி நூறு கஜத்திற்கும் மேலாக நடந்து சமையலறைக் கதவு வழியாக உள்ளே நுழைந்தான். இன்னும் அவனுக்கு போதுமான சுவாதீனம் இருந்தது. தெருவழியாகச் சென்றால் நீண்ட தூரமாக இருக்கும் என்பதால் பக்கத்து வீட்டின் வழியாகச் சென்றான். பான்ச்சோ லானாவோ, அவன் மனைவி மற்றும் அவர்களது ஐந்து பிள்ளைகள் இவர்களுக்கு தங்கள் வீட்டிலிருந்து இருபதடி தொலைவில் நடந்தது

எதுவுமே தெரிந்திருக்கவில்லை. "அந்தக் கூச்சலை நாங்களும் கேட்டோம்," அவர் மனைவி என்னிடம் சொன்னாள், "ஆனால் அது பிஷப் வருகைக்கான கொண்டாட்டத்தின் ஒரு பகுதி என நினைத்தோம்." ரத்தத்தில் நனைந்தவனாய்க் குடலைக் கையிலேந்தியபடி அவன் வந்தபோது அவர்கள் காலை உணவுக்கு அமர்ந்திருந்தனர். பாஞ்சோ லானாவோ என்னிடம் சொன்னார். "என்னால் மறக்க முடியாதது எதுவென்றால் அந்த மலநாற்றம்தான்". ஆனால் சாண்ட்டியாகோ நாஸர் வழக்கமான அவனது அழகான நடையுடன் அடிகளை அளந்து எடுத்து வைத்தபடி வந்ததாகச் சொன்னாள் அவரது மூத்த மகள் அர்ஜென்டா லானாவோ. தன்போக்கில் தொங்கும் சுருண்டு நீண்ட கேசங்களுடன் அவனது அராபிய முகம் எப்போதையும் விட அழகுடன் காணப்பட்டதாகவும் அவள் சொன்னாள். உணவு மேசையைக் கடந்து சென்றபோது அவர்களைப் பார்த்து அவன் புன்னகைத்தான். படுக்கையறைகள் வழியாகச் சென்று வீட்டின் பின்புறக் கதவை அடைந்தான். "அதிர்ச்சியில் நாங்கள் செய்வதறியாது நின்றோம்," அர்ஜென்டா லானாவோ என்னிடம் சொன்னாள். என் அத்தை வினிஃப்ரிடா மார்க்வெஸ் ஆற்றின் அந்தப்பக்கம் தன்வீட்டு வாசலில் பெரிய ஷாட் மீன் ஒன்றை செதில் நீக்கி சுத்தம் செய்து கொண்டிருக்கையில் அவன், பழைய படகுத் துறையிலிருந்து கொண்டுவரப்பட்ட படிகளில் உறங்கி பாதத்தைத் திடமாக வைத்து வீட்டுக்குப்போக் வழிதேடிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

"மகனே சாண்ட்டியாகோ," அவனை நோக்கி அவள் கத்தினாள், "என்னவாயிற்று உனக்கு?"

"அவர்கள் என்னைக் கொன்றுவிட்டார்கள், வினிம்மா," அவன் சொன்னான்.

கடைசிப் படியில் தடுமாறினாலும் சுதாரித்து எழுந்தான். "குடலில் ஒட்டிய தூசைத் தட்டிவிடும் அளவுக்கு அப்போதும் அவன் கவனமுடன் இருந்தான்," என் அத்தை வினி என்னிடம் சொன்னாள். ஆறு மணியிலிருந்தே திறந்துகிடந்த தன் வீட்டுப் பின் கதவு வழியாக உள்ளே நுழைந்தவன் சமையலறையில் முகம் குப்புற விழுந்தான்.



பெட்ரோ பரோமோ

யுவான் ருல்போ வின்

உலகப் புகழ்பெற்ற நாவல்

விலை ரூ.55

கிடைக்குமிடம்: **விடியல் பதிப்பகம்**
11,பெரியார் நகர், கோவை -15

'அந்தி ராகம்' என் பெற்றோர்களின் காதல் கதை

காப்ரியல் கர்ஸியா மார்க்வெஸ்

தமிழில்: ஜி. குப்புசாமி

என் அம்மா பிறந்து வளர்ந்த இடம், கடவுள்களால் கைவிடப்பட்ட ஒரு நரகக்குழி. நிச்சயமில்லாத ஒரு குழந்தைப்பருவத்தில் மலேரியா காய்ச்சலால் அடிக்கடி பீடிக்கப்பட்டு வந்தாலும், இறுதியில் முழுமையாக குணமடைந்து செறிவுற்ற கான்கிரீட் போன்று உறுதியுற்று 95 வது பிறந்தநாளை தனது வயிற்றில் பிறந்த பதினோரு பேர்களுடனும் தனது கணவரின் நான்கு குழந்தைகளுடனும் எழுபத்தி மூன்று கொள்ளுப்பேரர்களுடனும் ஐந்து எள்ளுப் பேரர்களுடனும் கொண்டாடினாள். யாருக்கும் தெரியாத வாரிசுகள் இவற்றில் சேர்த்தியில்லை.

அவளது பெயர் லுயிசா ஸாண்டியாகா. கர்னல் நிக்கலஸ் மெஜியாவிற்கும், ட்ரான்க் விலினா நிக்கலஸ் மார்க்வெஸ் மெஜியாவிற்கும், ட்ரான்க் விலினா இகுவாரன் கோட்ஸிற்கும் (நாங்கள் பாட்டியை மினா என்று அழைப்போம்) பிறந்த மூன்றாவது மகள் ரஞ்சீரியா ஆற்றங்கரையில் அமைந்த பாரான்கஸ் (கொலம்பியா) என்ற ஊரில் ஜுலை 25, 1905 அன்று லூயிசா ஸாண்டியாகா பிறந்தாள். உள்நாட்டுப்போரின் ரணத்திலிருந்து மெதுவாக குடும்பம் மீண்டு வந்து கொண்டிருந்த நேரமது. அதுமிட்டுமன்றி, இரண்டு வருடங்களுக்கு முன்புதான் கர்னல், மெடார்டோ மாச்சிகோவை சுயகௌரவப்பிரச்சினை ஒன்றில் ஏற்பட்ட தகராறில் சுட்டுக் கொன்றுவிட்டிருந்தார். அம்மாவின் முதல் பெயரான லூயிசா என்பது அவளது அப்பாவழி பாட்டியான லூயிசா மெஜியா விடாலின் நினைவாக சூட்டப்பட்டதே. இரண்டாவது பெயரான ஸாண்டியாகா, ஜெருசலேத்தில் சிரச்சேதம் செய்யப்பட்ட சீடர் ஸாண்டியாகோ எல் மேயர், செயின்ட் ஜெம்ஸஃல்ன் நினைவாக வைக்கப்பட்டது. இந்த இரண்டாவது பெயர் ஆண்மைத்தனமாகவும், அலங்காரமாகவும் இருப்பதாகத் தோன்றியதால் அவள் அதை ரகசியமாகவே வைத்திருந்தாள், இதிலெல்லாம் நம்பிக்கையில்லாத அவளது மகன் ஒருவன் தனது நாவலில் இதை

வெளிப்படுத்தும் வரை.

லூயிசா ஸாண்டியாகா, சௌகரியமானதொரு கத்தோலிக்கப் பெண்ணிற்கேற்றவாறு படித்து, சந்தோஷமாகப் பாவங்கள் புரியும் ஒரு குடும்பத்தில் வளர்க்கப்பட்டாள். ஸாண்டா மர்தாவிலுள்ள கலேஜியா டி லா பிரசன்டேசியனில் படித்த அவள் சங்கீத பாடத்தைத் தவிர மற்றெல்லாவற்றிலும் சூட்டிகையாக இருந்தாள். அவள் அம்மாவிற்கு கௌரவமான பெண்ணாக ஒருத்தி இருக்க வேண்டுமென்றால் பியானோ வாசிக்கத்தெரியவேண்டுமென்று ஒரு நம்பிக்கை. மூன்று வருடங்களாக அம்மாவிற்கு கீழ் படிந்து தன் தலை மீது சுமத்தப்பட்ட சங்கீத வகுப்புகளுக்கு சென்றுவந்தவள், பகலில் கொஞ்சம் கூட ஓய்வின்றி புழுக்கத்தில் பயிற்சி மேற்கொள்ள வேண்டிய சலிப்பில் ஒருநாள் சங்கீத வகுப்பை உதறியெறிந்தாள். இருப்பினும் அவளது இருபது வயதில் கொஞ்சமாவது பிரயோஜனமாக இருந்த ஒரே சுபாவம், அவள் அரகாடகாவைச் சேர்ந்த ஒரு கர்வம் பிடித்த தந்தி ஊழியர்மேல் பைத்தியக்காரத்தனமாக காதல் வயப்பட்டிருக்கிறாள் என்பதை அவளது குடும்பம் கண்டுபிடித்த போது காட்டிய நெஞ்சுரம்தான். அவர்களது குடும்பம் அரகாடகாவிற்கு குடிபெயர்ந்திருந்தது.

தடைவிதிக்கப்பட்ட அவர்களது காதலின் சரித்திரம் எனது இளமையில் பெரும் அதிசியங்களில் ஒன்றாக விளங்கியது. எனது பெற்றோர்களால் என்னிடம் தனித்தனியாகவும், சில முறை சேர்ந்தும் இந்த சரித்திரத்தை பலமுறை விளக்கமாகச் சொன்னதில் அவை என் மனதில் பசுமையாகப் படிந்தது. எனது இருபத்திமூன்றாவது வயதில், நாவல் எழுதுவதைப்பற்றி அதிகம் எதையும் தெரிந்துகொள்ளாமலேயே அவர்களது காதல் ஞாபகங்களின் பின்னணியில் எனது முதல் நாவல் எழுதினேன். இருவருமே அருமையான கதைசொல்லிகள். என் பெற்றோர் பகிர்ந்து கொண்டவற்றையெல்லாம் எனக்கு ஐம்பது வயது கடந்தபிறகு நாவலில் உபயோகப்படுத்திக்கொண்டபோது என்னால் வாழ்வையும், கவிதையையும் இனம்பிரித்துப்பார்க்க இயலாதிருந்தது.

என் அம்மாவின் கூற்றுப்படி அவர்கள் இருவரும் ஒரு குழந்தையின் சவ அடக்க நிகழ்ச்சியின் போதுதான் முதலில் சந்தித்திருக்கின்றனர். களங்கமற்ற குழந்தையின் ஆன்ம சாந்திக்காக ஒன்பது இரவுகளுக்கு பிரார்த்தனை நடப்பது வழக்கம். அத்தகைய இரவொன்றில் அம்மா தனது தோழிகளோடு பொழுது போவதற்காக கோஷ்டிகானத்தில் கலந்துகொள்ள, பாடிக்கொண்டிருந்த இளைஞனைத் திரும்பிப் பார்த்த பெண்கள் அவரது அழகிய தோற்றத்தில் அசந்து, கை தட்டி ஆர்ப்பரித்துக் கொண்டே அவர்களுக்குள், "இந்தமாதிரி ஒருவனையல்லவா மணந்து கொள்ளவேண்டும்! என்று முனகிக் கொண்டனர். ஆனால் அம்மாவை அவர் வசீகரிக்கவில்லை. "அவர் ஏதோ ஓர் அந்நியர், அவ்வளவுதான்," என்றாள் அம்மா. அந்நியர்தான் அவர் பெயர் காப்ரியல் எலிஜியோ கார்ஸியா. கார்டாஜினா டி இண்டியாஸில் மருத்துவமும் மருந்தியலும் படித்து வந்தவர், பண வசதியில்லாததால் பாதியிலேயே கைவிட்டுவிட்டு பக்கத்து கிராமங்களில் தந்தி ஆப்பரேட்டராக பணியாற்றிவந்தார். அவரது அக்காலத்தைய புகைப்படங்களைப்பார்க்கும் போது வாழ்ந்துகெட்ட தோரணை தெரியும். கரும் பட்டுத் துணியில் அந்நாளைய

மேல்பதிஸ்படி இறுக்கமான கோட்டும், உயர்த்தி விடப்பட்ட காலரும், அகன்ற டையும், தட்டையான வைக்கோற் தொப்பியும் அணிந்திருப்பார். நவீனமான, மெல்லிய கம்பி ஃப்ரேமில் வட்டமான கண்ணாடி. கடும் உழைப்பாளி என்றும், கட்டுப்பாடற்ற பெண் பித்தரென்றும் பெயர் பெற்றிருந்தாலும் அவர் வாழ்க்கையில் சிகரெட்டையோ, மதுக்கோப்பையையோ தொட்டதேயில்லை.

என் அம்மா அவரை அப்போதுதான் முதல் முறையாக பார்த்தாலும், அப்பா அவளை அதற்கு முந்தைய ஞாயிறன்று எட்டு மணி தேவாலயக் கூட்டத்தில் அத்தை ஃபிரான்ஸிஸ்கா சைமோடோசியா மெஜியாவின் துணையோடு வந்ததைப் பார்த்திருக்கிறார். அதற்கு அடுத்த வியாழக்கிழமையன்றும் அவர்கள் இருவரும் வீட்டினெதிரே இருந்த வாதாம் மரத்தின் கீழ் எதையோ பின்னிக்கொண்டு உட்கார்ந்திருப்பதையும் பார்த்திருக்கிறார். அந்த இரங்கல் கூட்டத்தன்றே அவராக அறிமுகம் செய்து கொள்ளவேண்டி கடிதங்கள் கொண்டு வந்திருக்கும் கர்னல் நிக்கலஸ் மார்க்வெஸின் மகள்தான் அவள் என்று அறிந்து கொண்டார். அந்த இரவிற்குப்பின் அம்மாவும் அவர் திருமணமாகாதவர் என்றும், சுலபமாக காதல் வயப்பட்டு விடக் கூடியவரென்றும், சுவாரஸ்யமாக பேசும் திறனுடையவரென்றும், கவிதைகள் எழுதக்கூடிய, நளினமாக நடனமாடக்கூடிய, உணர்ச்சிகரமாக வயலின் வாசிக்கக் கூடியவரென்றெல்லாம், அறிந்து கொண்டாள். நள்ளிரவு நேரங்களில் அவர் வயலின் இசைப்பதைக் கேட்கும்பொழுது அடக்கமுடியாமல் அழுகையாக வரும் என்று அம்மா என்னிடம் சொல்லியிருக்கிறாள். அவருக்குப் பிரியமான பாடல் **After the Ball** என்கிற காதலில் கசிந்துருகும் ஒரு மாலைவரி. அவருடைய வாசிப்பில் தவறாது இடம்பிடிக்கும் இந்த அந்திராகமும், அவரது மென்மையான ரசனையும், திறமையும், வலிமையான கவர்ச்சியும் கர்னலின் வீட்டுக் கதவுகளைத் திறந்து, காப்ரியல் எலிஜியோவை அடிக்கடி குடும்ப விருந்துகளுக்கு அழைக்க வைத்தது. அத்தை ஃபிரான்ஸிஸ்காவின் சொந்த ஊருக்குப்பக்கத்திலிருக்கும் ஸின்ஸேயில்தான் அவர் பிறந்தார் எனகேள்விப்பட்டதும் அத்தை சுலபமாக அவரை ஸ்வீகரித்துக்கொண்டாள். இந்த சந்திப்புகளில் அம்மாவை தனது காதல் வலையில் சிக்கவைக்கப் பெரும் பிரயத்தனப்பட்டு வந்தாலும் அம்மாவிற்கு அப்போதெல்லாம் அவை பெரிதாகத் தெரியக்காணோம். மாறாக அம்மாவின் வகுப்புத்தோழி ஒருத்திக்கும் அப்பாவிற்கும் இருந்த ரகசியமான காதலுக்காகவே தன்னிடம் இப்படி நட்பு பாராட்டுவதாக நினைத்திருக்கிறாள். அவர்களது எதிர்காலத் திருமணத்தை தானே முன்னின்று நடத்தி வைப்பதாகக்கூட அம்மா உறுதியளித்திருக்கிறாள். (அப்பா அவளை **god mother** என்றும் அம்மா அவரை **god son** என்றும் கூப்பிட்டு வந்திருக்கிறார்கள்) எனவே ஒரு நாள் இரவு விருந்தில் நாட்டியமாடிக்கொண்டிருந்தபோது அந்தத் துணிச்சலான தந்தி ஆப்பரேட்டர் தனது சட்டையிலிருந்து ஒரு ரோஜாவை எடுத்து அம்மாவிடம் தந்து, "இந்த ரோஜாவில் என் உயிரையே வைத்துத் தருகிறேன்," என்று சொன்னதும் அம்மாவிற்கு எவ்வளவு அதிர்ச்சியாக இருந்திருக்குமென்பதை சுலபமாக ஊகிக்கலாம்.

இந்த செயல் ஒன்றும் தன்னிச்சையாக எதோ ஒரு வேகத்தில் செய்து விட்டதல்லவென்று அப்பா பலமுறை பிற்பாடு என்னிடம் கூறியிருக்கிறார்.

எத்தனையோ பெண்களைப்பார்த்த பின்பு, லூயிசா ஸாண்டியாகாதான் அவருக்கான பெண் என்ற முடிவிற்கு வந்துவிட்டார். அம்மா, அந்த ரோஜாவைப்பற்றி விசேஷமாக எதையும் எண்ணிக்கொள்ளாமல், அவர் பெண்களிடம் செய்கிற பலவித சாகசக் குறும்புகளில் ஒன்று என்றே நினைத்தாள். உண்மையில் அன்றிரவு கிளம்பும்போது அந்த ரோஜாவைக்கூட அங்கேயே விட்டுவிட்டு வந்துவிட்டாள். இவ்வாறாக ஒரு ரகசியக்காதலனாக ஒரு நல்ல நண்பனாக அந்த அதிர்ஷ்டமற்ற கவிஞன் உருகி உருகி எழுதிய கவிதைகள் அம்மாவின் இதயத்தைத் தொடாவிட்டால் கூட, இந்த ரோஜாப்பூ அவளது தூக்கத்தைக் கெடுத்து காரணமற்ற கோபத்தை அவளுக்குள் நிரப்பியது. அம்மா பல குழந்தைகள் பெற்றெடுத்த பிறகு ஒருநாள் அவர்களது காதலைப்பற்றி முதன்முறையாக நான் கேட்டபோது," ஏன் என்னால் தாங்கமுடியவில்லையென்றால் அவரை நினைத்து நினைத்து கோபப்பட்டுக் கொண்டிருந்தேன். அவரைப்பற்றி நினைத்துக் கொண்டேயிருப்பது இன்னும் கோபத்தை அதிகப்படுத்தி, மேலும், மேலும் அவரையே நினைத்துக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று என்றாள். அடுத்த ஒரு வாரத்திற்கு அவரைப் பார்க்க நேருமோ என்ற பயமும், பார்க்க முடியாமற்போகுமோ என்ற தவிப்புமே அம்மாவை அலைக்கழித்து வந்தது. ஒருநாள் மதியம் வாதாம் மரத்தடியில் பின்னிக்கொண்டிருந்தபோது அத்தை ஃபிரான்ஸிஸ்கா தனது குறும்புச்சிரிப்போடு ,"யாரோ உனக்கு ஒரு ரோஜா கொடுத்ததாகப் பேசிக்கொள்கிறார்களே," என்று கேட்டார்.

அவள் இதயம் தவித்துவரும் பாட்டை அந்தப்பகுதியில் எல்லோருமே அறிந்திருக்கிறார்களென்பது அம்மாவிற்கு கடைசியாகத்தான் தெரிந்தது.

என் அப்பாவோடும், அம்மாவோடும் எண்ணற்ற முறை தனித்தனியாகவும், ஒன்றாகவும் பேசியதில், அவர்களது காதல் போராட்டத்தின் போக்கை மூன்று முக்கிய சம்பவங்கள் தீர்மானித்ததைப்பற்றி கூறியிருக்கின்றனர். முதலாவது குருத்தோலை ஞாயிறன்று தேவாலயக் கூட்டத்தில் நடந்தது. லூயிசா ஸாண்டியாகா அத்தை ஃபிரான்ஸிஸ்காவுடன் ஒரு பெஞ்சில் அமர்ந்து கொண்டிருக்கும் போது அப்பாவின் காலணியோசை பளிங்குத்தரையில் ஆளம்பொலிகளாக கிளர்ந்தெழுந்து அவர்களை நோக்கி வருவதைக் கேட்டாள். அவளுக்கு மிக அருகாமையில் அவர் கடந்து செல்கையில் அவரது கொலோன் வாசனை கதகதப்புடன் அவளைச் சூழ்ந்து மூச்சடைக்க வைத்து தாண்டிச் சென்றது. அத்தை ஃபிரான்ஸிஸ்கா அவரை கவனிக்காதது போலிருந்தாள்; அவரும் இவர்களை கவனிக்காததைப் போலிருந்தார். உண்மையென்னவென்றால் அவர்கள் தந்தி அலுவலகத்தைக் கடந்து செல்லும்போதே பார்த்துவிட்டு பின்தொடர்ந்து வந்திருக்கிறார். அவர் கதவையொட்டியுள்ள கம்பத்தில் லூயிசா ஸாண்டியாகாவை பின்னாலிருந்து பார்ப்பதற்கு வசதியாக சாய்ந்துகொண்டு நின்றார். ஆனால் அவரை அவள் நேராகப் பார்க்க முடியாது. சில உக்கிரமான நிமிடங்களுக்குப்பிறகு பதற்றத்தைத் தாங்க முடியாமல் பின்னால் திரும்பிப்பார்க்க, அங்கே அவளையே உற்றுப்பார்த்துக் கொண்டு அவர் நின்றிருக்க, அவர்களது விழிகள் நேருக்கு நேராய் சந்தித்ததும், கோபத்தில் அவளுக்கு செத்துவிடுகிறார்போல் தவித்தது. "சரியாக இதைத்தான் நான் திட்டமிட்டிருந்தேன்," என்று அப்பா பரவசத்துடன் தனது முதுமையில்

எத்தனையோ தடவை திரும்பத்திரும்ப என்னிடம் கூறியிருக்கிறார். ஆனால் அம்மா அடுத்த மூன்றுநாட்களுக்கு அவரது வலையில் தான் விழுந்து விட்ட கோபத்தை அடக்க முடியாமலிருந்தது என்று கூறுவார்.

இரண்டாவது அவர் அவளுக்கு எழுதிய ஒரு கடிதம். அது விடியற்காலை நேரங்களில் தனது ரகசியக்காதலை நெக்குருகி வயலினில் இசைக்கும் கவிஞன் ஒருவனின் கடிதத்தைப் போலத் தெரியவில்லை. அதிகாரத்தோரணையில், ஸாண்டா மார்தாவிற்கு அவர் அடுத்தவாரம் செல்வதற்குள் பதில் எழுதவேண்டுமென கட்டளையிடப்பட்டிருந்தது. அவள் அதற்கு பதில் அளிக்கவில்லை. தனது அறைக்குள் நெளிந்து நெளிந்து விஸ்வரூபம் எடுத்து மூச்சை முட்டவைத்துக்கொண்டிருப்பதை நசுக்கப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தாள். அத்தை ஃபிரான்ஸிஸ்கா, இந்தக்காதல் கவனிப்பாரின்றி, காலாவதியாகி அணைந்து போவதற்குள் ஒப்புக்கொள்ள வைக்க அவளிடம் முயற்சித்துக்கொண்டிருந்தாள். அத்தை ஜீவென்டினோ ட்ரிலோ என்ற விடாக்கண்டன் ஒருத்தனின் காதலைப்பற்றிச் சொன்னாள். ஜீவென்டினோ ட்ரிலோ தனது காதலைத்தெரிவிக்க தன் காதலியின் வீட்டு பால்கனிக்குக் கீழே இரவு எழுமணியிலிருந்து பத்து மணிவரை ஒவ்வொரு இரவும் நின்றுகொண்டு காத்திருப்பான். அவள் தனக்குத் தெரிந்த எல்லா வசவுகளையும், அவமதிப்புகளையும் அவனைநோக்கி வீசுவாள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக கழிவறையின் சிறுநீர்கலத்தை எடுத்து வந்து அவன் தலை மேல் கவிழ்ப்பாள். ஜீவென்டினோவை எதுவும் விரட்ட முடியவில்லை. இவ்வாறு எத்தனையோ ஞானஸ்நான அபிஷேகங்களுக்குப் பிறகு, அவனது தியாகத்தையும், அசைக்கமுடியாத காதலையும் கண்டு மனமுருகி அவள் அவனை திருமணம் செய்துகொண்டாள். நல்லவேளையாக என் பெற்றோர்களின் கதை அத்தகைய எல்லை வரை சென்றுவிடவில்லை.

மூன்றாவது நிகழ்ச்சி, இவர்கள் இருவரும் ஒரு திருமணத்திற்கு அழைக்கப் பட்டிருந்தபோது நடந்தது. லூயிசா ஸாண்டியாகாவின் குடும்பத்திற்கு மிகவும் வேண்டியவர்களென்பதால் அவளால் போகாமலிருக்க எந்த சாக்கும் சொல்ல முடியவில்லை. இதையறிந்து காப்ரியல் எலிஜியோவும், எதுவும் நடக்க வாய்ப்பிருக்கிறது என்று கல்யாணத்தில் கலந்து கொண்டார். அவர் அந்த அறைக்குள் தன்னை நோக்கி வந்து நடனமாட அழைத்தபோது லூயிசா ஸாண்டியாகாவால் தனது இதயத்தைக் கட்டுப்படுத்த இயலவில்லை என் இதயம் அத்தனை பலமாக அடித்துக் கொண்டிருந்தது கோபத்தாலா, பயத்தாலா என்று என்னால் சொல்ல முடியவில்லை என்று அம்மா என்னிடம் கூறினார். அப்பா இதனைப் புரிந்துகொண்டு பளிச்சென்று சொல்லியே விட்டார்.

"நீ சரியென்று சொல்லத் தேவையேயில்லை; உன் இதயமே உன் சார்பாக சொல்லிக்கொண்டிருக்கிறது." இதைக்கேட்டதும் ஒரு வார்த்தையும் சொல்லாமல் கையை உதறிக்கொண்டு அப்பாவை நடனஅறையின் நட்டநடுவில் விட்டுவிட்டு திரும்பிச் சென்றுவிட்டாள். அப்பா அவருக்கே உரித்தான முறையில் இதனை எடுத்துக்கொண்டார். "இது என்னை சந்தோஷப் படுத்தியது," என்று என்னிடம் சொன்னார். பொழுது புலருவதற்கு முன் அந்த மெல்லிய வயலின் இசைக் கீற்றுகளில் **After the Ball** லூயிசா ஸாண்டியாகாவின் படுக்கையறைக்குள் கசிந்து அவள் துயிலை எழுப்பியபோது, காப்ரியல் எலிஜியோவின் உன்மத்தமும்,

காதலும், விஷமாக அவளுக்குள் இறங்கி அ க்கமுடியாமல் சீற்றம்கொள்ள வைத்தது. காலையில் அவள் செய்த முதல் காரியம் அவரளித்த எல்லா பரிசுகளையும் திருப்பியதுதான். இந்த மறுப்பும், திருமணத்தில் பாதியிலேயே அவரை விட்டுவிட்டு வந்துவிட்டதும், காற்றில் எறியப்பட்ட சிறகுகளைப்போல, கோடைப்புயல் ஒன்று உருவான வேகத்திலேயே பிசுபிசுத்துப் போனதைப்போல அவர்கள் காதல் முதிர்வதற்குமுன்பே முடிந்துவிட்டதாகப் பலரும் நினைத்துக்கொண்டனர். லூயிசா ஸாண்டியாகாவிற்கு திரும்பவும் கடுமையான மலேரியாக் காய்ச்சல் வந்து, அவளது அம்மா மானாவ்ரே என்ற ஸியர்ரா நிவேதாவின் மறுபக்கத்தில் அமைந்திருக்கும் மிக அழகான வாசஸ்தலத்திற்கு நிவாரணத்திற்கு கூட்டிச்சென்றவுடன் இந்தக் கணிப்பும் அவர்களுக்கு உறுதிப்பட்டது.

என் அம்மாவும் அப்பாவும் இந்த மாதங்களில் எந்தத் தொடர்பும் வைத்துக் கொண்டிருக்கவில்லை என்று கூறினாலும் அதை நம்பமுடியவில்லை. ஏனெனில் அம்மா முழுவதும் குணமடைந்து திரும்பியதும் இருவருமே தத்தமது தயக்கங்களிலிருந்து முற்றாக விலகிவிட்டதாகவே தெரிகிறது. மினா, அவர்கள் திரும்புவதாக வீட்டிற்கு கொடுத்த தந்தியை அப்பா அலுவலகத்திலேயே படித்துவிட்டதால் ரயில்வே நிலையத்திற்கு அவரும் சென்றிருக்கிறார். லூயிசா ஸாண்டியாகா அவரை நெருங்கி கைகளைப்பற்றி வலுவாக அழுத்தியதும், அந்தக்காதலின் அடையாளத்தை அவர் அறிந்துகொண்டார். அம்மா எப்போதுமே இதனை அவளது வழக்கமான வெட்கத்துடன் மறுப்பதுண்டு. ஆனால் உண்மையில் அதற்குப்பிறகு அவர்களிருவருக்கிடையே எல்லாத்தடைகளும் கரைந்து விட்டிருந்தன. இதில் இல்லாதவொன்று இதற்கொரு முடிவுதான்; அதனை அத்தை ஃபிரான்ஸிஸ்கா அடுத்த வாரம் பெகோனியாப் புதர்களுக்கிடையே அமர்ந்து பின்னிக்கொண்டிருந்தபோது கொடுத்தாள்: "உன் அம்மாவிற்கு அத்தனையும் தெரியும்."

தன் காதலை வேண்டி வந்தவரை நடனமேடையின் நடுவிலேயே புறக்கணித்துவிட்டு வந்த கணத்திலிருந்தே, லூயிசா ஸாண்டியாகாவின் இதயத்தினூடாக பிரவகிக்கத் தொடங்கிவிட்ட ஒரு ரகசியக் காட்டாற்றினை, அவளது குடும்பத்தினரின் கடும் எதிர்ப்புகளை வைத்தேதான் தாண்ட முடிந்ததாக அம்மா எப்போதுமே கூறுவாள். அது கடும் உக்கிரத்துடன் நடந்ததொரு போர். கர்னல் நடுநிலைமையோடு இருப்பதாகக் காட்டிக் கொண்டாலும், அந்தப்பரம்பரையின் ஆதாரநெறிகளிலேயே காதலைக் கேட்பவன் இவர்கள் சொத்தைக் களவாடுவதற்கே முற்படுவதாக ஓர் எண்ணம் படிந்து போயிருக்கிறது. இந்தப்பழங்கால பாரபட்சம் இன்றுவரை உயிருடன் கனன்றுகொண்டு எங்கள் குடும்பத்து ஆண்களை தறிகெட்டு அலையவைத்து, எத்தனையோ மணமாகாத பெண்களை குழந்தைகளுடன் தெருவில் அலையவிட்டு எங்கள் பரம்பரையை விஸ்தீரணமாக்கியிருக்கிறது.

அவர்களது நண்பர்கள் தமது வயதிற்கேற்றபடி கட்சி பிரிந்து நிற்க, தீர்மானிக்க முடியாதவர்கள் சம்பவங்களைப் பார்த்து மனம் மாறத்துவங்கினர். இளைஞர்கள் அவர்களுக்கு உற்சாகமாக துணை நின்றனர். சமுதாயப் பாரபட்சத்திற்கு பலி ஆடாக ஆகியிருப்பதாகத் தன்னைக் காட்டிக் கொள்வதில்

அப்பாவிற்கும் இஷ்டமிருந்திருக்கிறது. பெரும்பான்மையான பெரியவர்கள் லூயிசா ஸாண்டியாகாவை ஒரு வசதியான வலிமையான குடும்பத்தின் அரும்பொக்கிஷமாகவும், அவளை அபகரிப்பதற்காகவே இந்தத் தறுதலை தந்தி ஆப்பரேட்டர் முயற்சி செய்வதாகவும் நினைத்தனர். இதுவரை அடக்கத்தோடும், கீழ்ப்பணிந்துமிருந்த லூயிசா இத்தகைய எதிர்ப்புகளிலிருந்து தன் காதலை புதிதாக ஈன்ற குட்டியை தாய்ச்சிங்கம் காப்பதைப்போல வெறியுடன் பாதுகாத்தாள். ஒரு தடவை வீட்டில் இது சம்மந்தமாக உச்சக்கட்டத்தில் வாக்குவாதம் நடந்து கொண்டிருக்கும் போது, மினா ஆத்திரம் எல்லைமீறிப்போய், ஒரு ரொட்டி வெட்டும் கத்தியை எடுத்துக்கொண்டு, தன் மகளைத்தாக்கப் பாய்ந்திருக்கிறாள். லூயிசா ஸாண்டியாகா எதற்கும் அசராமல் நிற்க, தனது வெறித்தனத்தைக்கண்டு வெட்கி, கடவுளே, கடவுளே என்று மினா கதறிக்கொண்டே, ஒரு மிருகத்தனமான கழிவிரக்கத்தில், எரிந்து கொண்டிருந்த அடுப்பிற்குள் தனது கையை செருகிவிட்டாள்.

காப்ரியல் எலிஜியோவிற்கெதிராக இருந்த வாதங்களில் முக்கியமானது அவர் திருமணமாகாத ஒரு பதினான்கு வயது சிறுமிக்கு பள்ளி ஆசிரியர் ஒருவருடனான திருட்டுக் காதலில் பிறந்தவர் என்பது. அவள் பெயர் அர்ஜீமிரா கார்ஸியா பேடர்நியா. ஒல்லியான குதூகலமான, சுதந்திரப் போக்குடைய ஒரு வெள்ளைப்பெண், அதன் பின்னாலும் மூன்று வெவ்வேறு தகப்பன்களிடம் ஆறு குழந்தைகள் பெற்றெடுத்து எவர் ஒருவரோடும் நிரந்தரமாக இருக்காமல் தனது பிறந்த ஊரான ஸின்சேவிலேயே தன் குழந்தைகளை வளர்த்து, வாழ்ந்து முடிந்தாள் புகழ்பெற்ற பாரம்பரியத்தின் அசல்வாரிசு காப்ரில் எலிஜியோ. அவரது பதினாறாவது வயதிலிருந்தே ஐந்து கன்னிப்பெண்களை காதலிகளாக வென்றெடுத்த, ஒருத்தியிடம் தனது பதினெட்டு வயதில் 'ஆச்சி' யில் பணிபுரிந்தபோது ஒரு மகனைப் பெற்றதாகவும், மற்றொருத்தியிடம் தனது இருபதாவது வயதில், அயபேலில் இருந்தபோது ஒரு பெண்ணைப் பெற்றதாகவும் அந்தக் குழந்தை கார்மென் ரோசாவை இன்னமும் தான் கண்ணால் கூடப்பார்க்கவில்லையென்றும் ரியோஷாக்காவிற்குச் செல்லும்வழியில் சூறைக்காற்றில் தடுமாறிக் கொண்டு ஓர் ஆற்றைக் கடந்து கொண்டிருந்த படகில் தனது முதலிரவைக் கழித்தபோது அம்மாவிடம் சொல்லி பாவமன்னிப்பு கேட்டிருக்கிறார். அந்தப்பெண் குழந்தையின் தாயிடம் தான் நிச்சயம்திரும்பி வந்து திருமணம் செய்துகொள்வதாக உறுதியளித்திருந்ததாகவும், லூயிசா ஸாண்டியாகாவைப் பார்த்தபின் அடியோடு தான் திசைமாற்றப் பட்டுவிட்டதாகவும், அந்த முதல் மகனை ஒரு நோட்டரியின் முன்வைத்து சட்டபூர்வமாக தனதுமகன் என்று அறிவித்து விட்டதாவும், அதேபோல் அந்தப் பெண்ணிற்கும் செய்யப்போவதாகவும், - இதெல்லாம் வெறும் வெற்றுச் சடங்குகளே - என கூறியிருக்கிறார். ஆச்சரியம் என்னவென்றால், தனது அதிகாரபூர்வமான மூன்று குழந்தைகளைத்தவிர கல்யாணத்திற்கு முன்பும், பிறகுமாக மேலும் ஒன்பது குழந்தைகளை வெவ்வேறு பெண்கள் மூலம் பெற்றெடுத்திருந்த கர்னல் மார்க்வெஸ் தனது மருமகனின் லீலைகளைக்கேள்விப்பட்டு, வாயடைத்துப் போய் வாடிக்கலங்கியிருக்கிறார். ஆனால் இவருடைய எல்லா குழந்தைகளையுமே மினா தன் சொந்தக் குழந்தைகள் போலத்தான் கருதி தனது வீட்டிற்கெல்லாம்

அழைத்திருக்கிறாள். இந்தக் கதைகளையெல்லாம் முதலில் நான் கேட்டபோது, இவற்றின் சரித்தன்மையை என்னால் உறுதிசெய்து கொள்ள இயலாவிட்டாலும் என் மூதாதைகளின் வீரப்பிரதாபங்கள் சிறிதளவும் என்னைக் கவரவில்லை என்பதே உண்மை.

காப்ரியல் எலிஜியோவிற்கு குடும்பத்தில் அத்தனை உக்கிரமாக எதிர்ப்பு இருந்ததற்கு மற்றொரு முக்கியமான காரணம், கர்னல் நிக்கலஸ் மார்க்வெஸ் எதிர்த்து போரிட்ட கன்ஸர்வேடிவ் கட்சியின் தீவிர உறுப்பினராக அவர் இருந்ததுமாகும். நீர்லாண்டியா மற்றும் விஸ்கான்ஸின் ஒப்பந்தங்களால் அறிவிக்கப்பட்ட அமைதியும் கூட வலுவில்லாமல் தான் இருந்தது. அரசாங்கம் மத்தியஸ்தர்களால் ஒப்பேற்றப்பட்டு நடந்து வந்தாலும் 'காத்துகளும் லிபரல்களும் ஒருவருக்கொருவர் முறைத்துக் கொண்டும், பற்களை நறநறத்துக் கொண்டும் எந்நேரமும் அந்த அசௌகரியமான அமைதி தளும்பி சரிந்துவிடுகிற சூழல்தான் காணப்பட்டது. காப்ரியல் எலிஜியோவின் கன்ஸர்வேட்டிஸம் கொள்கைப்பிடிப்பினால் அல்லாது அவர் குடும்பப் பாரம்பர்யத்தினால் வந்ததாக இருக்கலாம். ஆனால் என் அம்மாவின் குடும்பத்தினருக்கு அந்த ஒரு அம்சமே அவரது மற்ற சிறப்பியல்புகளான அறிவுக்கூர்மை,நம்பகத்தன்மை போன்றவற்றைவிட முக்கியமாகப்பட்டிருக்கிறது.

அவர் வாழ்க்கை முழுக்கவும் வெளிப்பார்வைக்குத் தெரிவதை விட ஏழ்மையாகவே இருந்திருக்கிறார்; வறுமையை என்றுமே ஏற்றுக்கொள்ள முடியாத, வெல்லமுடியாத எதிரியாகவே வெறுத்து வந்திருக்கிறார். லூயிசா ஸாண்டியாகாவுடனான காதலில் அவர் எதிர்ப்பட்ட சோதனைகளையும் அதே தைரியத்துடனும், கௌரவத்துடனும் சந்தித்திருக்கிறார். அரகாடகாவின் தந்தி அலுவலகத்தில் கடைசி அறையில் தனியாக படுத்துக்கொள்ள கித்தான் படுக்கை ஒன்றை எப்போதும் வைத்திருந்தார். இருந்தும் அதற்குப்பக்கத்திலேயே நன்கு எண்ணெயிடப்பட்ட ஸ்பிரிங் கட்டில் ஒன்றையும் வைத்திருந்தார் - சில இரவுகளில் அவருக்கு வாய்க்கின்ற வெகுமதிகளுக்காக. ஒரு கட்டத்தில் எனக்கு அவரது திருட்டுத்தனமான சாகச வேட்டைகளில் ஈர்ப்பு ஏற்பட்டாலும், அதைவிட வறண்ட தன்மை வேறெதுவுமில்லையென்று வாழ்க்கை எனக்குக் கற்றுத்தந்ததால் அவர்மீது எனக்கு எப்போதையும்விட அதிகமான பரிவுதான் ஏற்பட்டது.

அவர் இறப்பதற்கு சில வருடங்களுக்கு முன்புவரை அந்தக் கடினமான தினங்களில் நடந்த ஒரு கதையை அப்பா சொல்லிக் கொண்டேயிருந்தார். கர்னலின் வீட்டிற்கு அவர்சில நண்பர்களோடு சென்றிருந்த போது அனைவரையும் வரவேற்று அமரச் சொல்லியிருக்கிறார்கள், அப்பாவைத்தவிர. என் அம்மாவின் குடும்பத்தினர், இந்த சம்பவத்தை மறுத்தே வந்திருக்கிறார்கள்; அப்பாவிற்கு இன்னமும் ஆறாமலிருக்கும் வருத்தம் காரணமாகவோ, அல்லது ஞாபகப்பிசகோ இதற்கு காரணமென்று அவர்கள் பிடிவாதமாக மறுத்துவந்தாலும் எனது பாட்டிக்கு ஏறக்குறைய நூறு வயதாகியிருக்கும் போது நிகழ்கால ஞாபகங்களெல்லாம் அவருக்குத் தவறிப்போய், கடந்தகால ஞாபகங்களை மட்டும் பளிங்கு போல் துல்லியமாகக் கொண்டுவந்து மீள்வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த ஒரு மாயமான அற்புதக் கணத்தில் அதனைத் தவறவிட்டுவிட்டார். "அங்கே கூடத்தில் அத்தனைபேரும் உட்கார்ந்திருக்கும்போது அந்தப்பையன்

மட்டும் கதவருகிலேயே நின்று கொண்டிருக்கிறான்; நிக்கலாஸிடோ அவனை உட்காரக்கூடச் சொல்லவில்லை", அவர் குரலில் உண்மையான வருத்தம் தோய்ந்திருந்தது. அந்தக்காலங்களில் நம்பமுடியாத மாயம்போல அவர் வெளிக்கொண்டுவரும் கடந்தகாலச் சிதறல்களை, வெகுகவனத்துடன் நான் சேகரித்து வந்து கொண்டிருந்ததால் உடனே யார் அந்த மனிதன் என்று கேட்டேன். " அதுதான், வயலின் வைத்துக்கொண்டிருப்பானே அந்த கார்ஸியா".

எத்தனையோ அபத்தங்களுக்கிடையிலும் அவரது சுபாவத்திற்கு மாறாக செய்த விஷயம், ஓய்வுபெற்ற கர்னல் மார்க்வெஸிடமிருந்து தன்னை காத்துக்கொள்ள அவர் ஒரு கைத்துப்பாக்கியை வாங்கியது. அது பார்ப்பதற்கே அச்சமூட்டுகிற நீண்ட குழல் கொண்ட ஒரு ஸ்மித் & வெஸ்ஸன்-38. இதற்குமுன் எத்தனை உரிமையாளர்களை அது கண்டதென்றோ, எத்தனை மரணங்களை விளைவித்திருக்கின்றதென்றோ யாருக்குத்தெரியும்?

நிச்சயமாகத் தெரிந்த ஒரே விஷயம், அவர் அதை ஒரு முறை கூட எச்சரிப்பதற்காகவோ, ஆர்வத்தில் சோதித்துப் பார்ப்பதற்காகவோ கூட பயன்படுத்தவில்லை என்பதுதான். வருடங்கள் கழித்து அதனை, அவருக்குப் பிரியமான அந்திராகங்களை உருவாக்கிய வயலினுக்குப் பக்கத்தில், அதன் ஐந்து அசல் குண்டுகளோடு அலமாரியின் இதர குப்பைக்கூளங்களோடு கிடப்பதை அவளுடைய மூத்தமகன் பார்க்க நேர்ந்தது.

காப்ரியல் எலிஜியோவும் லூயிசா ஸாண்டியாகாவும் அவளது குடும்பத்தினரின் முரட்டுத்தனத்தைக்கண்டு கொஞ்சமும் பயப்படவேயில்லை; ரகசியமாக சந்தித்து வந்தனர். ஆனால் அந்த வட்டமும் முழுதாக மூடப்பட்டவுடன் அவர்களுக்கிருந்த ஒரே தொடர்பு சாமர்த்தியமாகப் பரிமாறிக் கொள்ளப்படும் கடிதங்கள்தாம். அவர் வரக்கூடிய வாய்ப்பிருக்கும் விருந்துகளுக்கு அவள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. தூரத்திலிருந்தேதான் அவர்கள் தரிசித்துக் கொள்ள வேண்டியிருந்தது. மிகக் கடுமையான அடக்கு முறைகளினால் யாருக்குமே அவள் அம்மாவின் மூர்க்கத்தை சந்திக்கத் திராணியில்லாமல் போய்விட்டதால் காதலர்கள் வெளியில் யார் கண்ணிற்கும் படமுடியாத அளவிற்கு மறைந்து போயினர். ரகசியமாகக் கடிதங்கள் பரிமாற இயலாத அளவிற்கு விரிசல்கள் மூடப்பட்டதும், கவிழ்ந்த கப்பலிலிருந்து கரையொதுங்கினவர்கள் போல் வழிதேட ஆரம்பித்தனர். காப்ரியல் எலிஜியோவின் பிறந்த நாளுக்கு யாரோ அனுப்பிய ஒரு கேக்கிற்குள்அவளது வாழ்த்து அட்டையை ஒளித்து அனுப்பினாள். அவளுக்கு சங்கேத மொழியில், உபத்திரவமில்லாததைப்போலத் தோற்றமளிக்கும் தந்திகளை அனுப்பினார் அத்தை பிரான்ஸிஸ்கோ இதற்கெல்லாம் உடந்தையாக இருப்பது தெரிந்ததும் வீட்டில் அவளுக்கிருந்த இடம் சரிய ஆரம்பித்தது. அம்மாவோடு துணி பின்ன வெளியிலிருக்கும் வாதாம் மரத்தடி வரைக்கும் மட்டுமே செல்ல அனுமதி தரப்பட்டது. பிறகு காப்ரியல் எலிஜியோ, போகும் வழியிலிருக்கும் அவரது நண்பர் டாக்டர் அண்டோனியோ பார்போசாவின் வீட்டு ஜன்னலிலிருந்து காதல் கடிதங்கள் அனுப்ப ஆரம்பித்தார். வாதாம் மரத்தடி ஜன்னலிலிருந்து பார்த்தால் தெரியுமென்பதால் அத்தை கவனிக்காமலிருக்கும் நேரங்களில் ஜாடையில் தங்களது உள்ளக்கிடக்கைகளை பரிமாறிக் கொண்டனர். இந்த யுக்தியையெல்லாம் கற்றுத் தந்தது லூயிசா ஸாண்டியாகாவின் நம்பிக்கையான, துணிச்சலான

தோழியான டாக்டர் பார்போசாவின் மனைவி அட்ரியானா பெர்டுகோ.

இத்தகைய ஆறுதல் பரிசுகளெல்லாம் அவர்கள் அனுபவித்து வந்த தகிப்பை அணைக்கப் போதுமானதாக இருந்திருக்கும். ஆனால் லூயிசா ஸாண்டியாகாவிடமிருந்து அவருக்கு வந்த ஒரு திடுக்கிடும் கடிதம் அவரை மாற்று யுக்திகளை யோசிக்கவைத்தது. அவள் அவசர அவசரமாக, கழிப்பறை காகிதத்தில் எழுதியிருந்தது என்னவென்றால், அவளது பெற்றோர்கள் அவளை காதல் நோயிலிருந்து மீட்க பரான்கஸிற்கு அழைத்துச் செல்கிறார்கள் என்பதுதான். ரியோஹாக்காவிற்கு ஸ்கூனர் படகில் ஒரு ராத்திரியிலேயே போய்விடக்கூடிய பயணமல்ல அவர்கள் தீர்மானித்திருந்தது. கோவேறு கழுதைகளின் மீது ஸியர்ரா நிவேதா மலைத் தொடராக முதுகொடிக்கும் பாதையில் பாடில்லா பிரதேசத்தில் ஒவ்வொரு ஊராக நின்று போகவேண்டிய யாத்திரை.

நான் செத்தே போய்விட்டிருக்கக்கூடும், என் அம்மா பல வருடங்கள் கழித்து சொன்னாள். உண்மையில் அதையும் அம்மா முயற்சித்துப்பார்த்திருக்கிறாள். தனது படுக்கையறையை தாழிட்டுக் கொண்டு வெறும் ரொட்டியையும், தண்ணீரையும் தவிர எதையும் சாப்பிடாமல் மூன்று நாட்களைக் கழித்திருக்கிறாள். அதன்பிறகு கர்னலின் கோபவெறியிடம் தோற்றுப் போனாள். காப்ரியல் எலிஜியோ நிலைமையை உணர்ந்து அதே போல ஆனால் சாத்தியமானதொரு தீவிர முடிவை எடுத்திருக்கிறார். டாக்டர் பார்போஸாவின் வீட்டிலிருந்து அவர் கிளம்பி சாலையைக் கடந்து நேராக வாதாம் மரங்களின் நிழலிற்கு வந்து அங்கே மிரண்டு போய் அமர்ந்திருந்த இரண்டு பெண்களுக்கு முன்னால் நின்றார்.

இந்தப் பெண்ணோடு ஒரு நிமிடம் தனியாகப் பேச வேண்டும் என்று அத்தை பிரான்ஸிஸ்காவிடம் கூறினார். முக்கியமாக ஒரு விஷயம் சொல்ல வேண்டும் அவளிடம் மட்டும்.

என்னவொரு துடுக்குத்தனம் என்றாள் அத்தை, "நான் கேட்கக் கூடாத எதையும் அவள் கேட்க மாட்டாள்."

அப்படியானால் நான் சொல்லப் போவதில்லை என்றார் அவர் ஆனால் அதற்கு பிறகு நடப்பதற்கு நீங்கள் மட்டும்தான் பொறுப்பு.

லூயிசா ஸாண்டியாகா பயத்துடன் அத்தையிடம் கொஞ்சநேரம் தனியாக விடும்படி கெஞ்சினாள் பின், காப்ரியல் எலிஜியோ அவள் பெற்றோர் கூறுகிறபடியே எந்த ஊருக்கும் எந்த வழியிலும் கொண்டுபோக ஒப்புக் கொள்ளும்படியும் எவ்வளவு நாள்கள் ஆனாலும் பொறுத்துக் கொள்ளும்படியும் கூறிவிட்டு, ஒரே ஒரு நிபந்தனையை மட்டும் அவளது பெற்றோர்களிடம் அவள் விதிக்க வேண்டும் என்று கூறினார். அவரை மட்டுமே அவள் மணந்து கொள்வாள் என்கிற நிபந்தனை. அந்த யோசனை அவளுக்கும் ஏற்புடையதாக இருந்தது. மரணம் மட்டுமே அவர்களது திருமணத்தை தடுக்க முடியும் என்று அவள் அப்போது கூறியது அவருக்கும் தீர்மானமாகப்பட்டது.

அவர்களது தீர்மானங்களை நிரூபிப்பதற்கு ஏறக்குறைய ஒரு வருடம் ஆகிவிட்டது. ஆனால் இருவருமே அதனால் வரப்போகும் விளைவுகளை நினைத்துப்பார்த்திருக்கவில்லை. லூயிசா ஸாண்டியாகாவின் பிரயாணத்தின் முதல்பகுதி, அவள் ஒரு கோவேறு கழுதையின் முதுகில் அமர்ந்திருக்க, ஸியர்ரா நிவேதாவின் செங்குத்துப் பாறைகளூடாக மேய்ப்பாளர்களின் தொடர்வரிசை

இருவாரங்களாக கடந்தது. லூயிசா ஸாண்டியாகாவிற்கும் அவளது அம்மாவிற்கும் துணையாக சோன் என்று அழைக்கப்படும் பெயரற்ற ஒரு வேலைக்காரி இருந்தாள். அந்த செங்குத்தான கரடு முரடான மலைப்பாதை எத்தகையதென்று தனது ராணுவ நாட்களின் இரவுக் கேளிக்கைகளின் விளைவாக அந்த வழி பூராவும் தனது வாரிசுகளை விதைத்துவிட்டு வந்திருக்கும் கார்லஸுக்கு நன்றாகவே தெரியும். ஆனால் அவரது மனைவி இவற்றையெல்லாம் அறியாது ஸ்கூனரில் போவதில் இதற்குமுன் ஏற்பட்டிருந்த கசப்பு அனுபவங்களினால், இந்த வழியை தேர்ந்தெடுத்துவிட்டாள். என் அம்மாவிற்கு, கோவேறு கழுதைகள் மேல் சவாரி செய்வது முதல்முறை என்பதால் அந்தப்பிரயாணமே மூர்க்கத்தனமான வெயிலிலும், குரூரமான பேய்மழையிலும் நரகமாக வாட்டியெடுக்க ஒரே ஆறுதலாக மலைப்பிளவுகளிலிருந்து சீறிவரும் காற்று அவளை அவ்வப்போது துயிலூட்டி வந்தது. நிச்சயமில்லாத ஒரு காதல், இன்னமும் முழுசாக நம்பிக்கை ஏற்படுத்தாத ஒரு காதலன், அவனது விசித்திரமான நடவடிக்கைகள், விடியற்காலையில் துயிலெழுப்பும் அவனது வயலின் - எல்லாமே அவளது கற்பனையின் விநோதப்படைப்புகளாகப்பட்டன. நான்காவது நாளன்று பொறுக்க முடியாமல் அவள் அம்மாவிடம், அவர்கள் இப்போதே திரும்பிச்செல்லாவிட்டால் மலை முகட்டிலிருந்து கீழே குதித்து விடுவதாக எச்சரித்தாள். தனது மகளைவிட அதிகமாக மிரண்டுபோன ட்ரான்க்விலினா இகுவாரன் கோட்ஸ் ஒப்புக்கொண்டாள். ஆனால் தலைமை கோவேறு கழுதையோட்டி வரைபடத்தைக்காட்டி, திரும்பச்செல்வதற்கும், போய் சேருவதற்கும் ஒரே நேரம்தான் பிடிக்கும் என்று அறிவுறுத்தினான். பதினோராவது நாளில் அந்தக்கடைசி மலைமுகட்டிற்கப்பால் வாலேபாரின் பிரகாசமான சமவெளி கண்ணில்பட்டதும் அவர்களுக்கு உயிர் திரும்பியது.

இந்த முதல்கட்டம் முடிவதற்குள், காப்ரியல் எலிஜியோ, தனது காதலின் ஜீவ ஊற்றுடன் தொடர்பு கொள்ள ஒரு நம்பிக்கையான வழியை கண்டுபிடித்து விட்டார். அவளும், அவளது அம்மாவும் பரான்கஸை அடைவதற்குள் தங்க வேண்டியிருந்த வழியிலுள்ள ஏழு நகரங்களிலுமுள்ள தந்தி ஆப்ரேட்டர்களைத் தொடர்பு கொண்டு அவர்களது ஒத்துழைப்பை வாங்கிக் கொண்டார். லூயிசா ஸாண்டியாகாவும் தனக்கென்று சில ஏற்பாடுகளை செய்து கொண்டாள். அந்த மொத்தப்பிரதேசமுமே இகுவாரன் கோட்ஸ் என்ற பெயர்களுள்ளவர்களால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. உள்புக முடியா வனத்தைப்போன்ற இதயம் கொண்ட அப்பழங்குடி மக்களைத் தன்பக்கம் இழுத்துக்கொள்வதில் அவள் வெற்றி பெற்றாள். இதனால் அந்தப் பயணம் முடிகிறகாலம் வரை மூன்று மாதங்களுக்கு தங்கியிருந்த வாலேதுபாரிலிருந்து காப்ரியல் எலிஜியோவுடன் தொடர்ந்து தொடர்பு கொள்ள ஏதுவானது. ஒவ்வொரு நகரத்தின் தந்தி அலுவலகத்தை அவள் தாண்டினாலே போதும், சிநேகிதமும் ஆர்வமும் மிகுந்த அவ்விளம் பழங்குடிப்பெண்கள் சூட்சுமமாக அவளிடம் செய்திகளைக் கொடுத்துவிட்டு பதில்களை வாங்கிச்சென்றனர். அந்தப் பேசா மடந்தை சோன் இதில் மதிப்பிடமுடியாத அளவிற்குப் பங்கெடுத்து உதவியிருக்கிறாள். எழுதப்படிக்கத்தெரியாத அவள், கடிதங்களை தனது ஆடைக்குள் மறைத்து எடுத்து வந்து தருவாள். எப்படியும் அவளிடமிருந்து ஒரு ரகசியத்தைப்பிடுங்குவதற்குள் செத்தே போய்விடப்போகிறாள்; அப்படிப்பட்ட

பெண்ணல்லவா அவள் !

ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்குப்பின் இந்த சாகசச் சம்பவங்களை Love in the Time of Cholera வில் கொண்டு வர முயற்சி செய்து கொண்டிருந்த போது என் அப்பாவிடம் இதுபோன்று ஒரு தந்தி அலுவலகத்திலிருந்து மற்றொன்றிற்கு தகவல் இணைப்பு ஏற்படுத்திக்கொள்வதற்கு அவர்களது அலுவலக நடைமுறையில் ஏதாவது வார்த்தை உள்ளதாவென்று கேட்டேன். சிறிதும் யோசிக்காமல் Pegging in என்றார். அகராதியில் இந்தவார்த்தை இருந்தாலும் இக்குறிப்பிட்ட அர்த்தத்தில் அது இல்லை; தந்தி அலுவலகங்களின் பலகைகளில் இதைப்போன்று முளை செருகி இணைப்பு கொடுத்துக்கொள்ளும் வழக்கமிருப்பதால் இந்தப்பதத்தை அப்படியே நான் பயன்படுத்திக்கொண்டேன். இதற்குப்பிறகு அவருடன் இதைப்பற்றி ஒருபோதும் விசாரித்ததில்லை. ஆனால் அவர் காலமாவதற்கு சிறிது காலத்திற்கு முன்னால் ஒரு செய்தித்தாளின் பேட்டியில், எப்போதாவது அவர் நாவல் எழுத விருப்பப்பட்டதுண்டா என்று கேட்கப்பட்டார். அதற்கு, எப்போது நான் அவரிடம் Pegging in என்ற அந்த வினைச்சொல்லைப் பற்றி விளக்கம் கேட்டேனா, அப்போதே அவர் நினைத்துக்கொண்டிருந்த நாவலைத்தான் நான் எழுதிறேன் என்று தெரிந்து அந்த ஆசையை விட்டு விட்டதாகக் கூறினார்.

அப்போது எங்கள் வாழ்க்கையையே மாற்றியிருக்கக்கூடிய ஒரு விஷயத்தைப் பற்றியும் அவர் சொன்னார். ஆறுமாத பயணத்திற்குப்பிறகு என் அம்மா ஸான் ஜீவான் டெல்சீஸருக்கு வந்ததும், காப்ரியல் எலிஜியோவிற்கு அனுப்பிய தந்தியில், அவளது அம்மா பரான்கஸிற்கே குடும்பத்தை நிரந்தரமாகக் குடிபெயர்த்துச் சென்று விடுவதற்கு திட்டமிட்டிருப்பதாக தெரிவித்திருந்தாள். மெடார்டோ பாச்சிகோ கொல்லப்பட்டதால் ஏற்பட்ட துவேஷம் இதற்குள் ஆறிவிட்டிருக்கும் என்று மினாவிற்கு ஒரு நம்பிக்கை. இந்த யோசனை மிகவும் அபத்தமாகப்பட்டது.

கஷ்டகாலங்களெல்லாம் அப்போதுதான் விலகி, அரகாடகாவின் வாழை பதனிடும் தொழிற்சாலையின் கரிசனம் முழுமையாக அவர்கள் குடும்பத்திற்கு கிடைத்தது. அவர்களின் பொற்காலக் கனவு, நிறைவேறுவதற்கான சூழல் ஏற்பட்டிருந்தது. ஆனால், அந்தக்குடும்பத்தின் பிடிவாதத்திற்கு காரணம், தங்களது சுயலாபங்களைத் தியாகம் செய்தாலாவது தங்களது மகளை வல்லூறு ஒன்றின் நகங்களிலிருந்து காப்பாற்றமுடியுமா என்பதுதான். காப்ரியல் எலிஜியோ உடனடியாக பரான்கஸிற்கு இருபது லீக் தூரத்தில் (ஏறக்குறைய 130 கி.மீ.) உள்ள ரியோஷாகாவிற்கு இடமாறுதல் கோரி விண்ணப்பித்தார். அங்கே எந்தஇடமும் காலியாக இல்லாவிட்டாலும் அவரது கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று பதில் வந்தது.

லூயிசா ஸாண்டியாகா அவள் அம்மாவின் ரகசியத்திட்டங்களை உறுதிப்படுத்தவில்லையென்றாலும் கூட மறுக்க இயலவில்லை; ஏனெனில் பரான்கஸை நெருங்க நெருங்க மினா பதட்டம் குறைந்து அமைதியாக இருப்பதைப் போலத் தோன்றியதுதான். அனைவருக்கும் ரகசிய காப்பாளியான சோன் இடமிருந்து எந்த சமிஞ்ஞையும் கிடைக்கவில்லை. லூயிசா ஸாண்டியாகா அவள் அம்மாவிடம் பரான்கஸிலேயே தங்கியிருக்க ஆசைப்படுவதாகச் சொன்னாள். அவள் அம்மாவிற்கு ஒருகணம் தயக்கம்

ஏற்பட்டாலும் எதுவும் சொல்லவில்லை. பகலுக்கு தான் ஒரு ரகசியத்திற்கு மிக அருகே சென்று வந்துவிட்ட உணர்வு இருந்தது. மன அமைதி குலைந்தவளாய் தெருவில் சீட்டுகளை வைத்துக்கொண்டு ஜோதிடம் சொல்லும் ஒரு ஜிப்சியின் வார்த்தைகளில் தஞ்சமடைந்தாள். அந்த ஜோதிடன் பரான்கஸில் அவளது எதிர்காலம் இருப்பதாகச் சொல்லாவிட்டால் கூட, லூயிசா ஸாண்டியாகா அதிகம் அறிந்திராத, வெகு தூரத்தில் இருக்கும் ஒருத்தனோடு திருமணம் நடந்து, நீண்ட சந்தோஷமான வாழ்க்கை வாழ்ந்து, சாகும்வரை அவளை அவன் அன்பாக வைத்திருப்பான் என்று சொன்னான். அந்த ஜிப்சி வர்ணித்தது எல்லாமே அவள் காதலனின் ஜாடையை ஒத்திருந்ததாகவே அவளுக்குத் தோன்றியது. பிறகு அந்த ஜிப்சி சிறிதும் சந்தேகமின்றி அவளுக்கு அவன் மூலம் ஆறு குழந்தைகள் பிறக்குமென கூறினான். பயத்தில் நான் செத்தே போனேன் , என்று கூறிய போது சொன்னாள். நிஜத்தில் அதைவிட ஏறத்தாழ இரண்டு மடங்கு பிறக்கப்போகிறதென்று அப்போது அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. இந்த ஜோதிடத்தை உற்சாகத்துடன் நம்பிக்கொண்ட அக்காதலர்கள் தமது தந்தி வாசகங்களில் அதற்குப்பிறகு கற்பனாலங்கார வாக்குறுதிகளையும், ஆவேச அறிவிப்புகளையும் நிறுத்திக்கொண்டு நிதானமாக யோசித்து அவர்கள் எதிர்காலத்தை எவ்வாறு எதிர்ப்புகளைத்தாண்டி அமைத்துக்கொள்வதென்றும், வேறுயாரையும் கலந்து கொள்ளாமல் அடுத்தமுறை சந்திக்கும்போது எப்படி திருமணம் முடித்துக்கொள்வதென்றும் அலச ஆரம்பித்தனர்.

அடுத்த நகரமான ஃபொன்சேகாவிற்கு வந்த லூயிசா ஸாண்டியாகா அவர்களது உடன்பாட்டிற்குக் கட்டுப்பட்டு அங்கே நடக்கவிருந்த உல்லாச விருந்தில் தனது காதலரின் அனுமதியின்றி தான் கலந்து கொள்வது சரியல்ல என்று நினைத்துத் தயங்குமளவிற்கு கட்டுப்பாட்டுடன் இருந்தாள். காப்ரியல் எலிஜியோ, கித்தான் படுக்கையில் 103 டிகிரி ஜுரத்தில் புரண்டு கொண்டிருந்தபோது தந்தி மேசையிலிருந்து அவசர சங்கேத ஒலி கடகடத்தது. அது ஃபொன்சேகாவிலிருந்து தந்தி ஆப்ரேட்டர், ஜாக்கிரதை உணர்வோடு அந்த ஆப்பரேட்டர் மறுமுனையில் இருப்பது யார் என்று கேட்க, காப்ரியல் எலிஜியோ சந்தோஷத்தை விட அதிகமாக வியப்படைந்து, நான் அவளுடைய GOD SON என்று சொல் , என்று பதில் அனுப்பினார். அந்த சங்கேதக்குறியை புரிந்துகொண்டு மறுநாள் காலை ஏழுமணிவரை அவள் நாட்டியமாடிக் கொண்டிருந்தாள். அதன்பிறகு அவசர அவசரமாக வந்து உடைமாற்றிக்கொண்டு தேவாலயக் கூட்டத்திற்கு செல்ல வேண்டியிருந்தது.

பரான்கஸில் அந்த குடும்பத்திற்கெதிராக எந்த வன்மமும் துளிக்கூட காணப்படவில்லை. பதிலாக அந்த துரதிருஷ்ட சம்பவம் நடந்து பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு கிறுத்துவப்பண்பான மறக்கலும் மன்னித்தலும், பெடார்டோ பாச்சேகோவின் உறவினர்களிடையே வந்துவிட்டிருந்தது. அவரது உறவினர்கள் லூயிசா ஸாண்டியாகாவிற்கும் அவளது அம்மாவிற்கும் அளித்த அன்பார்ந்த வரவேற்பு லூயிசா ஸாண்டியாகாவை வெயிலும், புழுதியும், ரத்ததாகம் பிடித்த சனிக்கிழமைகளும், தலையற்ற பிசாசுகளையும் கொண்டிருக்கும் அரகாடகாவை விட்டுவிட்டு இந்த மலையடிவாரச்சோலை வனத்திலேயே தங்கிவிடலாமா என ஏங்க வைத்தது. காப்ரியல் எலிஜியோவிடம் இதைக்குறிப்பிட்டு, அவருக்கு ரியோஹாச்சாவிற்கே மாறுதல்

கிடைத்துவிட்டால் இங்கேயே குடும்பம் வைத்துவிடலாமா என்று கேட்டாள்; அவரும் ஒப்புக்கொண்டார். ஆனால் இதற்குள்ளாகவே அவள் குடும்பம் பாரீஸிலிருந்தே குடிபெயரப்போவதாக சொன்ன வதந்தி பொய்யென்று அவளுக்குத் தெரிந்தது. மினாவைத்தவிர வேறு யாருக்கும் அதில் நாட்டமில்லை. இது அவளது மகன் ஜியான் டி டிபோவிலிருந்து எழுதிய கடிதத்தின் மூலம் தெரிந்தது. அவன் அதற்கு முன்னதாக அவளுக்கு எழுதிய கடிதத்தில் அவர்கள் பாரிஸிலிருந்து வெளியேற்றப்படமாட்டார்கள் என்றும் தெரிவித்திருந்தான். இருபது வருடங்களாகும் வரை, அவர்கள் குடும்பம் வரக்கூடாது என்ற டா குவெஜ்ராவின் சட்டத்தை நினைவுபடுத்தியிருந்தான் (அந்த சட்டத்தின்படி குடும்பத்தில் ஒருத்தர் குற்றமிழைத்திருந்தாலும், குற்றவாளி குடும்பத்தின் எல்லா ஆண்களும் தண்டனை அனுபவிக்க வேண்டும்). நம்பகமாக முதலாக இந்தச் சட்டத்தின்மேல் அவளுக்கு எந்தளவிற்கு பயம் இருந்ததென்றால், 50 வருடங்கள் கழித்து தனது மகன் எடுவார்டோ பொது கவர்னரானபோதில் பாரிஸில் சேருவதற்கு கூட எதிர்ப்பு தெரிவித்துக்கொண்டிருந்தாள்.

இந்த பயங்கள் எல்லாவற்றிலிருந்தும் அடுத்த மூன்று நாட்களில் விடுதலை கிடைத்துவிட்டது. மினா, பாரிஸிலிருந்து குடிபெயரப்போவதில்லை என முடிவெடுத்து விட்டதை லூயிசா ஸாண்டியாகோ உறுதி செய்த அதே செவ்வாய்கிழமை ரியோஹசாக்காவில் பணிபுரிந்த ஊழியர் இறந்துவிட்டதால் காபிரியல் எலிஜியோவிற்கு அந்த இடத்திற்கு மாறுதல் வழங்கப்பட்டிருப்பதாக தகவல் வந்தது. அடுத்தநாள் சமையலறை அலமாரியில் கோழி வெட்டும் கத்தியை மினா தேடிக்கொண்டிருந்தபோது, பிஸ்கட் டப்பா ஒன்றை மிதேச்சையாகத் திறந்து பார்த்தாள். அதில்தான் அவளது மகள் தனது காதல் கடிதங்களை மறைத்து வைத்திருந்தாள். மினாவின் சீற்றம் எல்லை கடந்து அவள் வழக்கமாக திட்டும்போது பயன்படுத்தும் — கடவுள் எல்லா பாவங்களையும் மன்னித்து விடுவார் — கீழ்ப்படியாமையைத்தவிர, என்பதைத்தவிர வேறு எதையும் அவளால் சிந்திக்கமுடியவில்லை. அந்த வார இறுதியில் அவர்கள் ரியோஹசாக்காவிலிருந்துச் சென்று ஸாண்டா மார்தாவிற்கு ஸ்கூனர் பிடித்தனர். அந்த இரவில் அடித்த அந்தக்கொடுமையான பிப்ரவரி புயற்காற்றை இருபெண்களுமே உணரமுடியாத அளவிற்கு உணர்ச்சிவயப்பட்டிருந்தனர். தான் தோற்கடிக்கப்பட்டு விட்டதில் மினா இடிந்து போயிருந்தாள்; லூயிசாவிற்கு சந்தோஷம் பிடிபடவில்லையென்றாலும் பயமும் இருந்தது. வண்டியிலிருந்து இறங்கியதும் கெட்டியான தரை, மினா கடிதங்களைக் கண்டதால் அடைந்திருந்த தவிப்பை நிதானப்படுத்தியது. அடுத்தநாள் லூயிசா ஸாண்டியாகோவை தனது மகன் ஜியான் டி டிபோவின் வீட்டில் ஸாண்டா மார்தாவில் விட்டுவிட்டு தன்மகளை காதல் பேய்களிடமிருந்து காப்பாற்றிவிட்ட திருப்தியில் தான் மட்டும் தனியாக அரகாடகாவிற்கு ரயிலில் பிடித்துச்சென்றாள். ஆனால் உண்மை எதிர்மாறாக இருந்தது. காபிரியல் எலிஜியோ அரகாடகாவிலிருந்து விரும்பும் போதெல்லாம் ஸாண்டா மார்தாவிற்கு வந்து லூயிசா ஸாண்டியாகோவை பார்த்துவிட்டுச் சென்றுகொண்டிருந்தார். ஜுவான் டிபோவின் மனைவி எந்தப் பக்கமும் சாய்வதில்லை என்று தீர்மானம். அவரது சொந்த அனுபவமும் சிலாக்கியமாக இல்லை; ஒருபுறம் அதை சிகோதர்க்கும், பெற்றோர்களின் மீதான

மரியாதைக்கு மறுபுறமுமாக சிக்கிக்கொண்டிருந்தவர். பழமொழியில் வரும் நற்பண்பாக ஒரு முடிவெடுத்தார்கள். காதலர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளலாம். அவர் வீட்டிற்கு வெளியே, தனியாக இருக்கக்கூடாது, தனக்குத் தெரிந்தமாதிரி சந்தித்துக்கொள்ளக்கூடாது. அவர் மனைவி டிலியா காபாரெலோ தனது மாமியாரிடம் ஏற்பட்ட தன் சொந்த அனுபவங்களை மன்னித்துவிட்டிருந்தாலும், மறந்துவிடாமல் தனது மைத்துனிக்கு தான் பயன்படுத்திய அதே யுக்திகளை வழிமுறைகளையும் தந்துதவினாள்.

எனவே காப்ரியல் எலிஜியோவும் லூயிசா ஸான்டியாகாவும் நண்பர்களின் இல்லங்களிலும், அதிக கூட்டமில்லாத பொது இடங்களிலும் சந்தித்துக்கொண்டனர். கடைசியில் மாமா ஜீவானிடோ வீட்டில் இல்லாத நேரங்களில் ஜன்னல் வழியாக பேசிக்கொள்ளவும் ஆரம்பித்தனர். லூயிசா ஸான்டியாகா முன் அறையிலும், காப்ரியல் எலிஜியோ தெருவிலும். வீட்டிற்குள் சந்தித்துக்கொள்ளக் கூடாதென்ற கட்டளை மதிக்கப்பட வேண்டுமல்லவா. அந்த ஜன்னலும் ரகசியக்காதலுக்காகவே வடிவமைக்கப்பட்டது போல. அண்டலூசியன் கம்பிவேலைப்பாடுகளில் மல்லிகைக்கொடி படர்ந்து இரவுகளில் மணம் கிறங்கவைக்கும்.

மாமா ஜீவானிடோவின் மனைவி முன்னெச்சரிக்கையுடன் அண்டை வீட்டார்களையும் இந்தத் திருட்டுத்தனத்திற்கு தயார் செய்து வைத்திருந்தாள்; அவர்கள் எந்த அபாயம் ஏற்பட்டாலும் சீழ்க்கையடித்து எச்சரிக்கவேண்டும். ஒருநாள் இரவு எல்லா முன்னேற்பாடுகளும் தோல்வியடைந்து அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோதே மாமா ஜீவானிடோ வந்துவிட, அவர்களது காதலுக்கு முன்னால் அவர் இறுதியாக சரணடைந்தார். அவர் மனைவி சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் காதலர்களை அறைக்குள் அமரவைத்து, உலகம் முழுதும்பார்த்துக்கொள்ளும்படி சன்னல்கதவுகளை நன்றாகத்திறந்து வைத்தாள். என் அம்மா, அப்போது தன் சகோதரன் கனத்த நிம்மதிப் பெருமூச்சுடன் ஸ் அப்பாடா என்று நாற்காலியில் விழுந்த விதத்தை எப்போதும் மறக்கவேயில்லை.

இதே நேரத்தில் காப்ரியல் எலிஜியோவிற்கு ரியோஹாசாவில் பணியில் சேர அதிகாரப்பூர்வமான உத்தரவு வந்தது. மற்றுமொரு பிரிவை நினைத்து பேதலித்துப்போன உன் அம்மா டயசிஸ்ஸின் மதகுருவான பெருந்தகையாளர் பெட்ரோ எஸ்பிஜோலிடம் தனது பெற்றோர்களின் அனுமதியில்லாமலேயே அவர்களது திருமணத்தை நடத்தித்தர முறையிட்டுக்கொண்டாள். இந்தப் பெருந்தகையாளர் மீது உள்ளூர்காரர்கள் வைத்திருந்த அதீதமான மரியாதை ஏறக்குறைய பக்தியாக மாறி பிரார்த்தனையின் எழுச்சியான கட்டங்களில் உண்மையிலேயே அவரது கால்கள் தரையிலிருந்து எழும்பி சில சென்டி மீட்டர்களுக்கு உயருகின்றதோ என்பதை உறுதி செய்துகொள்வதற்காகவே அவரது கூட்டங்களுக்கு சிலர் வர ஆரம்பித்தனர். லூயிசா ஸான்டியாகா இவரது உதவியைக் கோரியதும் ஒரு குடும்பத்தின் அதிகார வரம்பின் சுதந்திரத்தில் தன்னால் தலையிட முடியாது என்று மறுத்தாலும் தேவ சபை அங்கத்தினர்கள் மூலமாக எனது தந்தையின் குடும்பத்தைப்பற்றி ரகசியமாக தகவல் சேகரித்தார். ஸின்சேவின் உள்ளூர் பாதிரியார் அர்ஜீமிரா கார்ஸியாவின் சுதந்திர வேட்கையைப்பற்றியெல்லாம் குறிப்பிடாது, அது ஒரு மரியாதைப்பட்ட, ஆனால் அதிகப் ஆசாரமில்லாத குடும்பம் என்று மட்டும் கருணை கூர்ந்து ஓர்

அபிப்பிராயத்தை அனுப்பி வைத்தார். பிறகு, பொறுத்தமையாளர் காதலர்களிடம் ஒன்றாகவும், தனித்தனியாகவும் பேசிவிட்டு கர்னலுக்கும் மினாவிற்கும் கடிதம் ஒன்றை எழுதினார். அவர்களுடைய அசைக்க முடியாத காதலை எந்த மனித சக்தியாலும் பிரிக்க இயலாதென்று அவர் உபதேசித்து எழுதியிருந்ததைப் படித்ததும், எனது அம்மாவின் பெற்றோர்கள் தெய்வீக சக்தியிடம் தோற்றுப்போய் அந்த வலி மிகுந்த அத்தியாயத்தைப் புரட்டிவிட முடிவெடுத்து தமது மகள் ஜீவான் டி டியோஸிற்கு முழு அதிகாரத்தையும் கொடுத்து ஸாண்டா மர்தாவில் திருமண ஏற்பாடுகளைச் செய்ய அனுமதித்தனர். அவர்கள் திருமணத்திற்கு வரவில்லையென்றாலும் அத்தை ஃபிரான்ஸிஸ்கோ ஸைமோடோசியாவின் முன்னிலையில் நடத்த அனுப்பி வைத்தனர்.

ஸாண்டா மர்தாவின் மாதா ஆலயத்தில் ஜூன் 11, 1926 அன்று என் பெற்றோர்களின் திருமணம் குறிப்பிட்ட நேரத்தை விட 40 நிமிடங்கள் தாமதமாக நடைபெற்றது. மணப்பெண் அன்றைக்குத்தான் திருமணம் என்பதை மறந்து காலை எட்டுமணி வரை தூங்கிவிட்டதே அதற்கு காரணம். அதன்பிறகு அவளை எழுப்பி திருமணத்தை நடத்தி முடித்து அந்த இரவன்று அந்த பயங்கரமான ஸ்கூனர் பிடித்து ரியோஹாகாவிற்கு செல்ல வேண்டியிருந்தது. மறுநாள் அங்கே காப்ரியல் எலிஜியோ பணியில் சேர வேண்டியிருந்தது. அந்த முதலிரவுப் பயணத்தை கடல்குமட்டல் நோயில் இருவரும் மிகுந்த கற்புடனேயே கழிக்க வேண்டியிருந்தது.

எனது அம்மாவிற்குத் தனது தேனிலவை கழித்த அந்த ரியோஹாகா வீட்டைபற்றி பசுமையான நினைவுகள். எப்போதும் அதைப்பற்றி எங்களிடம் சொல்லிச்சொல்லி எல்லா விபரங்களையும் மனதில் ஆழமாய் பதிந்து ஒவ்வொரு அறையாக மொத்தத்தையும் வர்ணித்து விட முடியும் ஏதோ நாங்களே அங்கே வசித்தது மாதிரி. ஆனால், இன்றளவு இந்தப்பொய்யான கற்பனை எனக்குள் வளர்ந்தே வந்து கொண்டிருக்கிறது. எனது அறுபதாவது பிறந்த நாளுக்கு சில நாட்கள் முன்பு, முதன் முதலாக ரியோஹாகாவிற்கு நான் சென்றபோது அங்கே இருந்த தர்க்க அமைப்பும் என் ஞாபகத்தில் - அல்லது என் கற்பனையிலோ? - இருந்ததற்கு சம்பந்தமற்றிருந்தது. பிள்ளைப்பிராயம் முதல் ஒரு ரம்யமான கவிதையாக எனக்குள் சுமந்து வந்திருந்த ரியோஹாகாவும் அதன் வெடியுப்பு பூத்திருக்கும் சாலைகளும், அச்சாலைகள் சென்று முடியும் சேற்றுக்குட்டைகளும் எனது கற்பனையின் சுகமான புனைவுகளே என்று புரிந்தாலும், இன்றுவரை அந்த நிஜமான ரியோஹாகா என் மனக்கண்ணில் திரும்ப வராமல், எனது கற்பனையின் பதிந்திருக்கும் - என் அம்மாவின் ஞாபகங்களை வைத்து செங்கல் செங்கலாக நான் கட்டி வைத்திருக்கும் அந்த மனச்சித்திரமே நினைவுகளில் வந்து கொண்டிருக்கிறது.

திருமணம் முடிந்து இரண்டு மாதங்கள் கழித்து ஜீவான் டி டியோஸிற்கு என் அம்மாவிடமிருந்து லூயிசா ஸாண்டியாகா கருவுற்றிருப்பதாகக் கடிதம் வந்தது. இச்செய்தி அரகாடகாவிற்கு அனுப்பப்பட்டதும், இன்னமும் கசப்பிலிருந்து மீளாத மினாவையும் அந்தக்குடும்பத்தையும் அஸ்திவாரத்திலிருந்தே அசைத்து விட்டது. கர்னலும் மினாவும் தமது ஆயுதங்களை கீழே எறிந்துவிட்டு புதுமணத்தம்பதிகளைத் தம்முடன் வந்து தங்க கரங்கள் விரித்து அழைப்பு விடுத்தனர். ஆனால் இது சுலபமானதாக

இல்லை. சில மாதங்களுக்கு கௌரவத்துடனும், அடக்கத்துடனும், மறுத்து வந்த பிறகு, காப்ரியல் எலிஜியோ அவளது பெற்றோர் இல்லத்தில் பிரசவம் பார்த்துக்கொள்ள தனது மனைவிக்கு அனுமதி வழங்கினார்.

சில நாட்கள் கழித்து என் தாத்தா அவரை ரயில் நிலையத்தில் வரவேற்று சொன்ன வாக்கியத்தை எங்களது குடும்ப வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்படவேண்டும்; நீ விரும்பும் எதனையும் திருப்தியுடன் தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன் . என் பாட்டி, அதுவரை அவளுடையதாக இருந்த படுக்கையறையை சீரமைத்து என் பெற்றோர்களுக்கு வழங்கினாள். அவ்வருடத்தின் இறுதியில் காப்ரியல் எலிஜியோ தனது மதிப்புமிக்க தந்தி ஆப்பரேட்டர் பணியை உதறிவிட்டு தான் சுயமாக கற்றுக்கொண்டதும், வேகமாக பிரபலமிழந்து வரும் மருத்துவமான ஹோமியோபதியை தொழிலாக ஆரம்பித்துக்கொண்டார். என் தாத்தா நன்றியாலோ, அல்லது குற்றவுணர்ச்சியாலோ அரகாடகாவில் நாங்கள் வாழ்ந்து வந்த தெருவின் பெயரை நிர்வாகத்திடம் பேசி இன்றுவரை இருந்துவரும் பெயரான பெருந்தகையாளர் எஸ்பிஜோ அிவென்யு என்று பெயரிட்டார்.

இவ்வாறாகவே ஏழு மகன்களுக்கும், நான்கு பெண்களுக்கும் மூத்தவன் அரகாடகாவில் மார்ச் 6, 1927 அன்று, பருவம் தவறிய பேய்மழை டாரஸ் வானத்தை கிழித்துக்கொண்டு பெய்யும்போது பிறந்தான். குடும்பத்தின் செவிலித்தாயான ஸாண்டோஸ் வில்லெரோ தனது தொழில் சாதுரியத்தை முக்கியமானதொரு தருணத்தில் தவறவிட்டதால், என்னைச்சுற்றி தொப்புள் கொடி முடிச்சாக இறுக்கி மூச்சுத்திணற, அந்தக் கலவர நேரத்திலும், அத்தை ஃபிரான்ஸிஸ்கோ தெருவிற்கு பையன், பிறந்திருக்கிறான் என்று அசந்தர்ப்பமாக கத்திக்கொண்டு ஓடினாள். நல்ல வேளையாக உடனே சுதாரித்துக்கொண்டு மூச்சு திணறிக்கொண்டிருக்கிறது என்றும் கூடவே அலறியிருக்கிறாள்..

நல்ல வேளையாக வீட்டில் ரம் இருந்திருக்கிறது. கொண்டாடுவதற்கல்ல, குழந்தைக்குக் குளிராமலிருக்கத் தேய்ப்பதற்கு. வெனிசுலாவைச் சேர்ந்த ஜீவானா டி ஃபிரேடிஸ் அதிருஷ்டவசமாக அங்கே வந்தவள், இப்போதுகூட. தொப்புள் கொடியில் மாட்டிக்கொண்டிருந்ததை விட என் அம்மா அபாயகரமாக முறுக்கிக்கொண்டு படுத்திருப்பதாலேயே நான் அதிகம் திணறிக்கொண்டிருந்ததாகச் சொல்வாள். சரியான நேரத்தில் அம்மாவை அவள் சரி செய்துவிட்டாலும், அத்தை ஃபிரான்ஸிஸ்கோ என்மேல் ரம்மைத்தெளித்து அவசரமாக ஒரு ஞானஸ்நானம் செய்தபிற்பாடே என்னை மீட்டெடுக்க முடிந்திருக்கிறது. அந்த தினத்தின் புனிதரான ஒலிகாரியோ பெயரைத்தான் எனக்கு வைத்திருக்க வேண்டும். பக்கத்தில் யார் கையிலும் காலண்டர் இல்லாததால் அவசரத்தில் என் அப்பாவின் முதல்பெயரான காப்ரியல் என்ற பெயரை வைத்துவிட்டு, அரகாடகாவின் புனிதக்காப்பாளரான ஜோசப் என்ற மரத்தச்சனின் பெயராக ஜோஸ் என (மார்ச் அவரது மாதமாகவும் இருப்பதால்) அடுத்த பெயராக சூட்டினர். ஜீவானா டி ஃபிரேடிஸ் என் வருகையால் இரண்டு குடும்பங்களும் சமாதானமடைந்திருப்பதால் மூன்றாவதாக ஒரு பெயரை சூட்டினாலும், மூன்று வருடங்கள் கழித்து, முறையாக ஞானஸ்நானம் செய்யும்போது சேர்க்க மறந்து விட்டனர். மறக்காமலிருந்திருந்தால் காப்ரியல் ஜோஸ் டி லா கன்கார்டியா என்றிருந்திருக்கும் என் பெயர்.

மார்க்யூஸ் காட்டும் காதலின் பரிமாணங்கள்

சா. தேவதாஸ்

காதலை இலட்சியப்படுத்தி எழுதிய இலக்கியங்கள் அனந்தம். காதலை முற்றிலும் புனைவியலானதாக பாவித்த எழுத்தாளர்கள் மிகுதி.

இதுவரையிலும் காட்டப்படாத காதலின் பரிமாணங்களை மார்க்யூஸின் எழுத்துக்களில் காணமுடிகிறது.நடைமுறை சார்ந்த காதல் விவகாரமாய் தொடங்கி, புதிர்களும் மர்மங்களும் கொண்டு, மாற்றப்பட முடியாத ஆற்றலால் வழி நடத்தப்பட்டுச் செல்லும் துன்பியல் நாடகமாய் வளர்ந்து செல்லும் போக்கை 'Chronicle of a Death foretold' நாவலில் பார்க்கிறோம்.

செல்வச்செறுக்கும் இறுமாப்பும் கொண்டுள்ள பயார்யோ சான் ரோமனுக்கு ஏஞ்சலா விகாரியோவை திருமணம் செய்து கொடுக்கின்றனர். மனைவி ஏற்கனவே கன்னி கழிந்தவள் என்று ரோமன் குற்றம் சாட்டுகிறான். கன்னிகழியக் காரணமாயிருந்தவன் சாந்தியாகோ நாஸர் என்கிறாள் ஏஞ்சலா, ஏஞ்சலாவின் இரு சகோதரர்களும் சாந்தியாகோவை பழிமுடிக்கின்றனர்.

இந்தக்கதை நிகழ்வை வைத்துக் கொண்டு துப்பறியும் நாவல் பாணியில் புலனாய்வு செய்வதாக நாவல் அமைகிறது. ஏஞ்சலாவின் உறவுக்காரப்பையன் ஒருவன் பார்வையில் கதை சொல்லப்படுகிறது. அவன் படித்துக் கொண்டிருந்த காலத்தில் நடந்த இச்சம்பவத்தை 27 ஆண்டுகள் கழித்து நினைவு கூர்வதாகவும், அந்நினைவு கூர்தலில் ஏஞ்சலாவின் உறவினர்கள், சாந்தியாகோவின் உறவினர்கள், சம்பவத்தை நேராகப் பார்த்தவர்கள், விசாரணை செய்த நீதிபதி, பிரேதப் பரிசோதனை செய்தவர் போன்றோரின் பார்வைகள்/சாட்சியங்கள்/அபிப்பிராயங்களை இடம் பெறச் செய்கிறார்.

முதலில் இத்திருமணத்தில் ஏஞ்சலாவுக்கு விருப்பமேயில்லை. கட்டாயம் காரணமாக மணமுடிக்கின்றாள்.

திருமண ஏற்பாடு தொடங்கியதுமே கடற்கரையோரமாக உள்ள அழகியதொரு வீட்டை வாங்க முற்படுகிறான், ரோமன். உரிமையாளனுக்கு விற்க மனமில்லாதபோதும், இறந்துவிட்ட மனைவி அருமையாகச் சேர்த்திருந்த பொருட்களை அவளின் நினைவாய்க் கொண்டு அவ்வில்லத்தில் வாழ்ந்து வருவதாக அவன் எவ்வளவோ சொல்லிப்பார்த்தும் பணத்தை வாரியிறைத்து வாங்கி விடுகிறான் ரோமன்.

கன்னிகழிந்துவிட்டவள் என்று தெரிந்ததும் அவளைப்பிரிந்தவன் 17 ஆண்டுகாலமாக அவளைத் திரும்பிப்பார்க்கவே இல்லை. தனித்திருக்கும் எஞ்சலா அவனுக்கு அடிக்கடி கடிதம் எழுதுகிறாள். அவனிடமிருந்து பதிலே இல்லை. 17 ஆண்டு கழித்து திடீரென ஒரு நாள் அவள்முன் நிற்கிறான் - அவளுடன் இருப்பதற்காக. அவள் எழுதியிருந்த கடிதங்களும் கட்டுக்கட்டாக அவன் பெட்டியில் இருக்கின்றதைக் கண்டு திகைத்துப் போகிறாள் எஞ்சலா.

சாந்தியாகோ குற்றம் செய்தவனா? எஞ்சலாவை சற்றும் கூட ஏறெடுத்துப் பார்க்காத சாந்தியாகோ மீது பொய்யாகத்தான் பழிபோட்டிருக்கிறாள். அவள் காதல் வயப்பட்டிருந்தது இன்னொருவனிடம். சாந்தியாகோ செல்வாக்குள்ளவன் என்பதால், அவன் பெயரைச் சொன்னால் அவனை நெருங்க இயலாது என்பதால் விபரீதம் எதும் நிகழாது என்று நினைத்திருக்கிறாள்.

தங்கை மானகேடுக்காரணமானவனை அவளின் சகோதரர் இருவரும் பன்றியைக் கொல்லும் கத்தியால் கொன்று தீர்க்கின்றனர்.

'கடவுளுக்கும் மனிதருக்கும் முன்பாக அவனைக் கொன்றது கௌரவத்தை நிலைநாட்டும் காரியம் நாங்கள் கள்ளங்கபடமற்றவர்கள்' என்று கொலையைச் செய்ததும் கூறுவார்கள்.

யார் காரணம் என்று பெற்றோரும் உறவினரும் கேட்கும்போது அவள் எப்படி சாந்தியாகோவின் பெயரைக் கூறினாள் என்பதை மார்க்வேஸ் இப்படி விவரிக்கிறார்.

"பெயரைச் சொல்வதற்கு தேவையான நேரத்தையே எடுத்துக் கொண்டாள். அதனை நிழல்களில் தேடினாள். இந்த உலகிலும் அந்த உலகிலுமுள்ள எளிதில் குழப்பிக் கொள்ளக் கூடிய பெயர்களில் முதல் பார்வையிலேயே கண்டு கொண்டாள். தனது தண்டனை எப்பொழுதும் எழுதப்பட்டிருப்பதான பட்டாம்பூச்சி விருப்பமின்றிச் செய்வது போல குறிபார்த்து சுவரில் அடித்துவிட்டாள்"

கொல்லப்பட்ட சாந்தியாகோவின் பிரேதப் பரிசோதனையில் ஒரு நாடகமே நிகழ்ந்தேறுகிறது. அந்நகரின் மேயராக இருப்பவன் அனுபவமற்றவன். முன்னாள் இராணுவத்தலைவன். உடனடியாக பிரேதப் பரிசோதனை நிகழ்ந்தாக வேண்டும் என ஆணையிடுகிறான். அப்போது மருத்துவர் இல்லை. மருத்துவம் தெரிந்த பாதிரியார் பரிசோதனை செய்து முடித்து அறிக்கை கொடுக்கிறார். ஆஜானுபாகுவான சாந்தியாகோவுக்குப் பொருத்தமான சவப்பெட்டி இல்லாததால், அது கிடைக்கும்வரை பிணம் நாறிக்கொண்டிருக்கிறது.

விசாரிக்கும் மாஜிஸ்திரேட் நீட்சேயை விரும்பிப் படித்தவர். அவர் சிவப்பு மையில் எழுதி வைத்திருக்கும் இவ்வழக்கின் குறிப்புகள் குருதியால்

பதியப்பட்டவையாகத் தோன்றும். தப்பபிப்பிராயம் ஒன்றினால் உலகையே நிலை குலைத்துவிடலாம்(Give me a prejudice and I will move the world) என்று ஒரு குறிப்பு எழுதி அதனருகில் அம்பு துளைக்கும் இதயத்தை வரைந்திருப்பார். fatality makes us invisible என்பது அவரின் இன்னொரு வாசகம்.

இந்த வரியில்தான் கதையின் ஆதாரசுருதி இருக்கிறது. நாவலின் முகப்பு வாசகமாக அவர் தந்திருப்பது: 'காதலுக்கான வேட்டை என்பது வெறிகொண்ட வல்லூறு வளர்ப்பதாகும்(the hunt for love is haughty falconry)

தனது நாவல்களின் அடிப்படையே காதல்தான் என்று ஒரு முறை மார்க்யூஸ் குறிப்பிட்டிருக்கிறார். love and other demons மற்றும் love in the time of cholera என்னும் வேறு இருபடைப்புகளிலும் காதலின் பரிமாணங்கள் பரிசீலிக்கப்படுகின்றன.

நாய்கடிக்கு உள்ளான யுவதிக்கு ஆவி பீடித்திருப்பதாக நம்பப்பட்டு ஆவியை விரட்ட வரும் பாதிரியார் அவள்மீது மோகங்கொள்வதை விவரிப்பது Love and other demons நாவல்/குறுநாவல். கிறித்துவ மடாலயத்தின் நிலவறை ஒன்றை தோண்டி யெடுத்தபோது ஒரு யுவதியின் எலும்புகளுடன் 22மீட்டரும் 11 சென்டிமீட்டரும் வளர்ந்துள்ள தாமிரநிற முடியும் கிடைக்கிறது. ஆண்டுக்கு ஒரு சென்டி மீட்டர் வளர்வதாகக் கொண்டால் இப்பெண் இறந்து 200 ஆண்டுகளாயிருக்க வேண்டும். - என்னும் பத்திரிகை செய்தியை வைத்து இக்குறுநாவலை எழுதியிருக்கிறார் மார்க்யூஸ்.

தான்விரும்பும் பெண் ஒரு மருத்துவரை மணந்து கொண்டு வாழ்கிறாள். வயதாகி அம்மருத்துவர் இறந்து போகிறார். அதன்பின் மீண்டும் அப்பெண்ணை நெருங்குகிறான். இப்போது ஆண்டுக்கு ஒரு முறை சந்தித்துப் படகில் பயணம் வழக்கமாக கொள்கின்றனர் படகோட்டியால் அடித்துக் கொல்லப்படும்வரை. இது love in the time of cholera நாவலில்.

'சாவினை விடவும் காதலே எல்லைகளின்றி விரிந்திருப்பது என்பான் படகின் தலைவன்.

அற்பமான நடைமுறை விவகாரத்தில் ஆரம்பித்து, அடுக்கடுக்கான மர்மங்களில் புதைந்து கிடக்கும் இரகசியத்தை தோண்டியெடுப்பதாக மார்க்யூஸ் விவரிக்கும்போது புதுமையும் தீவிரமும் கொண்ட பிரதி உருவாகின்றது. (chronicle of a Death foretole) நாவலில் தீவிர கணங்களில் அப்பாத்திரங்களின் ஆற்றிய பங்குபணியை நோக்கும்போது திகைப்பும் மர்மமும் கலந்ததாக இருக்கிறது. திகைப்பையும் மர்மத்தையும் விலக்கிப்பார்க்க முற்படும் போது திரைமீது திரை கவிந்ததாக மனித ஆளுமை புதைந்து கிடக்கிறது. தோற்றம் ஒன்றாய் காட்சி தந்த அது புதிர்களும் மர்மங்களும் மாயங்களும் சேர்ந்த உருவகமாக இருக்கிறது. நிஜமும் அப்படித்தானே இருக்கிறது!

இந்நாவலுக்கு அடிப்படையாக அமைந்தது நியுயார்க் நகரில் நடந்த ஒரு சம்பவம். அது அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் நிகழ்ந்த கொலை. கிட்டி ஜெனோவெஸ் என்பவள் கொலை செய்யப்பட்ட போது, அந்த அடுக்கு மாடிகளில் இருந்தவர்கள் உதவி செய்ய முயலாது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். இவர்களுக்காவது விஷயம் எதுவும் தெரியாது,



பார்வையாளர்களாக இருந்து விட்டனர்.

ஆனால், மார்க்யூஸின் கரீபியப்பிரதியில் இடம் பெறும் கிராமத்தினருக்கு நடக்கப்போகும் கொலைபற்றி முன்கூட்டியே தெரியும். யாரும் அதனை தடுத்திட முற்படுவதில்லை. செய்யப்போகும் கொலையினை எஞ்சலாவின் சகோதரர்கள் முன்னறிவிப்பு செய்வது கூடி நிகழவிருப்பதை யாராவது தடுத்து நிறுத்திவிடுவார் என்னும் எண்ணத்தில்தான். கொலையை தடுக்க முற்படுவதாகத் தெரியும் மேயர், பெயருக்குத்தான் ஏதோ செய்கிறார். முக்கடளைவ. கத்தியை மட்டும் பறித்துக் கொள்கிறார் அவ்வளவே. இன்னும் விபரீதமானது, நிகழவிருக்கும் பரபரப்பான சம்பவத்தை காண, கிராமத்தினர் எல்லாம் ஒன்று கூடி நிற்கின்றனர்.

கொலை ஒன்றை நிகழ்த்தி, கொலையாளிகளையும் பலியாகுபவனையும் விவரிக்கும் இந்நாவல் காதலின் இழைகளையும் பின்னிச் செல்கிறது. மனித ஆழங்களில் புதைந்து கிடக்கும் மர்மங்களையும் வெளிப்படுத்திக் காட்டுகிறது.



கேப்ரியேல் கார்சியா மார்க்கேஸ்

நேர்காணல்

பீட்டர் ஹெச். ஸ்டோன்

தமிழில் அமரந்தா

கேப்ரியேல் கார்சியா மார்க்கேஸ் மார்ச் 6, 1928 ஆம் ஆண்டு கொலம்பியாவில், வாழைத்தோட்டங்கள் நிறைந்த அரகாடாகா என்ற சிறு நகரப் பகுதியில் பிறந்தவர். பக்கத்து நகரமான மக்காண்டோதான் பிற்பாடு இவரது நோபல் பரிசு வென்ற 'ஒரு நூறு ஆண்டுத் தனிமை' நாவலின் களமாயிற்று. ஆரம்ப காலத்தில் எக்ஸ்பெக்டடோர் என்ற கொலம்பிய செய்தித்தாளில் செய்தியாளராகவும் சினிமா விமர்சகராகவும் பணியாற்றிய இவரது எழுத்துக்கள் கவித்துவமும் மரபுசார்பும் கொண்டிருந்தன. 1950 களில் இவர் ரோம் மற்றும் பாரீஸ் நகரங்களிலிருந்து, அதன் வெளிநாட்டு செய்தியாளராகவும் பணிபுரிந்தார்.

கார்சியா மார்க்கேஸ் எழுதிய முதல் சிறுகதைகள் அலுவலகத்தில் சக ஊழியர்கள் விடு சென்ற பின் கிடைத்த தனிமையில் இரவு நேரத்தில்

எழுதப்பட்டு பின்பு நெருங்கிய நண்பர்களின் ஆலோசனைகளின் படி மாற்றங்கள் செயயப்பட்டு, பிரசுரிக்கப்பட்டன. இன்று இருபதுக்கு மேற்பட்ட மொழிகளில் கிடைக்கும் அவரது நூல்கள்: (1)Leaf storm (1955)(2) No one writes to the colonel (1961) (3) In evil Hour (1962) One Hundred Years of solitude (1967) மற்றும் The Autumn of the Patriarch (1975) சிறந்த வெளிநாட்டுப் புத்தகத்திற்கான ஃப்ரெஞ்ச் அகாதமி பரிசையும், 1982 ஆம் ஆண்டின் நோபல் பரிசையும் இவரது One Hundred Years of solitude நாவல் வென்றது. அதன் பின்பு வெளியான நாவல்கள்: Love in the Time of Cholera (1985), The general in the labyrinth (1989) (இது வெனிசுவேலாவின் புரட்சி வீரர் சைமன் பொலிவாரின் கடைசி நாட்கள் பற்றிய விவரிப்பு) ஸ்பானிய டெலிவிஷனுக்காக பல அருமையான படங்களைத் தயாரித்த மார்க்கேஸ், 1995 இல் ஐபரோ - அமெரிக்கா இதழியல் அறக்கட்டளையை நிறுவினார்.

அவரிடம் பீட்டர் ஹெச். ஸ்டோன் நிகழ்த்திய பேட்டியின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் இங்கு மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

பீட்டர்: “ஒரு நூறு ஆண்டுத் தனிமை“ நாவலில் வரும் வாழைப்பழ ஜுரம்பற்றிச் சொல்லுங்கள். அதில் யுனைடெட் ஃப்ரூட் கம்பெனியின் பங்கு எந்த அளவுக்கு இருந்தது?

மார்க்கேஸ்: வாழைப்பழ ஜுரம் பற்றிய கதை எதார்த்தத்தை ஒட்டி அமைக்கப்பட்டதுதான். வரலாற்று ரீதியாக நிரூபிக்கப்படாதவற்றில் நான் இலக்கிய உத்தியை பயன்படுத்தியது உண்மைதான். எடுத்துக்காட்டாக, சதுக்கத்தில் நடந்த படுகொலை உண்மை நிகழ்ச்சி என்றபோதும், அப்போது இறந்தவர்களின் உண்மையான எண்ணிக்கை தெரியாததால், ஆவணங்கள் மற்றும் வாக்கு மூலங்களின் அடிப்படையில்தான் நான் அதைஎழுதினேன். அதிகபட்சம் என்று தெரிந்தே மூவாயிரம் என்ற எண்ணிக்கையை பயன்படுத்தினேன். ஆனால் குழந்தைப்பருவத்தில கண்ட ஒரு மிக நீளமான ரயிலின் ஞாபகம் இருக்கிறது. ஆனால் அதில் ஏறக்குறைய மூவாயிரம் பிணங்கள் கடலில் வீசப்படுவதற்காக ஏற்றிச் செல்லப்பட்டன. எனக்கு வேடிக்கையாக இருப்பது என்ன வென்றால், இப்போது மாநாடுகளிலும், செய்தி ஏடுகளிலும் மூவாயிரம் பேர் மாண்டு போனது பற்றி மிகஇயல்பாகப் பேசுகிறார்கள். நமது வரலாற்றில் பாதி இப்படியாகத்தான் உருவானது என நான் ஐயப்படுகிறேன். லாரி, வேன், டிராக்டர் வாங்க விற்க அணுகவும் பைனான்ஸ் வசதி செய்துதரப்படும் Autumn of the patriarch - இல் வரும் சர்வாதிகாரி பேசும்போது சொல்லுவார்.- இப்போது உண்மையாக இல்லாவிட்டால் ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது. எதிர்காலத்தில் என்றேனும் ஒரு நாள் உண்மையாகிவிடும் - என்பார். காலம் செல்லச் செல்ல மக்கள் அரசாங்கத்தை விட எழுத்தாளர்களை நம்பத்தொடங்கி விடுகிறார்கள்.

பீட்டர்: அப்படியானால் எழுத்தாளர் சக்திவாய்ந்தவராகி விடுகிறார். இல்லையா?

மார்க்கேஸ்: ஆமாம். நான் அதை உணர்ந்திருக்கிறேன். அது மிகுந்த பொறுப்புணர்வை ஏற்படுத்துகிறது. முற்றிலும் உண்மையான ஒரு பத்திரிகை செய்தியை எழுத நினைக்கிறேன் - ஆனால் அது " ஒரு நூறு ஆண்டுத் தனிமை" நாவலில் நடந்ததுபோல கட்டுக்கதையாகி விடுகிறது. கடந்த காலத்தை எந்த அளவுக்கு நினைவு கூர்ந்தபடி வாழ்கிறேனோ அந்த அளவுக்கு இலக்கியமும் இதழியலும் நெருக்கமானவை என்று உணர்கிறேன்.

பீட்டர்: Autumn of the, patriarch இல் வருவது போல வெளிநாட்டுக் கடன்களுக்காக தனது கட்டுப்பாட்டிலுள்ள கடற்பகுதியை விட்டுக் கொடுப்பது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

மார்க்கேஸ்: ஆமாம் அது நிஜத்தில் நடந்ததுதான். அப்படி நடந்திருக்கிறது. இனியும் பலமுறை நடக்கும். அது முற்றிலும் வரலாற்றுப் பூர்வமான புத்தகம். உண்மைச் செய்திகளிலிருந்து வெவ்வேறு சாத்தியப்பாடுகள் கண்டறிவதுதான் ஒரு செய்தியாளரின், நாவலாசிரியரின் பணி. அதுவேதான் ஒரு இறைத்தூதரின் பணியும் கூட. சிக்கல் என்னவென்றால் நான் கட்டுக்கதை எழுதுபவன் என மக்கள் நம்புகிறார்கள். ஆனால் நானோ எதார்த்தபாணி எழுத்தாளனாக, உண்மையான சோஷலிச எதார்த்தம் என நான் நம்புவதை எழுதுபவனாக இருக்கிறேன்.

பீட்டர்: உங்கள் நாவல்களில் எதிர்பாராத திருப்பங்கள் உண்டா?

மார்கேஸ்: ஆரம்பத்தில் அப்படி நேர்ந்ததுண்டு. தொடக்ககால கதைகள் எழுதியபோது அந்த மன ஓட்டம் பற்றிய பொதுவான எண்ணம் இருக்கும், ஆனால் போகிறபோக்கில் அதை விட்டுவிடுவேன். ஆரம்பநிலையிலேயே எனக்கு அளிக்கப்பட்ட சிறந்த அறிவுரை என்ன தெரியுமா? வற்றாத கற்பனை வளம் இருக்கும் இளமைக்காலத்தில் அவ்வாறு வேலைசெய்வது சரியாக இருக்கலாம். ஆனால் உத்திகளைக் கற்றுக்கொள்ளாமல் போனால், கற்பனை வளம் குறைந்து விடும் போது அதைச் சரிக்கட்ட இயலாது, இன்னல்பட வேண்டிவரும் என்று எனக்குச் சொல்லப்பட்டது. நேரத்தோடு நான் அதைக் கற்காமல் போயிருந்தால், இன்று என்னால் ஒரு முழு நாவலின் வடிவத்தை முன்கூட்டி உருவாக்கிக்கொள்ள முடிந்திருக்காது. வடிவமைப்பு என்பது முழுக்க முழுக்க ஒரு தொழில்நுட்பம். அதை ஆரம்பத்திலேயே கற்கவில்லையென்றால் பின்னால் ஒரு போதும் கற்றுக் கொள்ளவே முடியாது.

பீட்டர்: அப்படியானால் ஒழுக்கம் உங்களைப் பொறுத்தவரை மிக முக்கியம் என்று சொல்லுங்கள்.

மார்க்கேஸ்: அதிகபட்ச ஒழுக்கம் இருந்தாலன்றி ஒருவர் உருப்படியாக ஒரு நாவலை எழுத முடியுமென்று நான் நம்பவில்லை.

பீட்டர்: செயற்கையான தூண்டுதல் ஏற்படுத்தும் பொருட்கள் (stimulants) பற்றி என்ன சொல்கிறீர்கள்.

மார்க்கேஸ்: "எழுதுவது எனக்கு குத்துச்சண்டை செய்வதுபோல்' என்ற வாசகம்தான் ஹெமிங்வே எழுதியதிலேயே என்னைப் பெரிதும் கவர்ந்தது. அவர் தனது உடல் நலத்தில், ஆரோக்கியத்தில், கவனம் செலுத்தினார். ஃபாக்னர் குடிகாரர் என்று பெயர் பெற்றவர். ஆனால் அவர் எனக்குப் பேட்டியளித்த ஒவ்வொரு முறையும் 'குடித்திருக்கும்போது ஒரு வரிகூட எழுத முடிவதில்லை என்று சொல்வார். ஹெமிங்வேயும் இப்படிச் சொன்னதுண்டு. மோசமான வாசகர்கள் சிலர், எனது எழுத்துக்கள் சிலவற்றை நான் போதையில் எழுதியதா என கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இலக்கியம் பற்றியோ போதைப்பொருட்கள் பற்றியோ எதுவுமே தெரியாது என்பதற்கு அதுவே சாட்சி. ஒரு நல்ல எழுத்தாளனாக இருக்க வேண்டுமானால், எழுதும் ஒவ்வொரு கணமும் தெளிவாகவும், ஆரோக்கியமாகவும் இருந்தாக வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு மோசமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு எழுத்து மேன்மையாக இருக்கும் என்றும் நிலவுகிற ரொமாண்டிச் கருத்தாக்கத்துக்கு முற்றிலும் எதிரானவன் நான். எழுதுபவருக்கு ஆரோக்கியமான மன மற்றும் உடல்நலம் அவசியமென்று நான் கருதுகிறேன். அமெரிக்காவின் "தொலைந்த தலைமுறையினர்" எனப்படும் எழுத்தாளர்கள் இதைப் புரிந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் வாழ்வை நேசித்தவர்கள்.

பீட்டர்: உந்துதல் உள்ளுணர்வு இவை இரண்டுக்குமிடையில் வேறுபாடு என்ன வென்று செல்ல முடியுமா?

மார்க்கேஸ்: உந்துதல் உங்களுக்கு சரியான கரு நிஜமாகவே பிடித்த கரு கிடைத்தவுடன் உண்டாவது. இதனால் எழுதும் வேலை சுலபமாகிறது. உள்ளணர்வு- இதுவும் கதை எழுதுவதற்கு அடிப்படை தேவைதான்; விஞ்ஞான அறிவோ வேறு சிறப்பான பட்டறிவோ தேவையயில்லாத படி உண்மையைக் கண்டறிய உதவும் சிறப்பு குணம் அது. புவி ஈர்ப்பு சக்தி நுறிப்பு விதிகளை சுலபமாக அறிந்து கொள்ள உள்ளுணர்வு போதுமானது. பெரிய போராட்டம் எதுவுமில்லாமல் அனுபவத்தை அடையும் வழி அது. ஒரு நாவலாசிரியருக்கு உள்ளுணர்வு அத்தியாவசியம். இவ்வுலகில் நான் அதிகமாக வெறுக்கும் புத்தி

ஜீவித்தனத்துக்கு அடிப்படை எதிரி தோற்றம் போல ஆகி விடுகிறது. உள்ளுணர்வில் ஒரு வசதி உண்டு - இருக்கிறது. அல்லது இல்லை - அவ்வளவுதான். சதுரக் குழிக்குள் வட்டக் குழலை நுழைக்கும் போராட்டம் அதில் இல்லை பாருங்கள்.

பீட்டர்: மொழி பெயர்ப்பாளர்கள் குறித்து உங்கள் மதிப்பீடு என்ன?

மார்க்கேஸ்: அடிக்குறிப்பு எழுதுபவர்களைத் தவிர மீதமுள்ள மொழி பெயர்ப்பாளர்களை நான் மிகவும் மதிக்கிறேன். அடிக்குறிப்புகள் எழுத்தாளர் குறிப்பிடாத எதைப்பற்றியோ வாசகருக்கு விளக்க முற்படுகின்றன. அது அங்கே இருப்பதால் வாசகர் அடிக்குறிப்பை பொறுத்துக் கொள்ள வேண்டி வருகிறது. மொழிபெயர்ப்பு மிகக் கடினமான பணி. அதனால் பெயரும் கிடைப்பதில்லை, பொருளும் கிடைப்பதில்லை. ஒரு நல்ல மொழியாக்கம் வேறொரு மொழியில் புதிதாக எழுதுவதற்கு இணையானது. எனவேதான் நான் கரெகரி ரபஸ்ஸாவைக் கண்டு வியக்கிறேன். என் நூல்கள் இருபத்தோரு மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. ரபஸ்ஸா ஒருவர்தான் அடிக்குறிப்பு எழுதுவதற்காக என்னிடம் விளக்கம் கேட்காத ஒரே ஒருவர். என் எழுத்து முழுமையாக ஆங்கிலத்தில் மறு உருவாக்கம் செய்யப்பட்டுவிட்டதாக நம்புகிறேன். புத்தகத்தின் சில பகுதிகள் உண்மையிலேயே புரிந்து கொள்ளக் கடினமானவை. மொழியாக்கம் செய்தவர் புத்தகத்தைப் படித்துவிட்டு பின்பு தன் ஞாபகத்திலிருந்து அதை மறுபடி எழுதியதாகவே படிப்பவருக்குத் தோன்றும். எனவேதான் நான் மொழியாக்கம் செய்பவர்களை மிகவும் பாராட்டுகிறேன். அவர்கள் புத்திஜீவிகளாக இருப்பதைவிட உள்ளுணர்வு மிக்கவர்களாக இருக்கிறார்கள். பதிப்பாளர்கள் மிகக் கேவலமான ஊதியத்தை மொழிபெயர்ப்பாளருக்குத் தருவதோடு, மொழியாக்கத்தை இலக்கிய ஆக்கமாகப் பார்ப்பதே இல்லை. நான் ஸ்பானிய மொழியில் மொழியாக்கம் செய்ய விரும்பிய நூல்கள் உண்டு. ஆனால் அவை என் சொந்த நூல்களை எழுதுவது போலவே என்னை வேலைவாங்கியிருக்கும். அது மட்டுமின்றி எனக்கு சாப்பிடக்கூட போதுமான பணம் கிடைத்திருக்காது.

பீட்டர்: நீங்கள் எதை மொழிபெயர்க்க விரும்பினீர்கள்?

மார்க்கேஸ்: மால்ராக்ஸ் முழுவதையும். கான்ராட், செயின்ட் எக்சுபரி இவர்களையும் கூட மொழிபெயர்க்க விரும்பினேன். சில புத்தகங்களை வாசிக்கும் போதே இதனை மொழிபெயர்த்தால் என்ன என்ற உணர்வு எனக்குத் தோன்றும். தலை சிறந்த படைப்புகளைத்தவிர (Master pieces) மற்றவற்றை மூல மொழியில் வாசிப்பதை விட, ஒரு சுமாரான மொழிபெயர்ப்பில் வாசிப்பதை நான் விரும்புகிறேன். நான் வேற்று மொழியில் வாசிக்க

விரும்புவதில்லை. காரணம் நான் நெருக்கமாக உணர்வது ஸ்பானிய மொழியில் மட்டும்தான் இருந்தாலும், நான் இத்தாலிய மொழியும், ஃப்ரெஞ்ச் மொழியும் பேசுவேன். இருபது வருடங்களாக வாரம் தவறாமல் "டைம்" இதழ் மூலம் விழிப்பேற்றிக் கொள்ளும் அளவுக்கு ஆங்கில மொழியும் எனக்குத் தெரியும்.

பீட்டர்: லத்தீன் அமெரிக்க இலக்கியத்தில் கியூபப் புரட்சி எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக நினைக்கிறீர்கள்?

மார்க்கேஸ்: இது வரை எதிர்மறை விளைவுகள்தான். தம்மை அரசியல் ரீதியில் கடமைப்பட்டவர்களாக நினைத்துக் கொள்பவர்கள், தாம் எழுத நினைப்பதை எழுதாமல், தாம் எந்த மாதிரி எழுத வேண்டுமென நம்புகிறார்களோ - அவற்றைத்தான் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் அனுபவத்துடனோ உள்ளுணர்வுடனோ தொடர்பே இல்லாத ஒருவகையான இலக்கியம் உருவாகி இருக்கிறது. இதற்குக் காரணம், கியூபப்புரட்சி லத்தீன் அமெரிக்காவில் ஏற்படுத்தியுள்ள பண்பாட்டுத் தாக்கம் பற்றி பல சண்டைகள் நடந்து விட்டன. கியூபாவினுள்ளே ஒரு புதுவகை இலக்கியமோ, கலையோ உருவாக்கப்படும் அளவுக்கு ஒரு இயக்கம் வளரவில்லை. கால அவகாசம் தேவைப்படும் விஷயம் அது லத்தீன் அமெரிக்காவில் கியூபாவுக்கென்று உள்ள பெரும் பண்பாட்டு முக்கியத்துவம், லத்தீன் அமெரிக்காவில் பல்லாண்டுகளாக இருந்துவந்திருக்கும் இலக்கியத்தினை பரவலாக்கும் ஒரு பாலம் போன்று செயல்பட்டு வந்துள்ளது. ஒரு வகையில் அமெரிக்காவில் (யூ.எஸ்) லத்தீன் அமெரிக்க அந்த தலைமுறையைச் சேர்ந்த ஒவ்வொரு லத்தீன் அமெரிக்க எழுத்தாளரும் இருபது வருடங்களாக எழுதி வந்திருந்தபோதும், ஐரோப்பிய அமெரிக்க பதிப்பாளர்கள் அவர்களைக் கண்டு கொண்டதில்லை. கியூபப் புரட்சி தொடங்கியதும் திடீரென கியூப மற்றும் லத்தீன் அமெரிக்க இலக்கியத்தின் மீது பெரும் கவனம் குவிந்தது. புரட்சி ஒரு நுகர்பொருளாக மாறியது. லத்தீன் அமெரிக்க இலக்கியம் ஒரு ஃபேஷனாகி விட்டது. லத்தீன் அமெரிக்காவிலும் நாவல்கள் உள்ளன. அவை மொழியாக்கம் செய்யப்படும் அளவுக்குத் தரமானவை, உலக இலக்கியத்தோடு ஒப்பு நோக்கத்தக்கவை என்று திடீரென கண்டு பிடிக்கப்பட்டது. வெளியிலிருந்து மற்றவர்கள் சொல்லும்வரை, தங்கள் நாவல்கள் மிக உயர்வானவை என்று அவர்களை நம்ப வைக்கவே முடியவில்லை என்றால், லத்தீன் அமெரிக்காவில் பண்பாட்டுக் காலனீயம் எந்தளவுக்கு இருந்ததென்று புரிகிறது. மிக வேதனையாக இருக்கிறது.

பீட்டர்: இப்போது நீங்கள் கியூபாவைப்பற்றி எழுதிக் கொண்டிருக்கும் புத்தகத்தைப்பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

மார்க்கேஸ்: அந்தப் புத்தகம் உண்மையில் ஒரு நீண்ட

செய்திக்கட்டுரையைப் போன்றது. கியூபாவில் மக்களின் குடும்ப வாழ்வு எப்படி உள்ளது. எப்படி குறைகளுடன் தாக்குப்பிடித்து நிற்க அவர்கள். கற்றுக்கொண்டார்கள் என்பது பற்றியது. கடந்த இரண்டாண்டுகளில் எனது பல பயணங்களின்போது கியூபாவில் பொருளாதார வர்த்தகத்தடைகள், "தேவைகளின் பண்பாடு" என்கிற ஒருவகை தலைமையை உருவாக்கியிருப்பதால், மக்கள் சில பொருட்கள் இல்லாமல் வாழக் கற்றுள்ளதைக் கண்டேன். இந்தத்தடைகள் மக்களின் மனநிலையை மாற்றுவதில் எவ்விதம் பங்களிப்பு செய்துள்ளன என்பதுதான், உண்மையில் என்னை ஈர்த்த விஷயம். ஒரு நுகர்வுக்கு எதிரான சமூகத்துக்கும் அதிகபட்ச நுகர்வுசார்ந்த சமூகத்துக்கும் இடையிலான மோதல் இதில் இருக்கிறது. ஒரு சுலபமான, சிறிய பத்திரிகைத்தொடர் என்று நினைத்து எழுதத் தொடங்கி, இன்று மிக நீண்டதொரு கடினமான புத்தகமாக மாறிய நிலையிலுள்ளது அது. சிக்கல் ஒன்றுமில்லை என் மற்ற புத்தங்களும்கூட அவ்வாறு ஆனதுண்டு. அது தனிமையில் உள்ள கதைதகளில் வருவது போலவே அற்புதங்கள் நிரம்பியதாக உள்ளது என்பதை வரலாற்றுத் தகவல்களின் அடிப்படையில் நிரூப்பிப்பதாக அப்புத்தகம் அமையும்.

பீட்டர்: ஒரு எழுத்தாளராக உங்களுக்கு நீண்டகால குறிக்கோள் அல்லது ஏமாற்றம் ஏதேனும் உண்டா?

மார்க்கேஸ்: புகழ்பற்றி நான் ஏற்கனவே சொன்னது போன்ற பதில்தான் இதற்கும் பொருந்தும். முன்னொரு முறை எனக்கு நோபல் பரிசு பெறும் விருப்பம் உண்டா என்று கேட்டார்கள் - என்னைப் பொறுத்தவரை அதில் அனைத்தையும் குட்டிச்சுவராக்கும் அபாயம் உள்ளது. பரிசைப் பெறும் தகுதி உள்ளவனாக இருப்பதில் ஆட்சேபமில்லை: ஆனால் பரிசைப் பெறுவது பயங்கரமாக இருக்கும். அது புகழுடன் தொடர்புடைய பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கிவிடும். நான் வாழ்வில் உண்மையிலேயே வருத்தப்படுவது எனக்கொரு மகள் இல்லையே என்பதற்காகத்தான்.

பீட்டர்: நீங்கள் தற்போது ஈடுபட்டிருக்கும் பணிபற்றி சொல்ல முடியுமா?

மார்க்கேஸ்: எனக்கு மிக நிச்சயமாகத் தெரியும் - நான் எனது வாழ்வின் ஆகச் சிறந்த புத்தகத்தை எழுதப்போகிறேனென்று: அது எது - எப்போது என்பது மட்டும் எனக்குத் தெரியாது. இதுபோல ஏதேனும் தோன்றும் போது - இப்போது சில காலமாக அப்படித் தோன்றிக் கொண்டேயிருக்கிறது - நான் அமைதியாக இருந்து அது எதிர்ப்பட்டால் பற்றி கொள்ள காத்திருக்கிறேன்.

●



சால்வடார் ஆலெண்டேயின் மரணம்

காப்ரியேல் கார்ஸியா மார்க்வெஸ்

தமிழில் எஸ். பாலச்சந்திரன்

சால்வடார் ஆலெண்டே 1908ஆம் ஆண்டு வால்பரைசோவில் பிறந்தார். 1926 ஆம் ஆண்டு சிலி பல்கலைக்கழகத்தின் மருத்துவப்பள்ளியில் சேர்ந்தார். மாணவராக இருந்தபோதே அரசியலில் ஈடுபட்டார். குடியரசுத் தலைவர் கார்லோஸ் இபனேஸின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்த போராட்டத்தில் 1931ஆம் ஆண்டு பங்கெடுத்தார். சிலியில் கர்னல் மார்மடியூக் குரோவ் சோஷலிஸக் குடியரசை அமைத்தபோது, வால்பரைசோவில் இருந்த ஒரு மருத்துவமனையில் ஆலெண்டே பணிபுரிந்து கொண்டிருந்தார். சோஷலிஸக் குடியரசு வீழ்ச்சியடைந்தவுடன் குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்ட அவர் ஐந்து முறை விசாரிக்கப்பட்ட பிறகு, அனைத்துக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டார். 1933ஆம் ஆண்டு சிலி சோஷலிஸ்ட் கட்சியை அவர் நிறுவினார். 1937ஆம் ஆண்டு குவிலோடின் மற்றும் வால்பரைசோவின் துணை ஆட்சியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1938ஆம் ஆண்டு குடியரசுத் தலைவருக்கான தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளரான ஆக்விரே செர்டாவுக்காக வால்பரைசோவில் மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளராக இருந்தார். 1939ஆம் ஆண்டு செர்டாவின் அரசில் குறுகிய காலத்துக்கு சுகாதார அமைச்சராகப் பணியாற்றினார். 1945லிருந்து 1970ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அவர் ஐந்தாண்டுகள் குடியரசுத் துணைத்தலைவராகவும், இரண்டாண்டு குடியரசுத் தலைவராகவும் இருந்தார். 1970ஆம் ஆண்டு மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவராக இருந்த அவர் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1973ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அவருடைய ஆட்சியைச் சிலி நாட்டு இராணுவம் கவிழ்த்த போது சான்டியாகோவில் குடியரசுத் தலைவர் மாளிகையில் கொல்லப்பட்டார்.

வாஷிங்டனின் புறநகர்ப் பகுதியிலிருந்த ஒரு வீட்டில் சிலியின் ஐந்து ராணுவ அதிகாரிகளுடன் பென்டகனைச் சேர்ந்த மூன்று ஜெனரல்கள் விருந்தில் கலந்து கொண்டது 1969ஆம் ஆண்டின் இறுதியில். அமெரிக்காவிற்கான சிலி நாட்டு இராணுவத் தூதுக் குழுவின் விமானப்படைத் துணை அதிகாரியாக அப்போது இருந்த லெப்டினென்ட் கர்னல் ஜெரார்டோ லோபஸ் அளித்த விருந்து அது. மற்ற விருந்தாளிகள் சிலி இராணுவத்தின் பிற துறைகளில் இருந்த அவருடைய சக அதிகாரிகள். ஆய்வு செய்யும் நோக்கத்தில் முந்தைய நாள் அங்கு வந்த சிலி நாட்டு விமானப் படை அகாடமியின் புதிய இயக்குநர் ஜெனரல் கார்லோஸ் டோரோ மாஸோட்டைக் கௌரவிப்பதற்காகவே விருந்து நடத்தப்பட்டது. ஃப்ரூட் ஸாலட், கன்றிறைச்சி வறுவல், வறுத்த கடலை ஆகியவற்றைச் சாப்பிட்ட எட்டு அதிகாரிகளும், வாஷிங்டன் நகரம் பனியில் உழன்ற அதே சமயத்தில் தெற்கில் தொலைவில் வெயிலில் பறவைகள் ஒளிர்ந்து அலையும் கடற்கரைகளுடன் அவர்கள் தாயகம் - தாயகத்தின் வெப்பம் நிறைந்த ஒயினைக் குடித்தார்கள். அந்த நாட்களில் சிலி நாட்டவரின் ஆர்வத்துக்குரியதாக இருந்த ஒரே ஒரு விஷயத்தைப் பற்றித்தான் அவர்கள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே பேசிக்கொண்டிருந்தார்கள். வரும் செப்டம்பர் மாதத்தில் நடக்க இருந்த குடியரசு தலைவருக்கான தேர்தல்தான் அவ்விஷயம். சால்வடார் ஆலெண்டேயைப் போன்ற ஒரு இடதுசாரி வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டால் சிலி இராணுவம் என்ன நடவடிக்கை மேற்கொள்ளும் என்று பென்டகனின் ஒரு ஜெனரல் சாப்பிட்டுக் கொண்டே கேட்டார். ஜெனரல் டோரோ மாஸோட் பதிலளித்தார். "மோனேடா அரண்மனையை அரைமணி நேரத்தில் கைப்பற்றுவோம். அதற்காக அதை எரிக்கவேண்டியிருந்தாலும் சரியே"

கடந்த செப்டம்பர் மாதத்தில் குடியரசுத்தலைவர் மாளிகையின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வழிநடத்தியவரும் அம்மாளிகையை எரிக்கும்படி ஆணை பிறப்பித்தவரும், தற்போது சிலியின் தேசப்பாதுகாப்பு இயக்குநருமான ஜெனரல் எர்னஸ்டோ பேஸாவும் விருந்தாளிகளில் ஒருவர். அந்தத் தொடக்க நாட்களில் அவருக்குக் கீழ் பணியாற்றிய இருவர் இதே நடவடிக்கையில் பிரபலமடைந்தார்கள். இராணுவ நடவடிக்கைக் குழுத்தலைவர் ஜெனரல் அகஸ்டோ பினோச்செட், ஜெனரல் ஜேவியர் பேலாஸியோஸ், குடியரசு தலைவர் மாளிகையின் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தும்படி ஆணை பிறப்பித்த, இராணுவ நடவடிக்கைக் குழுவின் உறுப்பினர்களுள் ஒருவராக இருந்த விமானப்படை ஜெனரல் குஸ்டாவோ லீ என்பவரின் நெருக்கமான நண்பரும் இப்போது பொதுப்பணித் துறை அமைச்சருமான விமானப்படை பிரிகேடியர் ஜெனரல் ஸெர்ஜியோ ஃபிகுவெரோ குடியரஸ் ஆகியோர் அங்கு இருந்தனர். முற்போக்கான கடற்படை அதிகாரிகளைப் படுகொலை செய்தவரும் செப்டம்பர் மாதம் 11ஆம் தேதி மேற்கொள்ளப்பட்ட இராணுவ எழுச்சியை முன்னின்று நடத்தியவர்களின் ஒருவருமான, இப்போது வால்பரைஸோவின் கடற்படை ஆளுநராக உள்ள அட்மிரல் ஆர்டுரோட்ரான்கோஸோதான் கடைசி விருந்தாளி.

சிலி நாட்டு இராணுவத்திலிருந்த உயரதிகாரிகளுக்கும் பென்டகனுக்கும் இடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பாகவே அந்த விருந்து அமைந்தது. இதைத் தொடர்ந்து வாஷிங்டனிலும் ஸான்டியாகோவிலும்

நடத்தப்பட்ட சந்திப்புகளில் வருங்கால இராணுவ நடவடிக்கைக்கான ஒரு திட்டம் தீட்டப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. தேர்தலில் ஆலெண்டேயின் மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றால், அமெரிக்காவின் நலன்களை மனத்திலும் ஆன்மாவிலும் கருத்திலும் கொண்டுள்ள சிலி நாட்டு இராணுவ அதிகாரிகள் அதிகாரத்தைக் கைப்பற்றிவிட வேண்டும் என்பதுதான் அந்தத் திட்டம்.

'சர்வதேச தொலைபேசி மற்றும் தந்தி நிறுவனம்' கொடுத்து வந்த நெருக்கடிகளின் விளைவாக மட்டும் இல்லாமல் ஒரு சாதாரணமான இராணுவ நடவடிக்கையாக, எந்தவித குற்ற உணர்வும் சந்தேகமும் இல்லாமல் இந்தத் திட்டம் தீட்டப்பட்டது. உலக அரசியலின் ஆழமான காரணங்களால் பிறந்ததுதான் இந்தத் திட்டம். அமெரிக்காவைப் பொருத்தவரையில், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பைக் கொண்டிருந்த அமைப்பு பென்டகனின் பாதுகாப்புப் புலனாய்வு நிறுவனம் (Defence Intelligence Agency). ஆனால் தேசியப் பாதுகாப்புக் கவுன்சில், சி.ஐ.ஏ. ஆகியவற்றின் மேலான அரசியல் வழிகாட்டுதலோடு செயல்படும் கடற்படைப்புலனாய்வு நிறுவனம் (Naval Intelligence Agency) தான் இத்திட்டத்தை உண்மையிலேயே இயக்கியது. இத்திட்டத்தை இயக்க இராணுவத்தையன்றி கடற்படையை நியமித்தது அப்போதைய சூழ்நிலையில் இயல்பானதுதான். ஏனென்றால் பசிபிக் பெருங்கடலில் மேற்கொள்ளவிருந்த அமெரிக்கா, சிலி ஆகிய நாடுகளின் கடற்படைப் பிரிவுகளின் 'ஒற்றுமை நடவடிக்கை' (Operation Unitas) என்ற கூட்டுப்பயிற்சி செயல்பாட்டின் போது நிகழ்த்தப்பட வேண்டிய ஒன்றாகத்தான் சிலியின் இராணுவப்புரட்சி திட்டமிடப்பட்டிருந்தது. இது போன்ற 'கூட்டுப்பயிற்சி நடவடிக்கைகளும்' தேர்தல்களைப் போலவே செப்டம்பர் மாதங்களில்தான் நடத்தப்பட்டன. ஆகவே சிலியின் நிலத்திலும் வானிலும் அனைத்து விதமான யுத்த சாதனங்களும், கொலைக் கலையிலும் தொழிலிலும் சிறப்பான பயிற்சி பெற்ற ஆட்களும் தோன்றியது இயல்பானதாகவே இருந்தது.

அச்சமயத்தில் ஒரு சில சிலியர்களிடம் ஹென்றி கிஸ்ஸிங்கர் தனிப்பட்ட முறையில் இவ்வாறு குறிப்பிட்டார்: "பைரனீஸிலிருந்து தொடங்குகின்ற உலகின் தென்பகுதியின் மீது எனக்கு அக்கறையுமில்லை; அதைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது." அந்த நேரத்தில் இராணுவ நடவடிக்கைக்கான திட்டம் அதன் நுட்பமான விவரங்கள்வரை முழுமையடைந்திருந்தது. கிஸ்ஸிங்கருக்கோ அல்லது ஜனாதிபதி நிக்ஸனுக்கோ இதைப்பற்றி எதுவும் தெரியாது என்று கருதுவதற்கு வாய்ப்பே இல்லை.

சிலி ஏறத்தாழ 2660 மைல் நீளமும், சராசரியாக 119 மைல் அகலமும் கொண்ட குறுகலான நாடு. உற்சாகம் நிறைந்த ஒரு கோடி மனிதர்களைக் குடிமக்களாகக் கொண்ட அந்நாட்டில் ஏறத்தாழ 30 லட்சம் பேர் தலைநகர் ஸாண்டியாகோவிலேயே வசிக்கிறார்கள். தன் சிறப்பை தான் கொண்டிருக்கும் மதிப்புமிக்க வளங்களிலிருந்து பெறாமல், தான் கொண்டிருக்கும் பல தனித்தன்மைகளிலிருந்துதான் பெறுகிறது அந்த நாடு. சிலியில் உண்மையிலேயே தீவிரத்தோடு உற்பத்தி செய்யப்படும் ஒரே பொருள் 'தாமிரத்தாது' மட்டும்தான். ஆனால் இந்தத் தாதுதான் உலகத்திலேயே மிகச் சிறந்தது. மேலும் இங்கு உற்பத்தியாகும் தாமிரத்தாதுவின் அளவை விட

அதிகமாக அமெரிக்காவிலும், சோவியத் யூனியனிலும் மட்டுமே உற்பத்தியாகிறது. ஐரோப்பிய ஒயின் வகைகளுக்கு நிகரான ஒயின் இங்கே உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் பெரிய அளவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. இந்நாட்டு மக்களின் சராசரி ஆண்டு வருமானமான 650 டாலர்கள்தான் லத்தீன் அமெரிக்காவிலேயே அதிகமாகும். ஆனால் ஏறக்குறைய நாட்டின் மொத்த உற்பத்தியில் பாதியை வெறும் 3 லட்சம் பேர்களுக்கும் குறைவானவர்கள்தான் தொடர்ந்து மரபாக அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கக் கண்டங்களிலேயே முதலாவது சோஷலிஸக் குடியரசாக 1932இல் மாறிய சிலியில் தொழிலாளர்களின் உற்சாகமான ஆதரவோடு, தாமிரத்தையும் நிலக்கரியையும் தேசிய உடைமையாக்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்தது. ஆனால் இந்த சோதனை முயற்சி பதிமூன்று நாட்களுக்கு மட்டுமே நீடித்தது. சிலியில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நில அதிர்வும், குடியரசுத் தலைவருக்கான ஒவ்வொரு பதவிக் காலத்துக்கும் ஒருமுறை மாபெரும் அழிவைத் தரும் நில அதிர்ச்சியும் ஏற்படுகின்றன. சிலி என்பது ஒரு நிலப்பரப்பே அல்ல. பனியடர்ந்த கடலினுள் தொடர்கின்ற ஆண்டீஸ் மலைத்தொடரின் மேல் நுனிதான் என்றே 'பேரழிவு' என்பதில் நம்பிக்கை வைக்காத நிலவியலாளர்களும்கூடக் கருதுகிறார்கள். எதிர்காலத்தில் நிகழப் போகிற பிரளயத்தில் இந்நாட்டின் முழு நிலப்பரப்புமே அழிந்து போய்விடும் என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட விதத்தில் சிலியர்களும் அவர்களுடைய நாட்டைப் போன்றவர்கள்தான். கண்டத்திலேயே மிகவும் இனிமையான மக்கள் இவர்கள்தான். வாழ்வதில் விருப்பமும் நம்பிக்கையும் உடையவர்கள். மிகவும் சிறப்பாக வாழ்வது எப்படி என்று இவர்களுக்குத் தெரியும். ஆனால் ஆபத்தான முறையில் சந்தேகங்களுக்கும், அறிவுப்பூர்வமான யூகங்களுக்கும் இடம் தரக்கூடியவர்கள். ஒரு திங்கட்கிழமையன்று ஒரு சிலியர் என்னிடம், "நாளை செவ்வாய்கிழமை என்று ஒரு சிலியன் கூட நம்பமாட்டான்", என்றார். அவரும்கூட நம்பவில்லை. ஆழப்பதிந்த அவநம்பிக்கையையும் மீறி, அல்லது ஒருவேளை அந்த அவநம்பிக்கையின் காரணமாக, சிலியர்கள் தென்அமெரிக்காவைச் சேர்ந்த இயல்பான நாகரீகத்தையும் அரசியல் முயற்சியையும், தங்களை மற்றவர்களிடமிருந்து பிரித்துக்காட்டுகின்ற பண்பாட்டையும் பெற்றிருக்கிறார்கள். லத்தீன் அமெரிக்காவுக்குக்கிடைத்த, இலக்கியத்திற்கான நோபல் பரிசுகள் மூன்றில் இரண்டு சிலியர்களுக்குத்தான் கிடைத்திருக்கின்றன. அதில் ஒன்று, இந்த நூற்றாண்டின் மாபெரும் கவிஞரான பாப்லோ நெருதாவுக்குக் கிடைத்ததாகும்.

உலகின் தென்பகுதியைப் பற்றித் தனக்கு எதுவுமே தெரியாது என்று கூறிய ஹென்றி கிஸ்ஸிங்கருக்கு இந்த விஷயமாவது தெரிந்திருக்க வாய்ப்பிருக்கத்தான் செய்கிறது. எவ்வாறிருப்பினும், அமெரிக்காவின் புலனாய்வு அமைப்புகளுக்கு இதைத்தவிரவும் ஏராளமான விஷயங்கள் தெரியும். 1965ஆம் ஆண்டு, முறையான அனுமதியின்றியே ப்ராஜெக்ட் காமிலோ எனப்படும் சமூக மற்றும் அரசியல் உளவு நடவடிக்கையை அரங்கேற்றும் மேடையாகவும், உள்ளூர் உளவாளிகளைத் தேர்ந்தெடுக்கும் தளமாகவும் சிலி

பயன்படுத்தப்பட்டது. பல்வேறு சமூகக் குழுக்களின் அரசியல் ரீதியான வளர்ச்சியையும் சமூகப்போக்குகளையும் விஞ்ஞானபூர்வமான முறையில் அறிந்துணர்ந்ததாக, லத்தீன் அமெரிக்காவின் தொலைதூர நாடுகளிலும்கூட, எல்லாவிதமான சமூகப்பிரிவைச் சேர்ந்த மக்களிடம் எல்லாவிதமான தொழில்களிலும் பணிகளிலும் இருந்தவர்களிடம் துல்லியமான கேள்விகளைக் கேட்டு, பதில்களைப் பெற்று இரகசியமாகப் புலனாய்வு செய்யும் நடவடிக்கையாக இது இருந்தது. இராணுவத்தினரிடம் வழங்கப்பட்ட கேள்வித்தாளில் இருந்த ஒரு கேள்வியைத்தான் பின்னாளில் வாஷிங்டனில் நடந்த விருந்தின் போது சிலியின் இராணுவ அதிகாரிகள் மீண்டும் எதிர்கொள்ள நேர்ந்தது: கம்யூனிஸம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினால் இராணுவத்தின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்? இது மிகவும் தந்திரமான, சூழ்ச்சியான கேள்வி.

வட அமெரிக்க சமூக விஞ்ஞானிகளின் விருப்பத்திற்குரிய ஆய்வுக்களமாக சிலி நீண்ட காலமாக இருந்திருக்கிறது. இந்நாட்டின் மக்கள் இயக்கங்களின் நீடித்த ஆயுளும் வலிமையும், இந்நாட்டுத் தலைவர்களின் தளராத உறுதியும், அறிவுக் கூர்மையும், சமூகப் பொருளாதார நிலைமைகளும் நாட்டின் எதிர்காலப் போக்கை அறிந்துணர இடமளிப்பவையாக இருந்திருக்கின்றன. லத்தீன் அமெரிக்காவில் கியூபாவை அடுத்து, இரண்டாவது சோஷலிஸக் குடியரசாக மாறும் நிலையில் இருந்தது சிலிதான் என்று நம்புவதற்கு ஒருவருக்கு 'ப்ராஜக்ட் காமிலோ'வின் புள்ளி விவரங்கள் தேவையில்லை. ஆகவே அமெரிக்காவின் முதலீடுகளைப் பாதுகாப்பதற்காக சால்வடார் ஆலெண்டே அதிகாரத்தைக் கைப்பற்றாமல் தடுப்பது மட்டுமே அமெரிக்காவின் நோக்கமாக இருக்கவில்லை. இதுவரையில் லத்தீன் அமெரிக்காவில் ஏகாதிபத்தியம் மேற்கொண்ட நடவடிக்கைகளிலேயே மிகவும் பலன் மிக்கதாக இருந்த பிரேசிலை உருவாக்கிய நடவடிக்கையைச் சிலியில் மறுபடியும் மேற்கொள்வதே முக்கியமான நோக்கமாக இருந்தது.

எதிர்பார்க்கப்பட்டதைப் போல, 1970ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4ஆம் தேதி, சோஷலிஸ்டும் ப்ரீமேஸன் (Freemason) அமைப்பின் உறுப்பினருமான மருத்துவர் சால்வடார் ஆலெண்டே குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இராணுவத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. இதற்கான காரணமாக, மிகவும் பரவலாக அறியப்பட்ட தகவல் மிகவும் கேலிக்கூத்தானதாகவும் இருந்தது; கடற்படைக் கூட்டிசைக்குழு என்ற போர்வையில் 200 விசாக்கள் வேண்டுமென்று விண்ணப்பித்திருந்தார்கள். உண்மையில், அரசாங்கத்தைக் கவிழ்ப்பதில் நிபுணர்களான பலரும் இந்தக் குழுவில் இருந்தார்கள். ஆனால் இவர்களில் பல அட்மிரல்களுக்கு ஒரு சிறு இசைக்குறிப்பைக் கூடப் பாடத்தெரியாது. பென்டகனில் யாரோ தவறு செய்துவிட்டார்கள். இந்த மாபெரும் தவறுதான் இந்த சாகசச் செயல் தள்ளிப் போடப்படுவதற்கான காரணம் என்று சொல்லப்படுகிறது. உண்மை என்னவென்றால் இத்திட்டம் மிகவும் ஆழமாகப் பரிசீலிக்கப்பட்டது. இந்த இராணுவத்திட்டம், இராணுவ நடவடிக்கையாக மட்டும்தான் இருக்கிறது என்றும், சிலியில் தற்போது நிலவுகின்ற அரசியல், சமூக நிலைமைகளைக்

கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லையென்றும் பிற அமெரிக்க அமைப்புகளும் (முக்கியமாக சி.ஐ.ஏ) சிலி நாட்டுக்கான அமெரிக்கத் தூதரும் கருதினார்கள்.

உண்மையில், மக்கள் ஐக்கிய முன்னணியின் வெற்றி, அமெரிக்கப் புலனாய்வு அமைப்புகள் எதிர்பார்த்ததைப்போல சமூகத்தில் பீதியை உருவாக்கவில்லை. மாறாக, சர்வதேசப் பிரச்சினைகளில் புதிய அரசாங்கம் சுதந்திரமாகச் செயல்பட்டதும், பொருளாதார விஷயங்களில் இவ்வரசாங்கம் கடைப்பிடித்த உறுதியும் சமூகத்தில் கொண்டாடப்பட்ட சூழலை உடனே உருவாக்கின; முதல் ஆண்டின்போது, பெரும்பாலான வங்கிகளோடு நாற்பத்தேழு தொழில் நிறுவனங்களும் நாட்டுடைமையாக்கப்பட்டன. நிலச்சீர்திருத்தத் திட்டத்தின் மூலமாக முன்பு பெரும் நிலப்பிரபுகளுக்கு மட்டுமே சொந்தமாக இருந்த அறுபது லட்சம் ஏக்கர் நிலம் அவர்களிடமிருந்து பிடுங்கப்பட்டு, பொதுச் சொத்தாக மாற்றப்பட்டது. பணவீக்கம் குறைக்கப்பட்டது. வேலை வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டன. சம்பள கூலி விகிதம் 30 சதவீதத்துக்கு மேல் உயர்த்தப்பட்டது.

கிறித்தவ ஜனநாயகவாதியான எடுவர்டோ ஃப்ரையின் தலைமையிலான முந்தைய அரசாங்கம் தாமிரத்தை நாட்டுடைமையாக்குவதற்கான முயற்சிகளைத் தொடங்கியிருந்தது. சிலிமயமாக்குதல் என்று இதை அவர் குறிப்பிட்டிருந்த போதிலும் அவ்வரசு செய்ததெல்லாம் என்னவென்றால், அமெரிக்காவுக்குச் சொந்தமாக இருந்த சுரங்கங்களில் 51 சதவிகிதத்தை வாங்கியது மட்டும்தான். எல் டெனியன்ட் சுரங்கத்திற்காக மட்டுமே ஒட்டுமொத்த ஆவண மதிப்புக்கும் மேல் ஏராளமான தொகையை அது விலையாகக் கொடுத்திருந்தது. அனாகோண்டா, சென்னேகாட் ஆகிய அமெரிக்க நிறுவனங்களின் துணை நிறுவனங்களாக இருந்தவற்றால் சுரண்டப்பட்ட எல்லாத் தாமிரச் சுரங்கங்களையும், நாட்டின் எல்லா அரசியல் கட்சிகளின் ஆதரவோடும் காங்கிரஸில் மேற்கொண்ட ஒரேயொரு சட்டப்பூர்வ நடவடிக்கையின் மூலம் மக்கள் ஐக்கிய முன்னணி இழப்பீடு எதுவும் வழங்காமல் நாட்டுடைமையாக்கியது. பதினைந்து ஆண்டுகளில் இவ்விரண்டு நிறுவனங்களும் எண்பது கோடி 'அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமான லாபத்தை ஈட்டியதாக அரசாங்கம் மதிப்பிட்டிருந்தது.

அந்தத் தருணத்தில் ஒரு இராணுவத் தாக்குதலை ஆதரித்திருக்கக்கூடிய குட்டி முதலாளித்துவ வர்க்கமும் நடுத்தர வர்க்கமும் எதிர்பார்த்திராத பயன்களை அனுபவிக்கத் தொடங்கின. வழக்கம் போல பாட்டாளி வர்க்கத்தை சுரண்டி இப்பயன்களைப் பெறுவதற்கு மாறாக, ஏகபோக நிதிநிறுவனங்களையும் அயல்

நாட்டு மூலதனத்தையும் சுரண்டி இப்பயன்களை இவ்வர்க்கங்கள் பெற்றன. படைகளும் கூட, ஒரு சமூகக் குழு என்ற அளவில் நடுத்தர வர்க்கத்திற்குரிய அதே தோற்றுவாய்களையும் ஆசைகளையும் கொண்டவைதாம். இராணுவப் புரட்சியைச் செய்யத் திட்டமிட்ட சில அதிகாரிகளை ஆதரிக்க அவைகளுக்கு எந்தவிதமான உந்துதலோ காரணமோகூட இருக்கவில்லை. இந்த யதார்த்த நிலையை அறிந்திருந்ததால்தான் கிறித்துவ ஜனநாயகவாதிகள் அந்தச் சமயத்தில் இராணுவச் சதித்திட்டத்தை ஆதரிக்காததுடன் உறுதியாக அதை எதிர்க்கவும் செய்தார்கள். அவர்களுடைய கட்சியின் பல மட்டங்களிலும் இத்திட்டத்திற்குச் செல்வாக்குக் கிடையாது என்பது அவர்களுக்குத் தெரிந்தே இருந்தது.

அவர்களுடைய நோக்கமோ மறுபடியும் வேறொன்றாக இருந்தது: சாத்தியமான எந்தவொரு வழிமுறையையும் பயன்படுத்தி அரசாங்கத்தின் நலனுக்குக் கேடு விளைவித்து 1973 மார்ச் மாதத் தேர்தலில் காங்கிரஸில் மூன்றில் இரண்டு பங்கு இடங்களில் வெற்றி பெறவேண்டும் என்பதே அது. இந்த அளவுக்குப் பெரும்பான்மை அவர்களுக்கு இருந்தால்தான் அரசியல் நிர்ணயச் சட்டப்படி வாக்கெடுப்பின் மூலம் குடியரசுத் தலைவரை நீக்க அவர்களால் முடியும்.

பல்வேறு வர்க்கங்களிலும் ஆதரவாளர்களைக் கொண்ட மாபெரும் அமைப்பு கிறித்தவ ஜனநாயகவாதிகளுக்கு உண்டு. நவீன ஆலைத் தொழிலாளி வர்க்கம், நடுத்தர விவசாய நிலவுடைமையாளர்கள், குட்டி முதலாளித்துவ வர்க்கம், நகர்ப்புற நடுத்தர வர்க்கம் என வலிமையான மக்கள் அடித்தளமும் இவர்களுக்கு உண்டு. இதேபோல் பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்தவர்களையும் கொண்டுள்ள மக்கள் ஐக்கிய முன்னணி உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த வறிய தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், நகர்ப்புற கீழ்தட்டு நடுத்தர வர்க்கத்தினர் ஆகியோரின் அமைப்பாக இருந்தது.

அதிதீவிர வலதுசாரிகளான தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்த கிறித்தவ ஜனநாயகவாதிகள் காங்கிரஸையும் நீதிமன்றத்தையும் தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். மக்கள் ஐக்கிய முன்னணி நிர்வாகத் துறையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. இவ்விரு கட்சிகளும் எதிரெதிர்த் துருவங்களாக இருந்தனவென்பது உண்மையில் நாடே எதிரெதிர்த் துருவங்களாக இருந்ததைப் போன்றதாகும். மார்க்சீயத்தின்மீது நம்பிக்கையற்றவரான கத்தோலிக்கர் எடுவர்டோ ஃப்ரைதான் வர்க்கப் போராட்டத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார் என்பதும், வர்க்கப் போராட்டத்தைத் தூண்டிவிட்டு, அதை உக்கிரப்படுத்தி, அதன்மூலம் அரசாங்கத்தை சீர்குலைத்து, அவநம்பிக்கை, பொருளாதாரப் பேரழிவு என்னும் பாதாளத்திற்குள் நாட்டையே தள்ளிவிட முனைந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

இழப்பீடு வழங்காமல் சொத்துகள் கைப்பற்றப்பட்டதற்குப் பதிலாக அமெரிக்கா கொண்டு வந்த பொருளாதாரத் தடைகள் மிச்சமிருந்த விஷயங்களைக் கவனித்துக் கொண்டன. போக்குவரத்து வாகனங்களிலிருந்து பற்பசை வரையில் எல்லாவிதமான பொருள்களுமே சிலியில் உற்பத்தி செய்யப்படுகின்றன என்றாலும் இந்தத் தொழிற்சாலைகள் பொய்யான

அடையாளத்தையே கொண்டிருக்கின்றன. மிகவும் முக்கியமான 160 தொழில் நிறுவனங்களில் அன்னிய மூலதனம் 60 சதவீதமாகும். அத்துடன் 80 சதவீத மூலப் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. மேலும் நுகர்வுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு ஆண்டொன்றுக்கு 30 கோடி அமெரிக்கா டாலரும், அன்னியக் கடன்களுக்கு வட்டி செலுத்துவதற்கு 15 கோடி அமெரிக்க டாலரும் இந்நாட்டுக்குத் தேவைப்படுகிறது. சிலியின் தொழிற்சாலைகள், விவசாயம் போக்குவரத்து ஆகியவை பெரும்பாலும் அமெரிக்க இயந்திரங்களை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருப்பதால் சோஷலிஸ நாடுகள் வழங்கும் கடன்களைக் கொண்டு உதிரிபாகங்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யமுடியாது. சிலிக்கு அனுப்புவதற்காகக் கோதுமையை சோவியத் யூனியன் ஆஸ்திரேலியாவிடம் வாங்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் சோவியத் யூனியனிடம் சிலிக்கு வழங்க கோதுமை இல்லை. பாரிஸில் உள்ள வட ஐரோப்பிய வாணிப வங்கியின் மூலமாக அது பல பெரிய தொகைகளையும் பணமாபவோ அலலது அமேரிக்க டாலர்களாகவோ கடன் வழங்கியிருக்கிறது. ஆனால் சிலியின் அவசரத் தேவைகள் அசாதாரணமானவையாகவும், மிகவும் ஆழமாக வேரோடியவையாகவும் இருக்கின்றன. ரேஷன் வழங்குவது, விலைவாசி உயர்வு, ஏழை மக்களின் கோரிக்கைகள் ஆகியவற்றுக்கெதிரான போராட்டம் என்ற பெயரில் பூர்ஷ்வா வர்க்கத்தின் ஆடம்பரப் பெண்மணிகள் காலிப் பானைகளையும் சட்டிகளையும் தட்டியவாறே தெருவில் ஊர்வலம் வந்தார்கள். வரலாறு காணாத விதத்தில் அரசாங்கத்தின் ஆதரவாளர்களைப் பெருமளவில் ஒருங்கிணைக்கும் வகையில் சிலியில் நடந்த ஃபிடல் காஸ்ட்ரோவின் முப்பது நாள் பயணம் முடிவுக்கு வந்த அதே பிற்பகலில் வெள்ளி நரிமுடி உடையும் பூத்தொப்பியும் அணிந்தவர்களின் ஆர்ப்பாட்டமும் நடந்தது தற்செயலானதல்ல, திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட ஒன்று அது.

மக்களிடம் அரசாங்கம் இருக்கிறது. ஆனால் அதிகாரம் இல்லை என்பதை அப்போது புரிந்து கொண்டிருந்த குடியரசுத் தலைவர் ஆலெண்டே அதை வெளிப்படையாகக் கூறவும் செய்தார். அவருடைய வார்த்தைகள் கசப்பு மிக்கவையாகத் தோன்றின. ஆனால், அவர் மனதிலிருந்த கசப்பை சிறிதளவே வெளிப்படுத்தின அவ்வார்த்தைகள். அவை எச்சரிப்பவையாகவும் இருந்தன. ஏனென்றால் ஆலெண்டே அவருடைய அழிவுக்கு வித்திட்ட, 'சட்டப்படி நடத்தல்' என்னும் கருத்தைத் தனக்குள்ளேயே சுமந்து கொண்டிருந்தார். 'சட்டப்படி நடத்தல்' என்பதைப் பாதுகாப்பதற்காகத் தன்னுடைய மரணம் வரையிலும் போராடிய மனிதரான அவர், அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு உட்பட்டு காங்கிரஸ் அவரைப் பதவியிலிருந்து நீக்கியிருந்தால் தலை நிமிர்ந்து கம்பீரமாக மோனேடா அரண்மனையிலிருந்து வெளியே வரக்கூடிய மனோபலத்தையும் கொண்டவராக இருந்தார்.

அந்தச்சமயத்தில் அவரைச் சந்தித்த இத்தாலியப் பத்திரிக்கையாளரும் அரசியல்வாதியுமான ரோஸானா ரோஸான்டோ, சலவை செய்யப்படாத மஞ்சளான முரட்டுத் துணி விரித்த கட்டிலிலிருந்தவாறு அவருடன் பேசிய ஆலெண்டே வயதானவராக, பதற்றம்மிக்கவராக, வரப்போகும் இருண்ட

காலத்தை முன்னுணர்ந்தவராகக் காட்சியளித்ததாக கூறுகிறார். எழு மாதங்களுக்குப் பிறகு துப்பாக்கியின் அடிக்கட்டையால் சிதைக்கப்பட்ட முகத்துடன், தோட்டாக்களால் சல்லடையாகத் துளைக்கப்பட்டிருந்த அவருடைய உடல் இதே கட்டிலின் மீதுதான் கிடந்தது. அவருடைய எதிர்காலம் நெருக்கடிக்குள்ளாகியிருந்த 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதத் தேர்தல்களுக்கு முந்தைய நாட்களில் மக்கள் ஐக்கிய முன்னணிக்கு 36 சதவீத வாக்குகள் கிடைத்தாலே போதும் என்ற மனநிலையில் இருந்தார். ஆனால், பணவீக்கம், கடுமையான ரேஷன் பங்கீடு, மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த ஆடம்பரப் பெண்மணிகளின் சட்டி-பானைக் கச்சேரி ஆகிய எல்லாவற்றையும் மீறி அவருக்கு 44 சதவீத வாக்குகள் கிடைத்தன. தன் நண்பரும் நம்பிக்கைக்குரியவருமான பத்திரிக்கையாளர் அகஸ்டோ ஆலிவாரஸ் என்பவருடன் அவர் தன்னுடைய அலுவலகத்தில் தனியாக இருந்தபோது கதவைச் சாத்திவிட்டு, தன்னிச்சையாக ஒரு க்யூக்கா நடனம் ஆட ஆரம்பித்தார். அந்த அளவுக்கு இது அற்புதமான, தீர்மானகாமான வெற்றியாகும்.

மக்கள் ஐக்கிய முன்னணி நடைமுறைப்படுத்திய சமூகநீதி என்னும் நிகழ்வுப் போக்கினைச் சட்டப்பூர்வமான வழிமுறைகளின் மூலம் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதன் நிரூபணம் இது என்று கிறித்துவ ஜனநாயகவாதிகள் புரிந்துகொண்டார்கள். ஆனால் அவர்கள் அப்போது மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவுகள் எப்படிப் பட்டவையாக இருக்கும் என்று உணரத் தவறிவிட்டார்கள். அமெரிக்காவைப் பொறுத்தவரையில் தேர்தல் முடிவுகள் தீவிரமான அபாய எச்சரிக்கையாகும்; முதலாளிகளிடமிருந்து பிடுங்கப்பட்ட நிறுவனங்களின் சாதாரண நலன்களைப் பாதுகாப்பதற்கும் அப்பாற்பட்டதாகும். உலக மக்களுக்கு, குறிப்பாக தற்போதைய நிலைமையில் சாத்தியமான அளவுக்கு சிலியின் வழியில் சோதனை முயற்சிகளில் ஈடுபட்டுள்ள பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாட்டு மக்களுக்கு, அமைதியான முன்னேற்றத்திற்கும் சமூக மாற்றத்திற்கும் வழிவகுக்கும் ஆபத்தான முன்னுதாரணமாக இத்தேர்தல் முடிவுகள் இருப்பதாக அமெரிக்கா கருதியது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பிற்போக்குச் சக்திகள் அனைத்தும் ஒன்றாக இணைந்து வலுவான தடுப்பு அணியாக மாறிவிட்டன.

வெளிப்படையாக ஒத்துக்கொளப்பட்டதைவிடவும் ஆழமான உள்ளார்ந்த பிளவுகளைக் கொண்ட கட்சிகளின் ஒன்றுபட்ட அமைப்பான மக்கள் ஐக்கிய முன்னணியிலோ மார்ச் மாதத் தேர்தலைப் பற்றிய பகுப்பாய்வில் கருத்தொற்றுமை ஏற்படுவதென்பது இயலாத காரியமாகவே இருந்தது. தேர்தல் முடிவுகளால் நிரூபணமான மக்களின் முற்போக்குத் தன்மையைச் சாதகமாகக் கொண்டு சமூக மாற்றம் என்னும் விஷயத்தில் தீர்மானகாமான பாய்ச்சலை நிகழ்த்தவேண்டும் என்று ஒரு கோடியிலிருந்து அரசாங்கத்திற்குக் கோரிக்கைகள் வந்தன. உள்நாட்டுப்போர் என்னும் பூதத்தைக் கண்டு பயந்த மிதவாதிகள் நிறைந்த மறுகோடியிலிருந்து, கிறித்தவ ஜனநாயகவாதிகளுடன் பிற்போக்கான ஒப்பந்தம் செய்துகொள்வதில் நம்பிக்கை வைக்கும்படி நெருக்கடிகள் வந்தன. எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களின் கருத்துரைகள் எல்லாம், அதிகமான அவகாசத்தைப் பெறுவதற்கான வெறும் திசைதிருப்பும் முயற்சிகள்தான் என்பது

தெளிவானது.

சரக்கு வாகன உரிமையாளர்களின் வேலை நிறுத்தம் இறுதி அடியாக விழுந்தது. சிலிக்கே உரித்தான நிலப்பரப்பு அமைப்பின் காரணமாக, சிலியின் பொருளாதாரம் போக்குவரத்தின் தயவையே நம்பியிருக்கிறது. சரக்கு வாகனப் போக்குவரத்து நின்றுபோனால் நாடே ஸ்தம்பித்துவிடும். இந்த வேலை நிறுத்தத்தை ஒருங்கிணைப்பது எதிர்கட்சிகளுக்கு எளிதானதாக இருந்தது. ஏனெனில், உதிரிப்பாகங்களின் பற்றாக்குறையால் மிகவும் பாதிப்புக்குள்ளானது சரக்கு வாகன உரிமையாளர்களின் அமைப்பு; மேலும், நாட்டின் தூரத் தெற்கு மூலையில் உள்ள இடங்களுக்கும் அரசுச் சரக்கு வாகனப் போக்குவரைத்தைப் போதுமான அளவுக்கு வழங்க சிறு முன்னோடித் திட்டத்தைக் கொண்டுவரப் போவதாக அரசாங்கம் அறிவித்ததைத் தங்களுக்கெதிரான அச்சுறுத்தலாக இவ்வமைப்பில் இருந்தவர்கள் கருதினார்கள். நாட்டிற்கு வெளியிலிருந்து கிடைத்த பண உதவியுடன், இந்த வேலை நிறுத்தம் கடைசி வரையில் நீடித்தது. “முதலாளிகளின் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக சி.ஐ.ஏ. நாட்டையே டாலரில் மூழ்கடித்தது. அன்னிய மூலதனம் ஒரு கள்ளச் சந்தையை உருவாக்குவது வரையில் போய்விட்டது,” என்று ஐரோப்பாவிலிருந்த தன் நண்பருக்கு எழுதிய கடிதத்தில் பாப்லோ நெருதா குறிப்பிட்டார். இராணுவப் புரட்சிக்கு ஒரு வாரத்துக்கு முன்பே எண்ணெய், பால், ரொட்டி ஆகியவை எங்குமே கிடைக்கவில்லை.

மக்கள் ஐக்கிய முன்னணியின் கடைசி நாட்களில் பொருளாதாரம் சீர்குலைந்து, உள்நாட்டுப்போர் வெடிக்கக்கூடிய நிலைமையில், அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சி ஆகியவற்றின் செயல்பாடுகள் ஆயுதப்படைகளை தங்கள் பக்கம் இழுப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. இறுதியாக நிகழ்ந்தது, அதன் முழுமையில் ஒரு பிரமையைப் போலிருந்தது. இராணுவப் புரட்சிக்கு நாற்பத்தெட்டு மணிநேரத்திற்கு முன்பு, நினைத்துப் பார்க்கவே முடியாத ஆச்சரியமான நடவடிக்கைகளின் மூலம் சால்வடார் அலெண்டேவுக்கு ஆதரவாக இருந்த எல்லா உயரதிகாரிகளையும் பதவி நீக்கம் செய்துவிட்டு, அவர்களுடைய இடங்களில் வாஷிங்டனில் நடந்த விருந்தில் கலந்து கொண்ட எல்லா அதிகாரிகளையும் ஒருவர்பின் ஒருவராக தொடர்ந்து நியமனம் செய்ய எதிர்கட்சிகளால் முடிந்தது.

இருப்பினும், அந்தத் தருணத்தில் அரசியல் சதுரங்க விளையாட்டு அதை விளையாடியவர்களின் கட்டுப்பாட்டை மீறிவிட்டது. திரும்பிவர இயலாத இயங்கியல் போக்கினால் இழுத்துச் செல்லப்பட்ட அவர்கள் இதைவிட பெரிதான ஒரு சதுரங்க விளையாட்டில் வெறும் சிப்பாய்களாக மாறிப்போனார்கள். மக்களின் அரசாங்கத்துக்கு எதிராகப் பிற்போக்கு சக்திகளும் ஏகாதிபத்தியமும் கூட்டுச்சேர்ந்து செய்த சதித் திட்டங்களைவிட அரசியல்ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகதவும் மிகவும் சிக்கலானதாகவும் இருந்தது இந்தச் சதுரங்க விளையாட்டு. அது உண்மையில் தூண்டிவிட்டவர்களின் கைகளிலிருந்து நழுவிவிட்ட பயங்கரமான வர்க்க போராட்டமேயாகும். அது ஒன்றையொன்று சமநிலையில் வைத்திருந்த எதிரெதிரான நலன்களின் குரூரமான, பயங்கரமான மோதலாகும். அமெரிக்கக் கண்டங்கள்

இராணுவத்தினரிடமிருந்து தப்பிக்க முயன்றபோது இயந்திரத் துப்பாக்கிகளால் சுடப்பட்டார்கள். பத்தே நிமிடங்களில் 2,000 பேர் கொல்லப்பட்டார்கள். 1957 ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் தேதி சான்டியாகோவின் வணிக மையத்தில் மக்கள் நடத்திய போராட்டத்தை ஒடுக்கியது இராணுவம். இதில் இறந்துபோனவர்கள் எவ்வளவு பேர் என்று தெரியவில்லை. ஏனெனில் இறந்தவர்களின் உடல்களை அரசாங்கம் யாருக்கும் தெரியாமல் அப்புறப்படுத்திவிட்டது. எடுவர்டோ ஃபிரையின் அரசின்போது எல் சால்வடார் சுரங்கத்தில் வேலை நிறுத்தம் செய்யப்பட்ட சமயத்தில் போராட்டக்குழுவின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி அதைக் கலைத்த இராணுவ ரோந்துப்படை, சில குழந்தைகள், ஒரு கர்ப்பிணிப்பெண் உட்பட ஆறுபேரைக் கொன்றது. அப்போது அந்த இராணுவக் குழுவின் ஆணையாளராக இருந்தவர் ஐந்து குழந்தைகளுக்குத் தந்தையாகவும், புவியியல் ஆசிரியராகவும், இராணுவம் தொடர்பான பல புத்தகங்களின் ஆசிரியராகவும் இருந்த, யாராலும் அறியப்படாத 52 வயதுடைய ஒரு ஜெனரல். அவர் பெயர் அகஸ்டோ பினோச்செட்.

இந்த மிருகத்தனமான இராணுவத்தின் சட்டப்பூர்வத் தன்மை, மேன்மை, கனிவு ஆகியவற்றைப் பற்றிய கட்டுக்கதையானது சிலி நாட்டு பூர்ஷ்வா வர்க்கத்தால் தமது நலன்களுக்காக அவிழ்த்து விடப்பட்ட ஒன்றுதான். இராணுவ உயர் மட்டத்தின் மேல்தட்டு வர்க்கப் பின்னணியை மாற்றிவிட முடியும் என்ற நம்பிக்கையில், மக்கள் ஐக்கிய முன்னணி இக்கட்டுக் கதையைப் பேணி வந்தது. ஆனால் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றதும், விவசாய வர்க்கக் குணம் கொண்டதும், குடியரசுத் தலைவரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்ததுமான காராபினேரோக்கள் எனப்படும் ஆயுதப்படையிடம்தான் சால்வடார் அலெண்டே நம்பிக்கை வைத்திருந்தார். உண்மையில், இராணுவப் புரட்சியை ஆதரிக்கக்கூடிய மூத்த அதிகாரியைத் தேடி, இராணுவ நடவடிக்கைக் குழு, மூத்த அதிகாரிகளின் பட்டியலில் ஆறாவது இடத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. சான்டியாகோவில் உள்ள இளம் அதிகாரிகளுக்கான பள்ளியில் பதுங்கியிருந்த இளம் அதிகாரிகள் விமானப்படைத் தாக்குதலால் அழித்தொழிக்கப்படும் வரையில் நான்கு நாட்கள் அங்கேயே தாக்குப்பிடித்தார்கள்.

இராணுவப் புரட்சிக்கு முன்பு இராணுவ நிலைகளுக்குள்ளாகவே வெடித்த இரகசிய யுத்தத்தில் எல்லோரும் நன்கு அறிந்த யுத்தம் இது. இராணுவப் புரட்சியை ஆதரிக்காத அதிகாரிகளும், தாக்குதல் நடவடிக்கைக்கான ஆணைகளைச் செயல்படுத்தாத அதிகாரிகளும் இராணுவப் புரட்சியைத் தூண்டிவிட்டவர்களால் ஈவிரக்கமின்றிக் கொலைசெய்யப்பட்டார்கள். சாண்டியாகோவிலும், மற்ற பகுதிகளிலும் இருந்த எல்லாப் படைப்பிரிவுகளும் கலகத்தில் ஈடுபட்டன. ஆனால் அவையெல்லாம் நிர்தாட்சண்யமாக அடக்கப்பட்டன. படைவீரர்களுக்குப் பாடம் கற்பிக்கும் விதமாக அவர்களின் தலைமை அதிகாரிகள் படுகொலை செய்யப்பட்டார்கள். வினா டெல் மாரிலிருந்த ஆயுதப்படையின் ஆணையாளராக இருந்த கர்னல் சான்டுவேரியாஸ் தனக்குக் கீழிருந்த அதிகாரிகளால் இயந்திரத் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார். இராணுவத்திற்குள்ளேயே நடந்த இப்படுகொலைகளில் பலியானவர்களின் எண்ணிக்கை தெரியவர நீண்டகாலம் ஆகும். ஏனென்றால் இராணுவ நிலைகளிலிருந்து உடல்கள் குப்பை

லாரிகளில் ஏற்றிச் செல்லப்பட்டு இரகசியமாக புதைக்கப்பட்டன. மொத்தத்தில், ஏற்கனவே நிறையப்பேர் அழித்தொழிக்கப்பட்ட நிலையில் இருந்த இராணுவப் படைகளை வழி நடத்துவதற்கு நம்பகமான மூத்த அதிகாரிகள் ஐம்பது பேர் மட்டுமே மிஞ்சி இருந்தார்கள்.

சதித் திட்டத்தைப் பற்றிய கதையைப் பல ஆதாரங்களைக் கொண்டு ஒருங்கிணைத்து பார்க்க முடியும். இவற்றில் சில நம்பகமானவையாகவும், மற்ற சில நம்பகமற்றவையாகவும் இருக்கின்றன. (ஏராளமான வெளிநாட்டு உளவாளிகள், வீரர்கள் இராணுவப் புரட்சியில் பங்கெடுத்துக்கொண்டதாக தெரிகிறது). நாட்டின் சுதந்திரதினமான செப்டம்பர் 18 ஆம் தேதி வானத்தில் இராணுவ சாகசக் காட்சியை நிகழ்த்துவதற்காக ஒற்றுமை நடவடிக்கை என்ற போர்வையில் உள்ளே நுழைந்த அமெரிக்காவை சேர்ந்த கலைஞர்களின் குழுதான் மோனேடா ஆண்மனையின் மீது குண்டுகளைப் போட்டது என்று இரகசியத் தகவல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. (குண்டு போடுவதில் கடைபிடிக்கப்பட்ட தொழில்நுட்ப நேர்த்தியும், துல்லியமும் இவ்விஷயத்தில் நிபுணர்களாக இருந்தவர்களையே அதிர்ச்சியடைய வைத்தது). அண்டை நாடுகளைச் சேர்ந்த ஏராளமான உளவுப்படையினரும் பொலிவிய எல்லை வழியாக ஊடுருவி வந்து, இராணுவப் புரட்சி நடக்கும் நாள் வரையில் ஒளிந்திருந்து, லத்தீன் அமெரிக்காவின் பிற நாடுகளைச் சேர்ந்த அரசியல் அகதிகளை படுகொலை செய்தார்கள் என்பதற்கும் ஆதாரம் இருக்கிறது.

இது போன்ற படுகொலைகளை தலைமை தாங்கி நடத்துகிற கோரில்லக்களின்(கொரில்லாக்கள் அல்ல) தாயகமான பிரேசில்தான் இப்பணிகளுக்குப் பொறுப்பேற்றிருந்தது. இதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பொலிவியாவில் இது நடத்திய எதிர்ப்புரட்சி சிலியின் உறுதியான ஆதரவாளர்களின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைத்தது. அரசை நிர்மூலமாக்கும் அனைத்துவிதமான தீய சக்திகளுக்கும் நாட்டுக்குள் ஊடுருவ வழிவகுத்தது. அமெரிக்காவால் பிரேசிலுக்குக் கடனாக வழங்கப்பட்ட தொகையின் ஒரு பகுதி இரகசியமாக பொலிவியாவுக்குக் கைமாற்றப்பட்டு, சிலியின் அரசைக் கவிழ்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. 1971ஆம் ஆண்டில் அமெரிக்க இராணுவ ஆலோசனைக் குழு லாபாஸுக்கு (பொலிவியா) பயணம் மேற்கொண்டது. ஆனால் அந்தக்குழு வந்ததன் நோக்கம் என்னவென்று இதுவரையில் தெரியவில்லை. சிலியின் எல்லையில் இராணுவப் படைகள் மற்றும் தளவாடங்கள் குவிக்கப்பட்டதும், சிலி இராணுவமானது தனது இராணுவப்புரட்சிக்குச் சாதகமான வகையில் அதிகாரிகளை மாற்றம் செய்ததும், பதவி உயர்வுகள் அளித்ததும் தனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றதும் ஒரு வேளை தற்செயலான நிகழ்வாகக்கூட இருக்கலாம். இறுதியாக, செப்டம்பர் 11ஆம் தேதி 'ஒற்றுமை நடவடிக்கை' நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, வாஷிங்டன் விருந்தின்போது உருவாக்கப்பட்ட உண்மையான திட்டம் செயல்படுத்தப்பட்டது. திட்டமிட்டதைவிட மூன்று ஆண்டுகள் தாமதமாக நடந்தபோதிலும், திட்டமிட்டப்படி மிகவும் நேர்த்தியாக இது நிறைவேற்றப்பட்டது. வழக்கமான இராணுவக் கலகமாக அல்ல, மாபெரும் அழிவைத் தரக்கூடிய போர்

நா வாழ்க்கையாக.

அது அப்படித்தான் இருக்கவேண்டியிருந்தது. ஏனென்றால் அது ஒரு ஆட்சியைத் தூக்கியெறியும் சாதாரண விஷயம் மட்டுமல்ல. மக்கள் ஐக்கிய முன்னணியைச் சாத்தியமாக்கிய அரசியல் மற்றும் சமூக அமைப்புகளின் அடையாளமே சிலியில் இல்லாமல் செய்யுமளவுக்கு, சித்ரவதை, மரணம் போன்றவற்றின் துணையுடன், பிரேசிலிலிருந்து கொண்டுவரப்பட்ட விஷ விதைகளை ஊன்றுகின்ற விஷயமாகும் இது. துரதிருஷ்டவசமாக, இச்செயல்பாடுகளின் மிகக்கொடூரமான, பயங்கரமான கட்டம் அப்பொழுதுதான் துவங்கியிருந்தது.

அரசை நிர்மூலமாக்குகின்ற, கட்டுப்படுத்த முடியாத, அறியப்படாத கீழறுப்பு சக்திகளின் பிடியில் நாடு இருந்தபோது நிகழ்ந்த இறுதியுத்தத்தின் போதுங்கூட, சால்வடார் ஆலெண்டே சட்டத்துக்கு கட்டுப்பட்டவராக இருந்தார். பிறவியிலேயே வன்முறைக்கு எதிரியாகவும், அதே சமயத்தில் வேட்கை நிறைந்த, தீவிரமான புரட்சியாளராகவும் இருந்ததுதான் அவருடைய வாழ்க்கையில் இருந்த மிக முக்கியமான முரண்பாடு ஆகும். பூர்ஷ்வா சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட நிலையிலேயே, சோஷலிஸத்தை நோக்கி அமைதியாக வளர்ச்சியடைவதற்கு ஏற்ற விதத்தில்தான் சிலியின் சமூக நிலை உள்ளது என்ற கருதுகோளின் மூலம் இந்த முரண்பாட்டைத் தீர்த்து விட்டதாக அவர் நம்பினார். அதிகாரம் இல்லாமல் அரசாங்கத்தை மட்டும் வைத்துக்கொண்டு அமைப்பை மாற்றிவிட முடியாது என்பதை அனுபவம் அவருக்கு மிகவும் தாமதமாகவே கற்றுக்கொடுத்தது.

நாணயச்சாலையாக ஒரு இத்தாலியக் கட்டடக் கலைஞனால் கட்டப்பட்டு, அதிகாரம் இல்லாத குடியரசுத் தலைவர்களின் புகலிடமாக மாறியிருந்த சோகமயமான மாளிகையை, தனக்குச் சொந்தமானதாக இல்லாத, ஒரு எரியும் வீட்டின் சிதிலங்களை, பாதுகாப்பதற்காகச் சாகும்வரையில் போர்புரியும்படி அவரை உந்தியது இந்தக் காலங்கடந்த படிப்பினையாகத்தான் இருக்க வேண்டும். தனக்கு ஃபிடல் காஸ்ட்ரோ கொடுத்த சப்-மெஷின் கன்னைக் கொண்டு ஆறு மணி நேரம் அவர் போர்புரிந்தார். சால்வடார் ஆலெண்டே தன் வாழ்வில் பயன்படுத்திய முதல் ஆயுதம் அதுதான். பிற்பகல் நான்கு மணியளவில் தன்னுடைய துணையதிகாரி கேப்டன் கலார்டோவுடனும் வேறுசில அதிகாரிகளுடனும் மேஜர் ஜெனரல் ஜேவியர் பேலஸியோஸ் இரண்டாவது மாடியை அடைந்தார். அங்கே, பதினான்காம் லூயினுடையதைப் போன்ற போலி நாற்காலிகள், சீன டிராகன் வடிவம் கொண்ட பூச்சாடிகள், ருகெண்டாஸ் ஓவியங்கள் ஆகியவை நிறைந்த சிவந்த கூடத்தில் சால்வடார் ஆலெண்டே அவர்களுக்காகக் காத்துக்கொண்டிருந்தார். அவர் சட்டையும், சுரங்கத் தொழிலாளியின் தலைக்கவசமும் அணிந்திருந்தார். டை அணிந்திருக்கவில்லை. அவருடைய ஆடை முழுவதும் இரத்தம் தோய்ந்திருந்தது. அவர் சப்-மெஷின் கன்னைப் பிடித்திருந்தார். ஆனால் அவரிடம் தோட்டாக்கள் ஏறக்குறைய தீர்ந்துவிட்டிருந்தன.

ஜெனரல் பேலஸியோஸை ஆலெண்டேவுக்கு நன்றாகத் தெரியும்.

புது எழுத்து 9

அமெரிக்கத் தூதரகத்துடன் நெருக்கமான தொடர்பு கொண்டுள்ள இவர் ஒரு ஆபத்தான நபர் என்று சில நாட்களுக்கு முன்புதான் அவர் அகஸ்டோ ஆலிவாரஸிடம் கூறியிருந்தார். அவர் படிக்கட்டில் ஏறி வருவதைக் கண்டதுமே அவரை நோக்கி, "துரோகி!" என்று கத்திய ஆலெண்டே அவருடைய கையில் சுட்டார்.

பெயரை வெளியிட வேண்டாம் என்று என்னைக் கேட்டுக்கொண்ட, இச்சம்பவத்தை நேரடியாகப் பார்த்த ஒருவர் சொல்வதன்படி, இந்தக் கும்பலோடு நடந்த துப்பாக்கிச் சண்டையில் குடியரசுத் தலைவர் இறந்தார். பிறகு மற்ற எல்லா அதிகாரிகளும் இராணுவ சாதிக்கே உரிய ஒரு சடங்காக, அவருடைய உடலைச் சுட்டிருக்கிறார்கள். இறுதியாக, ஒரு கீழ்மட்ட அதிகாரி தன்னுடைய துப்பாக்கியின் அடிக்கட்டையால் அவருடைய முகத்தைச் சிதைத்திருக்கிறான். ஒரு புகைப்படம் மட்டும் இன்னும் இருக்கிறது: எல் மெர்குரியோ செய்தித்தாளின் புகைப்படக்காரரான யுவான் என்ரிக் லிரா அதை எடுத்திருக்கிறார். அவருடைய உடலை புகைப்படம் எடுக்க அனுமதிக்கப்பட்ட ஒரே புகைப்படக்காரர் அவர்தான். ஆலெண்டேயின் முகம் சிதைந்து போயிருந்ததால் அவருடைய மனைவி திருமதி. ஹோர்டெயியா ஆலெண்டேயிடம் அவருடைய உடலைக் காட்டியபோது, பெட்டியில் அவருடைய முகத்தை மூடியிருந்த துணியை எடுப்பதற்கு அவர்கள் அவரை அனுமதிக்கவில்லை.

கடந்த (1972)ஜூலை மாதத்தில் அவருக்கு அறுபத்தி நான்கு வயது நிறைவடைந்திருக்கும். ஒரு சிம்மராசிக்காரருக்குரிய அனைத்துத் தன்மைகளும் அவரிடம் இருந்தன: துணிச்சல்,தளராத உறுதி, பிறரின் அனுமானங்களுக்குள் அடங்காத தன்மை. "ஆலெண்டே என்ன நினைக்கிறார் என்று அவருக்கு மட்டும் தான் தெரியும்," என்று அவருடைய காபினெட் அமைச்சர்களில் ஒருவர் என்னிடம் கூறினார். அவர் வாழ்க்கையை நேசித்தார். அவர் மலர்களை நேசித்தார். அவர் நாய்களை நேசித்தார். நறுமணம் வீசும் தாள்களில் குறிப்புகளை எழுதி அனுப்புவதிலும் இரகசியமான பரிமாற்றங்களை விரும்புவதிலும் அவர் பழங்காலத்து மனிதராக இருந்தார். ஆனால் அதே சமயத்தில் அவர் துணிச்சல் மிக்கவராகவும் இருந்தார். எதிலும் இறுதிவரை போராடுவது அவருடைய இயல்பாக இருந்தது. வாழும் காலத்துக்குப் பொருந்தாத பூர்ஷ்வா சட்டத்தையும், அவரைக் கொலை செய்தவர்களை அங்கீகரித்து அதே சமயத்தில் அவரை நிராகரித்த உச்சநீதி மன்றத்தையும், சட்டப்படி அவரை அங்கீகரிக்காமல், அதே சமயத்தில் சுரண்டும் வர்க்கத்தின் முன் இழிவான விதத்தில் மண்டியிட்ட பரிதாபத்துக்குரிய நாடாளுமன்றத்தையும், தங்களது ஆன்மாக்களை ஃபாசிசத்துக்கு விற்றவிட்ட எதிர்க்கட்சிகளின் சுதந்திரத்தையும், ஒரு தோட்டாவைக்கூட செலவழிக்காமல் அவர் அழிக்க விரும்பிய உளுத்துப்போன பழம் சமூக அமைப்பையும், ஆயுத மேந்திப் பாதுகாப்பதில் இறுதிவரை போராடி மரணமடையும் அபூர்வமான, அவலமான வாய்ப்பை மட்டும்தான் விதி அவருக்கு வழங்கியது. சிலி நாட்டு மக்களைத் துக்கத்தில் ஆழ்த்தி அந் நாட்டில் நிகழ்ந்து நம் அனைவருக்கும் நிகழ்ந்த ஒன்றாக வரலாற்றில பதிவு செய்யப்படும். இந்நிகழ்வு நம் வாழ்வில் என்றென்றும் நிலைத்திருக்கும்.



“ஒரு நூற்றாண்டுத் தனிமை”

காப்ரியேல் கார்ஸியா மார்க்வெஸ் நாவலில்...

மொழிப்பெயர்வும் கால்வழி மரபு வரலாறும்

அனிபல் கோன்ஜலெஸ்

தமிழில் ஜெ.சாந்தாராம்

மார்க்வெஸின் "ஒரு நூற்றாண்டுத் தனிமை" (One hundred years of solitude) நாவல் குறித்துரைக்கும் பல சங்கதிகளில் மொழிப்பெயர்வும் (translation) ஒன்று. மொழிப்பெயர்வானது இக்குறிப்பிட்ட நாவலுடன் தொடர்புற்று இருப்பதோடு நாவல் இலக்கிய பாணியுடனும் உண்மையில் சில விமர்சகர்கள் இந்நாவலின் நிகழ்ச்சி போக்கு மெல்கியுவாடெஸின் தீர்க்கத்தரிசனமிக்க கையெழுத்துப்பிரதியில் குழூஉக் குறிகளைக் கொண்டு எழுதிய நிகழ்முறையோடு தவிர்க்கவியலாதபடிக்கு தொடர்பு கொண்டுள்ளதைக் காணத் தவறிவிட்டார்கள். அக்குழூஉக்குறிகள் மொழிப்பெயர்வை உள்ளடக்கியவையாகும். ஆனால் இந்நாவல் குறித்து இதுவரை அளிக்கப்பட்டு வந்த விளக்கமானது, மொழிப்பெயர்வு அதனளவில் செயற்படும் முறையை உய்த்துணரும்படி சொல்வதற்கு சொற்ப கவனத்தையே கொண்டிருந்ததால், அது வாசிப்புத் தத்துவங்களையும் எழுத்தின் தன்மை பற்றிய மிகப் பொதுவான கேள்விகளையும் சுற்றிச் சுழலவே நேரிட்டது.

மேலும், இந்நாவலானது பொருத்தப்பாட்டினூடான (context) மொழிப்பெயர்வில் பொதிந்திருப்பவை, சமகாலத்திய புகழ்வாய்ந்த லத்தீன் அமெரிக்க இலக்கியங்களை ஊடுருவிப் பார்க்கும் கண்ணோட்டங்கள் மட்டுமல்ல, இலக்கிய வரலாற்றில் மொழிப்பெயர்வின் பங்கு, நாவலிலக்கியப் பாணி முதலியவற்றை ஆழ்ந்தாடி நோக்கும் நுண்ணறிவையும் நமக்களிக்கிறது. மொழிப்பெயர்வெனும் விவாதக்கூறை மிகத் தெளிவாகச் சுட்டுவதன் மூலமும், அதை மற்ற அடிப்படையான விவாதக்கூறுகளான கால்வழி மரபு வரலாற்றுடனும் (Genealogy) முறைதகாப்புணர்ச்சியைத் (Incest) தடை செய்தலுடனும் தொடர்பு படுத்துவதன் மூலமும் மொழிப்பெயர்வானது நாவலிலக்கியப்பாணியின் முடிவிறுதியற்ற சிக்கலான தன்மையின் இதயமையத்தில் உள்ளார்ந்து இருப்பதையும், சற்றும் விள்ளவியலா இலக்கியப் பாணிகளின் தனிச்சிறப்புப் பண்புகளை விளக்கத் துணையாகும் திறவுகோலாக அது செயற்படுவதையும் "ஒரு நூற்றாண்டுத் தனிமை" குறிப்பறிவிக்கிறது.

இந்நாவலின் பனுவலில் (text) மொழிப்பெயர்வுக் காட்சிகளும், அந்நிய மொழிகளை அறிவதற்கும் பேசுவதற்குமான குறிப்புகளும் ஏராளமாய் மல்கியிருக்கின்றன. இப்போதைக்கு நாவலின் பனுவலிலுள்ள மிக ஈர்ப்புடைய மொழிப்பெயர்வுகளில் சில எடுத்துக்காட்டுகளையும், அவற்றுக்குரிய மறைக்குறிப்புகளையும் (allusions) வரிசையிடுகிறேன். இவை பற்றிய விளக்கமான கருத்தோட்டங்களைப் பின்னர் சொல்வேன். மொழிப்பெயர்வுக்குரிய முதல் நேரடியான மறைக்குறிப்பு இந்நாவலின் இரண்டாவது அத்தியாயத்தில், ஜோஸ் அர்காடியோ ஜிப்ஸி பெண்ணுடன் படுக்கைக்கு செல்லும்போது இடம்பெறுகிறது.

"ஜோஸ் அர்காடியோ தான் மேலே செந்தூக்காய் உயர்த்தப்படுவதாக உணர்ந்தான். தெய்வீகத் தூண்டுதலுறும் திசைக்கு நகரும் காற்றின் அந்தரத்தில் மிதந்தபடியிருந்த அவனின் இதயம் திறந்து கனிந்த அன்பின் நாற்றப் பொழிந்துப் படர்ந்தது. அந்த ஜிப்ஸி பெண்ணின் காதுக்குள்

பாதந்தூர்ந்துச் சென்ற அவன் அவளின் மொழியாகப் பெயர்ந்து அவள் வாயதரம் வழியே வெளிபட்டான்" (பக்.36)

மூன்றாவது அத்தியாயத்தில், அர்காடியோவையும் அமரந்தாவையும் பேணி வளர்த்து வருபவளும், உறக்கமின்மை எனும் கொள்ளை நோய் அணுகாத மக்கோண்டாவை சென்றடைந்த குவாஜிரோ இந்தியப் பெண்மணியுமான விஷித்தாசியோன், "ஸ்பானிஷ் மொழிக்கு முன்னிலையில் பதிலை குவாஜிரோ மொழியில் பேச வந்தாள்" (பக் 39) "இந்திய பழக்கங்களைக் கைகொள்வதற்காக நாள் முழுவதும் அங்குமிங்கும் திரிந்த அவர்கள் மனதில் குவாஜிரோ மொழியில்தான் பேசவேண்டும், ஒருபோதும் ஸ்பானிஷில் பேசக் கூடாதென்ற வைராக்கியம் உறைந்திருந்தது" (பக் 41)

"ரிபெக்கா கைகொண்ட தனது பெற்றோரது எலும்புகளின் 'கிளிக்' ஒலிகள் சகிதம் வந்து சேர்ந்த போது அவளும் குவாஜிரோ மொழியில் பேசத் துவங்கினாள். மண்ணைத் தின்னும் அவளது தீயொழுக்கத்திற்கு மாற்றாக கொஞ்சம் மருந்தை அவளுக்குத் தர ஊர்சுளா முயன்ற போது, ரிபெக்கா கௌவி கடித்துத் துப்பும் தனது செய்கைக்கு இடையிடையே விசித்திரமான குறியீட்டுச் சித்திரபாஷையில் ஊர்சுளாவிற்கு பதிலளித்தாள். சுயநாகரீகமற்ற இந்தியர்களுக்கு ஒத்திசைய அமைந்த அவளது பதிலில் பரவும் இழிந்த நாற்றத்தை எவ்வொருவரும் அவரது" மொழியில் கற்பனையாக நுகர்ந்தறிய முடியும் (பக் 43)

"கொள்ளை நோயான உறக்கமின்மை நிலவிய காலத்தில், சற்றே தாமதமாய் மொழியிழப்பும் மொழிமீட்பும் பெருமளவில் நிகழ்ந்தது, அதனூடாக நினைவிழப்பும் நேரிட்டது" (பக் 45 -49)

மேலும், இந்நாவலில் மொழிப்பெயர்வுடன் தொடர்புடைய மிகத் தனிச்சிறப்பான கிளைக்கதை மெல்கியூவாடெஸின் இறுதி நாட்கள் பற்றியதாகும். அப்போது மிகத் தளர்ந்த வயோதிகத்தைத் தொட்டிருந்த "அவர் கேள்விகளுக்கு படுசிக்கலான கலவைக் கதம்ப மொழியில் பதில் பகர்வார்" (பக் 67). அவ்வாறிருந்த காலத்திலேயே அவர் விசித்திரப் பூடகப் புதிர் இலக்கிய படைப்பொன்றை எழுதி வந்தார் (ப. 68). மெல்கியூவாடெஸ் தமக்குத் தாமே கூட்ட வியலாக்கும் தனிமொழிகளில் அவர் சொல்வதெல்லாம் தன் புரிவுக்கு புலப்பட்டுவிட்டதாக ஒரு சமயத்தில் எண்ணும் அவ்ரெலியனோ அத்தனிமொழிகளில் கவனம் செலுத்துபவராகிறார். ஆனால் உண்மையில், பாறைப்பாங்காய் எழுதப்பட்ட அந்தப் பத்திகளில் உள்ளிசைய விடாப்பிடியாக ஊன்றிச் செலுத்த, செலுத்தச் செதுக்கி தனிப்பட வெளித் தெரிவதெல்லாம் equinox, equinox, equinox என்ற சொல்லும் அலெக்ஸாண்டர் வான் ஹம்போல்ட் என்ற பெயரும் (பக் 68)

அதே கிளைக் கதையில், மெகியூவாடெஸ் யாரும் ஊடுருவி கருத்தேற்க இடந்தராத தனது எழுத்தின் பலபக்கங்களை உற்றுக் கேட்க அவ்ரெலியனோவை ஆட்படுத்தினார். புரியாத போதிலும், உரக்க வாசிக்கப்படும் போது, அது இன்னிசைக் கடகங்கள் இழையும் சுற்றுக் கடிதங்களைப் பார்வையிட்டு உணர்வதைப் போலிருப்பதாய்

அவ்ரெலியனோ உணர்ந்தார் (பக் 68). இங்கே நாம் மெல்கியூவாடெஸ்ஸால் மறைபுதிராய் பொறித்து வைக்கப்பட்ட எழுத்து மூலங்களோடு புயெண்டியா இடையறாது போராடுவதன் தொடர் வரிசையைக் காண்கிறோம். இப்போராட்டம் மெல்கியூவாடெஸின் கையெழுத்துப் பிரதியிலிருக்கும் மறைகுறியெழுத்து மூலங்களுக்கெல்லாம் இறுதியானது: பொருள் விளக்கம் கூறும் நிலை வரை உச்சமடைந்துச் செல்கிறது.

இந்நாவலில் மற்றொரு தனிச்சிறப்பான கிளைக்கதை ஜோஸ் அர்காடியோ புயேண்டியாவின் அறிவுதிறம்பி தன் வயமிழந்த நிலை பற்றியதாகும். இந்நிலையில் அவர் ஸ்பானிஷில் பேசுவது வெகுநேரம் நீடித்திருக்கவில்லை. மாறாக புரிவுணர்வை சற்றும் எட்டாத புதிர்மொழியை அவர் சரளமாக உரத்தொலித்துப் பேசினார் (பக் 74). அதுவே பின்னர் லத்தீனாக உருமாறி வெளிப்பட்டிருக்க வேண்டும்(பக் 77 -78).

இந்நாவலில் தன்முறையான வரையுருவச் சித்திரக்கலை (graphic) - இப்படிச் சொல்லலாமெனில் - சார்ந்த மொழிப்பன்மைக்குரிய சான்றாதாரம், இளைஞரான அகார்டியோவின் மிகப்பெரிய ஆண்குறியாக வர்ணிக்கப்படுகிறது. "நீலமும் சிவப்பும் ஒன்றோடொன்றாக பின்னிப்பிணைந்து நிறங்குழம்பிய பல்வேறு மொழிகளின் சொற்களால் பச்சைக் குத்தப்பட்ட அவரின் ஆண்குறி பச்சையெழுத்துக்களால் முற்றிலும் மூடி மறைக்கப்பட்டிருந்தது." (பக் 84)

இதற்கு மாறுபாடான காட்சியாக, இந்நாவலில் பண்டைய செம்மொழி பாணியில் ஊடாடும் மொழிப்பெயர்வு - "பெட்ரார்ச்சின் உணர்ச்சி நுரை ததும்பும் ஈரேழ்வரிப்பா வீரிசை கீதங்கள் பியின்ட்ரோகிரேஸ் ஆழ் ஹிருதய மொழிரீதியில் அமரந்தாவிற்காக பெயர்ந்து ஊற்றெடுக்கும்" (பக் 97).

ஜோஸ் அகார்டியோவின் மகனும், பிலர் டெனெராவிற்கு இளையவனும், தன்னிச்சையாய் வல்லந்தாமாய் செயற்படுபவனுமான அர்காடியோதான் அவன் குடு ம்பத்தில் மெல்கியூவாடெஸின் எழுத்துப் பிரதிகளில் பொதிந்திருக்கும் மறைகுறியெழுத்து மூலங்களுக்கு பொருள் விளக்கம் கண்டுணர முயன்ற முதலாமவன். விஷித்தாசியோன் மற்றும் காட்டவ்ருடன் அவர்களது குவாஜிரோ இந்திய மொழியில் பேசிப் பகிர்ந்ததை விட மேம்பட்டு நபரும் இல்லாமல் தோல்வியெய்தினான். மெல்கியூவாடெஸ் மட்டும்தான் அவனை மதித்து உறவாடினார். புரியாத தன் புதிர்மொழிப்பனுவல்களின் வாசிப்பை செவிமடுக்கவும், பாதரஸ ஆவி மூலம் நிழற்படமெடுக்கும் கலை சார்ந்த பாடங்களைக் கற்கவும்அவனை அவர் ஆட்படுத்தினார். இதனால் தனிமையில் அவன் அழுத ரகஸிய கண்ணீர் எவ்வளவென கற்பனையில் கூட எவரும் புலனுணர முடியாது. புரியாப் புதிர்மொழிப் பிரதிகளை வாசித்தறியும் வீணார்வத்தோடு எழுத்துருவான மெல்கியூவாடெஸிற்கு புனர்ஜென்மமளிக்க முயன்று முயன்று களைத்துச் சோர்ந்த அவன் நம்பிக்கை இழந்து போனான். (பக் 100)

மெல்கியூவாடெஸின் கையெழுத்துப் பிரதிகள்மீதான இரண்டாவது உணச்சிகரமான மோதலை அவ்ரெலியனோ செகுண்டோ நடத்துகிறார். ஒரு புத்தகத்தைப் (தலைப்பு குறிப்பிடவில்லை என்றாலும், அது

ஐயத்திற்கிடமின்றி "அரேபிய இரவுகள்" என்ற நூல்தான்) படித்த பிறகே இம்போதனை மேற்கொள்கிறார். கையெழுத்துப் பிரதிகளில் ஆர்ந்திருக்கும் மறைகுறியீட்டு மொழியைக் கண்டுணர அவ்விதம் கண்டுணர்வது சாத்தியமில்லை என்பதைக் கண்டுணரவே அவர் முனைகிறார். அவ்வெழுத்துக்கள் கம்பியில் உலர்வதற்காக தொங்கவிடப்பட்டிருக்கும் துணிகளைப் போலவும், அவை எழுத்துக்கள் என்பதைப் பார்க்கிலும் மிகையாய் இசைக்குறிப்புகள் போலவும் காட்சியளிக்கின்றன (பக் 161). மெல்கியூவாடெஸ் அவன் முன் தோன்றி, தனது அனுபவமிக்க அறிவாழத்துள் அவனைச் செலுத்த முயன்றார். என்றாலும் தனது கையெழுத்துப் பிரதிகளை மொழிபெயர்த்துக் கூற மறுத்து விட்டார். "ஒரு நூறு வயதை தொடும் வரை, அவற்றின் அர்த்தமானங்கள் எவ்வொருவருக்கும் சாத்தியமில்லை" என்றார் அவர். (பக் 161)

புயெண்டியா கால்வழியில் இரண்டாவது தலைமுறையான ஜோஸ் அர்காடியோ செகுண்டோ இக்கையெழுத்துப் பிரதிகளை அறிவுறுவதற்காகவே தன்னை அர்ப்பணம் செய்து, மறைகுறியெழுத்து மூலங்களை கண்டுணர்வதில், அப்பிரதிகளிலிருக்கும் குழூஉக்குறிச் சொற்கோவைகளில் அவ்ரெலியனோ பாபிலோனா மேலாட்சி செய்து நுகக்கீறல் வடுக்களை ஏற்படுத்தி வருவதற்கு முன்பாக வெகுதூரம் முன்னேறி வந்தார். தோல்களில் எழுதப்பட்ட அம்மறைப் புதிரான எழுத்துக்களை இனவாரியாக வகைப்படுத்துவதில் இறங்கினார். அவை நாற்பத்தியேழு முதல் ஐம்பத்து மூன்று பண்புரு வடிவங்கள் வரையிலான நெடுங்கணக்கை (alphabet) ஒத்திருப்பதாகவும். இந்த உருவபடிவங்களை தனித்தனியே பிரித்தால் அவை எழுதுகோலின் கிறுகட்க் கிறுக்கல்களாக மிஞ்சுவதாகவும், மெல்கியூவாடெஸின் அழகிய கையெழுத்தில் அவை கம்பியில் உலர்த்துவதற்காக தொங்கவிடப்பட்ட துணிகள் போலிருப்பதாகவும் அவர் ஐயத்திற்கிடமின்றி முடிவுக்கு வந்தார்.

இறுதியாய், தோல்களில் மெல்கியூவாடெஸ் எழுதிய கையெழுத்துப் பனுவலில் அமைந்துள்ள மொழி சமஸ்கிருதம் என்று அவ்ரெலியனோ, கண்டுபிடித்தார் (பக் 301). ஆனால் அது இன்னும் போதுமானதாக இல்லை" ஸ்பானிஷில் அமைந்த மொழி எந்த அர்த்தத்தையும் வர்த்திருக்காத போது கையெழுத்தேட்டின் பனுவல் வரிகள் எல்லாம் குழூஉக்குறிச் சொற்கோவைகளால் ஆனவையாக உள்ளன (பக் 307). ஆங்கிலம், பிரெஞ்சு, கொஞ்சம் லத்தீன், கிரேக்கம் எனக் கற்றறிந்ததிற்கு எதிர்மாறாக கூடுதலாய் சமஸ்கிருதமும் கற்க வேண்டும் (பக். 322). பனுவலின் மறையர்த்தத்தைக் கண்டுணரத் துணையாகும் திறவு கோலை இன்னமும் அவ்ரெலியனோ கைவரப் பெறாமலிருக்கிறார். அந்த திறவுகோல் பனுவலில் காணப் பெறவில்லை. ஆனால் இனமறியப்படாத ஏதோ ஒன்றில் பனுவலை ஒத்தத்தன்மை புலப்படுக்கிறது. அவருக்குப் பன்றிவாலுடைய குழந்தையை பெற்றெடுத்த அமரந்தா ஊர்சுளா பச்சைபிரம், உலர்ந்து காற்றூதியத் தோல் பையாக (பக் 349) மெல்கியூவாடெஸ் தீட்டிய தோல் எழுத்தேடுகளை ஒத்த மாதிரியாகத் தோற்றமளித்தாள்.

மொழிப்பெயர்வுக் காட்சிகளையும், அந்நியமொழிகள் ஊடாடும்

மறைக்குறிப்புகளையும் சான்றிடும் என் மேற்கோள்கள் முனைப்பால் குறிப்பறிவிப்பது யாதெனில், மொழிப்பெயர்வெனும் விவாதக் கூறு உருவமைக்கும் நுண்இழை நாவலினூடாகத் தங்குதடையின்றிப் படர்ந்து பாவிச் சென்று, நாவல் முரணற்ற இசைவிணைவுத் தன்மையுடன் துலங்கத் துணைபுரிகிறது. மெல்கியூவாடெஸின் கையெழுத்துப் பிரதிகள் கடைசியில் மொழிபெயர்க்கப்பட்டு மக்கோண்டாவின் வரலாறு முன்னரே அறுகியிட்டு அமைக்கப்பட்டத் தன்மை திரைநீங்கி வெளிப்படும் தருணத்தை நோக்கி நாவலின் கதை நிகழ்வுகள் வசப்படாதரீதியில் நகர்வது கண்கூடு. இந்நாவலில் இடம்பெறும் மொழிப்பெயர்வுச் சான்றுகள் அல்லது அந்நிய மொழியிலிருந்து ஈட்டப்பெற்ற ஒவ்வொன்றும் பயண இலக்கையும், முற்பட கதை நிகழ்வுகளை கற்பனையுருப்படுத்தலையும் நோக்கிப் படிப்படியாக முன்னேறுகிறது.

இரண்டாவதாக, இந்நாவலில் மொழிப்பெயர்வும் கால்வழி மரபு வரலாறும் ஒன்றுக்கொன்று இசைவாய் இணையாய் ஒரே போக்கில் இயங்குவதை நாம் காணமுடியும். கையெழுத்துப் பிரதிகளை மொழிபெயர்க்கும். கடமைப் பொறுப்பு ஒரு தலைமுறையினின்று அதற்கடுத்த தலைமுறையின் தேர்ந்தெடுத்த அங்கத்தினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு - இதற்கும் கையெழுத்துப் பிரதிகளின் விசித்திரப் புதிரை விடுவிப்பதற்காக தீவிரமாய் போராட பொருத்தமானவர்கள் முன் மெல்கியூவாடெஸின் ஆவி தோன்றுவதற்கும் குறிக்கத்தக்க மாறுதல் எதுமற்ற வழியில் - காலங்காலமாய் மொழிபெயர்ப்பு முயற்சி விடாது நீள்கிறது.

இதுவரை நான் எழுத்துப் பேற்றின் நோக்கு நிலையிலிருந்து இந்நாவலின் மொழிப்பெயர்வு குறித்தான ஆய்வை குறுகிய எல்லைக்குட்பட்டு பரிசீலித்து வந்தேன். இப்போது நான் நாவலின் அகல்விரிவான பொருத்தப்பாட்டில் மொழிபெயர்வின் அர்த்தம் என்னவென்று ஆழ்ந்தாராயத் தொடங்குகிறேன். "ஒரு நூற்றாண்டுத் தனிமையில்" ஏன் மொழிப்பெயர்வு எடுப்பாய் மேலோங்கி வெளிப்படுகிறது? எது மொழிப்பெயர்வை மிக முக்கியமானதாய் ஆகும்படிச் செய்கிறது? கால்வழிமரபுடன் முறைதகாப் புணர்ச்சியைத் தடைசெய்தலுடன் மொழிபெயர்வுக்குள்ள உறவு என்ன?

இந்த கேள்விகளுக்கு பதிலிட முயல்வதற்கு அத்யாவசியமானது என்னவெனில், முதலில் நாம் மொழிப்பெயர்வுக் கருத்தியலின் பொருத்தப்பாட்டில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். தனிவகையாகப் பிரித்து வரையறுத்த மூன்று கோட்பாட்டியலான கருத்தறிவிப்புகள் "ஒரு நூற்றாண்டுத் தனிமை" நாவலுடனான எத்தகைய வாசிப்புக்கும் பொருத்தமானவையாக அமையுமென நான் நம்புகிறேன் - இந்த மூன்றில் (காலவரிசைப்படி) முதலாவதான கருத்தறிவிப்பு வால்டர் பெஞ்சமினுடையதாகும்.

"மொழி பெயர்ப்பாளரின் கடமைப்பணி" என்ற கட்டுரையில் பெஞ்சமின் மொழிப்பெயர்வு குறித்து சில கருதுகோள்களை முன்வைக்கிறார். அவரைப் பொறுத்தவரை, மொழிப்பெயர்வுச் செயற்பாடு தூயத்

தனிமொழிக்கான (pure language) தேடலை உள்ளடக்கியுள்ளது. அதாவது ஒரு நீண்ட காலத்திற்கு ஒரு வழிவகையாகவோ எதையேனும் வெளிப்படுத்துவதாகவோநீடிக்காது. மாறாக உணர்ச்சி வெளித்தல் (expression) அற்றுப் போனாலும் சிருஷ்டி சொல்லாக எஞ்சி அது எல்லா மொழிகளுக்கும் உரியதாகிவிடும். மொழிப்பெயர்வு நிகழ் முறையை இலக்கிய சிருஷ்டித் தன்மைக்கு உயிராதாரமான ஆக்கக் கூறாக பெஞ்சமின் காண்கிறார். " " மொழிப்பெயர்வானது இந்த நேரம் வரை இரண்டு இறந்த மொழிகளின் மலடான சரி ஒப்பு நிலையை குறித்தமைவிலிருந்து விலகி அனைத்து மொழிவடிவங்களின் கால்வழி மரபை ஒட்டி அமைவதாகி. அது மூலமொழியின் முழுவளர்ச்சி நோக்கி நகரும் நிகழ் முறையின் முதிர்வை எதிர்பார்த்து விழிப்புடனிருக்கும் பணித்திட்டத்தைப் பொறுப்பேற்று, அது அதன் தனிப்பட்ட வேதனைகளினூடாகப் பிரசவிக்கிறது.

மொழிப்பெயர்வின் முடிவுறுதியற்ற சிக்கலானத் தன்மையை பெஞ்சமின் நவ ரொமாண்டிசிய முறையின் அணுக் இலக்கியம் மற்றும் கலையின் உயிராதாரமான உட்கருத்தாய் மொழிபெயர்வு செயல்பட வேண்டுமென்றும் வற்புத்தினார் - வரலாற்று நிகழ்முறையை பின்பற்றியோ அல்லது இன்னுங் கூடுதலானத் துல்லியத்துடனோ மொழிநூல் அடிப்படையிலான ஆய்வினுடாகவும்" மொழிகளின் மையமான ரத்த உறவுமுறையை" ஆராய்வதனூடாகவும் முன்வகுத்தமைவு - இதுவரையான முரண்கள் இணக்கமமையவியலாத ஆளுகை - மொழிகளின் முழுவினைமுறை ஆகியவை தொடர்பான பார்வை மொழிப்பெயர்வு தன்னளவில் எய்தப் பெறுவதாக பெஞ்சமின் காண்கிறார்.

அவரின் சொற்படி,மொழிப்பெயர்வானது மொழிகளுக்கிடையில் இறுதியாக மையமான பரஸ்பரமான உறவைப் பகிரும் செயல்நோக்கம் ஈடேற உதவுகிறது. மறைமுகமாய் ஈடேறும் இவ்வுறவை ஒருவேளை அதனால் வெளிப்படுத்தவோ நிலைநிறுத்தவோ முடியாமற் போகலாம். ஆனால் அது கருநிலையான அல்லது முனைப்பான வடிவத்தில் அவ்வுறவை எய்தச் செய்வதன் மூலம் புறவுருப்படுத்திக் காட்டுகிறது. மொழிப்பெயர்வானது மொழிகளின் ரத்த உறவு முறையை மெய்பித்துக் காட்டுவதாய் சொல்லப்படும் இந்தக் கருத்தானது மொழிப்பெயர்வு குறித்து மரபான கருத்தியல்களில் இடம்பெறும் பொதுவான கருத்துதான் என்று கூறும் பெஞசமின் இன்னும் ஒரு படி மேற்செல்கிறார். பல்வேறு பேச்சுமொழிகள் மற்றும் எழுத்தாளரின் உள்நோக்கங்கள் ஆகியவற்றால் வலிந்துச் சுமந்தப்படும் தற்செயலான மாறுபாடுகளிலிருந்து விடுபட்டு சுதந்திரம் கொண்டதோர் தொடர்புறவுச் சாரத்தை, அதாவது தூயத் தனிமொழியின் இருப்பை உண்மையில் மொழிப்பெயர்வானது முன்னறிவிப்பதாய் பெஞ்சமின் குறிப்பிடுகிறார்.

நீண்ட காலத்திற்கு ஒரு வழிவகையாகவோ எதையேனும் வெளிப்படுத்துவதாகவோ நீடிக்காமல், உணர்ச்சிவெளித்தல் அற்றுப் போனாலும் சிருஷ்டிகரச் சொல்லாக எஞ்சி அது எல்லா மொழிகளுக்கும் உரியதாகிவிடுகிற அத்தூயத்தனிமொழியுள் தகவல்களும் எல்ல உணர்வுகளும்

எல்லா உள்நோக்கங்களும் பொதிந்தனவாகின்றன. அவை முன்பே வகுத்தமைக்கப்பட்ட துடைத்தழிக்கப்பட வேண்டியதான - சமூகத்தர நிலை அடுக்கை பகைமையோடு எதிர்த்து நிற்கின்றன. மொழிகளின் இறுதியான இசைவிணக்கம் மற்றும் தூயத்தனிமொழியின் கண்டுபிடிப்பு தொடர்பான மொழிப்பெயர்வின் வாக்குத்தத்தம் நடைமுறையில் மொழிப்பெயர்விலான சாரத்தை, அதாவது தூயத் தனிமொழியின் இருப்பை மொழிசார்ந்த இடமாற்றீட்டை எப்போதுமே முழுமைப் பெறச் செய்யாத அளவில்தான் அமைந்துள்ளது என்பதையும் பெஞ்சமின் அறிந்திருந்தார்.

அவர் மேலும் கூறுவதாவது: மேலீடான பொருட்சாரத்தை (content) வடித்திறக்கி இடமாற்றிக் கடத்திய போதிலும் நல்லதொரு மொழிபெயர்ப்பாளரின் பிரதான ஈடுபாடு உபாயமாக நழுவி விலகும் விதமாய், குறிப்பாக பொருட்சாரமும் மொழியும் பழம் அப்பழத்தோடிணைந்த தோல் என மூலத்தில் தனி முழுமையானதொரு ஓர்மை நிலையை உருவமைக்கும் போது, மொழிப்பெயர்விலான மொழி அதன் பொருட்சாரத்தை ஏராளமான சுருக்கங்களுக்குள் முதல் தர ராஜ அங்கியை மறையச் செய்வது போல் மூடி மறைக்கிறது. இம்மொழிப்பெயர்வு அதற்கேயுரியதை விடவும் மகோன்னதமான மொழியை விளைவாக்கி, ஆதலால், அதன் பொருட்சாரத்துக்கு ஒவ்வாததாகி, அடக்கியாளும் வல்லந்தமாய் விஞ்சி அந்நியப்பட்டுப் போகிறது. இந்தஇயைபின்மை மொழிப் பெயர்வைத் தடைப்படுத்தும் அதே சமயம் அதை தேவைக்கதிகமான மிகையாகத் தோற்றுவிக்கிறது.

இவ்விதம் மொழியும்பொருட்சாரமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கவியலாத முழுஇசைவிணைவுடன் (Total coheence) பொருந்திய புனிதப்பனுவல் (sacred text) ஒரே சமயத்தில் மொழிப்பெயர்வுக்கு சாத்தியமானதாகவும், சாத்தியமற்றதாகவும் விளங்குகிறது. அர்த்தத்தில் நிலைமாறா ஸ்திரத் தன்மையைக் (fixity) கொண்டுள்ள காரணத்தால் புனிதப் பனுவலானது அதன் சொற்களுள் ஊடாடும் மறையர்த்தத்தை கிரகித்தறிந்து மேற்கொளவேண்டிய மொழிப்பெயர்வை, அதற்கேயுரிய உரிமையால் நிலைநிறுத்தப்படும் மொழிப்பெயர்வை செயலேற்க முன்வருவதாய் தோற்றமளிக்கிறது. இம்மொழிபெயர்வு மொழியும் கட்டற்றப்பாங்கில் அர்த்தம் கொண்டு எனையப் பனுவல்களில் விளைவான பொருட்சாரமும் இயைபறுந்து பிரியும் நிலைக்கு உட்படாத வகையில் அமைந்திருக்கிறது. ஆயினும் புனிதப் பனுவல் அதற்குரிய அர்த்தத்தை எய்தப் பெற வேண்டி மேற்கண்ட பெஞ்சமினின் உருவகமான பழத்திலிருந்து அதன் மொழியெனும் தோலை உரித்தெடுப்பது அசாத்தியமாகி, முழுஇசைவிணைவுடன் பொருந்திய அதன் நிலைமாறா ஸ்திரத்தன்மை அது மொழிப்பெயர்வுறுவதைச் சாத்தியமற்றும் போகச் செய்கிறது. மெய்யுணர்வார்ந்த உயித்தத்துவத்திலிருந்தும் (Philosophical vitalism) மதத்திலிருந்தும் வருவிக்கப்பெற்ற கவிதார்த்தமிக்க சூசனை ததும்பும் உருவங்களின் துணையோடு இயங்குகிற மொழிப்பெயர்வு பற்றிய பெஞ்சமினின் எண்ணஅலைகள் மொழிப்பெயர்வுச் செயற்பாடு உள்வரை

கொண்டு விளங்குகிற, ஒன்றுக்கொன்று இன்றியமையாமல் இணைந்துருவான இரட்டைப் படிவம் குறித்து தீட்சண்யமான கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன.

ஜாக்வெஸ் டெரிடாவின் கூற்றுப்படி (புனித பனுவல்கள் மட்டுமல்லாது) பொதுவாக மொழிப்பெயர்வு அதன் சாத்தியம் சாத்தியமின்மை இவ்விரண்டின் உடனிகழ்வு எனும் புதிர்முரணில் (paradox) சிக்கியுள்ளது. பனுவல்கள் தம்மளவில் மொழிப்யெர்வை இசைந்தேற்கவே கோருவதாய் வேறு பனுவல்களாக உருமாற்றமுற வேண்டியதாய் உள்ள அதே போதில் அவற்றின் இன்றியமையா ஒழுங்குமுறைமை (Propriety) - மொழிகளிடையிலான பேதங்களை ஆளும் விதிகள் மற்றும் நடைமுறை மரபுகள் சார்ந்த ஒழுங்குமுறைமை - முற்ற முழுப் பூரணத்துவத்தை மொழிப்பெயர்வு அடையக்கூடாத வகையில் அதற்கு தடைகளை இடுகிறதென டெரிடா சொல்கிறார். பெஞ்சமினின் கட்டுரையைக் கட்டவிழ்த்து (deconstructive) வாசிக்கும் முறையில் மொழிப்பெயர்வு பற்றிப் பிறந்த டெரிடாவின் சமீபகாலக் கூற்று, "ஒரு நூற்றாண்டுத் தனிமை" நாவலின் வாசிப்புக்குப் பொருத்தமான இரண்டாவது கோட்பாட்டியலான இருத்தறிவிப்பை உள்ளடக்கியுள்ளது. விவிலியத்தில் உள்ள பேபெல் புராணிகத்தை (myth of Babel) டெரிடா மீண்டும் குறிப்பிட்டு, மேற்கத்திய கலாச்சார மரபில் இடுகுறிப் பெயர்ச்சொல்லின் (Proper nown) அநிச்சயத்தன்மையுடன் (Problematics) மொழிப்பெயர்வு எம்முறையில் இணைப்புற்றுள்ளது என்பதைப் புலப்படுத்துகிறார். ஷெம்(shem) என்போர் ஆதிமனித இனத்தினர் (ஷெம் என்றால், உண்மையில், பெயர் என்றே அர்த்தம்) அவர்கள் செங்குத்தாய் கட்டி உயரே எழுப்பிய ஒரு கோபுரத்தின் ஊடாய் பிரபஞ்சம் முழுவதன் மீதும் தமது சொந்தப் பெயரையும் சொந்த மொழியையும் சுமத்திட மேற்கொள்ளும் பிரயத்தனம் குறித்ததான கதையை பேபெல் புராணிகம் கூறுகிறது. பேதத்தையும் குழப்பத்தையும் (பேபெலை) தன்னகமாகக் கொண்டுப் பேணும் ஓர் புதிய இடுகுறிப்பெயர்ச் சொல்லின் கடவுளால் விதிக்கப்படும் தண்டனைப் பணியில் தம்மைத் தாமே அவர்கள் வலிந்து வருத்திக் கொள்ளும் நிமித்தமே அவர்களை உடனேந்தி விண்ணுலகிற்கு உயர்ந்தூடுகிறது அக்கோபுரம். டெரிடா கூற்றுபடி, இடுகுறிப்பெயர்ச் சொற்களிடையே விதிமீற நிகழ்ந்தேறும் கடும்பிரயத்தனமாக மொழிப்பெயர்வு தோற்றமளிக்கிறது. அல்லது பொதுவாகவே இரண்டு சரிநிகரான தனிமுறைமையான மொழிகளிடையே அவற்றில் ஏதேனும் ஒன்று மற்றதின் பிரத்யேக வரையறையை மறுதலிக்க பிரயத்தனப்படுகிறது.

மொழிப்பெயர்வு அமுலில் கொண்டுவர எண்ணும் அர்த்தத்தின் "பெருங்குழப்ப ஒழுங்கின்மைப்பரவல்" (dissemination) மீதான, அறிவெல்லைை கடந்த அகவெளிப்பாட்டுத் தன்மையுடைய (transcendental) புனித அதிகாரம் புராணிகத்தில் விதித்திருக்கும் வரம்பெல்லைகளை பேபெல் எனும் பெயர் முன்குறித்துக் காட்டுகிறது. (பேபெல் என்பது பாபிலோனை குறிக்கும். எபிரேய மொழி பெயர் ஆகும். இதற்கு

மிகப்பெரும்பாலான அகராதிகளின் படி, "கடவுளின் கலைவாயில்" என்று அர்த்தம்) என்ற போதிலும் தன் தோற்றுவாய்களையும் புதிதாய் சிருஷ்டிக்கும் தன்னாற்றலையும் நோக்கிய மொழிப்பெயர்வின் தேடலுக்கு பேபெல் ஒரு தலைவாயிலாய் அமைகிறது. அம்மொழிபெயர்வு அர்த்தத்திலான குழப்பத்தையும் சிதறலையும்அழுலுக்கு கொண்டு வரும் இடருக்கு உள்ளாகக் கூடிய நிலையிலுங் கூட இடர்மீறி செயலேற்பதை இலக்காகக் கொண்டுள்ளது. கருத்தில் பெஞ்சமினை விட முன்னேற்றமாய் டெரிடா சொல்வதன்படி, எந்தவொரு பனுவலின் "புனிதத் தன்மையையும்" மறுதலிக்க மொழிப்பெயர்வின் கருதுகோள் முனைவதோடு பனுவல்கள் எப்படி "புனிதம்" வரப்பெற்றனவாயின என்ற கேள்வியையும் தொடுக்கின்றது.

ஜார்ஜ் லூயி போர்ஹே தனது "The Homeric versions" (1932) எனும் கட்டுரையில் மொழிப்பெயர்வும் பனுவல்களின் புனிதத் தன்மையும் தலையாயப் பிரச்சனைக்குரியன என்கிறார். இது ஆய்வு செய்வதற்குரிய கோட்பாட்டியலான மூன்றாவதும் இறுதியானதுமான கருத்தறிவிப்பாகும். கார்ஸியா மார்க்வெஸின் இலக்கியத் தத்துவவியலுக்கும் போர்ஹே மிக முக்கியமானதொரு மூலாதாரமாக விளங்குகிறார். போர்ஹேவின் மொழிப்பெயர்வு குறித்த எண்ணங்கள் பெஞ்சமின் மற்றும் டெரிடாவின் கருத்துக்களுக்கு இணையாக உருக்கொண்டுள்ளன. மேலும், "ஒரு நூற்றாண்டுத் தனிமை" நாவல் மொழிப்பெயர்வெனும் வினாக் கூற்றை பிரயோகிக்கும் விதம் பற்றி (நாம் பார்க்கவிருப்பதைப் போல) உள்ளபடியே பிம்பப்படுத்துவனவாகவும் அவை காணப்படுகின்றன. இலக்கியம் மற்றும் அதன் மீதான புதிர் நிலையுடன் பிரச்சனை எதுவும் உள்ளார்ந்த இணைப்புற்றிருக்கவில்லையென மொழிப்பெயர்வு முன்மொழிகிறது. அழகியல் குறித்த விவாதத்திற்கான விளக்க ஒப்பனைகளாய் மேற்கொள்கிற விதியாகவே மொழிப்பெயர்வு தோற்றமளிக்கிறதென போர்ஹே தனது கட்டுரையில் வலியுறுத்துகிறார்.

ஹோமர் எழுதிய இலியத்திலிருந்து பல்வேறு மாறுபாடான மொழிபெயர்ப்புப் பகுதிகளை எடுத்து கருத்துரைக்கையில், மூலப்பனுவலின் எந்தெந்தக் கூறுகள் தேவைக்கதிகமான மிகையாகவும் எவை அதன் அடிப்படையாகவும் உள்ளார்ந்த கட்டமைப்பாகவும் இருக்கின்றன. என்பதைத் தெளிவாக்கும் ரீதியால் பனுவல் பற்றி கிரகித்துணர்தலை எவ்வாறேனும் "பவித்திரமாக்கிட" மொழிப்பெயர்வு ஆற்றல் பெற்றிருக்க வேண்டும் என போர்ஹே வற்புறுத்துகிறார். இலக்கியபனுவலின் முழுமை (integrity) மற்றும் அதன் அதிகாரம் (authority) குறித்து கேள்வியெழுப்ப கோலும் மொழிசார்ந்த நிலையை மொழிப்பெயர்வு உள்ளுறையாகக் கொண்டுள்ளதென டெரிடா போலவே போர்ஹேயும் கூறுகிறார். ஹோமர் மொழிப்பெயர்வுக்கு உள்ளாக்கும் போது, எழுத்தாளருக்கு உரித்தானது எது. மொழிக்கு உரித்தானது எது எனப் பிரித்தறிய சாத்தியமற்ற நிலைமையிலிருந்து தோன்றும் ஆனந்தமும் அவதியும் பற்றி போர்ஹே சுட்டுகிறார்.

மொழிப்பெயர்வு செயலுறும் கணத்தில் அது வரம்பை மீறும் இயல்புற்றே விளங்க வேண்டும். முழுவதும் பனுவலை அல்லாமல் புனிதத்தன்மையை சிறிதேனும் ஏந்தியிராததாய் அது திகழவேண்டும். வரையறையுடைய பனுவல் (definitive text) பற்றிய கருத்துருவம் மதத்திற்கு அல்லது ஏதுமற்ற வெறுமை நிலைக்கு மட்டுமே உரியதாக அமைந்துள்ளது. இவ்விதம் தனது கட்டுரையில் எடுத்துரைக்கிறார் போர்ஹே.

மொழிப்பெயர்வு பற்றிய இந்தக் கோட்பாட்டியலான கருத்தறிவிப்புகள் "ஒரு நூற்றாண்டுத் தனிமை" நாவலில் உள்ளார்ந்த எண்ண அலைகளில் எங்கெங்கே ஊடுபாவி சந்திக்கின்றன என்பதை காண்பது எளிது. கார்ஸியா மார்க்வெஸ் நாவலின் மையக்கரு மெல்க்யூயாடிஸின் கையெழுத்துப் பிரதிகளை மொழிப்பெயர்க்கும் புயெண்டியாவின் பணி குறித்த விளக்கத்தில் ஈடுபடுவதோடன்றி, மறு பிரதியாக உருவமைப்பதாய் அப்பணியை மேற்கொள்ளவும் செய்கிறது. அகல்விரிவான அர்த்தத்தில் பார்த்தால், அக்கையெழுத்துப் பிரதிகளை ரத்த உறவு முறையின் (Kinship) மொழியாக, அதாவது முறைதகாப் புணர்ச்சிக்கான தடைக்கட்டு மற்றும் இடுகுறிப்பெயர்களின் முக்கியத்துவம் ஆகியவற்றின் தனித்திறமான மொழிகளில் உடனிணைவாகப் பொதிந்துள்ள ரத்த உறவுமுறையின் மொழியாக மாற்றிப் பெயர்க்கிறது. அற்ப பேதங்களினால் மூலத்தைத் திரித்து வேறு அர்த்தம் தரும்படி செய்யும் ஹெகலிய தர்க்கவியலின் (dialectics) போலித்தன்மை போல, அந்நியமான கண்ணாடி பிம்ப நகர்வாய் நாவலில் இயங்கும் ஆபர்ண அர்த்தம் கொண்ட நிகழ்போக்கை ரத்த உறவுமுறையின் மொழி ரூபவரைப்படுகிறது. மேலும் கூட்டியிணைக்கிற சமாகவிருத்தியை (synthesis) எய்தத்துணையாவதற்கு மாறாக நாவல் தன் மொழி சார்ந்த தோற்றுவாய்களாக தளர்ந்து முறிவுறுவதற்கே அது வழிகோலுகிறது.

புயெண்டியா குடும்பத்திலுள்ள மொழிபெயர்ப்பாளர்கள் கையெழுத்துப் பிரதிகளிலான குழூஉக்குறிகளை மறைவிடுத்துப் பெயர்ப்பதை (denode) அனுஷ்டிக்கும் வகையில் நாவலின் பனுவல் அதனளவில் கால்வழி மரபு வரலாற்று ஆய்வை ஒத்த அதே நிகழ்முறையை சாசனப்படுத்திக் கொண்டுள்ளது. மொழியின் கால்வழி மரபு வரலாற்றை ஆய்வு செய்வதும் இரண்டுமே தம்முள் ஒத்த இணைந்து முழுமையாகவல்ல பெரும் பிரயத்தனங்களாகும். இதை முன்குறிக்கும் சூசனையாக நாவலின் சில குணச்சித்திரங்கள் தனிவகையாக மொழிகளோடு கொண்டுள்ள சம்பந்தம் அமைகிறது.

குடும்பக் கால்வழியின் மூலவரான ஜோஸ் அர்காடியோ புயெண்டியா ஸ்பானிஷை தோற்றுவித்த லத்தீன் மொழியை மீண்டும் நாடிச் சேர்ந்து, கால்வழி மரபு வரலாற்றை மற்றும் மொழிக்கத் துலக்கத்தைக் (Philology) குறிக்கும் சின்னமான மரபுருவத்துடன் பிணைக்கப்பட்டு நிலைமாறாமல் நிறுத்திருக்கிறார். ஆனால் அங்கே கொடிவழி விளக்கப்படமொரு மரமாக (family tree) சித்திரங்கொள்ளும் விதமாய், ஆண்டுகள் கழிந்துச் செல்லச் செல்ல புயெண்டியாவின் மொழிசார்ந்த/வழி மரபு வரலாறு சார்ந்த மரபுருவத்தில்

துணைச் சேர்க்கைகளாய் புதியக் கிளைகள் முளைத்துக் முளைத்துப் படர்கின்றன. அந்தக் குடும்பத்தின் அங்கத்தினர்கள் இந்திய மொழிகளைப் பேசுபவர்களாகவும், மேலும் ஆங்கிலத்தையும் (அல்ரெலியானோ பாபிலோனியாவையும் மெமேவையும் போல - பக் 235) பபியமெண்டோ, பிரேஞ்சு, கிரேக்கம், லத்தீன் மொழிகளையும் மற்றும் சமஸ்கிருதத்தையும் கூட கற்றறிபவர்களாக இருக்கிறார்கள். கூடுதலாக இத்தாலி மொழியும் பிரதிநிதித்துவம் பெறுவது பியெட்ரோ கிரெஸ்பியாஸ் மட்டுமல்ல இத்தாலியிலிருந்து மக்கோண்டாவிற்கு திரும்பும் ஜோஸ் அர்காடியோ குடும்பக் கடைசி இளவலாலும்.

இந்த இளவல் ஜோஸ் அர்காடியோவின் பங்களிப்பு பிரதானமானது. இவர் கடற்சார்ந்த அவரது வீரதீரங்களாய் " கடலோடிகளின் கொச்சை பாஷை இடையிடை கலந்த ஸ்பானிஷை பேசுபவராக (பக். 83) ஊர் திரும்புகிறார். ஆனால் ஒருவேளை மிக முக்கியத்துவம் கொண்டிருந்தாலும், அவர் உடல் முழுவதும் (வழக்கத்திற்கு மாறான அவரது புன்லிங்கம் உட்பட) பலவகை மொழிகளைப் பச்சைக்குத்தி சொற்கள் கவிந்து மூடியத் தோற்றமளிக்கிறது. அர்காடியோவின் உடல் அவரது குடும்பத்தின் மொழிசார்ந்த உலகப் பொதுமையைக் குறிக்கும் சின்னமாக விளங்குகிறது. அது ஐயத்திற்கு இடமின்றி, புயெண்டியா கால்வழி மரபின் கடைசி இளவலை உலர்ந்துப் காற்றூதியும் எலும்புகள் மொய்த்தும் காட்சியளிக்கும் தோல்பையாக முற்பட உருப்படுத்திக் காட்டுகிறது. மேலும் இடையறாத கடும்பிரயதனங்களால் கையெழுத்துப் பிரதிகளின் குழூஉக்குறிகளை மறைவிடுத்தும் பெயர்ப்பதன் மூலம் அர்த்தமானங்களை வசப்படுத்த வேண்டிய மொழிகளாய், அதாவது அப்பிரதிகளின் மொழிக்கு ஒப்பான வேறு மொழிகளாய் ரத்த உறவுமுறையும் அதனளவில் உருமாறுவதாகிறது. இது நாவலின் முடிவை நெருங்கும் நிகழ்போக்கில், அமரந்தா ஊர்சுளாவோடு அவ்ரெலியனோ பாபிலோனியா கொண்ட உறவுமுறை அவரை அவரின் குடும்ப வேர்மூலங்களைத் தேடி ஆராயத்தூண்டி வழியமைப்பதன் வாயிலாய் துல்லியமாய் வெளிப்படுகிறது. (பக் 344)

கையெழுத்துப் பிரதிகள் மீதான மொழிபெயர்ப்பு பணியை அவ்ரொலியனோ பாபியோனியா எங்ஙனம் மேற்கொள்கிறார் என்பதை சற்றே நெருங்கிக் காண்போம். முதற்கண் அவர் உலகியற் வாழ்வைப் பற்றி வாசித்து கிரகித்தறிவதில் முனைகிறார் (அவருக்கு உதவி வேண்டிய தருணங்களில் எல்லாம் ஞாபக சக்தியின் ஸ்தூலவுருவாக அங்கே தோன்றிவிடுகிறார் மெல்கியூவாடெஸ் பக் 301). கையெழுத்துப் பிரதி பெரும்பாலும் போர்ஹேவின் கூற்றுப்படி, இத்துணையென்றும் தெரியாத எண்ணற்ற பெருந்திரளானோரிடையே நிலவுகிற நுட்பமான உறவுமுறைகளை பதிவுசெய்யும் பல்கூட்டுச் சமன்பாடாகவே (complex equation) திகழுகிறது. நெடுங்கணக்கு முறையில் கையெழுத்துப் பிரதிகளில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துருக்களை தொகைப்படுத்தி இனவாரியாகப் பிரித்து வகைப்படுத்தியதன் மூலம் ஜோஸ் அர்காடியோ செகுண்டோ சமன்பாட்டுக்கான விவரணத்தை எய்தப்பெற உதவுகிறார். எனினும் அந்த

நெடுங்கணக்கில் எழுதப்பட்டுள்ள மொழி சமஸ்கிருதம் எனக் கண்டுபிடித்தவர் அவ்ரெலியனோதான் (பக். 301). இவ்விதம் அவ்ரெலியனோ, சமன்பாட்டில் நிரப்பப்படாமல் நிலவும்" இன்னதென்று தெரியாதவற்றின்" இடத்தைப் பூர்த்தி செய்யத் தொடங்குகிறார். சந்தேகம் சிறிதுமின்றி சமஸ்கிருதம் தான் ஸ்பானிஷ் தோன்ற மூலக் காரணமான ஆதிமொழி என்பதால் அவ்ரொலியனோவின் கண்டுபிடிப்பு அவரை ஸ்பானிஷ் மொழிசார்ந்த கால்வழிமரபு வரலாற்றுக்குரிய வேர்மூலங்கள் நோக்கி இட்டுச் செல்கிறது. பெயர்வியலான கூறுகள் ஒவ்வொன்றும் (பெஞ்சமின் நினைவூட்டுவதைப்போல) அதன் மூலமுதலான ஊற்றுக்கண்ணுக்கு அவ்ரெலியனோவின் மொழிபெயர்ப்புப் பணி துவங்குகிறது. ஆனால் இப்போது அவர் பனுவலின் மொழிக்குரிய மூலாதாரத்தை, பனுவலின் அசல் மொழியை(எல்லா அர்த்தத்திலும் அடையப் பெற்றிருந்தாலும் கூட, அம்மொழியின் பொருட்சாரம் என்னவாக உள்ளதென்பதை கிஞ்சிற்றும் அறியாதவராகவே இருக்கிறார். ஆகவே தான் மறைபொருள் கண்டுணர அவ்ரொலியனோ தொடரும் வாசிப்பு வெகுவிசாலப் பரப்பெல்லை உடையதாய் சர்வசங்கிரக நிகண்டொத்த கலைக்களஞ்சியமாய், அதே சமயம் பெரிதும் பழமையாய்வு சார்ந்ததாய் (antiduarion) விளங்குகிறது. வழங்கா தொழிந்த மொழியில் எழுதப்பட்டுள்ள மிகுதொன்மையான கையெழுத்துப் பிரதி வகுத்து விளம்புவது இறந்தகால நிகழ்வுகளை மாத்திரமே என்பதை அவர் ஸ்பஷ்டமாய் தெளிந்துணர்கிறார். பின்னர், அவர் நெடுங்கணக்கு வரிசையில் எழுத்துக்கெழுத்து விடாமல் பெயர்க்கும் (transliterate) பணியைக் (மொழியைப் பெயர்க்கவில்லை என்றிருப்பினும்) கையாள்கையில், மொழிப்பெயர்வுக்கு இடையூறாய் அங்கே வேறொரு தடை துலங்குவதைக் அவர் கண்டுபிடிக்கிறார். பனுவல் குழூஉக்குறியீட்டுச் சொற்கோவையில் (code) , அதாவது ஒப்புடைய இன்னொரு மொழியில் உயிரலைவற்று நிச்சலனமாய் உருவமைந்துள்ளதால், கையெழுத்துப் பிரதிகள் மீதான முழுமொழிப்பெயர்வும் உறவுமுறையை, இப்படிச் சொல்வோமெனில், ஸ்பானிஷ் மொழிக்கும் மெல்கியூவொடெஸின் ரகஸிய குறியீட்டுச் சொற்கோவைக்கும் இடையிலான ரத்த உறவு முறையை கணக்கிட்டுத் தொகைப்படுத்தும் அவ்ரெலியனோவின் வல்லமையைச் சார்ந்தே உள்ளது. இது இறுதியில் நாவலின் முழு உள்ளடக்கத்திலான கால்வழி மரபு வரலாறும், மொழிப்பெயர்வும் இணைவான ஒருபொருளுடைய திசைகளில் இயங்குவதிலிருந்து பிரத்யட்சமாகிறது. நாவலின் இறுதிப் பக்கங்கள் போதிப்பதைப் போல, கையெழுத்துப் பிரதிகளின் தொடக்கத்தில் பொறித்துள்ள "குறிக்கோள் வாசகம் " (epigrpgh) சூசகமாய்த் தெரிவிப்பதைப் போல, மெல்கியூவாடெஸின் குறியீட்டுச் சொற்கோவை அதனளவில் ரத்த உறவு முறையின் மொழியாக இருக்கிறது. கால்வழியின் "முதல் வம்சம் ஒரு மரத்தோடு பிணைத்துக் கட்டப் பெற்றுள்ளது. கடைசி வம்சமோ எலும்புகளால் தின்னப்பட்டு வருகிறது".(பக் 349)

ஆயினும், நாவலின் சிலப் பகுதிகளை நாம் மீளாய்வு செய்கையில்,

கால்வழி மரபு வரலாற்றுக்குரிய (பக்க உறவுமுறைக்குரிய) மொழியும், மொழிப்பெயர்வை சாத்தியமாக்கும் மொழிகள் குறித்தான ஞானமும் பனுவலின் ஆரம்பம் முதல் அந்தம் வரை ஏககாலத்தில் [illegible] நேர்வதைக் காண்கிறோம். பனுவல் மொழிப்பெயர்வுறும் போது, மொழியிலான புலமையும் பாலியல் உறவுகளும் ஒருங்கொத்த பந்தமாய் சேர்ந்திணைந்துள்ளதை எண்ணற்ற நேர்வுகள் காட்டும். இளவல் ஜோஸ் அர்காடியோ ஜிப்ஸி பெண்ணுடன் கொள்ளும் பாலியல் உறவின் ஊடாக மொழிப்பெயர்வு உருக்கொள்வதை விஸ்தரிப்படுத்திய வரிகளை இங்கே நினைவு கூர்வோம். (பக் 36) இதற்கு நேர்மாறான காட்சியாய் பெட்ரார்க்கின் கீதங்களை அமரந்தாவிற்காக மொழிப்பெயர்த்து இசைப்பதன் வாயிலாக சண்டையிட்டு இணங்க மறுக்கிற அவளை சமாதானப்படுத்தும் பியெட்ரோ க்ரேஸ்பியின் பண்பார்ந்த நயநாகரிக நடத்தையை காண்கிறோம் (பக் 97) மெமே புயெண்டியா அமெரிக்கர்களுடனான தன் நட்புறவு காரணமாய் மவ்ரீசியோ பாபிலோனியாவுடன் ஆழ்ந்த பழக்கம் பெற்ற நெருக்கமானது அவள் ஆங்கிலம் கற்றறிவதற்குத் துணை செய்கிறது. (பக் 235)

பழைய மெண்டோ மொழி பேசும் நிக்ரோமென்றாவுடன் அவ்ரெலியானோ பாபிலோனியா கொண்ட உறவுமுறையையும் இப்போது நினைவுறுவோம். தோல்களில் எழுதப்பட்ட மறைகுறியெழுத்து மூலங்களுக்கு அர்த்தம் கண்டுபிடிப்பதில் (deciphering) அவ்ரெலியானோ தம் காலைப் பொழுதுகளைச் செலவிடுகிறார். மதியகால சிற்றுறக்கத்திற்கான சொற்ப பொழுதில் அவர் தனக்காக நிக்ரோமென்தா காத்திருக்கும் படுக்கையறைக்குச் சென்று, முதலில் மண்புழுக்கள் போல, அடுத்து நத்தைகள் போல , இறுதியாய் நண்டுகள் போல சிறுதுயில் கொள்வது எவ்வாறென்பதை நிக்ரோமென்தாவிற்கு போதிக்கிறார் (பக் 326)

பனுவலில் கால்வழி மரபு வரலாற்றையும் எழுதப்பட்ட பதிவையும் மொழிப்பெயர்வையும் ஒன்று சேர்ந்த இணைப்பின் சின்னமாய், ஏற்கனவே நான் சொன்னதைப் போல, ஜோஸ் அர்காடியோவின் பச்சைக் குத்தப்பட்ட ஆணுறுப்பு விளங்குகிறது. பொதுவாக ஃப்ராய்டிய குறியீட்டியலாக (Freud-ian symblism) உபயோகிப்படும் லிங்கவுரு - மூலார்த்தத்தில் இயற்கையிலான படைப்பாற்றலின் சின்னமாக விளங்கும் லிங்கவுரு - எழுத்துக்கலைப் படைப்பை குறிப்பிக்கும் சாதனமாய் சொல்லின் சரியான நேர்பொருளில் கொள்ளப்படுகிறது. ஜோஸ் அர்காடியோவின் ஆண்குறியில் பச்சைக்குத்தப்பட்ட நீலமும் சிவப்பும் ஒன்றோடொன்றாக பின்னிக் கலந்து நிறம் குழம்பிய பல்வேறு மொழிகளின் சொற்கள் (பக் 84) பேபெல் புராணிகம் குறித்த மொழிகளிலும் ஆகிமனித்லெஷம் இனத்தினரின் லிங்கவுருவிலான கோபுரம் குறித்த மொழிகளிலும் அலங்கோல குழப்ப நிலையைத் தோற்றுவிக்கின்றன.

கால்வழி மரபு வரலாற்றுக்கும் மொழிப்பெயர்வுக்குமான பிணைப்புறவு இன்னும் மேற்சென்று நீள்கிறது. சொல்லின் அகல் விரிவான அர்த்தத்தில் பார்த்தோமானால், புருடென்ஷியா அகுய்லரை ஜோஸ் அர்காடியோ கொன்ற பிறகு அவரும் ஊர்சுலாவும் ரியோஹாச்சாவிலிருந்து

நிப்பந்தமாய் இடம்பெயரும் போது, இவ்விருவரது திருமணத்தின் பின் விளைவுகளில் ஒன்றாக "மொழிப்பெயர்வு" இல்லையா என்ன? படைச்சேனாதிபதி கர்னல் அவ்ரெலியானோ புயேண்டியாவின் பதினேழு புதல்வர்களும், இப்படிச் சொல்வோமெனில், "முன்னோக்கிச் செல்லும் தனியோர் படை அணிவகுப்பாக" தோற்றந்தரவில்லையா என்ன? பிலர் டெர்னெரா முறைதகாப் புணர்ச்சிக் குற்றத்தைத் தான் செய்யாது தவிர்க்கும் நிமித்தம் அர்காடியோவின் அறையில் அலைவாடும் நிழற்பிரதிமைகளில் தன்னை அவள் சாண்டோ சோபியா டி லா பியட்டாவாக ஆள் மாற்றீடு (மொழிப்பெயர்வு) செய்து கொள்ளவில்லையா என்ன? புயெண்டியாவின் கால்வழிமரபு வரலாறு ஒருபுறமிருக்க இங்குமங்கும் திரிந்தலைந்து சதுப்புநிலத்தைக் கடந்து மக்கோண்டாவிற்கு உலகில் இயங்கும் இயல்மொழிகளை இடம் பெயர்த்துக் கொணரும் ஜிப்ஸிகள் தம்மளவில் இனத்திற்கேற்ற சீரற்ற "சூழலோடிசையத் திகழ்ந்திடவில்லையா என்ன?" சூழலோடிசையாத அந்நியமானதோர் அனுபவ ஞானத்தை ஸ்பானிஷிற்கும் மக்கோண்டாவின் வருங்காலச் சரித்திரத்தை சமஸ்கிருதத்திற்கும் மொழிபெயர்க்கிற கிரியைதனை மெல்கியூவாடெஸ் தம்மளவில் அனுஷ்டித்திட வில்லையா என்ன?

மொழிப்பெயர்வு குறித்து இன்னும் அகல்விரிவான முறையில் புரிந்தறிய முனைகையில் மொழி - எழுதப்பட்ட பதிவு - கால்வழி மரபு வரலாறு - மொழிப்பெயர்வு இவை பற்றிய கருத்துருவங்கள் யாவும் உள்ளொடுங்கி ஓர்மை கொண்டு தனி முழுமையானதாகிற ஒற்றைநிலை, உலகின் முகத்திலிருந்து மக்கோண்டாவை இருந்த தடமின்றி துடைத்தழிக்கிற விவிலியச் சூறாவளியை நினைவூட்டுவதான (திசைகளெங்கிலும் பற்றிப் பரவிச் சுழல்கிற) ஒழுங்கற்ற பெருங்குழப்பச் சூறைக்காற்றின் சுழிமையமாகத் திகழுவது தெள்ளத் தெளிவாகிறது.

நாவலின் மையக்கருவில் இயங்கும் "மொழிப்பெயர்வு" எனும் கருத்துக் கூறுள் காணப்படுவரைபெயர்த்த பெருகுழப்ப ஒழுங்கின்மை ஐயத்திற்கிடமின்றி அவ்ரெலியனோ பாபிலோனியேவும் முறைதகாப்புணர்ச்சிக்கான தடைவரம்பை மீறுஞ்செய்கை விளங்குகிறது. மொழிப்பெயர்வு, முறைதகாப் புணர்ச்சி இவ்விரண்டும் வரம்பு மீறுதலை தன் உள்ளியல்பாகக் கொண்டு உடனிணைந்து செயலாற்றுகின்றன. இவ்விரண்டும் ஒரே குடும்பத்திலான அங்கத்தினர்களிடையே நிலவும் தடைகளை அல்லது இருவேறு மொழிகளிடையே நிலவும் தடைகளை எதிர்த்து மீறுகிற "ஒழுங்கு குலைவுற்ற" செய்கைகளாக உள்ளன.

போர்ஹேயும் டெரிடாவும் சுட்டியுரைத்ததை போல "உரிமைப்பொருளை" (Property) கோரி வினவுவதிலிருந்து அல்லது பெயர்ச்சொற்களை தனிதாக்கம் (appropriateness) செய்வதிலிருந்து தோன்றும் பெருங்குழப்ப ஒழுங்கின்மைப் பரவலைச் செயலேற்பதாய், சூட்சுமங்களைக் கண்டுபிடிக்க மேற்கொள்ளும் நுண்ணாய்வு சார்ந்ததாய் மொழிப்பெயர்வு அமைந்துள்ளது. இத்தகையபொருத்தப்பாட்டினூடே அவ்ரெலியனோ கிறிஸ்துவ ஆதினங்களின் வட்டார பொது ஆவண சுவடித்

கூடங்களுக்கு சென்று தன் பெயர் முதன்முதலாய் ஜனித்து வந்த தோற்றுவாயைக் கண்டுபிடிக்க பெரும் ஏக்கத்துடன் முயலுவதை நாம் அறிய வருகிறோம். இம்முயற்சியை அவர் அமரந்தா ஊர்சுளாவின் சகோதரன் தானல்ல என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள மட்டுமன்றி, தனது பெயர் மற்றும் தோற்றுவாய்களின் ஒழுங்கு முறைமையை நிச்சயித்துக் கொள்ளவும் மேற்கொள்கிறார். திருகுமறுகாக அமைந்த கடுஞ்சிக்கலான ரத்தஉறவு முறையின் புதிர்பாதையில் தோன்றிய அவ்ரெலியனோ நிர்கதியாகும் போது, அவரின் குழப்பத்தையும் துர்மார்க்கத்தையும் அறிய வருகிறோம். பாதிரியார் அவரது பெயரைக் கேட்டப் பிறகு "பெயரின் மூலப்பிறப்பிடத்தை தேடியலைவதில் உங்களை இழந்து போகாதீர், ஏனெனில் பல வருஷங்களுக்கு முன்பு உங்களது இதே பெயர் தாங்கிய வீதியொன்று இங்கிருந்தது. அந்தக்காலத்தில் மக்கள் தம் குழந்தைகளுக்கு வீதிகளின் பெயர்களைச் சூட்டுவது வழக்கம்" (பக் 334) என்று அவரிடம் கூறினார். இருந்த போதிலும், பெயரின் தோற்றுவாய், அவர் பாதிரியாரிடம் கூறுவதன்படி, அவ்ரெலியேனா புயேண்டியாவை அல்லாமல் அவ்ரெலியனோ பாபிலோனியாவை முதற்கொண்டே உள்ளதால், அவ்ரெலியனோவின் பெயர் கற்பனையில் அவர் என்றைக்கும் பாவித்துக் கொள்வதை விட மிகுதியாக "தனதாக்கம்" கொள்கிறது. அவ்ரெலினோ பேபெல், அவ்ரெலியனோ, கடவுளின் தலைவாசல், அவ்ரெலியனோ, குழப்பம் அவ்ரெலியனோ மொழிப்பெயர்வு என.

ஆயினும், ஒரே சமயத்தில் சாத்தியமாகவும் சாத்தியமற்றும் விளங்கும் மொழிப்பெயர்வின் முரணியை குறித்தான டெரிடாவின் பார்வையை இங்கே நினைவு கூர்வோம். எப்போதும் ஏதேனுமொன்று மொழிபெயர்ப்பாளரை தப்பிக்கச் செய்து விடுகிறது. அவ்ரெலியனோவின் நேர்மையை எடுத்துச் கொண்டால், கையெழுத்துப் பிரதிகள் முடிவுப் பகுதியை முன்பாகவே அறியும் நிமித்தம் அவர் பதினோரு அல்லது இன்னுமதிகமான பக்கங்களை மேலீடாக இடைவிட்டு விட்டு வாசித்துச் செல்கையில் (பக் 350), வெகுளிதாய் கையெழுத்துப் பிரதிகளின் முடிவுப்பகுதியையே வாசியாது தாவிச் சென்று விடுகிறார். மொழி பெயர்வு முடிவற்றச் செயல்பாடாய், தனதாக்கம் கொள்வதாய் இருப்பதால், கையெழுத்துப் பிரதியைக் கிரகித்துணர வாசிக்கும் போது அவ்ரெலியனோ மூலப்பனுவலை அப்படியே பின்பற்றிச் செய்யப்படும் மொழிப்பெயர்விலான ஜெனோவிய புதிர்முரணில் (zeno's paradox) சிக்கிக் கொள்கிறார். அவரால் கையெழுத்துப் பிரதிகளின் முடிவுப் பகுதியை அணுகிச் செல்ல இயன்ற போதிலும் அதைச் சென்றடையவோ அல்லது வாசித்து கிரகிக்கவோ ஒருபோதும் இயலவில்லை. ஏனெனில் பனுவல் அவரின் வருங்காலம் குறித்து முன்னறிந்து கூறுவதோடு, எப்போதும் அவரை விட ஒரு அடி கூடுதலாக நடைபோடுகிறது. முடிவுப் பகுதியை சென்றடையும் நிமித்தம் தவிர்க்க முடியாதபடிக்கு நிர்ப்பந்தமாய் அவர் முன்னிகழும் காலப் பகுதியை (மற்றும் பனுவல் பகுதியை) தாவிக் கடந்துச் சென்று, எவ்வளவு பகுதியை இடைவிட்டு தாண்டிச் செல்கிறோம் என்பது பற்றி கவலைப்படாமல், அவர் மீண்டும் மீண்டும் வாசிக்க வேண்டியவராய்,

இவ்விநப் பனுவலின் கொடுங்கோன்மையான காலச் சார்புத் தன்மையுடன் (Temporality) பிணைத்துக் கட்டுத்தளை இடப்பட்டவராய் இருக்கிறார். பெரும்பாலும் இதே விதத்தில் அமரந்தா ஊர்சுலாவுடன் அவ்ரெலியனோ கொள்ளும் முறைதகாப்புணர்ச்சியுறவு ஊழிவழி உந்தப்பட்ட கால்வழி மரபு வரலாற்றுடன் அவரை மீள முடியாதபடிக்கு கட்டுத்தளையிடுகிறது. ஜோஸ் அர்காடியோவைப் போல அவரும் இறுதியில் மக்கோண்டாவைத் துடைத்தழிக்கும் விவிலியச் சூறாவளியின் சுழிமையக் கண் போன்றதான இடத்தில் வேர்கொண்டுள்ள (கால் வழி மரபு வரலாற்று) மரஉருவத்துடன் பிணைத்துக் கட்டப்படுகிறார். விவிலியச் சூறாவளி (மொழிப்பெயர்வால் தூண்டி ஏவப்படுகிற) அதன் மிகு உச்ச வீச்சில் பொருள் விளக்கப் கூறலுக்கும் விமர்சனத்திற்கும் ஓர் உருமாதிரியாக காணப்பெறுகிறது.

ஆதலால் கையெழுத்துப் பிரதிகளில் அறிவெல்லை கடந்த அகவெளிப்பாடுகளைக் கண்டுணர மேற்கொள்ளும் அவ்ரெலியனோவின் துயரார்ந்த சாத்தியமற்ற தேடலுக்கும் பெஞ்சமினின் "தூயத்தனிமொழியை" ஒத்த இயல்புடைய தன்மையின் (Communication) அடிப்படைக் கோட்டை எய்துவதற்கும் உந்துவிசையாக சூறைமையச் சுழியின் 'கண்' (சூறாவளிக்கு விசையூட்டும் ஊற்றுக்கண்)திகழ்ந்து முக்கியத்துவம் பெறுகிறது. விளைவு வகையில் செய்பவர் மீதே எதிர்மீள்வாய், பிரதிபிம்பம் போன்றதாய் விளங்கும் சுயத்திலான தன்மறிவுத் தன்மையை (Self - reflexiveness) நோக்கி ஒருவருடைய சுயத்தில் திசைதிரும்பித் திருகிச் சுழன்றுத் தாக்கி அவரின் உறைந்திறுகிய 'நிலையமைதியிலான' (Solidity) எல்லா மாயைகளையும், 'தூயத்தனிமொழியிலான' எல்லா வினோதக் கற்பனைகளையும், 'ஒழுங்கு முறைமையிலான' எல்லா கானல் தோற்றங்களையும் துடைத்தழித்துவிடும் சூறாவளி வீச்சை நோக்கி மொழிப்பெயர்வு, முறை தகாப்புணர்ச்சியைப் போல, வழி கொள்கிறது. அந்நியமை (otherness) மற்றும் வேற்றுமை (difference) பற்றிய வெறுங்கருதுகோள் மீதான மொழியின் சார்பு நிலைக்கு பதிலீடாக, 'அந்நியமான ஏனைய' ஆய்வுரைகள் (discourses) - உதாரணமாய் விஞ்ஞானம், சட்டம் மற்றும் மதம் தொடர்பான ஆய்வுரைகள் - மீதான நாவலின் அதே போன்ற சார்புநிலை தானாகவே உருவமைவதை ஒத்தத் தன்மையிலான "ஏதாகிலுமொன்றை" பொருள்படுத்த வேண்டியுள்ளதை மொழிப்பெயர்வு வற்புறுத்துகிறது.

நாவலில் காணப்படும் நாடறிந்த இனப்பொதுவியல்பின் வரையறையின்மை(Indefinition) இதுவரை புதிதாய் சிருஷ்டியான எல்லா இலக்கியப் பாணிகளின் அடையாளமாக (Indecation) மிகச் சிறப்பாகவே விளங்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் நவீனமொழித் தத்துவத்திற்குப் (Modern Philology) பிறகு அவ்வகை அடையாளத்தைக் கருக்கொண்டு இலக்கிய சிருஷ்டிகள் உருவாவதன் விளைவாய், அவ்வடையாளம் இந்நாவலில் மொழியின் வேரின்மையை (மொழியை ஜனிப்பிக்கும் வேர்மூலங்களைக் கண்டறியும் பொருட்டு மெச்சுதலுக்குரிய ஆர்வ வேட்கை கொண்ட

தேடலையும்) மிக அணுக்கமாய்ப் போலச் செய்து (mimics) புனைவுறுவதாக, இறுதியில் அது, தெய்வீகத் தோற்றுவாய்களில்தான் மொழி பொய்யான முகத்திரையைக் கிழிக்கிறது.

நாவலில் மறைமுகமாய் இயங்கும் மொழிப்பெயர்வைப் பற்றிய புராணிகங்களை ஸ்தாபித்தவற்றில் பேபெல் புராணிகமும் ஒன்று. நாவலில் மொழிப்பெயர்வு குறித்தான புராணிகம் மிகக் கண்கூடாகவும், இசைவோடு மறுதலிக்கப்படுவதாகவும் துல்லியமாய் காணப்படுகிறது. இது, "ஒரு நூற்றாண்டுத் தனிமையில்" அவ்ரெலியனோ மேற்கொள்ளும் மொழிபெயர்ப்புப் பணியில் ஸ்தூலமாக புலனாகிறது. இலக்கியத்தின் சொந்தத் தன்னிறைவையும், இலக்கியத்தின்" தனிமையையும் (Solitude) அடிப்படையாகக் கொண்டுள்ள இலக்கியம் குறித்தான கருதுகோளால் விளைந்து தொடர்ந்து ஊடுபாவி முன்செல்லும் மலட்டுத் தன்மையை (Sterility) அவ்ரெலியனோவின் மொழிபெயர்ப்புப் பணி திரைநீக்கி வெளிப்படுத்துகிறது. இனங்கள் நிந்திக்கப்பட்டு அவை" ஒரு நூற்றாண்டுத் தனிமையில்" தன் தேவைப்பாட்டிலும் "இந்தப் பூலோகத்தில் இரண்டாவது நல்வாய்ப்பைப்" பெற்றிராத (பக்.351) ஏனைய ஆய்வுரைகளுடன் இணைப்புறுவதற்கான தேவைப்பாட்டிலும் கவனம் கொண்டிருக்கவில்லை.

"ஒரு நூற்றாண்டுத் தனிமை" தன்னளவில் மொழிப்பெயர்வை மிகத் தெளிவாய் முகப்படுத்துவது நாவலின் ஆக்கக்கூறாக அமைந்து, இவ்விதம் இலக்கியப்பணியின் அற்ப ஸ்திதியுடைய தோற்றுவாய்களை மேற்பூச்சகற்றி அம்பலப்படுத்தக் காரணமாகும் செர்வாண்டஸின் சைகை மொழியாகக் காணப்பெறுகிறது. செர்வாண்டஸின் கெஹொட்டெ (Don Quixote) போல, கெஹொட்டேவின் பெயர்பெற்ற நையாண்டிப் போலியான வீரப்பராக்கிரம வினோத சாகச நிகழ்வுகளைப் போல, கார்ஸியா மார்க்வெஸின் நாவலானது மொழிப்பெயர்வை - சாதுவாய் சட்ட விரோதம் கொண்டு, சற்றே ராஜ துரோகம் செய்து மொழியின் ஒழுங்கு முறைமையையும் கவிதை சார்ந்த விதிகளையும் மீறுவதான மொழிப்பெயர்வை தனது சொந்தத் தோற்றுவாய்களாக புனைவுருப்படுத்தி காட்டுகிறது. மேலும், இத்தகைய மொழிப்பெயர்வு நாவலை ஒரு நாடோடியாய், பிக்காசோவைப் போல, அலைந்து திரியும் அனாதையாக தாயிடமிருந்து (மொழியிடமிருந்து) உறவு துண்டிக்கப்பட்டோ அல்லது மனம் வேறுபட்டோ பிரிந்துப் போன அனாதையாக, எப்போதும் புதிதாயொரு காப்பாளரை தேடிச் செல்கிற எப்போதும் தன்னையே ஒரு காப்பாளராக உணரும் நிலையை எய்த விரும்புகிற அனாதையாக உருவகப்படுத்துகிறது. ஆனால், ஒரு வேளை," ஒரு நூற்றாண்டுத் தனிமை" தன்பறிவுத் தன்மையோடு மொழிப்பெயர்வை மேற்கொள்ள காரணமான தோற்றுவாய்களைத் தேடிக் கண்டடைவதற்காக ஸ்பெயினுக்கு திரும்ப வேண்டிய அவசியமில்லை. இது, மொத்தத்தில், ஏற்கனவே அமெரிக்காவின் எழுத்துக் கலையில் நிலவும் அநிச்சயத்தன்மையின் ஒரு பகுதியாக விளங்குவதாயிருந்தாலும் அமெரிக்காவெனும் "புதிய உலகை"(New world) கண்டுபிடித்து வென்றெடுத்து ஆட்கொண்டதால் விளைந்த அநிச்சயத்தன்மையாக

இருக்கிறதல்லவா?

லத்தீன் அமெரிக்காவின் இலக்கியத்தையும் கலாச்சாரத்தையும் கட்டமைப்பதில் மொழிப்பெயர்வு வகிக்கும் உயிராதாரமானப் பாத்திரத்தை "ஒரு நூற்றாண்டுத் தனிமை" நாவலில் கார்ஸியா மார்க்வெஸ் தனக்கு முந்திய வேறெவரையும் விட (ஏறத்தாழ போர்ஹேவைப் போல்) மிகத் தெளிவாய்ச் சுட்டிக் காட்டுகிறார். "ஒரு நூற்றாண்டுத் தனிமையில்" மொழிப்பெயர்வெனும் விவாதக்கூறு லத்தீன் அமெரிக்க இலக்கியத்தில் நிலவும் "தூய்மையற்ற" (Impure) மற்றும் "தோற்றுவாய்களை நினைவூட்டுவதாய் அமைந்துள்ளது. ஆயினும் அவ்ரெலியனோ பாபிலோனியாவின் துயரார்ந்த கண்டுபிடிப்பாய் அவர் தானுங்கூட ஒரு வித மொழிப்பெயர்வாக - குறிப்பிட்ட சில அந்நிய மூலப்படிவ அல்லது 'புனிதப்' பனுவல் மீதான லத்தீன் அமெரிக்காவின் நிரந்தர "சார்பு" குறித்த வற்புறுத்தலிலிருந்து வேறுபட்டு வெகு அப்பால் இயங்கும் மொழிப்பெயர்வாக - விளங்கும் நிலை நாவலில் காணப்படுகிறது. இந்நிலை, மொழிப்பெயர்வில் நிலவுகிறது. கட்டுமீறான வல்லந்தம் அல்லது பரிமாற்றம் வழியாக ஏனையப் பனுவல்களிலும் ஏனைய மொழிகளிலும் சாரங்கொண்ட அர்த்தமானங்களை போக்குவரத்துக் கொள்தலில் நிலவுவதுமான "அனைத்து" இலக்கியத் தோற்றுவாய்களுக்கும் பதிலீடாக கார்ஸியா மார்க்வெஸ் பாணியில் சித்திரங் கொள்வதாய் அமைந்துள்ளது.

(அமெரிக்காவில் பல்கலைக் கழகப் பேராசிரியராகப் பணிபுரியும் அனிபல் கோன்ஜலெஸ் எழுதிய இக்கட்டுரையில் பியெனஸ் அயர்ஸிலிருந்து 1973 இல் வெளியிடப் பெற்ற காப்ரியல் கார்ஸியா மார்க்வெஸின் "ஒரு நூற்றாண்டுத் தனிமை" நாவல் பதிப்பிலிருந்து மேற்கோள்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.)



அடுத்த
இதழில்

பிரைமோ லெவி
கவிதை

ஐயா, அடுத்த மாத ஆரம்பத்திலிருந்து
தயவு செய்து என் ராஜினாமாவை ஏற்றுக் கொள்ளுங்கள்,
மேலும், தேவைப்பட்டால், என் இடத்திற்கு ஒரு மாற்று ஆள் பாருங்கள்
சோம்பல், காரணமாகவோ, நடைமுறைச் சிக்கல்களாலோ
நான் நிறைய முடிக்கப்படாத வேலைகளை விட்டுச் செல்கிறேன்.
நான் எவரிடமாவது சொல்லியிருக்க வேண்டும்
ஆனால் என்னவென்றோ, யாரிடமென்றொ இனியும் அறியேன்.
நான் மறந்து விட்டேன்.
நான் எதையோ எடுத்துக் கொடுத்திருக்க கூடும்தான்.
ஒரு அறிவார்ந்த சொல், ஒரு பரிசுப் பொருள், ஒரு முத்தம்,
ஒரு நாளைக்கு அடுத்து மறு நாளைக்கு எனத் தள்ளி போட்டு விட்டேன். மன்னியுங்கள் என்னை.
மிச்சம் விடப்பட்டிருக்கும் அந்த கொஞ்ச காலத்தில் அதை நான் முடித்து விடுகிறேன்.
நான் அஞ்சுகிறேன், எனது முக்கிய வாடிக்கையாளர்களைப் புறக்கணித்து விட்டேன் என.
நான் விஜயம் செய்திருக்க வேண்டும்
வெகு தூரத்து நகரங்கள், தீவுகள், யாருமற்ற நிலங்களுக்கு
உங்கள் திட்ட வரையறையிலிருந்து அவற்றைஅடித்து நீக்கிவிட வேண்டும்
அல்லது எனக்கு அடுத்து வருபவரின் பொறுப்பில் ஒப்படைக்க வேண்டும்.
நான் மரங்களை நட்டிருக்க வேண்டும் ஆனால் செய்யவில்லை,
அது ஒரு வேளை அழகற்றதாக இருக்கலாம் ஆனால் திட்டத்திலிருந்து விலகியதாக இருக்கும்.
எல்லாவற்றுக்கும் மேலாக, அன்பான ஐயா, நான் மனதில் வைத்திருந்தேன்
எண்ணிக்கையற்றரகசியங்களை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்குமென்ற ஒரு அற்புதப் புத்தகத்தை
அது வலியைக் குறைத்திருக்கும், பயத்தை மட்டுப்படுத்தியிருக்கும்,
சந்தேகங்களைக் கரைத்திருக்கும்,
பல மனிதர்களுக்கு கண்ணீர் மறறும் சிரிப்பின் பரிசுகளைத் தந்திருக்கும்
அதன் திட்ட வரைபடத்தை
என் மேஜை இழுப்பறையில் நீங்கள் பார்க்கலாம்.
முடிக்கப்படாத வேலையின் பின்பக்கத்தில்
அதை முடித்துப் பார்க்க எனக்கு சமயம் அமையவில்லை, படுமோசம்.
அது ஒரு மிக அடிப்படையான விஷயமாக ஆகியிருக்கும்.

தமிழில்
பிரம்மராஜன்

கேப்ரியேல்
கார்ஸியா
மார்க்வெஸ்
மார்கேஸ்
மார்கஸ்
மார்க்யூஸ்
மார்குவஸ்
மார்க்குவெஸ்

தமிழின் கடைசி
சிறு பத்திரிகை



புது எழுத்து

தனிச்சுற்றுக்கு மட்டும்